
ஒரு
தேவதைக் கனவு
மல்லிகைப் பந்தல்
கெக்கிராவ ஸஹானா

# ஒரு
# தேவதைக் கனவு

**கெக்கிராவ ஸஹானா**

மல்லிகைப்பந்தல்

234B, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

மல்லிகைப் பந்தல் வெளியீடு

முதற்பதிப்பு : பிப்ரவரி 1997

உரிமை பதிவு

விலை : ரூபா 50/-

இந்தியாவில் கிடைக்குமிடம்:

**குமரன் பப்பிளிஷர்ஸ்**

79, முதல் தெரு, குமரன் காலனி,
வடபழனி, சென்னை - 600 026

அட்டைப் படம் : கலாரஞ்சனி சர்மா

# சமர்ப்பணம்

கருவிலும்
உருவிலும்
திருவிலும்
சௌபாக்கியவதியாய்
என்னை - உலகுக்களித்த
அல்லாஹ்வுக்கடுத்த-
படியாய்
நான் மதிக்கின்ற
என் அருமைப்
பெற்றோருக்கு

# பதிப்புரை

இந்தச் சிறுகதைத் தொகுதியின் ஆசிரியையான ஸஹானாவை இவருடைய திருமணத்தன்றுதான் நேரில் பார்த்தேன். என்னுடன் எனது மகன் திலீபனும் அன்று வந்திருந்தார். அனுராதபுரம் - கண்டிமாநகர் நெடுஞ்சாலையின் மத்திய பகுதியில் இருக்கும் கெக்கிராவ என்ற ஊர்தான் ஸஹானாவின் சொந்த இடம். அங்குதான் அவரது திருமணம் நடைபெற்றது. எனக்கும் அழைப்பு அனுப்பியிருந்தார். போயிருந்தேன்.

அந்தத் திருமணத்தின் ஞாபகமாகவே மல்லிகையில் இவரது சிறுகதையொன்றும் பிரசுரமாகியிருந்தது. 'ஸஹானாவின் திருமண ஞாபார்த்தமாக இக்கதை மல்லிகையில் பிரசுரமாகின்றது' என்ற ஆசிரியர் குறிப்பும் அதில் காணப்பட்டது.

ஸஹானா செல்வியாக இருக்கும்போதே என்னுடன் அவர் இலக்கியக் கடிதத் தொடர்பு கொண்டிருந்தார். அவரது கடிதக் கருத்துகளைப் படித்துப் பார்க்கும்போது எனக்குப் பெரும் வியப்பு ஏற்படுவதுண்டு. பின்தங்கிய ஒரு சிற்றூரில் இருந்துகொண்டு ஒரு முஸ்லிம் யுவதி இப்படியெல்லாம் சிந்திக்கின்றாரே என்ற மலைப்பு வேறு. அத்தனை ஆழமானதும் நுட்பமானதுமாக அவரது கடிதக் கருத்துக்கள் இருந்தன.

யாழ்ப்பாணத்துக் கமக்காரன் - அதாவது விவசாயி இன்னும், விளக்கமாகச் சொல்லப்போனால் தோட்டக்காரன் தனது பயிர் பச்சைகளைக் கண்ணும் கருத்துமாகப் பேணிப் பாதுகாத்து வருவதில் மகாவிண்ணன். உயிரைப் பெய்து உரமிட்டு அவைகளைப் பயிர் செய்வான். இளம் வாழைகள் உரத்தையும், உழைப்பையும் உறுஞ்சி சும்மா 'ஜிகு ஜிகு' என வளர்ந்து



செழித்து உயர்ந்து வளரும். திடீரென ஒருநாள் 'குருக்குத்தி' அடித்துவிடும். அதாவது அதன் குருத்துச் சிறுத்துச் சோம்பி மடங்கிவிடும். அவ்வாழைகளை வெட்டி அப்புறப்படுத்திவிட வேண்டும். இல்லாது போனால் ஏனைய வாழைகளுக்கும் அந்நோய் பற்றிப் படர்ந்துவிடும். அதுபோலவே யாழ்ப்பாணத்தின் பெருமைப் பெயரைத் தாங்கி நிற்கும் புகையிலை கூட, இப்படியான ஒரு நோயினால் - அழுக்கணவன் என்று அதைச் சொல்வார்கள் - இலை பழுத்து உதிர்ந்து போய்விடும். ஒரு காலத்தில் மலையாளத்துக்கே புகையிலையைச் சிப்பம் சிப்பமாக ஏற்றுமதி செய்து பணம் சம்பாதித்த தோட்டக்காரன், இந்த அழுக்கணவன் நோயைக் கேள்விப்பட்டதுமே திகைத்துத் திக்குமுக்காடிப் போய்விடுவான்.

இந்த உதாரணத்தை ஏன் இங்கே குறிப்பிடுகிறேன் என்றால், எனது 40 ஆண்டுக்கால அனுபவத்தில் எத்தனையோ முஸ்லிம் இளைஞர்களினதும், யுவதிகளினதும் இலக்கியத் திறமைகளைப் பார்த்து வியர்ந்திருக்கின்றேன். மல்லிகையில் அவர்களது படைப்புக்களைப் பிரசுரித்து ஊக்கமளித்திருக்கின்றேன். ஆனால் அதிசயங்களில் ஒன்று; இவர்களில் அநேகர் நோய் கண்டு மறையும் பயிர்களைப் போல, திடீரென இலக்கிய உலகில் இருந்தே மறைந்து போய்விடுகின்றனர்.

அதிலும் முக்கியமாக இந்த இளைஞர்கள், யுவதிகள் தத்தமது திருமணத்திற்குப் பின்னர்தான் காணாமல் போய்விடுகின்றனர்.

இந்தத் துர்ப்பாக்கிய நிலை ஏன் ஏற்படுகின்றது?

வியாபாரச் சமூகம் என்ற காரணத்தால் பொருளாதார மேம்பாட்டுக்காக இந்தத் துறையைத் துறந்து

விடுகின்றனரா? - அல்லது இந்தச் சமூக அமைப்புக்குள் தொடர்ந்து இலக்கியவாதிகளாக நின்று பிடிக்க முடியாது என்ற இயலாமையின் காரணமாகத் தங்களது இலக்கியத் திறமையையே வீணடித்துக் கொள்ளுகின்ற னரா? - என்பதைப் பல தடவைகளில் நான் ஆழமாக யோசித்துப் பார்த்ததுண்டு. மேடைகளில் பல தடவைகளில் இந்தக் கருத்துக்களைப் பகிரங்கமாகச் சொல்லியுமிருக்கின்றேன்.

தமிழகத்தை விட, இலங்கையில்தான் கணிசமான முஸ்லிம் எழுத்தாளர்கள் படைப்புத் துறையில் பேர்பதித்து வருகின்றனர் எனப் பட்டியலிட்டே பல ஆண்டுகளுக்கு முன்னர் எழுதியுமிருக்கின்றேன்.

இதில் ஆச்சரியமென்னவென்றால் திருமணத்திற்குப் பின்னர்தான் ஸஹானா அவர்கள் இலக்கியப் படைப்புக்களைப் படைத்துத் தனது நாமத்தைப் பதித்து இலக்கியப் பரப்பில் வேர்பாய்ச்சி வருகின்றார்கள் என்பதுதான்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் ஜெயகாந்தன் அவர்களுக்கு இவர் எழுதிய கடிதமும், அதற்கு அவர் எழுதிய பதிலும் மல்லிகையில் பதியப்பட்டுள்ளன. சமீபத்தில் இவர் சென்னைக்குச் சென்றிருந்த சமயம் அவரைத் நேரில் சந்தித்து உரையாடி வந்ததையும் இங்கு குறிப்பிட வேண்டியது முக்கியமானதாகும். அப்பேட்டி யும் 'தினகர'னில் வெளிவந்துள்ளது.

முஸ்லிம் இளம் தலைமுறை எழுத்தாளர்களில் நன்கு கவனித்து வைக்கத் தகுந்த புதிய படைப்பாளி இவர். பல கட்டங்களில், பல ஊர்களில் இவரது ஆற்றலை பகிரங்கமாக வியந்து பாராட்டிப் பேசியிருக்கின்றேன்.



எதிர்காலத்தில் நன்கு பிரகாசிக்கத் தக்க அத்தனை சிறப்பு ஆற்றல்களையும் திறமைகளையும் தன்னகத்தே கொண்டவர்தான் இவர். இவரால் இன்னும் அதியற்புதமான படைப்புக்களை எதிர்காலத்தில் சிருஷ்டிக்க முடியும் என மெய்யாகவே இந்தக் கட்டத்தில் நம்புகின்றேன்.

இவரது முதல் சிறுகதைத் தொகுதியான இந்த 'ஒரு தேவதைக் கனவு' தொகுதியை மல்லிகைப் பந்தல் வெளியீடாக வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஈழத்தில் முஸ்லிம் - தமிழர் பாரம்பரிய நல்லுறவு அரசியல்வாதிகளால் கசப்புற்றுள்ள இந்தச் சூழ்நிலை யில், முஸ்லிம் யுவதி ஒருவரின் சிறுகதைத் தொகுதி ஒன்றை வெளியிடுவதன் மூலம் கலைஞர்களின் நெஞ்சத்து நல்லுணர்வைக் கோடி காட்டியுள்ளேன்.

கசப்புகள் என்றுமே நிரந்தரமானவைகளல்ல! இந்தத் தொகுதி நூலுருப் பெற என்னுடன் ஒத்துழைத்த மேமன் கவி, இளந்தலைமுறை ஆர்வலர் க.குமரன் ஆகியோருக்கும், அச்சுப் படிகளை ஒப்பு நோக்கித் திருத்த உதவிய திருமதி தேவகௌரி அவர்களுக்கும் எனது நன்றிகள் என்றுமே உரியன.

9-12-1996 **- டொமினிக் ஜீவா**

# என்னுரை



வானொலி மூலமாகவும், நாளாந்தத் தினசரிகள் மூலமாகவும், தென்னிந்திய சஞ்சிகைகள் மூலமாகவும், எனது பள்ளி ஆசிரியர்களின் உதவியுடனும் பாரதிமுதல் ஜெயகாந்தன் வரை தேடித் கற்ற எனக்கு - இலக்கியம் என்றால் என்னவென்று தெரியாத வயதிலேயே தமிழ் இலக்கியத்தின்பால் பிடிப்பு கொண்டு தேடித் தேடிக் கற்ற எனக்கு - எண்பதுகளின் ஆரம்பதில் நான் பன்னிரண்டு வயதுச் சிறுமியாக இருந்தபோது 'மல்லிகை'யை அறிமுகப்படுத்தியவர் மர்ஹூம் திரு. கோயா அப்பாஸ் ஆவார்.

புரிந்தது பாதி, புதியாதது பாதியாக 'மல்லிகை'யை முகர ஆரம்பித்தபோது இலங்கையின் வீர்யம்மிக்க தமிழ் இலக்கியத்துறை பற்றிய முதல் அறிமுகம் எனக்குக் கிட்டிற்று. எனினும், 'மல்லிகை'யைப் பற்றிய பிரமிப்பு என்னுள் நிலைத்துவிட்டபடியால், எழுதிப் பார்க்க வேண்டும் என்று தோன்றவில்லை.

வானொலிக்கு எழுதத் தொடங்கினேன். 'ஒலி மஞ்சரி'க்கு நான் எழுதிய முதல் கவிதையும், முதல் கதையும் அங்கீகரிக்கப்பட்டன. தொடர்ந்தும் மூச்சு விடாமல் எழுதினேன். அந்த விதத்தில் நானும் எழுதிப் பார்க்கலாம் என்ற நம்பிக்கையை எனக்குள் முதன்முறையாக விதைத்த எமது அன்பு அறிவிப்பாளர் திரு. B.H. அப்துல் ஹமீட் அவர்களுக்கு என்றும் நான் நன்றியுடையவள் ஆவேன்.

எண்பதுகளின் இறுதியில் பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு ஓய்வாக இருந்த பொழுதுகளில், தேடிச்



சேர்த்து வைத்திருந்த மல்லிகை இதழ்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்துப் படித்து முடித்தேன். 'மல்லிகை' பற்றிய ஒரு நீள்வெட்டு முகத்தோற்றம் என்னுள் பதிந்து போனது. இப்படிச் சொல்வதற்குக் காரணம் உண்டு. மல்லிகையில் வெளிவந்த ஆக்கங்களைவிட, ஒவ்வொரு இதழையும் வெளிக்கொணர்வதில் திரு. டொமினிக் ஜீவா அவர்கள் எதிர்கொண்ட பிரச்னைகளும், சவால்களும், அவற்றையெல்லாம் வென்று முறியடித்த அவரது விடாமுயற்சியும், அஞ்சாமையும் என்னை மிகவும் கவர்ந்தன.

திரு. ஜீவா அவர்களுக்கு ஒரு நீண்ட மடல் எழுதினேன். உடனே அன்பான பதிலும், 'மல்லிகைப் பந்தல்' வெளியீடுகள் சிலவும் வந்து சேர்ந்தன. அவற்றின் மூலமாக மல்லிகை பற்றிய சாராம்சத்தை உறிஞ்சியெடுத்துக் கொண்டேன். மல்லிகைக்கு எழுதத் தொடங்கினேன்.

முதல் கவிதை "ஊரடங்கு" மல்லிகையில் பிரசுரமானது. முதல் சிறுகதை "நாதன் உள்ளிருக்கையில்" 'மல்லிகை'யின் பரிசீலனையில் இருந்தபோது எனக்குத் திருமணம் நிச்சயமானது.

எனது திருமணத்திற்கு நேரில் வந்து வாழ்த்துக் கூறி, எனது கணவரிடம் எனது எழுத்துப் பணியைத் தொடர உதவும்படி வேண்டுகோளும் விடுத்துச் சென்ற திரு. ஜீவா அவர்கள் 'எனது திருமணப் பரிசு' என்ற குறிப்புடன் அக்கதையை வெளியிட்டார்கள்.

அந்த முதல் கதை நான் எதிர்பாராத ஒரு சலசலப்பை ஈழத்து இலக்கிய உலகில் ஏற்படுத்திற்று. அக்கதை தகவத்தின் பரிசு பெற்றபோது பலருக்கும் எனது பெயர் பரிச்சயமானது. எனது ஆசிரியர் பண்ணாமத்துக்

கவிராயர் அவர்களுக்கே என்னைப் பற்றிய அறிமுகத்தை அக்கதைதான் ஏற்படுத்திற்று.

பின்னாளில் எனது இலக்கியப் பார்வை விரிவடையவும், இலக்கியத்துறை மீதான ஆர்வம் பெருகவும் முற்று முழுதாகத் துணைபுரிந்தவர் திரு. மேமன்கவி ஆவார். கடிதங்கள் மூலமாகவும், ஆக்கப்பூர்வமான விமர்சனங்கள் மூலமாகவும், ஆதரவான கருத்துக்கள் மூலமாகவும் தொடர்ந்தும் நான் எழுதுவதற்குத் தூண்டுகோலாக இருந்தவர் என்ற வகையில் திரு. மேமன்கவி அவர்களுக்கு என்றும் நான் கடமைப்பட்டவள்.

'மல்லிகை'யின் ஆரம்பகால எழுத்தாளர்கள் என்று பலரும் பெருமைகொள்வது போன்று, 'மல்லிகை'யின் பிற்கால எழுத்தாளர் என்ற விதத்தில் நானும் பெருமிதமடைகிறேன். எனக்குப் பிறகும் எழுச்சிமிகு புதிய எழுத்தாளர்களுக்கு 'மல்லிகை' களம் தரும் என்பதில் மிகுந்த நம்பிக்கை எனக்குண்டு.

இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள கதைகளில் பல 'மல்லிகை', 'தினகரன்', 'வீரகேசரி', 'வாழ்க்கை' ஆகிய சஞ்சிகைகளில் பிரசுரமானவை. 'ஒரு தேவதைக் கனவு', 'ஒரு பொற்கனவின் முடிவில்' ஆகியன 'ஒலிமஞ்சரி'யில் ஒலிபரப்பானவை.

எனது இலக்கியப் பணிகளுக்கு உறுதுணையாவிருக்கும் எனது பெற்றோருக்கும், எனதருமை உடன்பிறப்புக்களுக்கும் நான் எப்போதும் நன்றியுடையேன். அனைத்துக்கும் மேலாக, பெண்ணுரிமை பற்றிய எண்ணக்கருவை அறிவதற்கு முன்னமேயே பெண்களைக் குடும்ப வாழ்வின் சிறைக்கைதிகளாக ஆக்கி, அடிமைத்தனத்தின் சிறப்புப் பிரகிருதிகளாக மாற்றிவிடுகின்ற இந்த ஆணாதிக்க சமூக அமைப்பில் எனக்குரிய சகல உரிமைகளையும் வழங்கி, ஒரு மனைவியின் கடமைகளிலிருந்து தவறிய போதெல்லாம் சகித்துக்கொண்டு, பொறுமையுடன் அன்புகாட்டும் என்னருமைக் கணவருக்கு என்றென்றும் நான் நன்றியுடையேன்.



எனது முதல் தொகுப்பில் என்னை வளர்த்துவிட்ட சகலருக்கும் ஓரளவிற்காவது இடமளித்திருப்பது குறித்து நான் பெரிதும் திருப்தியடைகிறேன். இத்தொகுதிக்கு அணிந்துரை வழங்கியுள்ள எனது மதிப்புக்குரிய ஆசிரியர் பண்ணாமத்துக் கவிராயர் அவர்களுக்கும், அபிமான எழுத்தாளர் ஜெயகாந்தன் அவர்களுக்கும், எனது சிறிய தகப்பனாரும், 'தினத்தந்தி' துணை ஆசிரியருமாகிய பாத்திமா மைந்தன் அவர்களுக்கும், அழகுற அட்டைப்படம் வரைந்த தோழி கலாரஞ்சனிக்கும், சிறப்புற தொகுதியை வெளியிட்டுள்ள அச்சகத்தினருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள் உரியன.

இறுதியாக என்மீது அன்பும், மரியாதையும் கொண்ட அனைத்து இலக்கிய நெஞ்சங்களுக்கும், இத்தொகுப்பை வாசித்து ஆக்கப்பூர்வமான, கனதியான விமர்சனத்தின்மூலம் என்னை மேலும் வளர்த்தெடுக்கப்போகும் அனைத்து உள்ளங்களுக்கும் எனது இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கெக்கிராவ ஸஹானா**

*132, டேவிட் மாவத்தை*
கெக்கிராவ, இலங்கை.

*5-11-96*

# முன்னுரை

பறப்பதற்குச் சிறகு விரித்த சின்னஞ் சிறு புறாக்குஞ்சொன்று தன் முதல் முயற்சியிலேயே தேறிவிட்டதைக்கண்ட பெருமிதம்...

நம்பிக்கை தரும் புதியதொரு தளிர், அதன் பரப்பு வழக்கத்தைவிடப் பெரிதாய்... பார்ப்பதற்குப் பிரமிப்பாய்...

கெக்கிராவ ஸஹானாவின் முதல் சிறுகதை, இலங்கையில் சிறந்த படைப்பாளிகள் உருவாவதற்குக் களமமைத்துத் தந்த மல்லிகைப்பந்தல் மூலம் வெளிவந்தது கண்டு, ஆவலுடன் அதனைப் படித்துப் பரவசத்தில் ஆழ்ந்தபோது, கதையில் வரும் வரிகளையே கதாசிரியைக்குச் சூடி மகிழ்ந்தது மனம்.

கெக்கிராவை முஸ்லிம் வித்தியாலயத்தில் ஆசிரியனாகப் பணிபுரிந்த அந்த நாட்களில், படிப்பில் சுட்டிகையான பள்ளிச் சிறுமியாய் நான் கண்ட அப்பறவைக் குஞ்சு...

புதுமைப்பித்தனுக்குப் பின் தமிழில் இன்னொரு சகாப்தத்தை உருவாக்கிய ஜெயகாந்தன் எழுத்துக்களால் ஆகர்ஷிக்கப்பட்டு, அவரது பரம ரசிகையாக மாறி, பதினாலு வயது முதல் ஜெயகாந்தனைத் தேடிப்பிடித்து, சுய ஆளுமை ஒரு கொண்ட ஒரு படைப்பாளியாய் பரிணமித்துள்ளது கண்டு பூரித்துப் போனேன்.

இப்பொழுது, கெக்கிறாவை ஸஹானா என்ற அந்த படைப்பாளியின் சுயம் காட்டும் பதின் நான்கு சிறுகதைகளின் தொகுப்பாக எமக்குக் கிடைத்துள்ளது. "ஒரு தேவதைக் கனவு" - அவரது முதல் அறுவடை; முதல் சிறுகதைத் தொகுதி; மல்லிகைப் பந்தல் வெளியீடு.



மல்லிகை ஆகஸ்ட் '89 இதழில் "ஊரடங்கு" கவிதை மூலம் இலக்கியப் பிரவேசஞ் செய்து, அடுத்து வந்த செப்/அக்டோபர் '89 மல்லிகையில் "உள்ளிருக்கையிலே...!" (இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள 'நாதனுள் இருக்கையில்') என்ற சிறுகதை மூலம் தம்மை ஓர் கதாசிரியையாகவும் அடையாளங் காட்டிய ஸஹானா வாழ்வின் மீதும், மனிதத்தின் மீதும் தீவிர ஈடுபாடு கொண்டவர் என்பதற்கு அவரது படைப்புகளே அத்தாட்சி.

வாழ்க்கையின் பன்முக விலாசங்களைத் தரிசிக்க முற்பட்டுள்ள ஸஹானாவின் சிறந்த சிறுகதைகள் சில இத்தொகுதியில் அடங்கியுள்ளன.

வீச்சுமிகும் எழுத்துக்கள் மூலம் இலங்கையின் தேசிய இதழ்களிலும், சஞ்சிகைகளிலும் முகவரிகாட்டும் இளம் முஸ்லிம் பெண்படைப்பாளிகள் பலர் திருமணமானதும் காணாமல் போகின்றனர் என்பது மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் ஆதங்கம்.

ஸஹானா இதற்கு விதிவிலக்கு.

"இக்கதாசிரியை இளம் எழுத்தாளர். இவருக்குச் சமீபத்தில் திருமணம் நடைபெற்றது. திருமணப் பரிசு ஞாபகார்த்தமாக இங்கு இக்கதை பிரசுரமாகின்றது" என்ற ஆசிரிய முகாந்தரத்துடன் அல்லவோ மல்லிகையில் வந்தது ஸஹானாவின் முதல் சிறுகதை.

ஏ.எல். படித்துவிட்டு, வெளிநாடு செல்லும் ஆசையில் மண்விழ, இடையில் தலைதூக்கிய புதியதொரு பிரச்னை நெட்டித்தள்ள, கெக்கிராவையில் உள்ள முஸ்லிம் ஸ்கூலுக்குத் தொண்டன் ஆசிரியனாக வந்து சேர்கிறான் கொக்குவிலைச் சேர்ந்த சரவணன். அப்பகுதி மக்களின்

வாழ்க்கையோடு ஐக்கியமாகிப் போக முடிந்த அவனால் தனக்கு வாடகை அறை ஒதுக்கித் தந்த கோயில் குருக்களின் குடும்பத்துடன் எவ்வகையிலும் ஒட்ட முடியவில்லை. மனிதர் மீது ஸ்மரணையற்றுப்போன வைதீகப் பிடிப்பும், வரட்டு ஆசாரமும் அதிகாரஞ் செலுத்தும் அவ்விடத்தை விட்டு சூட்கேஸுடன் வெளியேறுகிறான் - 'மானுடத்தின் பரப்பு வானம்போல் விசாலமானது. அதில் தனக்கென ஒரு வாசல் திறந்திருக்காதா என்ன?' என்ற நம்பிக்கையில்.

தனக்கு அந்நியோன்யமான வாழ்க்கைச் சூழலின் பகைப்புலனில் பாத்திரங்களை உலவவிட்டு, மையக்கருவுக்கு வலுவூட்டும் வகையில் கதை நிகழ்வுகளைச் சித்தரிப்பது ஸஹானாவுக்குக் கைவந்த கலைதான்.

சொற்சிக்கனமும், நடைநேர்த்தியும், கலைநயமும் கொண்ட நல்லதொரு சிறுகதையாய், இத்தொகுதியில் காணப்படும் 'புதியதோர் சாந்தி' மல்லிகை 30வது ஆண்டு மலரில் வெளிவந்து ஏலவே நான் வாசித்தது.

இருவது வயது இளந்தாரி மகன் வெளிநாட்டில். மகள் நர்கீஸ் அட்வான்ஸ் லெவல் ஸயன்ஸ் படிக்கிறாள். இளையவன் ஓ.எல். வகுப்பு. குழந்தைகள் சின்னவர்களாக இருக்கையில் மறுமணத்துக்குச் சம்மதிக்காத விதவைத்தாய் மெஹரூன், பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களானதும் தனிமையுணர்ச்சியால் தளம்புகின்றாள். மனப் போராட்டம். அவளுக்காக ஒன்பது வருடங்களாகக் காத்திருக்கின்றது அவளே போன்று தனிமரமான இன்னொரு ஜீவன். பிரச்னை பல கோணங்களில் அதன் அடி ஆழம்வரை அலசல் பெற்று தெளிவு பிறக்கின்றது.



வீட்டுக்குள் நுழைந்த நர்கீஸ் மேஜைமேலிருந்த தேநீர்க் கோப்பையைப் பார்த்துவிட்டு "யாரும்மா வந்தாங்க?" என்று கேட்க, மிகுந்த சிரமத்துடன், "உனது சாச்சா வந்துட்டுப் போனார்" எனக் கூறப்படும் பதிலில் சூசகமான உணர்த்தப்படுகிறது மெஹரூனின் முடிவு.

'சந்தேகக் கோடு' என்ற சிறுகதையும் வீரகேசரியில் (7-09-1991) முன்பு வெளிவந்தபோதே நான் படித்துச் சிலாகித்தது. முரண்பட்ட சுபாவங்கள் காரணமாக கணவன் மனைவிக்கிடையே உண்டாகும் மனச்சிக்கல் சித்தரிக்கப்படுகின்றது.

நிஹாராவின் மனதில்தான் எத்தனை காயங்கள். ஒவ்வொரு சந்தர்ப்பதிலும் அவளைப் புண்படுத்து வதிலேயே சுகம் காணும் ஸப்ஹாஹிரின் மாறுபட்ட குணங்கள் மனைவியின் கோணத்திலிருந்து அலசப்படு கின்றது.

மனஊனம் படைத்தவனோடு அமைதி காப்பதற்காக மௌனத்தில் உறையும் நிஹாரா, ஸஹானாவின் கதை மாந்தர்களில் வித்தியாசமானதோர் வார்ப்பு.

பல குடும்பங்களில் நிஹாரா போன்று ரணம் வடிக்கும் இதயங்கள் ஏராளம்.

இத்தொகுதியின் தலைப்புக் கதையான 'ஒரு தேவதைக்கனவு', 'ஒரு பொற்கனவின் முடிவில்' முதலிய இருகதைகளும் வானொலியில் - ஒலி மஞ்சரியில் - ஒலி பரப்பானவை என அறிகிறேன்.

செக்காட்டி சிட்டா (செக்கு மாடுகள்); உள்ளூரிலேயே பணிப்பெண்ணாய்ச் சேவைபுரியும் சுபா (கண்ணில் தெரிகின்ற வானம்); தொட்டது பிடித்ததுக்கெல்லாம் எரிச்சலும் சண்டையுமாய் சச்சரவுபடும் (நாகரிகம் தெரியாத) அடிமட்டக் குடும்பமொன்றின்

அவலங்களைப் பிரசங்கிக்கும் சரளா (இரு வேறு பார்வைகள்).

மதிலோரமாய் நிதானிக்கையில் இமாமின் குரல் செவிபுகும் திருமறை வசனங்களின் விளக்கத்தால் - இந்த நிலவு... இந்த வானம்... இந்த மனிதம்... இந்த வாழ்க்கை... இந்தக் கணம்... ஒன்றுமே பொய்யல்ல; இது ஒவ்வொன்றுக்கும் அர்த்தமுண்டு எனப் போதம் பெற்று, படிகளில் இறங்கிப் பள்ளிவாசலை நோக்கி நடக்கும் ரஹீம் (ஒரு பொற்கனவின் முடிவில்).

இன்னும் -

பல்வேறு குணக்கலவைகளுடன் ஜீவனும் சதையுமாய் உயிர்பெற்றவனாய் ஸஹனாவின் படைப்புக்களில் நாம் சந்திக்கும் பாத்திரங்கள் - அநேகமாய் கண்டி - அநுராதபுர பிரதான வீதிவழியாய் நேர்கோட்டில் நீண்டுச் சுறுசுறுப்பாய் இயங்கும் கெக்கிராவைச் சிறுநகரைச் சுற்றிப்படர்ந்த அவ்வரள் வலய மண்ணில், முஸ்லிம் - தமிழ்ச் சமூகங்கள் ஐக்கியமுற்று வாழும் பண்பாட்டுச் சூழலில் நாம் எதிர்கொள்ளக் கூடிய வாழ்க்கையின் மனித வார்ப்புகளேயாவர்.

ஸஹானாவின் 'ஒரு தேவதைக் கனவு' என்ற இம்முதல் சிறுகதைத் தொகுதியில் அடங்கியுள்ள அனைத்து கதைகளையும் பொதுவாக நோக்குமிடத்து, வாழ்வின் முரண்பாடுகளையும், மனிதர்கள் முகங்கொடுக்கும் பிரச்னைகளையும், மனித மனங்களின் அசைவுகளையும், அறிவுத் தளத்தில் நின்று - உளவியல் நுட்பத்துடன் - தீர்க்கமாய் விசாரிப்பதில் ஸஹானாவிக்குள்ள அலாதியான அக்கறை புலனாகின்றது.

இந்த அறிவுபூர்வமான விசாரணையும், மன அலசல்களும் கலாபூர்வமாக வெளிப்படுவதில்தான்



ஸஹானாவின் படைப்பாற்றல் தங்கியுள்ளது. இதுவே 'ஜெயகாந்தன் பள்ளி'யைச் சேர்ந்தவராக இவரை இனங்காட்ட வல்லது.

அண்மையில் தமிழகஞ் சென்று ஜெயகாந்தனுடன் இலக்கியச் சந்திப்பு நடத்திவிட்டு வந்தவர் ஸஹானா. இந்த நேர்காணல் தினகரனில் பிரசுரமாயிற்று (ஜெயகாந்தனைச் சந்தித்தேன் - கெகிராவை ஸஹானா - தினகரன் வார மஞ்சரி 31-03-1996).

சில வருடங்களுக்கு முன் ஜெயகாந்தனுக்கு ஸஹானா எழுதிய நீண்ட கடிதமும், அந்தக் கடிதத்தில் கேட்கப்பட்ட கேள்விகள் குறித்து ஜெயகாந்தனோடு 'தொடரும்' குழுவினர் நடத்திய உரையாடலும் 'தொடரும்' என்ற சஞ்சிகையில் வெளியாயிற்று.

"உங்களது படைப்புகள் எல்லாம், உங்களது சொந்த அனுபவங்களின் வெளிப்பாடுகள் தாமா?" என்ற கேள்விக்கு, அவ்வுரையாடலின்போது ஜெயகாந்தன் வழங்கிய பதில்:

"அனுபவம்தான். பிறருடைய அனுபவங்களை - மாந்தர் மட்டுமன்று; பிற ஜீவராசிகளின் அனுபவங்களை - தனது சொந்த அனுபவமாக ஆக்கிக் கொள்வதனாலேயே ஒருவன் படைப்பாளியாகின்றான். படைப்பாளியும் ஒரு சாதாரண மனிதனே என்கிற முறையில் அவனுக்கும் சாதாரண சொந்த அனுபவம் நிறைய உண்டு. அவற்றைச் சலித்தெடுத்துச் சொல்வதில்தான் படைப்பின் ரகசியம் அடங்கியிருக்கிறது. சொந்த அனுபவங்களை அப்படியே எழுதினால் சகிக்காது; பயனும் தராது. தற்கால எழுத்தாளர்கள் பலர் இந்தச் சகதியில் விழுந்து தத்தளிப்பவர்களே..."

ஜெயகாந்தனைப் படித்து இலக்கிய சிரத்தையை, படைப்பாற்றலை வளர்த்துக் கொண்டுள்ள

ஸஹானாவையும் பிறரது அனுபவங்களைத் தனது சொந்த அனுபவமாக்கி தன் கதைகளில் சலித்துத்தர முற்பட்டுள்ளார்.

மல்லிகை அறிமுகப்படுத்திய ஆளுமைகொண்ட இளைய தலைமுறை எழுத்தாளரான இவரது முதல் சிறுகதைத் தொகுதி மல்லிகைப் பந்தல் வெளியீடாக வருவது மிகப் பொருத்தமே.

கவிதை, சிறுகதை, இலக்கியம், அறிவியல் கட்டுரைகள் எனப் பல பரிமாணங்களில் தேசிய இதழ்கள், சஞ்சிகைகள் ஊடாகத் தன் தேடலைத் தொடரும் ஸஹானாவிடமிருந்து ஈழத்தமிழ் இலக்கியத்துக்கு வளஞ்சேர்க்கும் பல புதிய வரவுகளை எதிர்பார்க்கிறேன்.

இப்போதைக்கு, இத்தொகுதியை எமக்குத் தந்திருக்கும் ஸஹானாவுக்கு எனது பாராட்டுக்களும், வாழ்த்துக்களும்.

**பண்ணாமத்துக் கவிராயர்**

*26 போகஹ கொட்டுவ வீதி*
*மாத்தளை.*

*19 நவம்பர் 1996.*

**த. ஜெயகாந்தன்**
162, 94வது தெரு, 15 செக்டார்,
கே.கே. நகர், சென்னை - 600 078.
போன் : 422773

திருமதி ஸஹானாவின் ஒரு 'தேவதையின் கனவு' சிறுகதைத் தொகுதி வெளிவருவது குறித்துப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். தெளிவுற அறிந்திடவும், தெளிவுபெற மொழிந்திடவும், சிந்திப்போர்க்குக் அறிவு வளர, உள்ளத்தே ஆனந்தக் கனவு பல காட்டலும் கைவரப் பெற்றவர்கள் எழுதும் படைப்புகள் காலத்தால் என்றென்றும் போற்றப்படும். அவை என்றும் புதியவை. அத்தகு இலக்கிய வரிசையில் தேவதையின் கனவும் இடம்பெற வாழ்த்துகிறேன்.

22. 1. 1997
சென்னை - 78

அன்பு
**த. ஜெயகாந்தன்**

## உள்ளே


1. நாதன் உள்ளிருக்கையில் 21
2. கண்ணில் தெரிகின்ற வானம் 35
3. இரு வேறு பார்வைகள் 48
4. சந்தேகக் கோடு 60
5. தந்தைமார்களும், மகன்மார்களும் 75
6. ஒரு பொற்கனவின் முடிவில் 97
7. பென்சன் 108
8. எழுத மறந்த கவிதையொன்று 111
9. புதிதோர் சாந்தி பிறந்ததடி 129
10. ஒரு தேவதைக் கனவு 138
11. செக்கு மாடுகள் 151
12. ஒரு பாடசாலையின் கதை 167
13. கடக்க முடியாத தொலைவுகள் 175
14. கோடுகள் தாண்டப்படலாம் 189
15. பின்னுரையாக ஒரு குறிப்பு 206


# நாதன் உள்ளிருக்கையில்...

சில்லென்று ஒரு காற்று வந்து தொட்டுப் போனது. தொடைகள் பயிற்சியில் கடைசிக் கணக்கையும், பிள்ளைக்ளுக்கு சொல்ல வேண்டிய முக்கிய குறிப்புக்களையும் எழுதிக்கொண்டாயிற்று. தாள்கள் பறக்கச் சிலுசிலுத்தன.

ஜன்னலுக்கூடாக பாலுவீட்டு மாமரத்துக்குப் பார்வை எதார்த்தமாகத் திரும்பிற்று. மரத்தில் புதியதோர் தளிர் துளிர்த்திருந்தது. அதன் பரப்பு வழக்கதைவிட ரொம்பப் பெரிதாக இருந்தது. சரவணன் ஒருவித பிரமிப்போடு அதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

பக்கவாட்டில் சப்தம் கேட்டுத் திரும்பினான். நஸீரா ஓடிவந்து கொண்டிருந்தாள். மெல்லக் குலுங்கும் அழகுகள் இறுக்கிக் கட்டிய தாவணிக்கூடாகக் கண்ணைப் பறித்தன.

அவள் தன்னைப் பார்க்குமுன் தன் கண்களைக் காத்துக் கொள்ள வேண்டும் என்று தவிப்போடு முயன்றதில் வெற்றிகிட்டிற்று. அவள் அவனைப் பார்த்ததும் சற்று வெட்கத்தோடு ஓட்டத்தை நிறுத்தினாள்.

“சேர், நாளக்கி எங்கட பெருநாள்...”

“ஓம் தெரியும்...”

“நீங்க எங்கட வூட்டுக்கு வரணும்...”

“ஓமோம், அதுக்கென்ன?” என்று சொல்லிவிட நாவெழுந்தது. சொல்லவில்லை. தப்பித் தவறி உள்ளே அம்மாவின் காதில் விழுந்து விடுமோ? தவிரவும், அவனுக்குத் தெரிந்தவரை இந்தப் பகுதியில் ஏ.எல். சயன்ஸ் படித்து நாலு பாடத்திலும் எஸ் எடுத்தவள் நஸ்ராதான். எனவே, இயல்பாகவே அவள்மீது ஒரு மரியாதை ஏற்பட்டிருந்தது. அவளோடு அப்படிப் பேசிப் பழக்கமில்லை.

“யோசிக்காம வாங்க சேர்...”

சொல்லிவிட்டு அவள் பறந்துவிட்டாள். அவன் பார்வை சில நிமிடங்கள் அவள் போன திக்கில்...

பாரொடு விண்ணாய் பரந்த எம் பரனே
பற்று நாள் பற்றிலேன் கண்டாய்

மனசில் ஒரு மாய உதடு முணுமுணுத்தது. வலுக்கட்டாயமாக நினைவுகள் மீட்கப்பட்டன.

ஞானத்தின் குவார்ட்டஸ் வரை போய் வரவேண்டுமென்று நினைத்திருந்தது நினைவுக்கு வந்தது. ஞானசேகரத்தோடு பேச வேண்டும். இந்த முறையாவது ஊர் போய் வரவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் கொக்குவில் அவனது சொந்த ஊர். ஏ.எல். முடித்த கையோடு வெளிநாடு போகவேண்டு மென்று பேரவா. எப்படியோ பதினையாயிரம் ஒரு ஏஜன்சிக்குக் கொடுத்தான். பல மாதங்கள் காத்திருந்த பின்பே தான் ஏமாற்றப்பட்டது தெரிந்தது. மீண்டும் மனந்தளராது பத்தாயிரம் சேகரித்து இன்னொரு ஏஜன்சிக்குக் கட்ட... மீண்டும் அதே கதை...!



‘என் ஒருத்தனுக்குத்தானா இப்படி ஆகவேண்டும்? என் தந்தையின் பணத்துக்கா இந்த அவலம் நேர வேண்டும்?’ சில மாதங்கள் சோகம் வடிந்த முகத்துடன் தாடி வைத்துக் கொண்டு திரிந்தான். இடையில் இன்னொரு பிரச்னையும் சேர்ந்து கொண்டது. இயக்கப் பெடியன்கள் பல பக்கத்தாலேயும் தேடுகினமாம்...

வீட்டில் எல்லாரும் இவனைப் பற்றி ரொம்பப் பயப்பட்டார்கள். எல்லோருமாக யோசித்தார்கள். சரவணனின் தூரத்து உறவினரான மஹாதேவன் கெகிறாவைக்குப் பக்கத்தில் வேலை பார்க்கிறார் பல வருடங்களாக. எந்தப் பயமுமின்றி, எத்தகைய குழப்ப நிலையிலும் மாதம் ஒருமுறை ஊர் வந்து போவார். கெகிறாவையில் தனக்குத் தெரிந்த முஸ்லிம் ஸ்கூல் அதிபரிடம் பேசி ஒரு தொண்டர் ஆசிரியராக சரவணனைச் சேர்த்து விடுவதென்று அவர்தான் முடிவெடுத்தார்.

அப்படியொன்றும் பெரிய ஆர்வம் சரவணனுக்கு இல்லை. எனினும், சுத்தமாகச் சவரம் செய்து, இதயத்தில் போதுமான விருப்பை ஏற்படுத்திக்கொண்டு புறப்பட்டு அவருடன் வந்துவிட்டான். மஹாதேவனேதான் பிள்ளையார் கோவில் குருக்களிடம் பேசி, கோயிலுக் கருகிலுள்ள அவர் வீட்டில் ஒரு அறையை ஏற்பாடு செய்து கொடுத்தார். இடையிடையே வந்து அவனைப் பார்த்துப் போவதாகச் சொன்னார். இவன் இங்கு வந்து ஒன்றரை வருடங்களாகின்றன. சென்ற ஆறு மாதங்களாக ஊர் போகவில்லை.

தொண்டர் ஆசிரியன் என்றபடியால் அவன் செய்யும் கிளாஸ்களுக்கேற்ப - அதிலுள்ள மாணவர்களின்

எண்ணிக்கைக்கு ஏற்பவே - அவனுக்கு ஊதியம் கிடைக்கும். மாதம் ஒரு பிள்ளைக்கு ஐந்து ரூபாய். அதிலும் தளம்பல் இருக்கும். பலவேளைகளில் அவனது தேவைக்கு அந்த ஊதியம் போதியதாக இருக்காது. அதை அறிந்தோ என்னவோ வீட்டிலிருந்து எப்படியும் மாதம் ஒருமுறை அவனுக்குப் பணம் வரும்.

அவனுக்குக் கூச்சமாக இருக்கும். இத்தனை வயதுக்குப் பிறகும் இன்னும் தன் செலவுகளை தானே நிறைவேற்றிக் கொள்ளும் யோக்கியதை வரவில்லையே என்று தன்மீது கோபம் வரும். இந்தக் காலத்துப் பெண்கள்கூட கடல் கடந்து தொழில் செய்து வீட்டுக்குப் பணம் அனுப்புகையில் தான் இப்படி ஓட்டைப் படகாகப் பயனற்றுப் போனதையிட்டு சுயபச்சாதாபம் தோன்றும்.

வெகுவிரைவில் இந்த மக்களோடு அவன் ஐக்கியமாகிப் போனான். அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில தமிழ்க் குடும்பங்கள் இருப்பினும் அவர்களோடு அவனது உறவு வாசல்வரை நின்றுவிடும். ஆனால்... இந்தப் பாடசாலை மாணவர்களும், சக ஆசிரியர்களும் அவனை உள்வீடுவரை கெஞ்சி அழைக்கையில் அவனால் மறுக்கமுடியாமல் போய்விடும். தமது இறுக்கமான மதப்பற்றோடும், மார்க்க வரைமுறைகளோடும்கூட இந்த மனிதர்கள் எப்படி ஒரு அந்நியனுக்கு இடம் கொடுப்பதில் இத்தனைத் தளர்வாக இருக்கிறார்களென்று பலவேளைகளில் அவன் யோசித்திருக்கிறான்.

ஆனால்... இந்த ஐயர் குடும்பத்தோடுதான் எவ்வளவு முயன்றும் ஒட்டிக்கொள்ள முடியவில்லை. அவர் குடும்பம் அத்தனை பெரிதில்லை. ஐயரும், அம்மா (ஐயரின் மனைவி)வும் தான். அம்மாதான் அங்கு சர்வ வல்லபி. சின்னச் சின்ன விஷயங்களில்கூட அவனுக்கு



அவர்களின் போக்கு ஓர் ஆழமான நெருடலை ஏற்படுத்தும். இரவு இத்தனை மணிக்குள் வரவேண்டும்; வெளியே ஓட்டலில்தான் சாப்பிட வேண்டும்; இஸ்திரி பண்ணவும், ரேடியோ கேட்கவும் வீட்டு மின்சாரத்தைப் பாவிக்கக்கூடாது. இப்படி...

அவன் தன்னைச் சுற்றிப் பெரும் பரப்பாகப் படரவிட்டுள்ள மௌனத்தின் அடர்த்தியில், அவனது உள்ளத்து எரிச்சல்கள் அவர்களைப்போய் அடைய முடியவில்லை. எல்லாவற்றையும் விட்டெறிந்துவிட்டு ஊர் போய்விடலாம். அங்கு போய்த்தான் என்ன செய்வது?

வாழ்க்கை வீட்டுக்கும், கோயிலுக்கும், பாடசாலைக்குமிடையில் ஓடிக்கொண்டிருந்தது. தேடி வந்த பிரத்தியேக வகுப்புகளையெல்லாம் ஒன்றுவிடாமல் ஏற்றுக்கொண்டான். வீட்டில் இருக்கும் பொழுதுகள் அப்படியாவது குறைபடுமே! தவிரவும், இதன் மூலமாவது கொஞ்சப்பணம் சேர்த்து இம்முறை வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்றொரு நப்பாசை.

கையில் ஓரளவு பணம் சேர்ந்துவிட்டிருந்தது. அதை எடுத்துக்கொண்டு ஊர்போய் அம்மாவின் காலில் விழுந்து, ஆசி பெற்று, தங்கைகளை உச்சிமோர்ந்து... சிலநாள் ஆடிக்களித்து...

எண்ணிக்கொண்டுதான் இருக்கிறான். சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. ஞானம் பருத்தித்துறைக்குப் போகையில் அவருடன் சேர்ந்து இம்முறை போகத் தீர்மானங் கொண்டிருந்தான்.

எழுதிக் கொண்டிருந்த கொப்பியை மூடி ஓரமாக வைத்தான். கதிரையைத் தள்ளி எழுந்தான். பேனையைச் சட்டைப் பையில் சொருகியபடி வெளியே வந்தான்.

வெளியே செல்கையில் அவன் தன் அறைக்கதவை மூடுவதில்லை. அப்படி மூடுவது ஐயர் வீட்டாரை நாகரிகமான முறையில் விலக்கி வைத்து விடுமோ என்று லேசான பயம். இருக்கின்ற விரிசல் போதாதா என்று எண்ணிக்கொள்வான். எதற்குத்தான் கதவை மூடுவது? அப்படி என்ன என்னிடம் பொக்கிஷமா இருக்கிறது? ஒன்றிரண்டு உடைகள்.. சில புத்தகங்கள்.. ஒரு சின்ன ரேடியோ.. கரி இஸ்திரிப்பெட்டி...

அம்மா கோயில் பின்னால் உடை காயப்போட்டுக் கொண்டிருந்தாள். அப்போதுதான் குளித்த ஈரம் தலையில் சொட்டிக்கொண்டிருந்தது. முதுமையைத் தொடும் பருவமாயினும் அம்மா அழகுதான்.

"அம்மா, ஞானத்தின் குவாட்டர்ஸ் வரை போய் வரட்டுமா?" அம்மா திரும்பிப் பார்த்து 'சரி' எனத் தலையசைத்தாள்.

வீட்டை விட்டிறங்கி முன்ரோட்டில் நடக்கத் தொடங்கியபோது, எதிரே சித்தீக்கின் உம்மா வந்துகொண்டிருந்தாள். சித்தீக் எட்டாம் ஆண்டுப் பையன். கையிலிருந்த கூடையில் நிறையக் காய்கறிகள். ஒரு மலர்ந்த புன்னகையால் அவனுக்கு வந்தனம் சொன்னாள்.

பக்கத்து வீடாயினும் அவளும் சரி, அவள் கணவனும் சரி அவனோடு பேசியதில்லை. ஒரு மரியாதையான தலைசாய்ப்புப் புன்னகையோடு சரி. அந்த சித்தீக்கின் உம்மாவை அவனுக்கு ஏனென்று தெரியாமலே பிடிக்கும். இந்த ஊரில் நல்ல வசதியுள்ள குடும்பம் அவர்களுடையது. எனினும் பார்வைக்கு எந்தப் பகட்டும் தெரியாது.

எண்பத்துமூன்று கலவரத்தின்போது ஐயரும், அம்மாவும் மூன்று நாட்கள் சித்தீக் வீட்டில்தான்



ஒளிந்திருந்தார்களாம். யாரோ ஒரு சண்டியன் வந்து சித்தீக் வீட்டாரைப் பயமுறுத்தியபோதும் சித்தீக்கின் உம்மாதான் கடைசிவரை சமாளித்து அனுப்பினார்களாம். ஐயர் ஒருமுறை பேசிக்கொண்டிருக்கையில் இதைச் சொன்னார். அப்போதிருந்து அந்தக் குடும்பத்தின்மீது அவனுக்கிருந்த பிடிப்பு இன்னும் உயர்ந்துவிட்டது.

★ ★ ★

காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பதும்
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே...

கோயிலுக்கு வந்து வெகு நேரமாகியது. மனப்பாடமாயிருந்த அத்தனை தேவாரங்களையும் ஒப்புவித்தாயிற்று. மனம்தான் ஆறியபாடில்லை. ஒரு இனந்தெரியாத கண்ணீர் உள்ளத்தின் ஆழத்திலிருந்து பொங்கிக்கொண்டிருந்தது. கண்ணீர்ப் பரப்புகளில் தாயினதும், சகோதரிகளினதும் முகங்கள் மிதந்து கொண்டிருந்தன.

பலதடவைகள் சரவணன் இத்தகைய உணர்ச்சி மயமான மனோநிலையைக் காரணமின்றியே அனுபவித்திருக்கிறான். குடும்பம், பாசம் போன்ற இயல்பான மனதிவுணர்ச்சிகளே தன்னை இந்தளவுக்கு ஆட்டிவைக்கின்றனவே என்று கவலையும் பட்டிருக் கின்றான். ஒருவேளை, இவன் மனசைக் கடவுள் ஒரு பெண்ணுடையதைப்போல் படைத்துவிட்டாரோ?

தந்தையில்லாத குடும்பத்தின் மூத்த மகனான நான் என் கடமைகளைச் சரிவர நிறைவேற்றுகின்றேனா? என்

தங்கைகளுக்குச் சரியானதோர் வாழ்வைத் தேடிவைத்து விட்டேனா?

இந்த ஆடி அமாவாசையன்று விரதமிருந்து தான் வேண்டிக்கொண்டதாகச் சென்ற வாரம் பெரிய தங்கை எழுதியிருந்தாள். அப்பாவின் பாவங்கள் அதனால் குறையுமென்று அம்மா சொன்னாளாம்.

அப்பா வியர்வை சிந்தி உழைத்துச் சேர்த்து வைத்துப்போன செல்வங்களைத்தான் நான் கரைத்துக் கொண்டிருக்கிறேன். என்னால் அவற்றைப் பெருக்க முடியவில்லை...

தேங்காய் உடைத்து, சாஷ்டாங்கமாக விழுந்து நீண்ட நேரம் எதையெதையோ வேண்டிக்கொண்டு எழுந்திருக்கையில் தரையில் கண்ணீர் படிந்திருந்தது.

கொஞ்சநேரம் தூணில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தான். தூக்கம் வருகிறாற்போலிருந்தது. மனம் இனி அமைதிப்பட்டுவிடும் என்ற நம்பிக்கையுடன் எழுந்து, தகரக்கேற்றைத் திறந்துகொண்டு வீட்டினுள் நுழைந்தான்.

அம்மா பூத்தட்டோடு எதிர்ப்பட்டாள்.

"தம்பி சொல்ல மறந்திட்டன். வெள்ளன நீர் வெளியால போயிருக்கையில அந்தப் பெடியன்... அதான் அந்த வீடு... அவன் உமக்குச் சாப்பாடு கொண்டு வந்தவன்... பெருநாள் சாப்பாடாம்...! அவை மச்சம் எல்லாம் சமைக்கிறவை... உள்ள எடுக்க ஏலுமா? திருப்பி அனுப்பிப்போட்டன்...! உந்த வேலைகள் அழகில்லத்தானே...?

அவன் கதையின் சாரத்தை உள்வாங்கி யோசிப்பதற்குள் அம்மா உள்ளே போகத் திரும்பினாள்.

"ஆர் அம்மா... காமிலோ?..."



"அவனாகத்தான் இருக்கும்... எனக்கென்ன பேர் தெரியும்...?"

அறைக்குள் நுழையவுமில்லை. சரவணன் சொல்லி கொள்ளாமல் வெளியேறினான். நேற்று நஸீரா அவனை வீட்டுக்கு வரச் சொன்னது ஞாபகம் இருந்தது. ஆனாலும் அவன் போகவேண்டுமென்று நினைக்கவில்லை. ஏனோ தயக்கம்...

மாலைவரை அவனை எதிர்பார்த்துவிட்டு நஸீரா தம்பியிடம் சாப்பாடு அனுப்பியிருந்தாள். அவனுக்கு நினைக்கையில் ஆச்சரியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது. என்மீது இத்தனை அன்பா இவர்களுக்கு?

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ இப்பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி...

நஸீரா வீட்டை அடைந்தபோது வெளியே நிலைப்படியோரமாக அவளது தாய் நின்றிருந்தாள். முகத்தில் ஓயாத வேலைகளை ஒருவாறாக முடித்துவிட்ட ஆயாசம் தெரிந்தது. அவனைக் கண்டதும் லேசான விசனம் அவள் முகத்தில் பரவிற்று. அவனுக்குச் சங்கடமாக இருந்தது.

"நான் வரலாமா?" குரல் ஏனோ மெல்லிசாக ஒலித்தது. அதற்குள் அவளே வரும்படி கூப்பிட்டாள்.

அவன் வாசலுக்கு நேராக உள்ள கதிரையில் அமர்ந்து கொண்டான். கொஞ்சநேரம் வெளியே கவிந்து கொண்டிருக்கும் இருளைப் பார்த்துவிட்டுச் சொன்னான்.

"உங்கட சாப்பாட்டை அம்மா திருப்பி அனுப்பிப் போட்டாவாம். இப்பதான் சொன்னவ, உடனே ஓடி வந்தன்..."

அவள் முகம் லேசாக இறுகிற்று. அவன் கீழே குனிந்துகொண்டான்.

"பாவம் சேர். எந்த நாளும் ஒட்டலில்தான் சாப்பிடுறார்னு நஸீரா சொல்லிட்டிருந்தா, அதுதான் அனுப்பினேன். அவங்க என்னன்டா..."

"யாரும்மா?" என்றபடி உள்ளிருந்து வந்த நஸீரா இவனைக் கண்டதும் அதிசயித்துப்போனது அகன்று விரிந்த விழிகளில் தெரிந்தது.

அவன் மௌனமாகப் புன்னகையில் இருக்க, அவள் திரும்பவும் சொன்னாள்.

"நாங்க அப்படி கோயில் வூட்டுக்கு சாப்பாடு அனுப்பினது பிழதான். அதுவும் கோயில்ல சேர்ந்ததுதானே... எங்கட சாப்பாடுகள் இறச்சி இல்லாம இருக்காதே... யோசிக்காம செஞ்சிட்டேன்..."

குரலில் குற்றவுணர்வு தொனித்தது. அவனுக்குத் தாள முடியவில்லை. என்னோடு அன்பு செய்வதற்கே யாரும் குற்றவுணர்வை அடையலாமா?

என் செல்வமே சிவபெருமானே

யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் படித்தேன்.

"அம்மாவப்பத்தி உங்களுக்குத் தெரியும்தானே... நீங்கள் அனுப்பினது பிழையில்ல. இப்ப இல்லாட்டிலும் எப்பண்டாலும் ஒருநாள் நான் கட்டாயம் உங்கட வீட்டில சாப்பிடுவன். இப்ப கொஞ்சம் பால் தருவீங்களா?"

நஸீராவின் தாயிடம் கேட்டான். தன்னை நாடி தான் கேட்காமலே உணவளித்தவர்களிடம், நான் நாடி பால் கேட்பது தவறோ?



"அப்பிடி தராமயா அனுப்பிருவம்...?"

அவள் உள்ளே போனாள். நஸீரா வியப்பு நீங்காமல் நின்றிருந்தாள். அவன் இத்தனை இயல்பாகப் பேசி இன்றுதான் அவள் கேட்கிறாள்.

அவனுக்கும் தன்னிலை உணர்கையில் ஒருவித பரவசமாக இருந்தது. பறப்பதற்கு சிறகு விரித்த சின்னஞ்சிறு புறாக்குஞ்சொன்று தன் முதல் முயற்சியிலேயே தேறிவிட்ட சந்தோஷத்தைப்போல்... முதல் தடவையாக ஒரு அந்நிய வீட்டில் வாயால் கேட்டு வாங்கிய அந்தத் தேநீரைச் சுவைத்துக் குடித்தான் சரவணன்.

★ ★ ★

காமிலும், சித்தீக்கும், ஜெகனும் அறைக்கு வந்திருந்தார்கள். 'தொடை'களில் சந்தேகமாம். தான் எழுதிவைத்திருந்த குறிப்புகளின் உதவியோடு சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தான் சரவணன்.

எப்போதும் அவன் குறிப்புக்களின் உதவியுடன்தான் படிப்பிப்பான் அதிலும் தொண்டர் என்றபடியால், மற்ற ஆசிரியர்களைப்போல் மாணாக்கர் பற்றி சிரத்தையின்றி இருந்துவிட முடியாது. அணுவளவு தவறினும் இனங்காணப்பட்டுவிடுமோ என்கிற முழுக் கவனத்தோடுதான் வகுப்புக்களை அவன் செய்வதுண்டு. ஆயினும், இப்படியும் சில மாணவர்கள்... இவர்களுக்கு சில விஷயங்களில் அல்லது முழுவதிலும் சற்றுப் பிரத்தியேக கவனம் எடுக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் இடையிடையே சிரித்துக்கொண்டும், கதைத்துக் கொண்டும் படித்துக்கொண்டிருந்தார்கள். சிலவேளை

களில் ஒருவரையொருவர் கிள்கிக்கொண்டு "சேர்... பாருங்க" என்று முறையிட்டார்கள்.

சரவணன் அவற்றை உள்ளூர ரசித்தான். விடலைப் பருவமெனில் விளையாட்டும், வேடிக்கையும் இன்றி என்ன வேலை ஒழுங்காக நடக்கும்? அம்மாவுக்கு உள்ளே சத்தம் கேட்டு விடுமோ என்று லேசாகப் பயந்து கொண்டிருந்தான். "டேய்... விசரன்... சும்மாயிருடா...!" என்று சித்தீக்கின் தலையில் நறுக்கென்று குட்டி வைத்தான்.

படிப்பு முடிந்து அவர்கள் எழுந்து போகப் புறப்பட்டபோது அவனுக்கு ஆறுதலாக இருந்தது. அம்மாடி... அம்மா இவர்களைக் காணவில்லை என்ற எண்ணம். ஆனால் மாணவர்கள் வாசலை அண்மித்த போது அம்மா அவர்களைக் கண்டுவிட்டாள். சரவணன் மேலே நடக்க முடியாமல் தனது அறை வாசலிலேயே நின்றுவிட்டான்.

"எங்க வந்தனீங்க..? படிக்கவோ...?"

"ஓ அம்மா...!" - காமில்

''பிள்ளையள்... இனி உப்பிடி கண்டமாதிரி வராதேயுங்கோ... அடிக்கடி இஞ்சை வாறது சரியில்லயல்லோ...?"

அவர்கள் மௌனமாக ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி போய்விட்டார்கள். பின்னால் அவன் நின்றது அவர்களுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால், ஒரு சின்னஞ்சிறு பார்வையை ஒருமித்து அவன்மீது வீசியிருப்பார்கள். ஆறுதல் வார்த்தையொன்று வேண்டி. அது நெஞ்சத்தைப் பிராண்டிக்கொண்டிருக்கும். ஆயினும் அவன் ஊமையாகவே நின்றிருப்பான் தலை குனிந்து...!



உதடுகளை நக்கி ஈரமாக்கிக்கொண்டான். அம்மா அவனை நோக்கித் திரும்பினாள். சட்டென அறைக்குள் புகுந்துகொண்டான். ஜன்னலருகே போய் நின்று கொஞ்சநேரம் காற்றில் அலைந்த மாமரத்து இலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஏன் அம்மா இப்படி இருக்கிறாள்? சில வருடங்களுக்கு முன்பு தான் சித்தீக் வீட்டில் கலவரத்துக்கஞ்சி ஒளித்திருந்ததை இத்தனை சீக்கிரம் மறந்துவிட்டாளோ? அது எப்படி முடியும்?

கொடியில் காய்ந்து கொண்டிருந்த தன் உடைகளின்மீது பார்வை சென்றது. அவற்றை மடித்து சூட்கேஸில் அடுக்கினான். கீழே விழுந்திருந்த கைக்குட்டை, றேடியோ, ஸ்திரிப்பெட்டி எல்லா வற்றையும் உள்ளே வைத்தான். கோயில் என்பது ஆலயம்; எந்த ஒன்று மனிதனுக்குத் தெய்வீக அருளும், மனவலி மையும் தருகின்றதோ அது குடியிருக்குமிடம் ஆலயம். அங்கு யார் போக வேண்டும், யார் வரவேண்டும் என்று வரையறைகள் இருக்கலாமோ?

தெய்வத்தின்முன் அர்ச்சனை செய்பவர்கள் தெய்வத்துக்கு நிகரான அருட்குணம் கொண்டிருக்க வேண்டியது அவசியம்தான். இல்லாவிட்டால் மற்ற மனிதரிடையே அவர்கள் எந்த விதத்திலும் உயர்ந்து நிற்க முடியாது. ஆனால்... இவர்கள் மற்ற மனிதரைப் போலவாவது மனசைத் திறக்க மனமில்லாதவர் களானால்...

அறைவாசலுக்கே வந்த அம்மா திகைத்திருக்க வேண்டும்.

"எங்க போறீர்..?" குரல் கேட்டு நிமிர்ந்தான்.

வெளியே போயிருந்த ஐயரும் தேங்காய் எண்ணெய் போத்தலோடு நின்றிருந்தார்.

"நான் என்ர ஸ்டுடண்ட் ஒருத்தர்ர வீட்ட போறன்."

"ஏன் தம்பி... என்ன நடந்தது...?" - அவசரமாய்க் கேட்டார்.

"ஒண்டுமில்ல... ஐயா... அவை நெடுகத் தங்கட வீட்டில வந்து இருக்கச் சொல்லிக் கூப்பிடுகினம்... அதுதான் நான் அங்கே போறன்..."

வெளியே இறங்கிவிட்டான். சொல்லியாயிற்றே தவிர இன்னும் யார் வீட்டுக்குப் போவதென்று ஒரு தீர்மானமும் இல்லை. பலர் கூப்பிட்டிருக்கிறார்கள்தான். ஆனால்...

அவன் கவலைப்படவில்லை. மானுடத்தின் பரப்பு வானம்போல் விசாலமானது. அதில் அவனுக்கென ஒரு வாசல் திறந்திருக்காதா என்ன...?

தேடிக் கண்டு கொண்டேன்
திருமலொடு நான்முகனும்
தேடித் தேடொனாத் தேவனைத் தேடிக்
கண்டு கொண்டேன்...!

அவன் திரும்பிப் பாராமல் நடந்துகொண்டிருந்தான்.

# கண்ணில் தெரிகின்ற வானம்...!

விளையாடப்போன ரமேஷ் இன்னும் வரவில்லை. மாலை மயங்கிக்கொண்டிருந்தது. சற்று நேரத்திற்கு முன் கோழித்தூக்கத்தில் ஆழ்ந்திருந்த அம்மா - வீட்டுக்கார அம்மா - கண்களைக் கசக்கியபடி தள்ளாடிக்கொண்டு எழுந்து வந்தாள். இன்னும் கொஞ்சநேரத்தில் பொஸ் வந்துவிடுவார். இரவு சாப்பாட்டுக்கு எல்லாம் தயார் பண்ணியாயிற்று. இனி போக வேண்டியதுதான்.

"அப்ப நா போறேம்மா..." சொல்லிக்கொண்டு எழுந்தாள் சுபா - சுபாஷிணி. இத்தனை நேரமும் அம்மா தூங்கி எழும்வரை புரட்டிக்கொண்டிருந்த புத்தகத்தை மேஜை மேல் வைத்தாள். தன் சிறிய டிபன் பொக்ஸை எடுத்துக்கொண்டாள். அது அவள் தனது வீட்டுக்குக் கொண்டு போகவென வீட்டுக்கார அம்மா பிரத்தியேகமாகத் தந்துள்ள டிபன் பொக்ஸ், மாலையில் செய்த கட்லட்சில் கொஞ்சம் அம்மா அதில் போட்டுத் தந்திருந்தாள்.

"சரி போயிட்டு வா... நாளக்கி வருவியா...? அம்மா - வீட்டுக்கார அம்மாவாயினும் அம்மா போலத்தான் - கேட்டாள்.

"வருவேம்மா.."

சொல்லியபடி வெளியிறங்கினாள் சுபா. அம்மா எப்போதும் இப்படித்தான். இவளை வெறுங்கையோடு வீட்டுக்குப் போக ஒருபோதும் அனுமதித்ததில்லை. உண்ணும் எந்த உணவிலும், செய்யும் எந்தப் பலகாரத் திலும் அவளுக்குப் பங்கிருப்பது போலவே, அவளது பெற்றோருக்கும் தங்கைக்கும் கொஞ்சம் பங்கிருக்கும்.

சீக்கிரமே வீடுபோய் விட்டால் தேவலாம். லேசாக மழை இருட்டுவது போலிருந்தது. பிரதான வீதியைக் கடந்து தனக்கு நேராக இருந்த சிறிய ஒழுங்கைக்கு ஊடாக அகலமான மண்வீதியை அடைந்து நடக்கத் தொடங்கினாள்.

பெண்கள் தளும்பத் தளும்ப நிறைகுடம் சுமந்து வீடுகளுக்குச் சென்று கொண்டிருந்தார்கள். முற்றம் கூட்டிக் கொண்டிருந்த கல்யாணி "வீட்டுக்குப் போறியா?" என்று கேட்டு ஸ்நேகபூர்வமாய்ச் சிரித்தாள்.

சுபா நடையை விரைவாக்கினாள். குறுக்கே ஒரு கோழி கொக்கரித்துக் கொண்டு ஓடிற்று. மனசுக்குள் மெல்லிய ராகமாய் ஒரு கீதம் சுழன்றெழுந்தது. மாலையின் கடைசி வெயிலில் பளீரிட்ட வானத்தின் அழகு பூமியை வெகு ரம்யமாக்கிக் கொண்டிருந்தது.

கைகளை விரித்தபடி ஓடிச்சென்று உலாச் செல்லும் மேகத் திரைக்குள் மூழ்கிவிட வேண்டும் போல் ஓர் ஆசை எழுந்தது. பறக்க வேண்டும், வானவெளியெங்கும் மிதக்க வேண்டும். கனவுகளின் மீளாத மயக்கத்தில் காலமெல்லாம் நான் சஞ்சரித்திருக்க வேண்டும்.

தூரத்தே குளக்கட்டு தெரிந்தது. ஒரு பெண் தன் சிறு குழந்தையுடன் ஈரக்கூந்தல் காற்றில் அலைபாய, குளித்துவிட்டு வந்து கொண்டிருந்தாள்.



குளக்கட்டில் நீளமாக நடந்து படித்துறையில் படிகளில் இறங்கி நடந்தாள். படிகளின் ஓரத்தில் செழித்து வளர்ந்திருந்த மொடக்கத்தான் இலைகளைக் கிள்ளிப் போட்டபடி நீரில் இறங்கினாள்.

தண்ணீர் கடைசிப்படியினை விட்டும் ரொம்பத் தூரம் போயிருந்தது. குளம் ரொம்பத்தாள் வற்றிவிட்டது. நீர் நிறைய இருக்குமானால் அவள் மறுபுறம் குளத்தை சுற்றித்தான் வீட்டுக்குச் செல்லவேண்டும்.

காலையில் வரும்போது அம்மாவுக்குத் தலைவலி. இப்போது எப்படியிருக்கிறதோ தெரியாது. தண்ணீரில் இறங்கி நடக்கத் தொடங்கினாள்.

பெரிய பெரிய துளிகளாய் மழை கொட்ட ஆரம்பித்தது, டிபன் பொக்ஸைக் கக்கத்தில் இடுக்கியபடி இரண்டு கைகளாலும் பாவாடையை முழங்கால்வரை தூக்கிக் கொண்டு 'தளுக்'கென்று தளும்பிய நீருக்கூடே நடந்தாள்.

மழையிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும் என்று அவளுக்குத் தோன்றவில்லை. மழையில் உடம்பு முழுக்க நனைந்துகொண்டே நடப்பதில் உள்ள ஆனந்தம் வேறு எதில் இருக்கிறது..?

மழைத்துளிகள் நீரில் விழுந்து கொப்புளங்களாகி மேலெழுவதைப் பார்க்க விநோதமான ஒரு சந்தோஷம் உண்டாயிற்று. ஓரமாக வளர்ந்திருந்த தாமரை இலைகள் மழைத்துளிகளின் கனம் தாளாமல் நீருக்குள் அமிழ்வதும், எழுவதுமாய் இருந்தன.

மேகம் கறுக்குது
மழைவரப் பாக்குது
வீசியடிக்குது காத்து.. மழைக்காத்து..!

யாரும் அருகிலில்லை என்னும் தைரியத்தில் பாட்டு வந்தது. தரையை அடைந்ததும் பாவாடையைக் கீழே விட்டபோது, கால்களில் ஈரத்தில் ஒட்டிக்கொள்ள, நடக்கச் சிரமமாயிருந்தது. ஈரமான பாதங்களில் கரையோரத்துக் குறுமணல் ஒட்டிக்கொண்டு, நடக்கையில் 'சரக் சரக்'கென்று சத்தம் செய்ததைக் கேட்க, மனசுள் இன்ப அலையாகப் பொங்கிற்று.

"ஏதோ நெஞ்சில் ஆச வந்து
என்னென்னமோ ஆகிப் போச்சு
சேராமல் தீராது
வாடைக் குளிரில் வாடுது மனசு.."

பாடிக்கொண்டு விரைவாக நடக்கையில் அந்தச் சிறிய டீ ஸ்டோல் கண்ணில் பட்டது. முன்புறம் கனிந்த வாழைக்குலையொன்று தொங்கிக் கொண்டிருந்தது. ஓரமாகவிருந்த மரத்தட்டுகளில் விதவிதமான டொஃபிகள் கண்ணாடி போத்தல்களில்.

கேஷியரில் நரேன் உட்கார்ந்திருப்பது இங்கிருந்து பார்க்கையிலேயே தெரிந்தது. தலைகுனிந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். கறுப்பு பிரேம் போட்ட மூக்குக் கண்ணாடி மழையும் வெயிலுமாக இருந்த கலவை ஒளியில் மின்னிற்று.

அவனைக் கண்டதும் கால்கள் விரைவான நடையினை மறந்து தளர்ந்து போயின. அடியெடுத்து வைப்பதிலும் ஏதோ சிரமம் இருப்பதாகப் பட்டது. தான் இன்று முழுக்க இவனை மறந்துவிட்டிருந்ததை இப்போது திடுமென அதிசயத்துடன் எண்ணிக் கொண்டாள் சுபா. இல்லாவிட்டால், அநேகமாக அவன் ஞாபகம்தான் அவளுக்கு. வீடு செல்ல வீதியில் கால் வைக்கையிலேயே அவன் ஞாபகம் நெஞ்சில் ஒளிரத் தொடங்கி விடுகிறது. இந்தக் கொஞ்ச நாட்களாக.



அவன் தன்னைப் பார்க்கவில்லை என்ற தைரியத்தில் நிமிர்ந்து அவனை நன்றாகப் பார்த்தபடி கைவீசி நடந்தாள் சுபா. இந்த இடத்தின் ஒரேயொரு அழகாக இந்த சிறிய டீ ஸ்டோல் இருப்பதாக அவள் தன்னுள் அடிக்கடி கற்பித்துக் கொள்வதுண்டு.

நேற்று தான் வேலைக்கு வரும்போது அவன் என்றுமில்லாதவாறு அவளைப் பார்த்துப் புன்னகைத்தது அவளுக்குச் சட்டென நினைவு வந்தது. நேற்று அவன் க்டைக்கு வெளியே நின்றிருந்தான். சுபா அவனைக் கடந்துதான் போகவேண்டியிருந்தது. தயங்கித் தயங்கி நடந்து வந்து அந்தக் கடையருகில் நிதானித்து தலைநிமிர்ந்தபோது அவன் தனது பிரபை நிறைந்த கண்களால் அவளைச் சிநேகபூர்வமாகப் பார்த்து, நிஷ்களங்கமாகச் சிரித்துக் கொண்டிருந்தான்.

கையிலிருந்த புத்தகத்தால் சட்டென முகத்தை மறைத்துக் கொண்டாள் சுபா. அப்பால் ஒரு எட்டும் எடுத்துவைக்க முடியாதபடி ஆணியடித்து நிறுத்தினாற் போலிருந்தது. சற்றுத் தூரத்திலிருந்த வாகை மரத்தை ஊர்வதுபோல் சென்றடைந்தவள், லேசாக அவனைத் திரும்பிப் பார்த்தாள். அவன் இன்னும் அவளையே புன்னகை மாறாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

சுபாவை வெட்கம் பிடுங்கித் தின்றது. சட்டென வாகை மரத்தின் பின்னால் மறைந்து கொண்டாள். அவன் அங்கு நின்றிருந்த பத்து நிமிடங்கள்வரை அவளும் மரத்துக்குப் பின்னாலேயே மறைந்து நின்றிருந்தாள். அவன் அவ்விடத்தைவிட்டு நகர்ந்துபோன பிறகுதான் ஒரே ஓட்டமாக ஓடி பொஸ் வீட்டை அடைந்தாள்.

இன்றும் அவர் சிரித்தால் என்ன செய்வது என்ற கேள்வி இப்போது எழுந்தது. நேற்று நான்

நடந்துகொண்ட விதம் கண்டு நரேன் நிச்சயமாகக் கோபித்திருப்பார். 'என்ன இது? எட்டாம் வகுப்பு படித்த இவளுக்கு மெனர்ஸ் தெரியாது போலிருக்கே...?' என்று கேலியாக நினைத்திருப்பார்.

'ஒரு மனுஷன் ஆசையா, அன்பா சிரிச்சா இப்பிடியா காட்டுமிராண்டிபோல ஓடுகிறது...?' அவள் தன்னையே கடிந்து கொண்டாள். மனுஷரை காணாத ஜாதி மாதிரி இன்று ஓடக்கூடாது என்று எண்ணிக்கொண்டாள். அவன் இப்போது எழுதுவதை நிறுத்திவிட்டு அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். மூக்குக் கண்ணாடியை லாவண்யமாக உயர்த்திவிட்டுக் கொண்டான். அவளுக்குத்தான் பார்த்த புதிய சினிமாப் படமொன்றின் கதாநாயகனின் ஞாபகம் வந்தது. அவனும் நரேன் போலத்தான் அழகானவன்...! பொஸ் வீட்டில் போனவாரம் பார்த்த படம்!

அந்த டீ ஸ்டோலின் ஓரத்தில் பெஞ்சில் ஓரிருவர் உட்கார்ந்திருந்ததைக்காண அவளுக்குப் பயமாக இருந்தது. கால்கள் பின்னிக்கொண்டன. டிபன் பொக்ஸை மார்போடு அணைத்துக் கொண்டாள். மழைத்துளிகள் இன்னும் விழுந்துகொண்டிருந்தபடியால் உடை உடலோடு ஒட்டிக்கொண்டது.

அவளது தடுமாற்றத்தைக் கண்டு அவன் சிரித்தான். சுபாவுக்கு சிரிக்க வேண்டும் போலிருந்தது. முடியாமலும் இருந்தது. எப்படியோ நாணம் பூத்த ஒரு புன்னகையை உதிர்த்துவிட்டு டிபன் பொக்ஸால் முகத்தை மறைத்தபடி வேகமாக நடக்க ஆரம்பித்தாள். தான் நினைத்தபடியே தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு நாகரிகமாக நடந்து கொண்டதையிட்டு அவளுக்குப் பெருமிதமாக இருந்தது.

★ ★ ★



சுபாஷினி எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த போது ஒருநாள் அவளது தாய்க்கு கடுமையாக ஜுரமேற்பட்டது. அவளும் சின்னத் தங்கையும் தவிர வேறு யாருமில்லாததால், அவள் பள்ளியை விட்டு நின்று அம்மாவை கவனித்துக் கொள்ள வேண்டியிருந்தது. அப்போது நின்ற படிப்பு அதன்பிறகு அப்படியே விடுபட்டு விட்டது. தங்கை மட்டும் பாடசாலை போய்வருவாள்.

இப்போது சுபாவுக்கு பதினேழு வயது. அநேகமாக வீட்டு நிர்வாகமும், சமையலும் அவளுக்குக் கைவந்துவிட்டன. நோயாளியான அம்மாவைக் கவனித்துக் கொள்வதைத் தவிர, வேறொன்றும் சிரமமான வேலை இல்லை.

சுபாவின் அப்பா டவுனிலுள்ள பிரஷ் கம்பெனியில் வேலை செய்கிறார். ஒருநாள் அவளிடம் "சுபா! எங்கட பொஸ்ஸுக்கு வூட்டு வேலைகளுக்கு ஒதவியா ஒரு புள்ள வேணுமாம். நீ போயிட்டு வாறியா...? காலைல போனா அந்தியில வூட்டுக்கு வந்துடலாம்..." என அவர் சொன்ன போது தனது சுகவீனமான அம்மாவைக் காரணம் காட்டி உடனே அதை மறுத்துவிட்டாள் சுபா. தவிரவும், பாடசாலை தவிர வெளியே எங்கும் சென்றறியாத அவளுக்கு வெட்கமாகவும், தயக்கமாகவும் இருந்தது.

சில நாட்களில் அம்மா தேறிவிட்டாள். சமையலை கவனித்துக் கொள்ளுமளவிற்கு அவளால் ஓடியாட முடிந்தது. சுபாவுக்கு அதன்பிறகு 'போரிங்'காக இருந்தது. அப்பா சொன்னபடி அந்த வீட்டுக்குப் போய் வரலாமோ என்று பட்டது. ஏதாவது வரும்படி கிடைக்கும், வீட்டுச் செலவுகளை சமாளிக்கலாமே என்ற நப்பாசையும் எழுந்தது.

மறுநாள் காலை டவுனிலுள்ள அந்த பொஸ் வீட்டுக்குத் தன்னை அழைத்துச் செல்லும்படி அப்பாவிடம் சொன்னாள் சுபா. அப்பாவோடு மாளிகை போன்ற அந்த வீட்டினுள் நுழைந்தபோது, அவளுக்குப் பிரமை பிடித்தாற்போலிருந்தது. வீட்டில் மொத்தம் நாலே பேர்கள். எல்லோருமே அவளோடு அன்பாக நடந்து கொண்டார்கள். அவளைச் சமமாகப் பாவித்தார்கள். அவளுக்குப் பயம் தெளிந்து வீடும் பிடித்துப் போய்விட்டது. தினமும் தனியே வந்து போகுமளவிற்கு தைரியம் ஏற்பட்டது. மாதம் உணவு தந்து முந்நூறு ரூபா கூலி தரும் தொழிலில் ஓர் ஆசையேற்பட்டது.

இந்த ஒரு மாதமாக எப்போது விடியுமென்று காத்திருப்பதும், விடிந்த பிறகு எப்போது அந்தியாகும் என்று பார்த்திருப்பதும் சுபாவின் வாடிக்கையாகி விட்டது. காலையிலும் மாலையிலும் நரேனின் ஒட்டலைக் கடந்து செல்லும் ஒரு கணப்பொழுது நிகழ்ச்சிக்காக அவள் நாள் முழுக்கத் தவியாய்த் தவித்திருப்பாள்.

இதற்குமுன் எத்தனையோ தட்வை தாண்டிச்சென்ற கடைதான். நரேன் விடுமுறைக்கென ஹொஸ்டலிலிருந்து வந்த பிறகு அந்தக் கடையே அவளது கனவுகளின் மையமாக ஆகிவிட்டது.

கலகலப்பாகக் காலை புலரும்போதே அவனது நினைவு அரும்பாக மனசுக்குள் தோன்றிவிடும். பொஸ் வீட்டுக்குப் போகவென கண்ணாடி பார்த்து தலைவாரி பவுடர் பூசிக்கொள்கையிலும், அங்கே பளீரென்று எவர்சில்வர் பாத்திரங்களைக் கழுவி அடுக்கையில் அவற்றில் தெரியும் தன் பிம்பத்தின் வனப்பில் லயித்து நிற்கையிலும் பொஸ் வீட்டிலிருந்து எடுத்துவரும்



நாவல்களைத் தன் வீட்டின் குப்பி விளக்கொளியில் படுக்கையில் சாய்ந்தபடி ரசித்துப் படிக்கையிலும் அவனது நினைவு மொட்டாகி, பெரியதொரு பூவாய் அவளுள் மலர்ந்திருக்கும்.

என்றும் உதிராத, வாடாத அந்த நினைவுகளின் மணத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள வழி தெரியாமல் போராடியபடி அவள் பல இரவுகளைக் கழித்திருக்கிறாள்.

மற்ற சாதாரண ஆண்களைப்போல அலட்டவோ, வீண் தொடர்புகளோ இல்லாத அமைதியான அவனது சுபாவம் அவளைப் பெரிதும் கவர்ந்தது. இப்படியொரு அப்பாவி டவுனில் படிக்கப்போய் கெட்டுப் போய்விடுவாரோ என்று சிலவேளைகளில் அவளுக்குத் தவிப்பாக இருக்கும். 'அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. அவர் படித்தவர்தானே... தன்னைக் காத்துக்கொள்ள அவருக்குத் தெரியாமலா இருக்கும்?' என்று தன்னை சமாதானப்படுத்திக் கொள்வாள்.

நரேன் பெரிதாகி, படித்து முடித்து, திருமணம் முடிக்கையில் மணக்கோலத்தில் எப்படியிருப்பான். என்றெல்லாம் அவள் விசித்திரமாகக் கற்பனை செய்வதுண்டு. ஏனோ, அவனது மனைவியாகத் தன்னைக் கற்பனை பண்ணிக்கொள்ள அவளுக்குத் தோன்றுவ தில்லை. ஞாயமான எந்தக் காரணமுமின்றியே தான் அதற்குத் தகுதியில்லாதவள் என்று வருத்தத்துடன் அவள் முடிவு செய்திருந்தாள்.

நரேனுக்கு வரப்போகிற மனைவி ரொம்ப அதிர்ஷ்டசாலியாக இருப்பாள் என ஒருவித ஆசையுடனும், ஏமாற்றத்துடனும் சுபா நினைத்துக் கொள்வதுண்டு.

துரதிர்ஷ்டவசமாக அப்படி அமையாது போய்விட்டால்...? 'கடவுளே, நரேனுக்கு அழகான, லச்சுமித்தனமான ஒரு பொஞ்சாதிய குடு' என்று தனக்குள் வேண்டிக்கொள்வாள்.

இப்படியெல்லாம் அவனைப்பற்றி தான் இத்தனை உரிமையுடன் கற்பனை செய்து கொள்வதையிட்டு அவள் கவலைப்பட்டதில்லை. தனது மனக்கோயிலை அவனது தரிசனத்துக்காகத் திறந்து வைக்க வேண்டும் என்றும் அவளுக்குப் பட்டதில்லை. சொல்லப்போனால், இந்த சில நாட்களாக அவனுடன் லேசாக முறுவலித்துவிட்டு வருவதே அவளுக்கு வலிந்து செய்கின்ற பெரியதோர் வேலைபோலிருந்தது.

தான் பாடசாலையிலும், டவுனிலும் சந்தித்த குறும்புக்கார இளைஞர்களைப் போலன்றி, கதைகளில் படித்த ஏமாற்றுக்கார மைனர்களைப் போலன்றி, இவன் சாந்த சொரூபியாக நிற்பதைக் கண்ட அவளுக்குள் ஒரு மயக்கமேற்பட்டிருந்தது. கூடவே ஒரு மரியாதையுணர்வும் ஏற்பட்டுவிட்டது.

'இந்த ஒரு மாதமாக அவர் முன்னால் நான் போகிறேன், வருகிறேன். எத்தனை அமைதியாக எவ்விதச் சலனமுமின்றி நிற்கிறார் இவர்' என்று அவள் வியந்ததுண்டு. மற்ற ஆண்களாக இருந்தால் - கிழவர்களாக இருந்தாலும் கூட - என்னை சும்மா போகவிட்டிருப்பார்களா? இதற்குள் எத்தனை கேலியும், நையாண்டியும் பண்ணியிருப்பார்கள்?

தனது சிறுபிள்ளைத்தனமான மனப் பிரதிமைகளில் ஒரு துளிகூட அவனுக்குத் தெரிந்துவிடக் கூடாதென்று சுபா கவனமாக இருந்தாள். தெரிந்து, அதன் காரணமாக அவன் தனது வளமையான பார்வையிலிருந்தும் விலகி, விகற்பத்துடன் தன்னைப் பார்ப்பானானால்...? அதை என்னால் தாங்கவே முடியாது என்று தனக்குள் அடித்துச் சொல்லிக் கொள்வாள்.



இன்று அதிகாலையிலேயே விழிப்பு வந்துவிட்டது. அம்மாவும், தங்கையும் இன்னும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அப்பா ஏதோ முக்கிய வேலைக்காக பொஸ் வரச் சொன்னார் என்று நேற்றிரவு போனவர் இன்னும் திரும்பவில்லை.

தலையணையை எடுத்து ஸ்டூலில் வைத்துவிட்டு பாயைச் சுருட்டி ஓரமாக வைத்தாள் சுபா. தேநீருக்குத் தண்ணீர் சுடவைத்துவிட்டு முற்றத்தைக் கூட்டினாள். அதற்குள் அம்மா எழுந்துவிட்டாள். சுபா முகம் கழுவி உடைமாற்றித் தலைவாரிக்கொள்ளும்போது அம்மா சுடச்சுடத் தேநீரை நீட்டினாள்.

தேநீரை சுவைத்துக் குடித்தபின் நேற்றுக் கொண்டுவந்த கதைப் புத்தகத்தைத் தேடி எடுத்துக் கொண்டாள். அம்மாவிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டாள்.

இன்னும் இருள் பூரணமாக விலகவில்லை. எதிரேயுள்ள மரங்கள் தெளிவின்றி மசமசவென்று தெரிந்தன.

கீழ்வானத்தின் விளிம்பிலிருந்து கீற்றாகப் புறப்பட்ட சூரிய ஒளியில் குளத்து நீர் பளபளத்தது. இத்தனை நேரத்துடன் வந்திருக்கக் கூடாதோ என்று சுபாவுக்குத் தோன்றிற்று. நரேனின் டீ ஸ்டோலில் இன்னும் ட்யூப் லைட் எரிந்து கொண்டிருந்தது. ரேடியோ மெல்லிசாய் பக்திப் பாடலொன்றைப் பாடிக் கொண்டிருந்தது.

கேஷியரில் நரேனைக் காணவில்லை. அவனது அப்பா உட்கார்ந்திருந்தார். சுற்றுமுற்றும் பார்த்தாள். கடைக்கு வந்திருந்த ஓரிருவதைத் தவிர எங்கும் நரேனின் முகம் இல்லை.

மனசுக்குள் சுரீரென்று ஒரு வலியேற்பட்டது. பாதத்திற்கூடாக ஒரு தளர்ச்சி பரவி அவளை நேராக நடக்க விடாமல் தடுத்தது.

போய் விட்டானோ...? அத்தனை சீக்கிரமாக லீவு முடிந்துவிட்டதா?

அவள் தண்ணீரில் முழங்கால் உயரத்திற்குப் பாவாடையை உயர்த்தியபடி நடந்துசென்று படித்துறையை அடைந்தாள். முன்னைப்போல் எந்தக் குதூகலமும் மனசுள் எழவில்லை.

ஒவ்வொரு படியாகக் கால்வைத்து ஊன்றி ஏறினாள். மருதாணி பூசி, கொலுசு அணிந்திருந்த கால் விரல்களைப் பார்த்துக்கொண்டே கடைசிப்படியை அடைந்தபோது... கடைசிப்படியில் அமர்ந்திருந்த நரேன் சட்டென எழுந்து நின்றான். அவளுக்குள் ஒரு திகைப்பு பரவித் திக்குமுக்காடச் செய்தது. 'இன்னும் அவர் போகவில்லை. இங்கிருக்கிறார்' என்ற மகிழ்ச்சியில் தானாகவே புன்சிரிப்பு பொங்கிற்று.

அந்த நிறைவோடு தலையைக் குனிந்தபடி அவள் அவனைக் கடக்க முயன்றபோது அவன் கூப்பிட்டான்.

"சுபாஷினி... கொஞ்சம் நில்லு...! நா உன்கிட்ட ஒரு விஷயம் பேசணும்...!"

அவளுக்குத் திடீரென்று வெடவெடப்பாக இருந்தது. ஈரத்தில் நனைந்திருந்த கால்கள் துவண்டன. அருகில் யாரும் இல்லை என்பதை சுற்றுமுற்றும் பார்த்து நிச்சயித்துக் கொண்டாள்.

"எனக்கு ஒன்ன ரொம்ப புடிச்சிருக்கு. ஐ மீன்... ஐ லவ் யூ... நீ என்ன நெனக்கிறே...?"



அவள் அவனை நிமிர்ந்து நேராகப் பார்த்தாள். பரவசம் நிறைந்த எதிர்பார்ப்போடு அவன் கண்கள், மூக்குக் கண்ணாடிக்குள் மலர்ந்திருந்தன. கையிலிருந்த புத்தகத்தை உயர்த்தி முகத்தை மறைத்துக் கொண்டாள்.

அவன் மீண்டும் "சுபா..." என்று கனிவு பொங்கக் கூப்பிட்டான்.

"நா சொன்னது விளங்கிச்சா...?"

அவள் இரண்டடி பின்னால் நடந்து குளக்கட்டில் வசதியாக நின்றுகொண்டாள்.

அருகிலிருந்த மாமரத்தில் குயிலொன்று கூவியது. அந்தக் குரலிலிருந்த ஆழ்ந்த சோகத்தை அவள் இப்போது உணர்ந்தாள். முன்னைப்போல் உற்சாகத்துள்ளல் தரும் குரலாக அது இல்லை.

மாமரத்தில் வாடிப்போயிருந்த சிறுகொப்பொன்று கீழே விழுந்தது. அந்த சப்தம் அவளது இதயத்துள் அலைகளின் பேரோசைபோல் பிரதிபலித்தது. உயர உயர வானத்தில் போய்க்கொண்டிருந்தபோது சட்டென எதிர்பாராமல் கீழே முட்செடியில் விழுந்தது போல் மெல்லிசாய் - ஆழமாய் - ஒரு ஏமாற்றமும், வேதனையும் ஏற்பட்டன.

அவள் புத்தகத்தை லேசாக விலக்கி அவனை ஒரு கண்ணால் பார்த்தாள். அதுவே அவனைப் பார்க்கும் கடைசிப் பார்வை என்பதாக அவளுக்குத் தோன்றிற்று.

சுபா சட்டென திரும்பி ஓடத் தொடங்கினாள்.

# இரு வேறு பார்வைகள்

மணி மூன்றரை. அருணுக்குப் பாலைக் கலந்து எடுத்துக்கொண்டு முன் ஹோலுக்கு வந்தேன். அருண் குப்புறப் படுத்து, நான் சொல்லிக் கொடுத்த பாடல் உள்ள பக்கத்தைப் பிரித்து, புத்தகத்தில் சாய்ந்திருந்தான். என்னைக் கண்டு ஒரு பூஞ்சிரிப்பை உதிர்த்து நிமிர்ந்தான். அவனுக்கு மூன்று வயது.

"அருண்.. பாட்டு சொல்லும்மா.." நான் அவனருகே உட்கார்ந்து ஃபிடிங்கப்பை நீட்டினேன். வாங்கிக் கொண்டவன் சற்று நகர்ந்து என் மடியில் படுத்து, சொன்னான்.

"ரெய்ய் ரெய்ன் கோ எவே, ரம் கெய்ன்.."

"இல்லம்மா.. கம் எகய்ன்டு சொல்லு..!"

"சரி.. கம் கெய்ன்.. ஏன் சித்தி.. அப்புடின்டா என்னா?" அருண் என் கழுத்தைக் கட்டிக்கொண்டான்.

நான் வாயைத் திறந்தேன். அடுத்த வீட்டிலிருந்து இடி முழக்கம்போல் ஒரு அதிர்வு...! ஜன்னலுக்கூடாக பார்வையைத் திரும்பினேன்.



"ஏன்டி மூதேசிகளா... என்ன இது கூத்தும், கும்மாளமும்! ரேடியோ இல்லாட்டி வேல ஓடாதோ கழுதைகளுக்கு.."

ரவீந்திரன் கோபாவேசத்தோடு அலறுகிறான். அவனது வலது கை மட்டுமே தெரிகிறது. எதையோ எடுத்து ஓங்கி வீசுகிறான். கீழே உட்கார்ந்திருந்த யாரோ ஒருத்தியின் மீது - மூன்று பெண்களில் ஒருத்தி மீது - அது பட்டிருக்க வேண்டும். கீச்சுக்குரலில் மீண்டும் ஒரு பெண்ணின் அலறல். தொடர்ந்து மெல்லிசாய் பாடிக்கொண்டிருந்த வானொலி நிற்கிறது.

அருண் என்னை இறுகக் கட்டிக் கொண்டான். "சே..! என்ன மனுஷர் இதுகள்..! எப்ப பாத்தாலும் ஒருத்தர் மாத்தி ஒருத்தர் கத்திக் கொண்டுதான். அக்கம் பக்கத்துல மனுஷர் நிம்மதியா கொஞ்சநேரம் இருக்க முடியாம இருக்கே..!

முணுமுணுத்தபடியே அவனை அள்ளிக்கொண்டு முன்புறம் போனேன். திண்ணையில் உட்கார்த்தி வைத்து பாலைக் குடிக்கக் கொடுத்தேன். குடித்துக் கொண்டிருந்தவன் இடையில் கேட்டான்.

"அம்மா எப்ப வரும் சித்தி.."

"இப்ப வரும்.."

ஆமாம்! ஏன் சுணங்குகிறார்கள் என சட்டென யோசனை வந்தது. ரொம்ப சந்தோஷமா பொறப்புட்டாங்க. திரும்ப மனசில்லையோ, என்னவோ? - கிலுகிலுப்பான புன்சிரிப்பொன்று என்னைமீறி இதழ்களை ஈரமாக்கிற்று.

நானே பகல் உணவின்போது அக்காவிடம் பேசி அக்காவையும், அத்தானையும் வெளியே அனுப்பி வைத்தேன். என் துணைக்கு சாலாட்சி!

அத்தான் தூரத்துல போயி வேல பாக்குறதாலதானே ரெண்டுபேரும் இந்தளவு ஃபீல் பண்றாங்க..! பாவம்!

என் வாழ்க்கை எப்படி இருக்கப் போகிறதோ என்று எங்கிருந்தோ என் நினைவுகள் திடுமென முளைத்தெழுந்தன. அக்காவைப் போலவே சந்தோஷமா இருப்பேனா..? இல்லை அவளை விடவும் நன்றாக..!

கமலஹாசன் மாதிரி ஒரு மாப்பிள்ளை; கௌரவமான தொழில்; கைநிறை சம்பளம்; தினம் ஏதாவது புதுப்புது உத்திகளால் ஆனந்தம்! கிடைக்குமா..? கனவு பலிக்குமா..?

★ ★ ★

கோபி வந்திருந்தான். என் கல்லூரித் தோழன். கண்டியில் அவனது மாமா வீட்டில்தான் இருவரும் தங்கிப் படித்தோம். பரீட்சை முடிந்து இரு மாதங்களுக்குப் பிறகு இன்றுதான் காண்கிறேன். யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி போய் வருகையில் என் வீட்டில் இறங்கி விசாரித்தானாம். நான் மதவாச்சியில் இருக்கிறேன் என்றறிந்து, முகவரி தேடி வந்திருந்தான்.

மகிழ்ச்சியாக நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தோம். பழைய சம்பவங்கள்... ஜோக்குகள்... ரெக்கிங் அனுபவங்கள்... வாத்திமார்களுக்கு தண்ணி காட்டிய நகைச்சுவைகள்...

"கோகிலா, நல்ல கேஸட் பீஸ் ஒன்று கொண்டு வந்தனான். கேக்குறியளே..? S.P.B. யின்ற புது ஸோங்ஸ்..."

"கேப்பமே அதுக்கென்ன..."

அவனைக் கூட்டிக் கொண்டு நடுக்கூடத்துக்கு வந்தேன். உட்காரச் சொன்னேன். கேஸட்பீசை வாங்கி, கேஸட்டினுள் செலுத்தி ப்ளே பண்ணினேன். இனிய



இசையின் மிருதுவான தவழல்! தொடர்ந்து S.P.B.யின் பரவசக்குரல்..!

தென்மதுரை வைகை நதி
தினம்பாடும் தமிழ்ப் பாட்டு
தேய்கின்றது பொன்மாலை நிலா
தேயாதது நம் ஆசை நிலா...

கோபி கண்மூடி ரசிக்கத் தொடங்கி விட்டான். அவன் ஒரு தமிழ்ப்பித்தன். கலை, இலக்கியம், கவிதை, அது.. இது என்று ரொம்பவும் பேசுவான். எனக்கு இதிலேல்லாம் துளி இன்ட்ரஸ்ட்டும் கிடையாது. வெறுமனே அவன் சொல்லுகிறானே என்று கேட்டுக் கொண்டிருப்பேன். இப்போதும்கூட இந்த இசையையும், கனிவுபொங்கும் மதுரக்குரலையும்தான் ரசித்துக்கொண்டிருந்தேனே தவிரபாடலின் உட்கருத்தையல்ல...

"மதுரையில, தமிழ் வளர்த்த மதுரையில உள்ள வைகை நதிகூட தினம் தினம் தமிழ்ப்பாட்டைத்தான் பாடுமாம். உமக்கு விளங்குதா..?"

அவனது பேச்சு இசையில் மயங்கித் தெளிந்திருந்தது.

ஒன்றும் சொல்லத் தோன்றாமல் "ஓ! ஃபன்டாஸ்டிக்!" என்று சுருக்கமாக நான் சொல்ல, என் அதிர்ஷ்டமோ, கோபியின் துரதிர்ஷ்டமோ அடுத்த வீட்டில் ருத்ரதாண்டவம் அக்கணத்தில் தொடங்கிவிட்டிருந்தது. காதைக் கிழித்தது வயதான பெண்ணின் குரல்...

"நாசமாப் போவான்..! என்ட கிளிய சாவடிச்சவன் நாசமாத்தான் போவான்... பாவி... என்ன மனசு வந்து அதக் கொண்டு போட்டானோ..?"

எனக்கு தர்மசங்கடம். கோபியின் மோனமும் சட்டெனக் கலைந்தது. நான் எழுந்து சென்று கேஸட்டை நிறுத்தினேன்.

"கோபி! இந்த பீஸ் எனக்கிட்ட இருக்கட்டும். நா கேட்டுட்டு அனுப்புறேன். நீங்க ஒன்னும் நெனக்காதீங்க. எங்க நெய்பர்ஸ் இப்பிடித்தான்.. அன்எட்யுகேட்டட்.. கன்ட்ரிப் புரூட்ஸ்.."

அடுத்த வீட்டு ஜன்னலருகே மூத்த பெண் சரளா நின்றிருப்பது தெரிந்தது. ஆச்சர்யத்தோடும், ஏதோ காணக்கூடாததை கண்டுவிட்ட வியப்போடும் நம்மிரு வரையும் வாய்திறந்து பார்த்துக் கொண்டிருந்தாள். நான் கண்டதும் புன்னகைத்தாள்.

என் முழுக்கோபமும் அவள்மீது திரும்ப, படீரென்று ஜன்னலை இழுத்து மூடினேன்.

★ ★ ★

சென்ற ஆகஸ்டில் உ/த பரீட்சையை முடித்துவிட்டு, இரண்டு மாதங்கள் வீட்டோடு இருந்த நான் அக்கா வீடுபோய் சில நாட்கள் இருந்து வந்தால் நன்று என்று யோசித்துக் கொண்டிருக்கையில்தான் அவளிடமிருந்து கடிதம் வந்தது.

அத்தான் தூர இடத்திற்கு மாற்றலாகிவிட்டார் என்றும், வார இறுதி நாட்களில் மட்டும்தான் வீடுவருகிறார் என்றும் எழுதியிருந்தாள். அவள் தனியே இருக்கிறாள் என்பது எனக்கு இன்னும் அனுகூலமாகிவிட்டது. புறப்பட்டு வந்துவிட்டேன். ஏறக்குறைய ஒரு மாதமாகிவிட்டது. இவ்வளவு நீண்ட நாட்கள் இங்கு நான் தங்கியது இதுதான் முதல்முறை.

அக்காவுக்கு சமையலில் உதவி செய்வேன். துணி துவைத்து, அருணைக் கவனித்து, வீடு முற்றம் கூட்டி, இப்படி ஏதாவது வேலைகளை விருப்பத்தோடு செய்து



கொடுப்பேன். சில வேளைகளில் இருவரும் சேர்ந்து மாலை நேரங்களில் பட்சணங்கள் செய்வதுமுண்டு.

ஓய்வாக இருக்கையில் ஒரு 'குமுதத்தைக்' கையில் எடுத்துவிட்டால் போதும். அடுத்தவீடு பேசத்தொடங்கிவிடும். ஆசைக்கு ஒரு நல்ல பாட்டு.. டி.வியில் ஒரு நாடகம்... ஏன் அருணோடு கொஞ்சி விளையாட ஆசைப்பட்டால்கூட முடியாமல் போய்விடும். செவிப்பறை வெடித்து விடுமோ என்று பயம் வரும். ஆரம்பத்தில் மனம் இப்படி சலித்துவிட்டால் பிறகு எதிலுமே நாட்டம் இல்லாதபடி ஆகிவிடும். அப்படி ஒரு விசேஷமான பிரகிருதி நான்.

இதில் பெரிய சிக்கல் என்னவென்றால், நம் வீட்டு நடுக்கூடம்தான் எனக்கு வாய்ப்பான இடம். டிவியும், கேஸட்டும் இங்குதான் உள்ளன. பிரகாசமான இடப்பரப்பு. இதற்கு நேரேயுள்ள அடுத்த வீட்டு அறையில்தான் ராக ஆலாபனைகள் உச்ச ஸ்தாயியில் நடக்கும். இரண்டு வீட்டிலும் நேராக ஜன்னல் இருப்பது மிகப்பெரிய சங்கடம். இடையில் மதில் கிடையாது.

இங்கு நான் வந்த அடுத்தநாளே ஒரு மத்தியான வெயில் வேளையில், அடுத்த வீட்டு ரவீந்திரன் அவனது மூத்த தங்கை சரளாவைப் போட்டு மொத்து மொத்தென்று மொத்த, அவள் கிணற்றில் விழுகிறேன் பேர்வழி என்று திடுதிடுவென ஓட, ஒரே ரகளை. ஊரே கூடிநின்று வேடிக்கை பார்த்தது.

வீட்டைச் சுற்றி ஓடிய அவளைத் தொடர்ந்து கதறிக்கொண்டே ஓடிய தனது தங்கைகளைப் பாய்ந்து அறைந்துவிட்டு, மீண்டும் அவளை மூச்சிரைக்க அடித்து அவள் மயங்கி வீழ்ந்ததும், அழுதுகொண்டிருந்த தன் தாயைப்பார்த்து கர்ஜித்தான் அவன்.

"சொல்லிட்டேம்மா... இதுதான் மொதலும், கடைசியும். கண்டவனோட இவளுகள் நிண்டு ஆட்டம் போடுறதை கண்டேனோ.. இனி நா இந்த வூட்டுல இருக்க மாட்டேன்.. ஓ!"

எதற்காக அவன் இத்தனை ஆர்ப்பாட்டம் பண்ணுகிறான் என்று புரியவில்லை. அக்காவைக் கேட்டபோது சொன்னாள். சரளா தனது முன்னாள் வகுப்புத் தோழன் ஒருவனை வீதியில் தற்செயலாகக் கண்டு, சில நிமிடங்கள் அவனோடு பேசிக் கொண்டிருந்தாளாம். அதற்குத்தான் இதெல்லாம்..

எனக்குத் தாளாத அதிர்ச்சி. இந்தச் சின்ன விஷயத்துக்குக்கூட ஒருவன் ஒரு பெண்ணை இப்படிப்போட்டு அடிப்பானா?

அடுத்தவீடு என்கிற ரீதியில் அந்த சமயவயதுப் பெண்களோடு கொஞ்சம் பேசிச்சிரிக்கலாம் என்று முதல்நாள் நான் நினைத்திருந்ததுகூட அத்தோடு முடிந்துவிட்டது. நான் கதைக்கப்போய் அது வேறு ஏடாகூடமாகப் போய்விடுமோ என்று உள்ளுணர்வு பயமுறுத்திற்று.

அயல்வீடே ஆனாலும், எந்தவிதத் தொடுசலோ, ஏன் இதமான - நகைச்சுவையான - உரையாடலோகூட, அனாவசியமாக வைத்துக்கொள்ளாத என் அக்காவின் போக்கு எப்போதும் எனக்குப் பிடிக்கும். இந்த நாகரீகங்கள் - மரபுகள் - எல்லாம் நமது சுயமரியாதையையும், கௌரவத்தையும் காப்பாற்றி, அதை மற்றோரிடம் வலியுறுத்தும் சக்தியுள்ளன என்பது என் கருத்து. ஆனாலும்கூட அந்தச் சம்பவத்தின்போது, அநியாயமாக அந்தக் கன்னிப்பெண் உடம்பு முழுக்க அடிவாங்கியபோது, அதைத் தடுக்க என் அக்கா முன்சென்றிருக்க வேண்டும் என்று ஏனோ எனக்குப் பட்டது. அக்கா மட்டுமல்ல, வேறு ஒருவர்கூட அந்த மனிதனின் அட்டகாசத்தைத் தடுக்க முன்வராதது ஏன் என்று இன்றுவரை எனக்குப் புரியவேயில்லை.



கோபி வந்த அன்று அந்த அம்மாள் ஏன் அப்படிக் கத்தினாள் என்று அக்காவிடம் விசாரித்தபோது அவள் சொன்ன விஷயம் எனக்குச் சிரிப்பை மூட்டிவிட்டது. அந்த அம்மாள் ஆசையாக கிளி வளர்த்தாளாம். அவர்கள் வெளியே சென்றிருந்தபோது யாரோ அதைக் கோரமாகக் கொன்றுவிட்டார்களாம்.

ஓ! இப்படியெல்லாம்கூட இவர்களிடம் ஆசைகள், பாசங்கள் உண்டா? ஏன் அவர்களும் மனிதர்கள்தானே..? நம்மைப் போலவே செல்லப்பிராணி வளர்க்கவும், அன்பு கொண்டாடவும் அவர்களுக்கு உரிமையில்லையா என்று அப்புறம் தோன்றியது.

சிலவேளைகளில் ரொம்ப சிரிப்பும், கலகலப்புமாக அவர்களது பொழுது கழிவதுண்டு. அந்நேரங்களில் அநேகமாக ரவீந்திரன் இருக்கமாட்டான் என்பது நிச்சயம். தந்தை இல்லாத குடும்பத்தின் மூத்த மகனான அவன்தான் அக்குடும்பத்தின் ஆதாரம். முன்புறம் சின்னதாக ஒரு ஹோட்டல் நடத்துகிறான். அதற்குத் தேவையான அத்தனை உணவும் அந்தப் பெண்களால் வீட்டிலேயே தயாரிக்கப்படும். ரொம்ப சுறுசுறுப்பான பெண்கள். அவன் இல்லாவிட்டால் அம்மா கடையைக் கவனித்துக்கொள்ள, இந்த மூன்று பெண்களும் கலீர் கலீரென்று சிரித்தபடியே ஏதேதோ பேசியபடி வேலைசெய்து கொண்டிருப்பார்கள். ஜன்னலுக்கு அப்புறமும், இப்புறமும் சிட்டுக்குருவிகள் போலத் திரிவார்கள்.

எனக்குள் ஒருவித ப்ரீதி தோன்றி மனதை நிறைத்துவிடும். இந்த ஆனந்தம் நிலைக்க வேண்டும் என்று நினைத்துக் கொள்வேன். ஆனால், சற்று நேரத்துக்கெல்லாம் வழக்கம்போல அவர்களது குரல்கள் ஏதாவது ஒரு விஷயத்தை உச்ச ஸ்தாயியில் பேசி சச்சரவிட்டுக் கொள்ளும். 'என்ன இது ஆம்புளைத்தனம்' என்று எனக்குள் கோபப்படுவேன்.

★ ★ ★

மெல்லிய மாலை வெயில் பூமியைத் தழுவியிருந்தது. அக்கா கடைத்தெருவுக்குப் போயிருந்தாள். அருணைத் தூக்கிக்கொண்டு கொல்லைப்புறம் நின்றிருந்தேன்.

பெரிய அதிசயம்! சிறுபெண்கள் இருவரும் சில்கோடு விளையாடிக் கொண்டிருந்தார்கள். சரளா அரிசி அரித்துக் கொண்டிருந்தாள்.

பேசிப்பார்க்கலாமா என்று தோன்றிற்று. ஈகோ விடவில்லை. இளையவள் என்னைக்கண்டு முகம் மலர சிரித்தாள். மெல்லிசாய் சிரித்துவைத்தேன். அதற்குள் அருண் அங்கே போகவேண்டும் என்று கைகாட்ட நான் போகவேண்டியதாயிற்று.

இளையவளே முதலில் பேசினாள்.

"அம்மாவும், அண்ணாவும் வெளிய போயிருக்காங்க. அதான் கடைய மூடிட்டோம்..."

மற்றவள் சொன்னாள். "அதுதான் இப்ப சந்தோஷமா இருக்கோம்."

நான் அடக்கமாட்டால் சிரித்தேன்.

"அப்ப வூட்டுல ஒருத்தரும் இல்லாட்டிதான் ஒங்களுக்கு சந்தோஷமா...?"



இப்போது சரளா எழுந்து நம்மருகே வந்தாள். கையில் ஒட்டியிருந்த ஈரமான அரிசிகளை நக்கித்தின்று கொண்டிருந்தாள். இளையவள் மீண்டும் கேட்டாள்.

"அக்கா.. நீங்க லீவுலையா வந்திருக்கீங்க...?"

தலையசைத்துவிட்டு சிறுதயக்கத்துடன் கேட்டேன்.

"நீங்க யாருமே படிக்கல்லியா?"

மற்றவள் கம்மிய குரலில் சொன்னாள்.

"அக்கா ஒன்பது படிச்சிருக்கா. நாங்க ரெண்டுபேரும் ஐஞ்சாம் வகுப்பு. அதோட நிப்பாட்டிட்டாங்க.."

சோகமானதொரு மௌனம் முகத்தில் படிய எங்கோ தூர பார்த்துக்கொண்டிருந்தாள் சிறிது நேரம். எனக்கு வருத்தமாக இருந்தது. 'ஏன் கேட்டோம்...?'

சட்டென அவள் மீண்டும் கேட்டாள்.

"அக்கா.. அன்டக்கி வந்தவரு யாரு?"

சுரீரென்றிருந்தது எனக்கு. ஓ! இவள் கோபியைக் கேட்கிறாள். 'இவளுக்கென்ன தேவையாம்...?'

நறுக்குத் தெறித்தாற்போல் சொன்னேன்.

"அவன் என்ட கிளாஸ்மேட்..."

இந்தப் பெண்களுக்கு அவன்மேல் ஏன் நோட்டம் என்று எனக்கு எரிச்சலாக இருந்தது. ஏதாவது கேட்டு இவர்களைக் காயப்படுத்தவேண்டும்போல் சடுதியான ஒரு உந்துதல்.

"அதுசரி, ஒங்கட வூட்டுல ஏன் அப்புடி ஒரே சண்டையும், சத்தமுமா இருக்கு...?" - கேட்டுவிட்டேன்.

மீண்டும் அவள் முகம் சுருங்கிவிட்டது.

"ஒங்களுக்கு சரியான கஷ்டமா இருக்கும் இல்லியா..?" சரளா சொன்னாள்.

"இல்லாம இருக்குமா? வாழ்றதுன்டா எல்லாருக்கும் கஷ்டம்தான்..." - வயது முதிர்ந்த ஒரு பாட்டிபோல் சொன்னாள்.

அவளை நேராகப் பார்த்தேன். அவள் இயல்பாகப் பேசினாள்.

"ஒங்களுக்கெல்லாம் கஷ்டமாத்தான் இருக்கும். எரிச்சலாத்தான் இருக்கும். நீங்க வசதியுள்ளவங்க. அத அனுபவிக்க அமைதியத் தேடுறீங்க. வெளயாடவும், டிவி. பார்க்கவும் அமைதியத் தேடுறீங்க. நாங்க இன்னம் அடிமட்டத்துலயே இருக்கோம். அன்டன்டக்கி திங்க ஒரு வயித்து சோறு கெடக்குமா என்டுதான் எங்கட கவலை. வாழ்க்கைல இப்புடி கஷ்டப்பட வேண்டி இருக்குதே என்டு மனசு பாரமா இருக்கையில, சின்ன விஷயத்துக்குக்கூட நாங்க எரிச்சல் படுறோம்... சண்டை போடுறோம்... இந்த சத்தமும் சண்டையும்தான் எங்கட வறுமையிட அடையாளம்..."

அவள் பேசுவதை வியப்புடன் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அவள் பெரிய மனுஷிபோல் பேசுகிறாள்.

"ஒங்களப்போல தொடர்ந்து படிக்க எங்களுக்கும் ஆசைதான். முடியாமப் போச்சி ஒங்களமாதிரி கூட்டாளிமார்கள கூட்டி வந்து வீட்டுல வச்சி பேசிட்டிருந்தா எங்கட வீட்டுல கொலையே வுழுந்துரும். எங்கட அண்ணன் அப்புடி... எப்படியாவது ஒழுங்கா எங்கள கரசேத்துரணுமேன்டு அவனுக்கு கவல. தான் நெனச்சமாதிரி அழகா கல்யாணம் கட்டி வாழ முடியலயேன்டு ஆத்திரம். அதனாலதான் இதெல்லாம்! ஒங்கட பார்வையும், எங்கட பார்வையும் ஒன்னா இருக்காது. நாங்க ஏழைகள்..!"

நிச்சிந்தையாய் அவள் இறைத்த வார்த்தைகளில் ஆழத்துள் நான் இறங்கிக்கொண்டிருக்கிறேன். எத்தனையோ கேள்விகள் நெஞ்சில் குமிழியிட்டு கொப்பளிக்கின்றன. திணறி, முக்குளித்து, எழ முயன்றவளாய் ஒரு சின்னப் புன்னகையுடன் விடை பெற்று, அருணைத் தூக்கிக் கொண்டு நடக்கிறேன்.

# சந்தேகக்கோடு

வேலை, வேலை! ஓயாத வேலை! பாத்திரம் கழுவி, வீடு முற்றம் கூட்டி, சின்னவன் ஃபாரிஸை மேல் கழுவி உடையணிவித்து, அவனுக்குப் பால் அடித்துக் கொடுத்து... கால்கள் மரத்துப் போயின. இப்போது ஸஃபாஹிர் வருகிற நேரம்!

எழுந்து சென்று அடுப்பில் தண்ணீர் சுடவைத்துவிட்டு வந்தாள் நிஹாரா. ஃபாரிஸ் கையில் வைத்திருந்த விளையாட்டுக் காரை விட்டுவிட்டு, தரையில் ஊர்ந்த ஒரு பிள்ளைப் பூச்சியைக் கண்டு கையுயர்த்தி ஆர்ப்பரித்து, புரியாத மழலையில் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான்.

நிஹாரா ரேடியோவைத் திருகினாள். தனக்கு மட்டும் கேட்கிற மெல்லிய தொனியில் வொல்யூமைக் குறைத்து வைத்தாள்.

மாடப்புறா பாடுதம்மா
அதுவும் பாடுதம்மா
சரியான ஜதையென்றே
நெருங்கி பாடுதம்மா!

நான்கு வருடங்களுக்கு முன்னால் கேட்ட மாத்திரத்தில் அவளைச் சொக்கவைத்த அந்தப் பழைய பாடல்...!



எத்தனை முறை கேட்டாலும் அலுக்காதென பிரமிப்புடன் அவள் வியந்த அந்தப் பாடல்...! ரொம்ப நாளைக்குப்பிறகு அதனை அவள் இப்போது கேட்கிறாள். மனப்புறா பழையபடி வானில் பறக்க முயலவில்லை. ஆனால், சோம்பிக் கிடந்த தன் சிறகுகளை சிலிர்த்துக் கொண்டது.

வாசலில் காலடியோசை கேட்டது. திரும்பினாள், ஸஃபாஹிர்!

வேகமாக அவன் உள்ளே வந்தான். முகத்தில் எண்ணெய் வழிந்தது. கேசம் கலைந்து மேலெழும்பிக் கிடந்தது.

படீரென ரேடியோவை நிறுத்தினான். அந்த வேகத்தில் ரேடியோ ஒருமுறை பின்னால் சரிந்து பழையபடி நிமிர்ந்து நின்றது. அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவன் கண்களில் கோபக்கனல்.

"மனுஷன் அங்க நாயா அலைஞ்சிட்டு வாரான். இங்க என்னன்டா ரேடியோதான் கொறைச்சல்..."

அவள் மௌனமாக உள்ளே போனாள். கொதித்துக் கொண்டிருந்த நீரை கேத்தலிலிருந்து எடுத்து, பால்மாவைக் கலக்கினாள். அங்கிருந்து பார்க்கையில் ஸஃபாஹிர் விடுவிடென்று தன் அறைக்குள் போவது தெரிந்தது. ஃபாரிஸின் சப்தம் இல்லை. ஆனால் அவனது மோட்டார் கார் நிலத்தில் இழுபடும் சப்தம் கேட்டது.

'நீங்க மட்டும்தான் நாயா அலையிறீங்களா? நா இங்க மாடா ஒழைக்கிறனே... அது யாருக்காகவாம்? நீங்க எனக்காகவும், நா ஒங்களுக்காகவும்தானே கஷ்டப்படுகிறோம்...? கஷ்டப்பட்டுத்தானே நாங்க முன்னேறணும்? இதுல ஏன் யாரோ ஒருத்தருக்கு சும்மா

ஒழச்சிக் கொட்டுற மாதிரி அலுத்துக் கொள்றீங்க..? நா என்ன மத்த பொம்புளைகள் மாதிரியா ரேடியோவும் கையுமா திரியிறேன்..? ஏதோ ஆசைக்கு ஒரு பாட்டு காதோட கேட்டேன்! இதுக்குப்போய் மூஞ்சில பாஞ்சால்...? நானும் இதே மாதிரி பாஞ்சால் எப்படியிருக்கும்..?'

இரவு! வேலைகள் ஒருவாறு முடிந்துவிட்டன. கீழேபாயில் படுத்திருந்த ஃபாரிஸை நன்றாகப் போர்த்திவிட்டு அவனருகில் படுத்துக் கொண்டாள் நிஹாரா!

கட்டிலில் மறுபுறம் திரும்பிப் படுத்திருந்த ஸஃபாஹிர் திரும்பினான். "நிஹாரா கோபமா?"

கொஞ்சநேர மௌனத்துக்குப்பின் அவள் "இல்லை" என்றாள்.

"யோசிச்சிப் பாரு! நா நல்ல அலைச்சலோட வூட்டுக்கு வர்ற நேரம், நீ ரேடியோ கேட்டுக்கிட்டு ஜொலியா உக்காந்திருந்தா எனக்குக் கோபம் வருமா? வராதா..?

நா செஞ்சது தப்புதான். ஏதோ களைப்பா நா இருந்ததால கோபம் சுள்ளுனு வந்திருச்சி. பாவம்! நீ என்ன செய்வ..? நீயும்தானே இங்க படாதபாடு படுற? ஒனக்கு ரேடியோ கேக்கக்கூட உரிமையில்லன்டுற மாதிரி நடந்துகிட்டேன். என்னோட கோபமா?" என்று அவன் கேட்க வேண்டுமென அவள் எதிர்பார்க்கவில்லை. அவன் சுபாவம் அது! எதிலும் தான் செய்தது மட்டுமே சரியென்று பிடிவாதம் பிடிக்கும் ஜீவன்... தன் பக்கத்தில் இன்னொரு ஆத்மாவைக் கண்கலங்கச் செய்துவிட்டு, தான் அப்படிச் செய்ததற்கான நியாயங்கள் எவை என்பதை மட்டுமே ஆராயத் தெரிந்த மனம்..!



"இல்ல! நா செஞ்சது பிழதான். நீங்க கோவமா வர்ற நேரம், நா வேற ரேடியோ கேட்டுகிட்டு..."

அவள் குரலில் எந்தவித மாற்றமும் இன்றிச் சொன்னாள். ஆனால், உள்ளே இதயம் பொங்கிக்கொண்டிருந்தது.

"அதுசரி, இன்டைக்கி யாவாரம் எப்புடி?"

"பரவாயில்ல! இப்ப சோளம் சீசன்னால சோளமும் சேத்தா நல்லாயிருக்கும்னு நெனக்கிறேன்..."

"சோளம் எங்க கெடைக்கும்..?"

"இன்ஷா அல்லாஹ்! நாளைக்கி ஒருத்தர் கொண்டு தாறதா சொல்லியிருக்காரு..!"

சிறிது நேரம் அங்கு மௌனம் நிலவியது. திடுமென அவளுக்கு ஞாபகம் வந்தது.

"காலை ஒங்க தாத்தா வந்தாங்க..."

"ஏனாம்..?"

"சும்மாதான்! ஒங்களப் பாத்து மிச்ச நாளாம்.. தேத்தண்ணிகுடுத்தேன். ஃபாரிஸுக்கு பிஸ்கட் பெக்கட் ஒன்டு குடுத்தாங்க"

"ம்... சரி நிஹாரா! நீ கட்டிலுக்கு வாவேன்... அவன் கீழ தூங்கட்டும்..."

அவளுக்கு எரிச்சலாக இருந்தது. தன் கழுத்தைச் சுற்றியிருந்த ஃபாரிஸின் பிஞ்சுக் கைகளைப் பிடித்துக்கொண்டு கொஞ்சநேரம் பேசாமல் இருந்தாள். ஸஃபாஹிர் கட்டிலில் புரளும் சத்தம் கேட்டது. திடுமென அவனது கைபட்டு கீழே விழப்போன ரேடியோவின் ஞாபகம் வந்தது. ஃபாரிஸின் கைகளை விலக்கிவிட்டு,

எழுந்து கட்டிலுக்குச் சென்றாள். மனசுக்குள் மாலையில் சிறகு விரித்திருந்த மாடப்புறா அழுதுகொண்டிருந்தது.

★ ★ ★

ஒருவிதத்தில் பார்த்தால் ஸஃபாஹிர் அத்தனை மோசமானவன் இல்லைதான். கொஞ்சம் முன்கோபக்காரன். திமிரும், வக்ரமும் கலந்த ஏதோ ஒரு கலவைக் குணம்!

அவன் ஒரு சந்தை வியாபாரி. வாரம் ஒருமுறை கூடும் சந்தையின்போது அவன் கைநிறையப் பணம் சம்பாதிப்பான். மற்ற நாட்களில் மரக்கறி வியாபாரம். வீட்டில் கோழிகளும் வளர்த்து வருகிறான். டவுனில் ஒரு சிறிய கடை.

இயற்கையாகவே கொஞ்ச கூச்ச சுபாவம் உடையவன், பெண்கள் என்றால் ரொம்ப வெட்கம் அவனுக்கு! அவனது ஆட்டம், பாட்டம் எல்லாம் தனது ஒரேயொரு தாத்தாவோடும், உம்மாவோடும்தான்.

நிஹாராவை அவனாகவே விரும்பித்தான் பெண் கேட்டான். அவன் வாப்பா ஒரு விவசாயி. வீட்டில் நிஹாராவும், அவளது தம்பியும் போட்டிருந்த சின்னக் கத்தரித் தோட்டத்திலிருந்து கிடைத்த அறுவடையை அவள் தம்பியுடன் சென்று மொத்தமாக அவனுக்கு விற்க வந்தபோதுதான் அவன் அவளைக் கண்டான்.

கல்யாணம் முடித்த ஆரம்ப காலத்தில் தன்னால் இயன்றவரை செலவுசெய்து நிஹாராவைப் புடவைகளாலும், பொருட்களாலும், சின்னச் சின்ன நகைகளாலும் குளிப்பாட்டினான் அவன்.

அவனைப் பொறுத்தவரை இது ஒன்றுதான் அவள் மீதான அன்பை வெளிக்காட்டுவதற்குள்ள ஒரே வழி.



மற்றபடி மானசீகமான காதலுணர்வையோ, ஏக்கம் நிறைந்த தன் இதயத்தின் கருணை உயர்ச்சியையோ அவனுக்கு வெளிக்காட்டத் தெரியாது. ஏற்கனவே கூச்ச சுபாவம் உடையவன் என்பதும் இதற்கொரு காரணமாக இருக்கலாம். உம்மாவோடும், தாத்தாவோடும் ஒரு எல்லைக்குள் நின்றே அவன் பழகியிருக்கிறான். அதனால்தானோ என்னவோ தன் மனைவியோடு - அன்பினால் இதயம் பூரித்து ததும்பி நிற்கும் காதல் கொண்ட பெண்ணொருத்தியோடு - நடந்துகொள்ள வேண்டிய இங்கிதம் அவனுக்குக் கைவரவில்லை.

வீதியில் நடக்கும்போது நிஹாராவோடு சேர்ந்தாற்போல் நடப்பதற்கே வெட்கப்படுவான். சற்றுத்தள்ளி, அவளுக்கு முன்பாக நடந்து செல்வதே அவன் வழக்கம். அவனைவிடவும் கொஞ்சம் படித்த பக்கத்துக்கடை ஹாஜா தன் மனைவியோடு தான் கொண்ட ஊடலையும், அதனால் விளைந்த கூடலையும் அணுஅணுவாக விபரிக்கும்போது அவன் மலைப்புடன் கேட்டுக்கொண்டிருப்பான். இப்படியெல்லாம் ஒரு ஆண் தன் மனைவியிடம் தழைந்து செல்வானா என்று அவனுக்கே வியப்பாக இருக்கும். தவறிக்கூட அவன் யாரிடமும் தன் மனைவி பற்றியோ, அவளது குணநலன்கள் பற்றியோ பேசியதில்லை. அந்தளவுக்கு ஒரு பெண்ணுக்கு முக்கியத்துவமளிக்கக் கூடாது என்பது அவன் எண்ணம்.

நாட்செல்லச் செல்ல நிஹாராவுக்கு சலிப்பு ஏற்பட்டுவிட்டது. தாம்பத்தியம் - இல்லறம் என்பது இதுதானா? தேவையான சாமான்களையும் வாங்கிப் போட்டுட்டா போதுமா? அதெல்லாம் என் ஒடம்புக்குத்தானே..? என் மனசு..? அது விரும்புகிற மாதிரி இவர் நடக்கிறார் இல்லையே...! இந்த மனசு

எப்படியானது, அது எதனால காயப்படுது.. எதனால பூவாப் பூக்குதுன்னு புரிஞ்சிகிட்டு, தன் மனசால அதுக்கு ஒத்தனம் குடுத்து... ரெண்டு பேரும் ஒரு விரிசலும் இல்லாம, இணைஞ்ச மனசோட, வாழ்க்கை முழுக்க வாழணும்னு நா ஆசைப்படுற மாதிரி அவர் ஆசைப்படலியே..." என்றொரு ஏக்கம் அவளை எப்போதும் சூழ்ந்து கொண்டிருந்தது.

★ ★ ★

வாசலுக்கு வெளியே ஃபாரிஸின் பந்து விழுந்துவிட்டது. அவன் தவழ்ந்து தவழ்ந்து அதை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். நிஹாரா ஓடிப்போய் அதை எடுத்துவந்து கொடுத்தாள். வீட்டினுள் புகுமுன் தற்செயலாகப் பக்கவாட்டில் பார்த்தபோது, அடுத்த வீட்டு காமிலா சிரித்தபடி வேலி அருகே வந்தாள். இவளும் சென்றாள்.

"பக்கத்துலதான் இரிக்கிங்க... ஆனா, கண்டு கதைச்சி எவ்ளோ நாள்..."

நிஹாரா சிரித்தாள். "என்ன செய்றது..? நாள் முழுக்க ஃபாரிஸோட போராடுறதே எனக்கு வேலையாப் போச்சி..."

"அதுன்டா சரிதான். இந்தக் காலத்துப் புள்ளைகள் ஏன்தான் இப்புடி தெரிச்சிப் போயிருக்கோ தெரியா... ஏன்ட மகளும் சரியான பெரளி... நேத்து பாருங்க அது முன் வூட்டு சமரகோன் அங்கிள்ட நாய..."

அவள் சொல்லிக்கொண்டே வீதியைப் பார்த்தாள். நிஹாராவும் பார்த்தாள்.

ஸஃபாஹிர் வந்துகொண்டிருந்தான். நிஹரா விடைபெறுவதுபோல் அவளைப் பார்த்தாள்.



அவன் கையில் ஒரு பார்சலுடன் தலைகுனிந்தவாறே வந்து, வீட்டினுள் நுழையும்போது "நிஹாரா" என்றான்.

அவள் செல்ல எத்தனிக்கையில், ஃபாரிஸ் தவழ்ந்து தவழ்ந்து வீதிக்குச் செல்ல, அவன் பின்னால் ஓடி அவனைத் தூக்கிக்கொண்டு திரும்புகையில் அவன் மீளவும் கோபமாகக் கூப்பிட்டான்.

"வாரேன்" என்று காமிலாவிடம் சொல்லிவிட்டு உள்ளே போனாள்.

ஸஃபாஹிர் ஷேர்ட்டைக் கழற்றி ஹங்கரில் மாட்டிக்கொண்டிருந்தான்.

"என்ன பேச்சு அவளோட..."

"நானா பேசல்ல. அது வந்திச்சி... அதுதான் பேசினேன்..."

"அதுக்காக அப்புடியா ஒலகத்த மறந்து பேசுறது? இங்க ஒனக்கு வேல இல்லியா? அவதான் ஆட்டக்காரி. ஒனக்குப் புத்தி எங்க போச்சி..? அடே, இப்ப அவன் வருவானே, தண்ணி எடுத்துக் குடுப்போம்... தேத்தண்ணி ஊத்தி வைப்போம்னு ஒரு யோசன இல்லியா..?"

ஸஃபாஹிருக்கு அப்படி ஒரு குணம். அவன் வீட்டுக்கு வரும்போது அவள் வேறு எதுவும் செய்துகொண்டிருக்கக் கூடாது. அவன் வரவை எதிர்பார்த்து, ஆவல் நிறைந்த விழிகள் படபடக்க உட்கார்ந்திருக்க வேண்டும். அல்லது அவனுக்கென ஏதாவது - தேநீரோ, கோப்பியோ - தயார் செய்து கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் கோபம் வரும்.

'இப்ப என்ன நடந்து போச்சின்னு இப்புடி கத்துறீங்க..?' என்று அவள் உள்ளுக்குள் கேட்டுக்கொண்டாள். மெதுவாகச் சொன்னாள்.

"தேத்தண்ணி ஊத்திட்டேன். குளிக்கனும்னா தண்ணி நெறைக்கிறேன்..."

தேநீர் கோப்பையை அவன் கையில் கொடுத்துவிட்டு, கிணற்றடிக்குச் சென்று தண்ணீர் நிறைக்கத் தொடங்கினாள். பாதி பெரல் நிறைக்கையில் அவன் வந்து, அவள் கையிலுள்ள வாளியை வாங்கிக்கொண்டான்.

குளித்து, பள்ளிக்குப் போய், மஃரிப் தொழுதுவிட்டு ஓதிக்கொண்டிருந்தான். நிஹாரா வேலையாக இருந்தாள். ஃபாரிஸ் சற்று நேரத்துக்கு முன் தூங்கியிருந்தான்.

"நிஹாரா, இங்கி கொஞ்சம் வாறியா...?"

ரொட்டிக்கு மா சலித்துக் கொண்டிருந்தவள், அதை வைத்துவிட்டு அவனிடம் போனாள்.

"இங்க பாரு! ஒனக்கு ஒரு சாரி வாங்கினேன். கலர் நல்லமா?"

அழகான கருநீலநிற டெரின். மா சலித்த கையால் அவள் அதைப் பிரிக்க முடியவில்லை. அவனே பிரித்துக் காட்டினான்.

"நல்லமா?"

"நல்லம்தான். ஒங்களுக்கு ஒண்ணும் வாங்கல்லியா...?"

"எனக்கென்னத்துக்கு...? ஃபாரிஸுக்கு ஒரு ஹெலிகாப்டர் வாங்கினேன்..."

'இது ஏன் வீண் செலவு' என்று நினைத்துக் கொண்டாள். ஆனாலும் தனக்கென ஒன்றும் சேர்க்காது அவளுக்காகவும், குழந்தைக்காகவும் மட்டுமே மீண்டும் மீண்டும் பொருள் சேர்க்கத் தாவும் அவனை எண்ணிப் பரிவு ஏற்பட்டது.



"இன்டைக்கி நல்ல ஜோக் தெரியுமா?"

என்ன என்பதுபோல் அவள் பார்த்தாள்.

"எங்கட பேங்க் மெனேஜர்ட பொஞ்சாதி எனக்கிட்ட பகல் மரக்கறி வாங்க வந்தாங்க. சல்லி தரக்குள்ள அவங்கட கை நல்லா ஏன்ட கைல பட்டிருச்சி. எனக்கு ஒரு மாதிரி ஆயிருச்சி... ஆனா, அவங்க அதக் கண்டுகொள்ளாம சிரிச்சிட்டு போயிட்டாங்க..."

அவள் சிரித்தாள். எந்தச் சின்ன விஷயத்தையும் தன்னிடம் ஒப்புவித்துவிடும் அவனது குணம் அவள் அறிந்ததே, ஆனாலும் இன்று ஏனோ அவளுக்குப் புதிதாக உற்சாகமும், மகிழ்வும் ஏற்பட்டன.

சமையல் அறைக்குள் இருந்தே அறையிலிருந்த அவனுடன் அவள் பேசினாள். இஷாவுக்கு அவன் பள்ளி செல்லும்வரை அவர்கள் கதைத்துக் கொண்டிருந்தார்கள். அவள் இன்று நடந்த விஷயங்களை... ஃபாரிஸ் செய்த அட்டகாசங்களை... தன் வீட்டுக்கோழி அடுத்த வீட்டுப்பையனால் அடிபட்டதை... நூரி ஆச்சி வந்து கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்ததை... எல்லாம் அவனிடம் சொன்னாள்.

★ ★ ★

ஸஃபாஹிர் வாங்கித்தந்த சேலை மேஜை மீது இருந்தது. பகலுணவை முடித்துக்கொண்டு "அப்பாடா" என கொஞ்சம் சாயலாமென நிஹாரா நினைத்தபோது அது கண்ணில் பட்டது. இதை உடுத்திப் பார்த்தால் என்ன?

சேலையைப் பிரித்து உடல்மேல் நீளமாகப் போட்டுக் கொண்டு கண்ணாடியில் பார்த்தாள். கருநீல இளநீலநிறப்

பூக்கள்! ஏனோ இன்று கொஞ்சம் தன்னை அலங்கரித்துக்கொள்ள வேண்டும் போலிருந்தது. தனது பொருத்தமான பழைய ப்ளவ்ஸ் ஒன்றைத் தேடியெடுத்து, சேலையை உடுத்தி, வாப்பா செய்து தந்த மெல்லிய தங்கச் செயினை கழுத்தில் போட்டுக்கொண்டு, ஸஃபாஹிர் வாங்கித் தந்த ஜிப்சிகளை காதில் அணிந்துகொண்டு கண்ணாடியில் பார்த்தபோது.. தான் ரொம்ப அழகாக இருப்பதாக அவளுக்குத் தோன்றிற்று. இப்படியே அவர் வரும்வரை இருந்தால் என்ன? அவருக்கு மகிழ்ச்சியாக..

சில மாதங்களுக்கு முன் ஒருநாள் அப்படித்தான். அவளது தம்பியின் ரெஜிஸ்ட்ரேஷனுக்குப் போயிருந்தார்கள். நிஹாரா எளிமையாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டு அங்குமிங்கும் ஓடி வேலைகளைச் செய்து கொண்டிருந்தாள்.

அன்றிரவு எல்லா வேலைகளும் முடிந்தபின் வீட்டுக்குத் திரும்பி இருவரும் தூங்க ஆயத்தமானபோது அவன் கேட்டான்.

"நிஹாரா! நீ இன்டைக்கு நல்லா அலங்கரிச்சி இருந்தியே..!"

அவனது குரலிலிருந்து எதையும் புரிந்துகொள்ள முடியவில்லை.

அவள் கேட்டாள்.

"நல்லா இரிந்திச்சா..? நானேதான் தலையெல்லாம் வாரி கொண்ட போட்டுக் கொண்டேன்.."

அவன் கர்ணகடூரமாகக் கத்தினான்.

"போதும் நிப்பாட்டு! நா ஒருத்தன் பிச்சக்காரன் மாதிரி அங்க நின்டுட்டிருந்தேன். நீ பாட்டுக்கு அலங்காரமும், ஆட்டமும், பாட்டமும்.. யார் பாக்கனும்னு அப்புடி ஆடின..?"



அவள் வாயடைத்துப் போனாள். இதென்ன அபவாதம்? உடம்பெங்கும் குப்பென்று ரத்தம் ஓடி வெப்பமாக்கிற்று. கண்கள் சிவந்து எரிந்தன. அவளும் கத்தினாள்.

"சீ! அவ்ளோ கேவலமா பேசாதீங்க! ஒங்களுக்கு பைத்தியம் புடிச்சிரிச்சா..?"

அவனுக்கு நன்றாகவே தெரியும். நிஹாராவிடம் அத்தகைய கெட்ட குணம் மருந்துக்கும் இல்லை. ஆனால், அவள் இன்று வெகு கலகலப்பாக, அழகாக, எல்லோருடைய கண்களையும் கவருவதுபோல் வளைய வந்தது அவனுள் நெருடிற்று. தான் அவ்விடத்தில் எவ்வித சோபையும் அற்று நின்று கொண்டிருந்ததுபோல் ஒரு சுய பச்சாதாபம். அவளை எவ்வகையிலாவது காயப்படுத்த வேண்டுமென்றே தோன்றிற்று.

அப்புறம் வாக்குவாதம் வளர்ந்து சென்றது. அவளுக்கு இது ஒரு புது அனுபவம். அவனது இயல்புகளில் புதியதொரு பரிமாணத்தை அன்று அவள் கண்டாள்.

இரண்டு நாட்கள் இருவரும் ஒன்றுமே பேசிக்கொள்ள வில்லை. அவளது தம்பிக்கு இது எப்படியோ தெரிந்து, வீட்டுக்கு வந்து அவர்களைச் சமாதானப்படுத்தி வைத்தான். ஆனாலும், அவனுக்கு ஸஃபாஹிரோடு கொஞ்சம் மனஸ்தாபம்தான்.

நிஹாரா புதிய சேலையைக் களைந்துவிட்டு பழையதை உடுத்திக் கொண்டாள். நகைகளைக் கழற்றி பெட்டியில் வைத்தாள். மனசு பாரமாக இருந்தது.

'ஏன் நீங்க இப்படியெல்லாம் நடந்து கொள்றீங்க? என்னைய ஒங்களால புரிஞ்சிகொள்ள முடியல்லயா? அல்லது நாதான் ஒங்கள புரிஞ்சி கொள்ளல்லியா?'

'எப்படி இருந்தாலும்… நீங்க அன்டைக்கி பேசினதை மறக்க முடியாது. ஏன் அப்படிப் பேசினீங்க? என்னப் பத்தி நல்லா தெரிஞ்சிகிட்டும் வேணும்னு என்னைய அப்புடி புண்படுத்துறதுல ஒங்களுக்கு என்ன சந்தோஷம்…? இன்னும் அந்தக் காயத்துலயிருந்து ரெத்தம் வடியுதே, அது ஒங்களுக்குத் தெரியுமா?'

★ ★ ★

ஸஃபாஹிர் இஷா தொழுதுவிட்டு வந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான். மடியில் குழந்தையுடன் அவனருகே உட்கார்ந்து அவனுக்குப் பரிமாறிக் கொண்டிருந்தாள் நிஹாரா.

"இன்டைக்கென்னா… எறைச்சிக்கறியை வித்தியாசமா ஆக்கியிருக்கிறே…?"

அவள் பேசாமல் இருந்தாள்.

"நல்லாயிருக்கு. எப்புடி பழகினே…?"

"நானேதான்…"

சட்டென ஒரு ஞாபகம். சுபைதா வீட்டில் ஒருநாள் ஏதோ விசேஷம்… கோழி இறைச்சிக்கறி இருவருக்கும் அனுப்பி இருந்தாள். நிஹாரா சாப்பிட்டுவிட்டு, ஸஃபாஹிர் வரும்வரை வைத்திருந்து இரவு அவனுக்கும் கொடுத்தாள்.

"சுபைதா கொண்டு வந்திச்சி. அவட வூட்டுல இன்டைக்கி விசேஷமாம்…"

கறி வைத்த பேசின் எகிறிப் போயிற்று. பாய் எங்கும் கறித்துண்டங்கள் சிதறின.

"ஏன்டி! ஒனக்கென்னா…? நா பஞ்சத்துலயா



போட்டிருக்கேன்? இப்புடி ஊரெங்கும் வாங்கித் திங்கிறதுதான் ஒம் பழக்கமோ…? எத்தன தடவ சொல்லி இருக்கேன், அக்கம் பக்கத்துக்காரிகளோட பல்லி ளிக்காதண்ணு…"

அவள் பாயைத்துடைத்தபடி மெதுவாகச் சொன்னாள்.

"நா கேக்கல்ல… அவதான் தந்தா…"

"அவ தந்தா திருப்பி அனுப்பத் தெரியாதா? நாங்க என்ன வாங்கித் திங்கிற ஜாதியா?"

அவள் எச்சில் பாத்திரங்களைத் தூக்கிக்கொண்டு அப்பால் சென்றாள். பண்பாடே தெரியாதவன்போல், ஒருவர் இன்னொருவருக்கு ஏதாவது பாசத்துடன் கொடுத்தால் அது தனது ஏழ்மையைச் சுட்டிக்காட்டுவதாக நினைக்கும் அவனை எண்ணி அவள் பரிதாபப்பட்டாள். அந்த அளவுக்கு அவன் மனது விகாரமாகிவிட்டதே என்று ஆச்சரியமாகவும் இருந்தது. "ஒரு அன்புக்காக, நல்ல உறவுக்காக அவர்கள் தந்ததைத் திருப்பி அனுப்புவதற்கு எனக்கு உங்களைப் போல ஒன்றும் திமிர் இல்லை" என்று தீர்மானமாக தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

அன்று நடந்ததை மனசு அப்படியே காரணமின்றியே மீட்டிப் பார்த்தது.

'இன்டைக்கி யாராவது இங்க வந்தாங்களா…?'

அவன் கை துடைப்பதற்காக அவள் துணியைக் கொடுத்தாள்.

"ஓ… இன்டைக்கி காலைல தம்பி வந்தான். அவன் வெளிநாடு போறதுக்கு எல்லாம் சரியாம்… புது வூடு

கட்டப்போறானாம்... அந்தியில ஸல்மா மாமி வந்தாங்க. ஒரு சேவல் வாங்கிட்டு போனங்க... சலலி தந்தாங்க... ஃபாரிஸ் அடுத்த வூட்டுக்குப் போய் வெளையாடிட்டு வந்தான்...'

மனசு ஒவ்வொன்றாக ஞாபகப்படுத்தி மௌன பாஷையில் சொல்லிக் கொண்டிருந்தது. எல்லாவற்றையும் வழமைபோல சொல்ல வேண்டுமென அவளுக்குத் தோன்றவில்லை. சொல்வது பெரிதல்ல, சொன்ன பிறகு ஏதாவது...

அவன் மீண்டும் கேட்டான். "யாராவது வந்ததாங்கன்டு கேட்டேன்"

அவள் "இல்லை" என்றபடி உள்ளே போனான்.

# தந்தைமார்களும், மகன்மார்களும்

இயர்போனைக் காதில் மாட்டியபடி பாடலொன்றைக் கேட்டுக் கொண்டிருந்த நானும், இடது கையைக் கன்னத்தில் ஊன்றியபடி ஏதோ கணக்குப் பார்த்துக்கொண்டிருந்த வாப்பாவும் வாசலில் நிழலாட ஒரே நேரத்தில் திரும்பிப் பார்த்தோம்.

ஆப்தீன் நின்றிருந்தான். தலைமயிர் வழக்கத்தைவிட கலைந்திருந்தது. முகத்தில் அரைவாசியை மறைக்கும் தாடியில் வெண்மையாக ஏதோ ஒட்டிக் கொண்டிருந்தது. பொத்தான்களை மாற்றிப் போட்டிருந்ததால் ஷேர்ட் ஒருபுறம் தூக்கிக்கொண்டிருந்தது. சாரமும் ஒரு பக்கம் உயரமாகவும், மறுபக்கம் குட்டையாகவும் இருந்தது.

"கணக்கு எழுத வந்தேன் மொதலாளி..."

குரலில் லேசாகப் பிசிறு தட்டிற்று. கையிடுக்கிலிருந்த சிறு நோட்டுப் புத்தகத்தை வாப்பாவிடம் நீட்டினான்.

மூக்குக் கண்ணாடிக்கூடாக வாப்பாவின் கண்கள் கூர்மையாகப் பளபளப்பது எனக்குத் தெரிந்தது. உள்ளுக்குள் ஒரு குரல் எக்காளமிட்டது. "ஆப்தீன் இன்டைக்கு மாட்டிக் கொள்வாய்..." வாப்பா என்ன

செய்யப் போகிறார் என்று ஆவலாக இருந்தது. அவனிடம் புத்தகத்தை வாங்கிப் பிரித்தார்.

“எட்டு கானம் போட்டேன் மொதலாளி... ரெண்டு கொடமும் ஆறுகொத்தும் கடையில குடுத்தேன். சின்ன முதலாளி துண்டு தந்தாரு...”

ஷேர்ட் பொக்கட்டிலிருந்த சிறு காகிதத்துண்டை மேஜையில் வைத்தான். நிமிஷத்தில் அதைப்பார்த்தபடியே மனக்கணக்கையும் முடித்துக்கொண்டார் வாப்பா.

“மிச்சம் ரெண்டு கொத்து எண்ண எங்க...?”

மிக லேசாக வாப்பாவின் குரலில் கடுமை தொனித்தது.

“இந்த மொற எள்ளு சரியான கழிவு. அதுதான்...”

வாப்பா சட்டென நிமிர, அந்தப் பார்வையின் வீச்சைத் தாங்க முடியாமலோ என்னவோ, அவன் பின்னால் நகர்ந்து கைகளை மார்புக்குக் குறுக்கே கட்டிக்கொண்டான். கதையை வேறு திக்கில் மாற்றுவதுபோல் கேட்டான்.

“எனக்குக் கூலி...”

‘வாப்பாவிடம் இதுவரை யாராவது இப்படி தைரியமாகக் கூலி கேட்டிருப்பார்களா?’ என்றொரு கேள்வி ஆச்சர்யத்துடன் வட்டமிட்டது என்னை. மீண்டும் என்ன நடக்குமோ என்ற ஆவல்.

வாப்பா ஷேர்ட் பொக்கட்டிலிருந்து ஐம்பது ரூபாவை எடுத்து நீட்டினார்.

வாங்கிக் கொண்டவன் விரல்களை மடக்கிக் கணக்குப் பார்ப்பது கண்டு புன்னகையுடன் கூறினார்.



“இன்னும் ஆறு ரூவா தரணும். இப்ப கைல சில்லறை இல்ல...”

அவன் பணிவுடன் தலையைச் சரித்து அதை ஏற்றுக்கொண்டான். வாப்பா எழுதிவிட்டுக் கொடுத்த நோட் புக்கை மீண்டும் கை இடுக்கில் சொருகிக் கொண்டான். திரும்பி நடந்தான். போகிற போக்கில் கரடுமுரடான தன் குரலில் ஒரு பழைய பாடலைப் பாடிக்கொண்டு போனான்.

வாப்பா என்னைப் பார்த்தார். உதட்டோரம் சிரிப்பு.

“நல்லா போட்டிருக்கான் போல...”

“வாப்பா! ஒங்களுக்கு மொதல்லயே தெரியுமா?” - வியப்புடன் கேட்டேன். வாப்பா கடகடவென்று சிரித்தார். அந்தச் சிரிப்பில் ‘எனக்குத் தெரியாம ஒரு காரியம் நடந்துருமா?’ என்ற கர்வமோ, பெருமிதமோ தொனிப்பதாகப் பட்டது.

நான் இயர்போனைக் கழற்றிவிட்டு வாசலுக்குப் போயப் பார்த்தேன். கேட்டுக்கு அப்பால் ஆப்தீன் தள்ளாடித் தள்ளாடி நடந்து போவது மங்கலாகத் தெரிந்தது.

★ ★ ★

வாப்பா ஒரு விசித்திரமான பிரகிருதி. தன் ஒவ்வொரு பக்கத்திலும் நுட்பமான பல தத்துவங்களைப் பதித்து கொண்டு கால்கொண்டு நடக்கின்ற ஒரு அகராதியைப் போல் அவரது ஒவ்வோர் அசைவிலும் ஓர் ஆழமான அர்த்தம் துலங்கும். அவரை அவதானித்து, அவரைப் புரிந்துகொள்வதே ஒரு சுவையான கவிதையைப் படிப்பதுபோல் ஆனந்தத்தை ஏற்படுத்திவிடும்.

என்னுடைய அற்புதமான கல்விக்கூடம் இவர்தான் என்று அடிக்கடி நான் நினைத்துக்கொள்வேன். பள்ளிப் படிப்பில் ஏனோ என்மனம் ஒட்டவில்லை. ஆனால் படித்துக்கொண்டுதான் இருக்கிறேன். ஜீஜீஈ. சாதாரண தரப் பரீட்சையைத் திருப்தியாகச் செய்து முடித்திருக் கிறேன். அடுத்த மாதமளவில் முடிவுகள் வரலாம். போதுமான முடிவுகள் இருந்தால் வர்த்தகத்துறையில் கல்வியைத் தொடர்வதாக எண்ணம்.

இப்போது கிடைத்த இந்த இடைவெளிகளில் எனது பொழுதுபோக்குகளுக்காக ஒதுக்கும் நேரம் தவிர, பெரும்பாலும் வாப்பாவுடன் கடையில் இருக்கிறேன். அவரிடம் மானசீகமாகப் படித்துக் கொண்டிருக்கிறேன். இந்தப் படிப்பு பிடித்திருக்கிறது. எதிலும் நாமே உட்பொருளைத் தேடி அறிவதில் சுகமிருக்கிறது.

இந்த ஊரின் தனிச்சிறப்புமிக்க முதலாளிகளில் எனது வாப்பாவும் ஒருவர். வாழ்வின் அடிமட்டத்திலிருந்து முன்னேறியவர். ஒரு காலத்தில் வாப்பா மூடைகூட சுமந்திருப்பதாக உம்மா ஒருமுறை சொன்னாள்.

நெல்லும், மிளகாயும், எள்ளும் கொள்முதல் செய்வார் வாப்பா. ஒரு பொருளின் தரத்தைத் தீர்மானிப்பதிலும், அதற்கு விலை பேசுவதிலும், அதை வாங்குவதிலும், பிற இடங்களுக்கு ஏற்றியனுப்புவதிலும், உரிய பணத்தைப் பெறுவதிலும் அவர் காட்டும் நிதானமும், லாவகமும் எனக்கு ரொம்பப் பிடிக்கும். நினைத்துப் பார்க்கப் பார்க்க, விதவிதமான புதுத் தத்துவங்கள் தொனிப்பதுபோல் அவரது வியாபார அணுகுமுறைகள் இருக்கும்.

இந்த ஊரில் மொத்தமாக நாலு செக்குகள் வைத்துக்கொண்டிருக்கின்ற ஒரேயொரு முதலாளி என் வாப்பாதான். அவற்றை ரொம்பத் திறம்பட நிர்வகிக்கிறார்



என்று சக முதலாளிகள் என்னிடம் பல தடவைகள் புகழும்போது எனக்குப் பெருமையாக இருக்கும். நானும் எதிர்காலத்தில் வாப்பாவைப் போலவே ஒரு பெரிய முதலாளியாக வேண்டும் என்று சிலவேளைகளில் தோன்றும்.

★ ★ ★

கணக்குப்பிள்ளை சொல்வதைக் கேட்கையில் பெரிய ஆச்சர்யமாக இருந்தது. மீண்டும் அவரிடம் கேட்டேன்.

"நா பொய் சொல்வனா ரம்சீன்? சத்தியமா நா கண்ணால, கண்டேன். ஆப்தீன் நேத்து பகல் ரெண்டு மணி கிட்டால குளத்துக்குப் போறத நானே பாத்தேன். அவன் குளிக்கப் போக இல்ல. செக்கு வேல செய்றவன் அப்பவா குளிக்கப் போவான்? அவன் மீன் புடிக்கத்தான் போனான். எனக்கு ஷுவரா தெரியும்..."

"அப்ப செக்குல யார் நின்டதோ தெரியா இல்லியா நானா...?"

"நா உடனே போய் பார்த்தேன். அங்க வேற ஒருத்தன நிப்பாட்டிட்டுத்தான் மாப்புள்ள போயி இரிக்காரு. அடுத்த செக்குல விசாரிச்சா, அவன் சொல்றான், இன்டைக்கி நேத்து இல்ல, மிச்ச நாளாவே ஆப்தீன் அப்புடி போறானாம்..."

உள்ளிருந்து வாப்பா வருவது தாளத்தோடு ஒலித்த காலடி ஓசையில் கேட்டது. நான் மிடறு விழுங்கினேன். செக்கு ஆடும்போது அதைக் கண்காணித்து எண்ணெய் திருட்டுப் போகாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது செக்காட்டியின் கடமை. அதில் தவறும்போதுதான் எண்ணெய் மெதுவாகக் குறையும். அப்படியானால் ஆப்தீன் கடமை தவறிவிட்டானா?

"என்ன மகன்... என்ன பிரச்னை...?"

வாப்பா சாதாரணமாகக் கேட்டார்.

எப்படிச் சொல்வேன்? அவரது செக்காட்டி ஆப்தீன் செக்கை ஒழுங்காகக் கவனிப்பதில்லை... செக்கு வேலை செய்யும்போது இன்னொருவனை நிறுத்திவிட்டு குளத்துக்கு மீன் பிடிக்கப் போகிறான் என்று எப்படிச் சொல்வேன்? அதனால்தான் இந்தப் பல நாட்களாக அவனது கணக்கு வழக்குகள் ஒழுங்காக இல்லை என்று எப்படிக் காரணம் காட்டுவேன்?

"கணக்குப் பிள்ள, நீ சொல்லு என்ன விஷயம்?"

கணக்குப்பிள்ள வேறு யாருமல்ல. என் உம்மாவின் தங்கை மகன். எனவே, வாப்பா உரிமையோடு அவரை ஒருமையில் அழைப்பார். அவர் மிரளவும், நானே ஒருவாறாக விஷயத்தை வாப்பாவிடம் விளக்கினேன்.

கேட்டு முடிப்பதற்குள் வாப்பாவின் கண்கள் கொவ்வைப் பழமாகின. மூக்கோரம் துடித்தது.

"பைக்க கொண்டுவா... நான் போய் அவன இப்பவே பாக்குறேன்..."

இந்த இரவில் போகத்தான் வேண்டுமா என்று தோன்றிற்று. உள்ளே போய் மோட்டார் பைக்கினை எடுத்து வந்து ஸ்டார்ட் பண்ணினேன். உள்ளே பயம் குதித்த போதும், "வாப்பா வாங்க, நானும் வாறேன்" என்றேன்.

வாப்பா ஒரு மாதிரியாகப் பார்த்தார். அந்தப் பார்வை 'நீ வேண்டாம்' என்று சொல்வது எனக்குப் புரிந்தது. ஆனால், அவர் வாயால் எதுவும் பேசவில்லை. பின்னால் வந்து ஏறிக் கொண்டார்.



சில நிமிடங்களில் பைக் ஆப்தீனின் வீட்டு முன்னால் நின்றது. இருவரும் இறங்கினோம். வாப்பா வீட்டு முன்னால் போய் நின்று உரத்த குரலில் "ஆப்தீன்" என்று கூப்பிட்டார்.

கைவிளக்கை எடுத்துக்கொண்டு ஆப்தீன் உள்ளிருந்து வந்தான். வெற்றிலை போட்டிருந்தான். வாய் செக்கச் சிவந்து, உதட்டோரம் எச்சில் இலேசாக ஒழுகியிருந்தது. வாப்பாவைக் கண்டதும் அவன் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. அவனது மாறுகண் பார்க்க விகாரமாக இருந்தது. "மொதலாளி..." என்று கூவினான்.

வாப்பா ஒன்றும் பேசவில்லை. இரண்டு எட்டுகள் முன்னே நகர்ந்து அவன் முன்னால் போய் நின்றார். அவன் மீண்டும் பேசத் தொடங்குமுன் அவனது வலது கன்னத்தில் பளாரென்று ஒரு அறை விழுந்தது. அவன் நிலை தடுமாற, வாப்பா அவனது ஷேர்ட்டை கழுத்தருகில் பற்றினார். மீண்டும் ஓர் அறை. அவன் பின்னால் தடுமாறி விழுந்து, சுவரைப் பிடித்தபடி எழுந்து நின்றான். நல்லவேளை, அவன் போதையிலிருக்கவில்லை. மலங்க மலங்க விழித்தான்.

"ராஸ்கல்! செக்கு நேரத்துல மீன் பிடிக்கப் போறியாமே..!"

அவனது முகம் சட்டென மாறிற்று. பரிதாபமாக இருந்தது.

"இல்ல மொதலாளி..." என்று இழுத்தான்.

"எனக்கிட்ட வேல செய்றன்டா ஒழுங்காக வேல செய்யணும். இல்லாட்டி ஒரே வெட்டுதான். பாவம், தனிக்கட்ட குடுத்த வேலய நல்லா செய்வான்னு பார்த்தா மீன் புடிக்கப் போறாராம் மீன்... எனக்கிட்ட வேல

செய்றன்டா செய். இல்லாட்டி மீன் புடி. ரெண்டையும் செய்ய நெனக்காத, நாளக்கி நீ வேலக்கி வர வேணாம். வூட்ட காலி பண்ணு இப்பவே..!"

வாப்பா திரும்பினார். நான் பைக்கை ஸ்டார்ட் செய்தேன். புறப்படுகையில் அவனைத் திரும்பிப் பார்த்தேன். மாறு கண்களிலிருந்து தாரையாகக் கண்ணீர் வழிய அவன் அதிர்ந்து போயிருந்தான்.

என் மனசு உருகிப் போயிற்று. வாப்பாவுடன் வாய்க்கு வாய் வாதாடியிருந்தால்கூடப் பரவாயில்லை. அவன் ஒன்றுமே பேசாமல் நின்றதுதான் என்னை உலுப்பிற்று. தன் தவறை ஒப்புக்கொள்கிற மாதிரி... முதலாளி தன் முன்னால் ருத்ர தாண்டவம் ஆடியதைத் தாங்க முடியாத மாதிரி ஒரு குழந்தையைப்போல் அவன் நின்றிருந்த தோற்றம் மனசில் பதிந்து போயிற்று.

வாப்பா கடையில் இறங்கிக் கொண்டார். நான் நேரே வீட்டுக்கு வந்துவிட்டேன். பைக்கை நிறுத்திவிட்டு உள்ளே சென்றேன். உம்மா முன் ஹோலில் உட்கார்ந்து பக்தி சிரத்தையோடு ஓதிக்கொண்டிருந்தாள். என்னை நிமிர்ந்து பார்த்துவிட்டு மீண்டும் ஓதத் தொடங்கினாள். பார்வை 'வாப்பா எங்கே' என்று கேட்பது எனக்குப் புரிந்தது.

பாத்ரூமிற்குள் போய் உடம்பை அலசிக்கொண்டேன். இதமாக இருந்தது. மனசின் வெப்பம் சற்று குறைந்தாற்போல்... வேற்றுடை மாற்றிக்கொண்டு தலைவாரிக் கொண்டேன். சாப்பாட்டு மேஜையில் ஃப்ளாஸ்கில் டீ இருந்தது. குடித்துவிட்டுப் பள்ளிக்குப் புறப்பட்டேன்.

மஃரிப் பிந்திவிடுமோ என்ற நினைவு வந்தது. இந்த நேரம் அருமையானது. இந்த நேரத்தில் மனசில் எழும்



அற்புதமான சிந்தனைகளையும், நிறைவான மனவுணர்வுகளையும் ஆழ்ந்து அனுபவித்த ஒருவனால்தான் புரிந்துகொள்ள முடியும். ஆன்மீக மனவாற்றலை வளர்க்க முடியும் என்று எப்போதும் எனக்கும் தோன்றுவதுண்டு.

தொழுதுவிட்டு வீடுபோக மனம் வரவில்லை. ஏதோ ஓர் அசூசை படர்ந்திருந்தது மனதுக்குள். பள்ளிவாசல் பின் கதவோரமாக சாய்ந்துநின்று வெறுமனே இருட்டை வெறித்துக் கொண்டிருந்தேன். மீண்டும் ஆப்தீனின் முகம். கண்ணீர் நிறைந்த இரு பெரிய விழிகள்..! ஏன் ஏன் அவனுக்கு வாழ உரிமையில்லாமல் போனது. அவன் விரும்புகிற மீன்பிடித் தொழிலை அவன் செய்ய முடியாதா? செக்கில் இருக்க வேண்டிய நேரத்தில் அவன் மீன்பிடிக்கப் போனது பிழைதான். ஆனால்... செக்கு முடிந்த நேரத்தில், செக்கு வோடாத நேரத்தில்கூட அவனுக்குத் தான் விரும்பிய ஒரு தொழிலைச் செய்ய முடியாதா?

இவனுக்குள்ளேயே அடங்கிற்று, இவர் முன்னாலே கைகட்டி நின்று பணிபுரிவதுதான் அவனது வாழ்வின் தத்துவமா? யாரோ ஒரு மனிதனுக்குக் கீழே தன் மனசையும், ஆசைகளையும், விருப்பு வெறுப்புக்களையும், இலட்சியங்களையும், மிதிக்கப் போட்டுவிட்டு அந்த மனிதனின் கண்டிப்புகளுக்கும், உருட்டல்களுக்கும், அவன் தருகிற பிச்சைப் பணத்துக்கும் பயந்து வாழவேண்டுமென்பது அவன் தலைவிதியா?

இப்படித்தான் ஒவ்வோர் ஏழையும் சுரண்டப்படுகிறானா? அடிமட்டத்தோடு மட்டமாக அமிழ்ந்து போகிறானா? வாழ்வில் எப்போதுமே உயர முடியாதபடி, தன் கனவுகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாதபடி பணக்கார முதலாளிகளால் மிதிக்கப்பட்டு,

உதைக்கப்பட்டு... என்ன வழி? இந்த மனித சமூகத்தின் கடைசி மனிதனும் தான் விரும்பியபடி நிம்மதியாக வாழ என்ன வழி...?

இஷாவும் தொழுதுவிட்டு மெதுவாக வீடு சென்றேன். ஒரு காலை வேளையில் வாப்பாவிடம் வந்து அழுது மன்றாடி நின்ற கிழவியின் ஞாபகம் வந்தது. பார்வையிலேயே பரிதாபத்தை வாரி எடுத்துக் கொள்ளும் தோற்றம் அவளுக்கு. பத்து மைல் தொலைவிலிருந்து தனியே வந்திருப்பதாகச் சொன்னாள். வாப்பாவைப் பற்றிக் கேள்விப்பட்டதாகவும், அவரைப் பார்க்கவென்றே வந்ததாகவும் கூறினாள்.

"மகராசா... எனக்கு யாருமே இல்ல சீதேவி. நா ஒன் ஊட்டுல வேலக்காரியா இருந்து கொள்கிறேன். எல்லா வேலயும் செஞ்சி தாறேன். எனக்கு நீ இரிக்க எடம் தந்தா போதும்... இவ்ளோ காலம் ஒரு பிச்சக்காரி மாதிரி சீரழியிறேன் வாப்பா...!"

வாப்பா மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். அவளை அளந்து விடுவதுபோல் கண்கள் அவள் முகத்தைத் துளையிட்டன. முகத்தில் எந்த உணர்ச்சியும் தெரியவில்லை.

"ஆச்சி, நீங்க இரிங்க. நா கொஞ்ச நேரத்துல வாறேன்" என்று சொல்லிவிட்டு கடைக்குப் புறப்பட்டார். மத்தியானம் உணவுக்கு வரும்பரை அவர் அவள் பற்றி எதுவுமே சொல்லவில்லை. ஒருவேளை, மறந்துவிட்டாரோ என்று எனக்கு யோசனையாயிற்று. ஆனால் அவரிடம் நினைவுபடுத்தும் அளவுக்கு என்னுள் தைரியம் பிறக்கவில்லை.

சாப்பிட்டுவிட்டுக் கை கழுவுகையில் கேட்டார்.

"ஆச்சிக்கு சோறு குடுத்தியா?"



உம்மாவுக்கு சட்டென விஷயம் புரியவில்லை. யாரைச் சொல்கிறார் இவர் என்று அவள் யோசிப்பது போலிருந்தது. யாரோ நெடுங்கால அன்பர் ஒருவரையோ, உறவினர் ஒருவரையோ விசாரிப்பதுபோல் இருந்தது அவரது கேள்வி. மிக்க உரிமை தொனித்தது எனக்குப் புரிந்துவிட்டது. அதற்குள் அவளே வந்துவிட்டாள். பின்கட்டின் நிலைப்படியில் ஆதாரத்திற்காகச் சாய்ந்து நின்றுகொண்டாள்.

"நா வயிறு நெறைய தின்டுட்டேன் வாப்பா"

அப்புறம் ஒன்றும் பேசவில்லை அவர். நான் உணவை முடித்துக் கொண்டு உள்ளே போனபோது என்னிடம் சொன்னார்.

"மகன் இந்த ஆச்சிக்கு வேல செய்ய ஏலாது. அவகிட்ட வேல வாங்குறதும் பாவம். நீ போய் எங்கட செக்கு வீட்டுல ஒன்டப் பாரு... வைக்கல், எள்ளு எல்லாம் ஒதுக்கி பின்னால போட்டு மூடிட்டு, முன்னால பெரிய ரூம அவளுக்கு குடு. அவ அங்க இரிக்கட்டும். தேவன்டா, செலவுக்கு நா தாறேன்னு சொல்லு..."

வாப்பாவின் முடிவுகள் தீட்சண்யமாக இருக்கும். ஒரு காரியத்தில் அவர் இறங்கிவிட்டால், அதன் முடிவை எப்படி அமைக்கப் போகிறார் என்று பலவேளைகளில் எனக்குள் எழும் சிந்தனையே ரொம்பப் பரவசமாக இருக்கும். அப்படிச் செய்வார். இப்படிச் செய்வார் என்று ஏதேதோ ஊகங்கள் நெஞ்சில் புரள்கையில் "அதெல்லாம் ஒன்றுமில்லை. இப்படிச் செய்" என்கிற விதமாக அவர் புதுத் திக்கிலிருந்து தன் பார்வையை செலுத்துவார். முடிவை நிதானமாகச் செயற்படுத்துவார். அப்படித்தான் இதுவும் எனக்குப் பட்டது. உடனே நான் செயற்பட்டேன்.

ஒரு மாதம் கழிந்தது. ஒருநாள் ஆச்சி வீட்டுப் பக்கமாக போனபோது யாரோ ஒரு இளைஞன் அவனோடு கதைத்துக் கொண்டிருந்துவிட்டுப் போவது தெரிந்தது. முகம் சரியாகத் தெரியவில்லை. அவளிடம் விசாரித்த போது ரொம்ப பிகு பண்ணிவிட்டு அவன் தன் மகன் என்று சொன்னாள். எனக்குப் பெரிய வியப்பு! தனக்கொரு மகனிருக்கும்போது அவள் ஏன் யாருமில்லை என்று பொய் சொன்னாள்? ஏன் அவனை விட்டுவந்து தூரத்தில் வாழ்கிறாள்?

சில வாரங்களில் அவனை அடிக்கடி ஊர்ப்புறம் காண முடிந்தது. என் உற்ற நண்பன் ஒருவனிடம் அந்தப் புதியவனைப் பற்றி சொல்லி, அவனையும் காட்டியபோது அவன் சொன்ன பதில் திகைப்பை ஏற்படுத்தியது.

அவன் ஒரு பிரபல ரௌடியாம். சிகரட் முதல் போதைவஸ்துவரை அவனுக்கு அத்துபடியாம். களவெடுத்ததால் பல தடவைகள் சிறை சென்றிருக் கிறானாம்.

நண்பன் சொன்னது இருநாட்களில் ஊர்ஜிதமாயிற்று. அப்புதியவன் ஆச்சிவீட்டு வாசலில் ஒருநாள் குப்புற வீழ்ந்திருந்தான். வாயில் நுரை தள்ளியிருந்தது. ஏதோ முனகிக்கொண்டிருந்தான்.

ஆச்சி உள்ளிருந்து வருகையில் நான் சட்டென அவள் பார்வைக்கு மறைந்து கொண்டேன். மகனின் தலையை மடியில் கிடத்தியபடி கொஞ்சநேரம் அழுதாள். அழுகையினூடு அவனைத் திட்டவும் செய்தாள். சிறிது நேரத்தில் அவனை அப்படியே போட்டுவிட்டு எழுந்து போய் தண்ணீர் கொண்டுவந்து அவன் முகத்தில் தெளித்தாள். அவனிடம் அசைவில்லை. அப்புறம் எதுவோ எடுத்துவந்து குடிக்கக் கொடுத்தாள். அப்போதும் அவனது போதை தெளியவில்லை.



நான் அங்கிருந்து அகன்றேன். வாப்பாவிடம், அவர் ஒய்வாக வீட்டில் சாய்ந்திருந்த ஒரு மாலையில் விஷயத்தைச் சொன்னேன். அதைக் கேட்டவுடனேயே வாப்பா புறப்பட்டார். என்ன செய்யப்போகிறாரோ என்ற திகிலில் நானும் பின்னால் சென்றேன்.

கால்நடையாகவே செக்குப்பிடியை அடைந்தார் வாப்பா. ஆச்சி வீட்டு முன்னிருந்து ஆச்சியைக் கூப்பிட்டார். உள்ளே கிழிந்த பாய் ஒன்றில் படுத்திருந்தவள் தள்ளாடி நடந்து வந்தாள். கண்களை சுருக்கிக்கொண்டு பார்த்தாள்.

"ஆச்சி இப்பவே ஊட்ட காலி பண்ணுங்க..."

அவள் கூறினாள். "ஏன் வாப்பா?"

வாப்பாவின் குரலில் கனல் பறந்தது.

"ஆச்சி! என்னய நல்லா நடிச்சி ஏமாத்தினீங்க இல்லி யா? ஏன் ஒங்களுக்கு ஒருத்தருமே இல்லன்னு பொய் சொன்னீங்க...?

"அய்யோ அல்லாவே! இது என்ன அநியாயம். நா பொய் சொல்லலியே...!" - குமுறினாள்.

"ஆச்சி! ஒரு காலிப் பயதான் ஒங்க மகன்னு எனக்குத் தெரியும். அதுலதான் சொல்றேன். சுருக்கா போயிருங்க"

"ஏன் வாப்பா இந்தக் கெழவிக்கி இப்புடி அநியாயம் செய்றீங்க...?"

வாப்பா சிறிது நேர இடைவெளிக்குப் பின் நிதானமாக பேசினார்.

"பெத்த மகன ஒழுங்கா வளர்க்கத் தெரியல்ல ஒங்களுக்கு. அவன நல்லா வளர்த்திருந்தா நீங்க இப்புடி

சீரழியத் தேவயில்லையே ஆச்சி..! எனக்கிட்ட பொய் வேற சொன்னீங்க. அது பரவாயில்ல. இப்ப திரும்பவும் மகனோடு தொடுசல் வச்சிட்டிருக்கீங்க... அதுதான் எனக்குப் பிடிக்கல்லே. இப்படியே வந்து போயிட்டு ஒருநா அவன் உரிமைப்போராட்டத்துக்கு வருவான். இல்லாட்டி இங்க எதையாவது களவெடுத்து விப்பான். ரெண்டுமே எனக்கு பிடிக்காது. ஒங்கள இதுக்கு மேல நம்ப ஏலா நாளக்கி காலைல எனக்கு வூடு கெடைக்கனும்..”

அழுத்தந் திருத்தமாக அவர் சொல்லி முடிக்கையில் அவள் ஒப்பாரி வைத்து அழத் தொடங்கினாள். வாப்பா திரும்பி நடந்தார். நானும் தொடர்ந்தேன்.

முதல்முறை ஆச்சியோடு பேசிய வாப்பாவுக்கும், இப்போது பேசிய வாப்பாவுக்குமுள்ள வித்தியாசத்தை எண்ணிப் பார்த்தேன். பிரமாண்டமாக இருந்தது.

கிழவி அழுததை எண்ணிப் பரிதாபம் ஏற்பட்டது. ஆனாலும் வாப்பா சொன்னது சரிதான் என்றும் பட்டது.

அப்புறம் அவள் எங்கு போவாள்? எப்படி வாழ்வாள் என்றெல்லாம் யோசிக்கையில் நெஞ்சுள் பரிதாபம் குமிழியிட்டுப் பொங்கிற்று. இந்த ஏழைக் கிழவிக்கு உதவிசெய்ய வேறு யார் இருக்கிறார்கள்? வாப்பா மாதிரி ஒரு பெரிய மனிதர் கொஞ்சம் விட்டுக் கொடுத்து அவளை கண்டிப்புடன் கண்காணித்துக் கொள்ளலாமே என்று தோன்றிற்று. ஆயினும் வாப்பாவிடம் எதிர்த்துப் பேச எனக்கு எப்போதுமே திராணி இருந்ததில்லை.

அவள் மகன் மீண்டும் வருவான். அவள் நடந்ததைச் சொல்வாள். ‘இனி வராதே’ என்பாள். ஆனால், அவன் வராமல் இருப்பானா? அப்படியே அவன் இருந்தாலும், இவளால் இருக்க முடியுமா? பெத்த மனமாச்சே, பேசாமல் இருக்குமா? ஆக, வாப்பா செய்தது சரிதான் என்ற முடிவுக்கே இறுதியில் நானும் வரவேண்டியதாயிற்று.



★ ★ ★

பசிக்கவில்லை. அறைக்குள் சென்று கட்டிலில் சாய்ந்து கொண்டேன். உள்ளே வாப்பா சாப்பிடுகிறார் போலும். “மகன் வரவில்லையா?” என்று அவர் கேட்பது காதில் விழுந்தது.

இப்போது அவர் வந்து அறைக்குள் பார்ப்பார் என்று எனக்குத் தெரியும். அப்புறம் பசிக்கவில்லையென்றாலும் நான் சாப்பிட்டேயாக வேண்டும். அதுதான் இங்கு விதி.

எழுந்து பின்புறம் போனேன். வாப்பா சாப்பிட்டு முடித்துக் கைகழுவிக் கொண்டிருந்தார். நான் அருகில் உட்கார்ந்தேன். சாப்பிடுவதாகப் பேர் பண்ணிவிட்டு மீண்டும் வந்து கட்டிலில் விழுந்தேன்.

ஒரு முதல்தர முதலாளி என்ற விதத்தில் வாப்பா சரி. ஒரு விவேகமுள்ள இளைஞன் என்ற விதத்தில் நானும் சரி. ஆனால், ஒரு முதலாளிவாப்பாவின் மகன் என்ற விதத்தில்?

எப்படி யோசிப்பது? எந்தக் கோணத்திலிருந்து பார்ப்பது? எதைச் சரியென்று தீர்மானிப்பது என்றுகூடத் தெரியாமல் மனம் குழம்பிப் போயிருந்தது. திடுமென இந்தச் சிறு விவகாரத்துக்காக நான் ஏன் இந்தளவு மனம் பேதலிக்க வேண்டும் என்றும் யோசனை எழுந்தது.

முன்பு ஒருநாள் பாடசாலை ஒப்படைக்காக கட்டுரை ஒன்று தயாரித்துக்கொண்டிருந்தான். தமிழ் பாடம். ‘என்னைக் கவர்ந்த அரசியல் தலைவர்’ என்பது தலைப்பு. சில நூல்களின் மேற்கோள்களுடன் புரட்சித்தலைவர் விளாடிமிர் லெனின் பற்றி எழுதிக்கொண்டிருந்தேன்.

"இன்றைய உலகின் சக்தி வாய்ந்த பகுதியையும், அப்பகுதி மக்களையும் கவர்ந்து ஆட்கொண்ட ஒரு கொள்கையை வகுத்தளித்த உன்னதமான தலைவர் லெனின் ஆவார். அவரது மெல்லிய தேகத்துக்குள் மக்களின் நல்வாழ்வை யெண்ணியே அவரது சின்னஞ்சிறிய இதயம் துடிதுடித்தது. அந்தச் சிறிய கண்கள் இரண்டும் ஏழ்மையில் உழலும் மக்களுக்கு ஓர் ஒளி நிறைந்த வழியைக் காண்பிப்பதற்காகவே இரவு பகலாகச் சுழன்றன."

"ஜனநாயகத்தின் தந்தை எனப்படுகின்ற ஆபிரகாம் லிங்கன் சொன்னார், மக்களால் மக்களுக்காகச் செய்யப்படும் மக்களின் ஆட்சியே ஜனநாயகம் என்று. இன்று ஜனநாயக நாடுகள் எனத் தம்மை இனங்காட்டிக் கொண்ட நாடுகள்கூட உண்மையில் முதலாளித்துவப் பாதையிலேயே சென்று கொண்டிருக்கின்றன.

"ஆனால், லெனின் லிங்கனைப்போல் மக்கள் மனதில் பொய்யான கற்பனைகளை வளர்க்க முயலவில்லை. என்றுமே நடக்க முடியாத சில மாய நிகழ்வுகளைப் பற்றிய நம்பிக்கையை அவர் மக்களுக்கு ஊட்டவில்லை. மிகவும் சாத்தியமான ஒரு கொள்கையை அவர் முன்வைத்தார். அதைச் செயற்படுத்துவதில் உள்ள சிமங்களை அவர் நன்குணர்ந்திருந்தார். எனவேதான், 'நரகத்தில் அனுபவிப்பதைப் போன்ற வேதனைகளுடன் நமது முயற்சிகளைத் தொடர்வோம்' என்று தன் மக்களை அவர் அழைத்தார். "அவரது கொள்கை மூன்றாம் மண்டல நாடுகள் பலவற்றையும் கவர்ந்து வருகின்றது. பல துடிப்புமிக்க இளைஞர்கள் தமது இலட்சியக் கொள்கையாக பொதுவுடமைக் கொள்கையை அங்கீகரித்துள்ளார்கள்."



"இன்று ஏழ்மையில் உழலும் எண்ணற்ற மக்களின் நல்வாழ்வுக்கு அவரது கொள்கையைத் தவிர வேறு பாதையுமில்லை. முதலாளிகளின் அட்டூழியமான சுரண்டல்களுக்கும், உறிஞ்சல்களுக்கும் இலக்காகி சமூகத்தின் அடிமட்டத்தோடு ஒட்டிப்போய்விட்ட பல லட்சக்கணக்கான ஏழைப் பாட்டாளிகளிடம், விவசாயப் பெருங்குடி மக்களுடன் தானாகவே நேச சக்தியை ஏற்படுத்தி சோஷலிஸப் புரட்சியைச் சாதிக்குமாறு அவர் விடுத்த அழைப்பு என்றும் போற்றுதற்குரியது."

ஆழ்ந்து எழுதிக்கொண்டிருந்ததை காலடியோசை கேட்டு நிறுத்தினேன். வாப்பா மேஜைக்கருகே நின்றிருந்தார்.

"என்ன எழுதுற?"

"கட்டுரை"

"தா நானும் பாக்குறேன்..."

கொப்பியைக் கையிலெடுத்தார். பக்கத்திலிருந்த என் கட்டிலில் உட்கார்ந்து மூக்குக் கண்ணாடியை சரிப்படுத்திக் கொண்டு படிக்கத் தொடங்கினார்.

என் இதயம் வேகமாக அடித்துக் கொண்டது. பொறியில் மாட்டியதைப்போன்று ஏதோ ஒரு தவிப்பில் நா வரண்டு போனது.

வாப்பா நிமிர்ந்தார். நான் கதிரையைத் திருப்பி அவரை வசதியாகப் பார்க்கும் விதமாக உட்கார்ந்து கொண்டேன்.

"பரவாயில்லையே. தமிழ் நல்லா வருதே..'

- புன்னகைத்தார். எனக்கு வெட்கமாக இருந்தது.

"சரி மகன். ஒரு தலைவர புகழ்ந்து எழுதக்குள்ள, இன்னொரு தலைவர வேணும்னே தாக்கி எழுதுறது

அவ்ளோ அழகில்ல. நீ தாக்கி எழுதுற தலைவருக்கும் ஏராளமான தொண்டர்கள் இருப்பாங்க. நா சொல்றது சரிதானே..”

- ஓ! இவர் லிங்கனைப்பற்றி நான் எழுதியதைக் குறிப்பிடுகிறாரா? ஆண்டு பதினொன்றில் படிக்கும் நான், ஐந்தாம் வகுப்பு வரையே படித்த வாப்பா சொல்லும்வரை இந்த முக்கியமான உண்மையை உணரவில்லையே!

“ஓ வாப்பா! சரிதான்”

“இன்னொரு விஷயம்..!”

“..............................................”

“உண்மையிலேயே ஒன்னயக் கவர்ந்த அரசியல் தலைவரு லெனின் தானா? நல்லா யோசிச்சிப் பாரு!”

நான் மலங்க மலங்க விழித்தேன். அந்தக் கேள்வியின் உட்பொருளைப் புரிந்துகொள்ளவே சில நிமிடங்கள் ஆயிற்று.

வாப்பா எழுந்தார்.

“எங்கட முஹம்மது நபிய யோசிச்சிப் பாக்கல்லியா நீ? அவங்க ஒரு சமயத் தலைவரு மட்டும் இல்ல, அரசியல் தலைவரும்தான், ரொம்ப க்ரேட் ஆன உலகத் தலைவரும்தான்னு ஒனக்குப் படல்லியா? அவங்கட ஆட்சியைவிட வேற யாராவது நல்லா ஆட்சி செஞ்சதா எனக்குத் தெரியல்ல... அவங்கட போதனைகளவிட ஒயர்ந்த ஒண்ணும், எனக்கு வெளங்கல்ல..”

வாப்பா போய்விட்டார். அப்புறம் அக்கட்டுரையை முன்னைப்போல் சுவையாக எழுத முடியவில்லை. எவ்வளவு முயன்றும் ஏதோ ஓரிடத்தில் தடுக்கி விடுவது போலிருந்தது. கடைசியில் அக்கட்டுரையை நான் ஒப்படைக்குச் சமர்ப்பிக்கவேயில்லை.



அதன்பிறகு வாப்பா அதுபற்றி ஒன்றுமே பேசவில்லை. ஆனால் அவரிடம், அவர் என்னை அணுகிய பல தோரணைகளில் நுண்ணிய வித்தியாசம் ஒன்று படிந்திருந்ததை என்னால் உணர முடிந்தது.

ஒருநாள் நண்பன் வீட்டுக்குப் போவதற்காக அவசரமாக உடை மாற்றிவிட்டு வந்து கொண்டிருந்தேன். ஹோலில் உட்கார்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்த வாப்பா என் கால்களை மூக்குக் கணாடிக்கூடாக கூர்ந்து பார்த்தார்.

“எங்க. மகன்.. புது செருப்புக் காணோம்?”

என் அஸ்திவாரமே ஆட்டம் காண்பதுபோல் இருந்தது. காலில் போட்டிருந்த பாட்டா செருப்பு உருகி, நெருப்பாக பாதத்தைச் சுடுவதுபோல் ஒரு பிரமை.

“தங்கராசுட மகனுக்குக் குடுத்தியா?”

- நான் ஷேர்ட் கையை மடித்து விடுவதைப் போன்ற பாவனையில் அவரை நிமிர்ந்து பார்ப்பதைத் தவிர்த்தேன்.

“ரெண்டு நாளக்கி முந்தி அவன் போட்டிருந்ததக் கண்டேன். நேத்து பாத்தேன்... கால்ல செருப்பு இல்ல... எங்கன்னு கேட்டேன்..”

அவர் நிறுத்திவிட்டு என்னை நிமிர்ந்து பார்த்தார்.

நானும் தவிர்க்க முடியாமல் தீனமாக அவரைப் பார்த்தேன்.

“அவன் சொல்லல்ல... அதட்டிக் கேட்டேன்... அம்பது ருவாக்கு வித்துட்டேன்னு சொன்னான்..”

என் தலை கவிழ்ந்தது. கைவிரல்களில் ஒரு நடுக்கம் பரவி செய்து கொண்டிருந்த வேலையைத் தடுத்தது.

"அவன்ட அம்மா வந்து என்கிட்ட என்ன சொன்னா தெரியுமா? அதுதான் மொதலாளி நானும் பாக்குறேன்... நேத்து அவன்ட கையில தாராளமா காசு பொழங்கிச்சி... ஜில்போல் அடிக்கிறான்... படம் பாக்குறான்... பாட்டுப் புத்தகம் வாங்குறான்... கேட்டா, சதம் கூட தாரான் இல்லன்னு கவலப்படுறா அவா..."

நான் பெரியதொரு குற்றம் செய்துவிட்டு வசமாக மாட்டிக் கொண்டதைப்போல் கிடுகலங்கினேன். கண்களில் என்னையறியாமல் நீர் நிறைந்து போனது.

"மகன் இங்க கொஞ்சம் வா..."

வாப்பாவின் ஆதரவான அழைப்பு ஒரு கோழிக்குஞ்சைப்போல் என்னுள் ஒடுங்கி அவரருகே அமர்ந்து கொண்டேன். என் கைகளை மென்மையாகப் பற்றிக் கொண்டார். பிடி மெல்ல இறுகிற்று. நான் நிமிர்ந்தேன்.

"இன்னொருத்தர் கஷ்டப்படுறதக் கண்டு அவங்களுக்கு ஒதவி செய்றது நல்ல பழக்கம்தான். ஆனா செய்றதுக்கு முந்தி ஒதவி தேவைப்பட்றவங்களப்பத்தி நாம நல்லா தெரிஞ்சி கொள்ளணும்... ஒரு கொள்கையில தீவிரமா வாழ்றதுக்கும், மனுஷரப்பத்தி நல்லா தெரிஞ்சி கொள்றதுக்கும் மனசுல பக்குவம் வேணும். அதுக்கு நீ இன்னும் வளரணும்..."

நான் கண்ணீர் நிறைந்த விழிகளைத் துடைக்கக் கையெழாமல் உட்கார்ந்திருந்தேன்.

★ ★ ★

இந்த ஒரு வாரமாக நான் ஊரில் இல்லை. அனுராதபுரம், கல்கமுக, மதவாச்சி என்று பல



இடங்களுக்கும் செல்லவேண்டியிருந்தது. திருப்தியான விலையில் எள்ளு கிடைக்கிறதா என்று விசாரித்து விலைபேச வேண்டியிருந்தது. சில இடங்களில் தரவேண்டிய பணத்தைப் பெற்று நல்லெண்ணெய், மிளகாய், நெல் ஓடர்களும் பெற்று...

நாலு நாட்களில் வேலை முடிந்துவிட்டது. விபரங்களை வாப்பாவுக்கு அறிவித்தேன். வவுனியா விலுள்ள சாச்சா வீட்டுக்கு போய் வரலாமென எண்ணி, வாப்பாவின் சம்மதம் கேட்டபோது உடன் சம்மதித்தார். மூன்று வருடங்களாகக் காணாமல் இருந்த சாச்சாவையும், சாச்சியையும், குழந்தைகளையும் கண்டு களித்து மூன்று நாட்கள் அவர்களுடனிருந்தேன்.

இப்போதுதான் வீடு வந்தேன். சாப்பாட்டு நேரம் பிந்திவிட்டது. வாப்பா சாப்பட்டுவிட்டு ஹாலில் உட்கார்ந்திருந்தார். நான் பின் கட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன்.

ஏதோ பலமான பேச்சுக் குரல். உம்மா எட்டிப் பார்த்தாள். நானும் பார்த்தேன். ஒன்றும் விளங்கவில்லை. முன்னே போனேன். ஓ... ஆப்தீன்! வாப்பாவின் காலடியில் உட்கார்ந்திருந்தான். வாப்பா அவனது தோளைத் தடவுவது தெரிந்தது.

"மொதலாளி நா தனிக் கட்டன்றத இப்பதான் நல்லா வெளங்குறேன் மொதலாளி. தொழில் இல்லாம ஒருபுடி சோறு தர நாதியில்லாமப் போச்சுங்க. மீனுகூட சரியா கெடக்கல்ல. நீங்க சொல்ற மாதிரியே எல்லாம் கேட்டு அதமாதிரி செய்றேன். எனக்கு வேல தாங்க மொதலாளி"

வாப்பாவின் முதுகு மட்டுமே தெரிந்தது. ஆப்தீனின் முகம் பக்கவாட்டில் தெரிந்தது. கன்னங்களில் கண்ணீர்

வடிந்திருந்தது. ஒழுகிய மூக்கைக் குனிந்து சாரத்தால் துடைத்துக் கொண்டான்.

"சரி எழும்பு ஆப்தீன். நாளையில இருந்து ஒனக்கு எள்ளு தூக்குறேன்"

வாப்பா நிதானமாக மெதுவாகச் சொன்னார். மீண்டும் கேட்டார்.

"சாப்பிட்டியா?"

அவன் பலமாக அழுதான். "காலைல இருந்து பச்சத்தண்ணி மட்டும்தான் மொதலாளி"

வாப்பா உம்மாவைக் கூப்பிடுவதற்காகத் திரும்பினார். பின்னால் நான் சிலையாக நின்று கொண்டிருப்பதைக் கண்டு விட்டும், எவ்விதச் சலனமுமின்றி "மகன் ஆப்தீனுக்கு சாப்பாடு வெக்கச் சொல்லு உம்மாட்ட" என்றார்.

நான் உள்ளே திரும்பினேன். என் கையில் எச்சிலாக இருந்த சோற்றுத் துணிக்கைகள் காய்ந்து கையோடு ஒட்டிப் போயிருந்தன.

# ஒரு பொற்கனவின் முடிவில்....!

அது சிறிய ஹோட்டல். ஆங்காங்கே சிலபேர் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். முன்புறம் சுவரோரமாக இருந்த பெஞ்சில் ஊருக்குப் புதிதாக மாற்றலாகி வந்திருக்கும் தமிழ் ஆசிரியர் நல்லதம்பி ஆங்கிலப் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார். ரேடியோ மெல்லிசாக 'செய்தியின் பின்னணியில்' வாசித்துக்கொண்டிருந்தது. ஹோட்டல் முதலாளி கேஷியரில் இருந்தபடி ஏதோ கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ரஹீமுக்கு சாப்பிடப் பிடிக்கவில்லை. தோசையிலும், சாம்பாரிலும் ஒன்றும் சுவைகுறைவு இல்லை. அதுவும் இரண்டே இரண்டுதான். ஆனாலும்...! ஒன்றை சிரமத்துடன் முடித்துவிட்டு, மற்றதை சுருட்டி கையில் எடுத்துக்கொண்டான். வெளியே நடக்கையில் கொடுத்திருந்த பணத்தின் மீதியைத் தரமுயன்ற முதலாளியைச் சைகையினால் அமர்த்தினான்.

வெளித்திண்ணையில் இரைக்காகக் காத்திருந்தபடி வாலை ஆட்டிக்கொண்டிருந்த தெருநாயின் முன்பாக தோசையைப் போடுகையில் அது ஆவலாக முகர்ந்து

பார்த்துவிட்டு ஒரு வேகத்துடன் அதைச் சாப்பிடத் தொடங்கியது. அவனுக்கு சிரிப்பு வந்தது. தனக்கு ஒரு போட்டி வந்துவிடக் கூடாதென்பதில் இதற்குக்கூட எத்தனை கவனம்...?

அது சாப்பிட்டு முடிக்கும்வரை அதற்குக் காவலாக நிற்பதுபோல் அங்கேயே அவன் நின்றிருந்தான். எல்லாம் முடிந்தபின் நாய் தன் நாக்கால் வாயோரத்தைத் தடவியபடி மீண்டும் குனிந்து வேறெதையோ தேடத் தொடங்கிற்று. அவனுக்கு மனசுக்குள் ஒரு ஆறுதல் பிறந்தது போலிருந்தது. வீட்டை நோக்கி நடந்தான்.

வீட்டுக்கதவு பூட்டியிருந்தது. திண்ணையில் அவனது படுக்கை அழகாக விரிக்கப்பட்டிருந்தது. பெட்ஷீட்டால் இடுப்புவரை போர்த்திக்கொண்டு ஒருக்களித்துப் படுத்தான். முற்றத்துத் தென்னைமரத்தின் ஓலைகளினூடே நிலவின் ஒளிக்கீற்றுக்கள் மின்னிக்கொண்டிருந்தன. முற்றத்தின் வெண்மணல் அந்தப் பூரண நிலவின் தயவால் வெள்ளித்திரைபோல் பிரகாசித்தது. மெல்லிசாய் ஒரு சிள்வண்டின் குரல்...!

எத்தனை காலமாக வந்துபோகிறது இந்த நிலவு...? எத்தனை மனிதர்களைக் கண்டிருக்கும்? கேடானு கோடி காலமாய் வாழ்ந்த மக்களை - மன்னர்களை - நல்லவர்களை - கெட்டவர்களை - ஞானிகளை - மேதைகளை...! இப்படி எத்தனை பேரின் கதைகளை இது தெரிந்திருக்கும்? அதெப்படி, இத்தனை காலத்திலும் இந்த நிலவு ஒரு துளிக்கூட மாற்றமடையாமல் போனது? பெரிசாய் வளர்ந்து, பூரண கும்பமாய் ஜொலிப்பதும், சில நாட்களில் தேய்ந்து சிறு நகம்போல் வெற்றிக்கோடாய் தெரிவதும், கொஞ்ச நாட்களில் மறைந்தே போவதும்...! இதைத்தவிர வேறொரு இசகுபிசகு இங்கில்லையே! இதே வானத்தில், இதே நட்சத்திரங்களோடு, இதே நிலவு



இன்னும் எத்தனை யுகங்களுக்கும்...! இதற்கெல்லாம் நியதி என்று ஒன்று எப்படி வந்திருக்கும்? வளர்ந்துகொண்டே போன சிந்தனை மேலும் தொடர வழியின்றி சட்டென நின்றது.

ரஹீம் மறுபுறம் திரும்பிப் படுத்தான். மீண்டும் இதயத்தின் இயக்கம்...!

பார்க்கப்போனால் மனுஷ வாழ்வும் இப்படித்தான். மனுஷ உயிர் தோன்றிய காலத்திலிருந்து ஒரே தாளலயத்தோடுதான் வாழ்க்கையின் நாதம் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அது வெவ்வேறு விதமாக ஒலித்தாலென்ன? பிறப்பும், இறப்பும் ஒரே விதமாகத்தான் இருக்கின்றன எல்லோருக்கும். ஆனால், இடையில் வாழும் வாழ்க்கையில்தான் எத்தனை நிகழ்வுகள்...! மேடுபள்ளமாய்.. ஏற்ற இறக்கமாய்.. நெளிவு சுளிவுகளாய்.. ஆனாலும் என்ன? வாழ்வின் அடிநாதம் எங்கும் ஒன்றாகத்தான் ஒலிக்கிறது.

ஆமாம்... இதற்கெல்லாம் பின்னணி என்ன? இந்தவிதமான ஆர்ப்பாட்டங்களுக்கும், அலசல்களுக்கும் ஊடாக மனுஷ வாழ்க்கையின் முடிவுவரை அமைதியான - என்றும் அறுபடாத உறுதியோடு - ஒரு இழை துல்லியமாகத் தெரிகிறதே.. அது என்ன? அதன் சூட்சுமம் என்னவாயிருக்கும்?

மீண்டும் சிந்தனையில் சடுதியான முறிவு...! ஆயாசமாக இருந்தது. கண்களை மூடித் தூங்கத் தொடங்கினான்.

★ ★ ★

ரஹீம் தான் வேலை செய்யும் கடையை நோக்கி நடந்து கொண்டிருந்தான். நடுப்பகல் வெயில் சுட்டெரித்தது.

சின்ன பாலத்தைத் தாண்டி, அப்பால் உள்ள பெரிய பள்ளிவாசலைக் கடந்து செல்கையில், அங்கே மதிலோரமாக தமது பொதி பொட்டலங்களுடன் உட்கார்ந்திருந்த ஏழை பிச்சைக்காரர்களைக் கண்டான். ஒரு கோடி கவலைகளையும், ஏக்கங்களையும் சுமந்தபடி அவர்கள்...!

அந்தத் துயரங்களோடும், அவர்களது முகங்களில் நிம்மதிரேகை ஒன்று துல்லியமாகப்படர்ந்திருப்பதாக அவனுக்குப் பட்டது.

ஒருவிதத்தில் அற்புதமான வாழ்க்கை இவர்களுடையது. உணவு... உடை... இருப்பிடம்... இவற்றுக்கான அடிப்படை ஆசைகளோடு மட்டுமே கழிகின்ற வாழ்க்கை! இவற்றைத் தேடுவதில் தம்மாலான முயற்சிகளைச் செய்துவிட்டு, முடியாதபோது இறைவனிடம் தம்மை ஒப்படைத்துவிட்டு வாழும் எளிய வாழ்க்கை...! தமக்கு மேலதிகமான எதைப்பற்றியும் ஆசைப்படாமல் நாளாந்த வாழ்க்கையின் தேவைகளை நிறைவு செய்வதில் மட்டுமே திருப்தியடைந்து விடுகின்ற பிக்கல் பிடுங்கல் இல்லாத அமைதி வாழ்வு...!

திடுமென தன்னை எண்ணி அவனுக்கே சிரிப்பு வந்தது. தான் ஏன் காண்கின்ற எல்லா விஷயங்களைப் பற்றியும் இப்படியெலலாம் யோசிக்கிறேன்...? இப்படியே யோசித்து யோசித்து கடைசியில் ஞானியாகி விடுவேனோ...?

தன்னை ஒருமுறை பார்த்துக்கொண்டான். மெல்லிசாய் சிரிப்பு வந்தது. நானா ஞானி...?

தன்னைவிட கீழுள்ளோரை - எவ்வகையிலேனும் பிறரின் அனுதாபங்களுக்கு ஆளாகும் பலரை - நான் ஏன் இத்தனை கருணையோடு பார்க்கிறேன்...? அவர்களுக்குச்



சார்பாகவே ஏன் சிந்திக்கிறேன்...? ஒருவேளை, இது ஞானிகளின் பண்புகளில் ஒன்றுதானோ?

சட்டென எதிர்க்கோடியிலுள்ள கடையில் யாரோ பலத்த குரலில் பேசிக்கொள்வது கேட்டது. அதைவிட உரத்த குரலில் ரேடியோ பகல் செய்திகளை வாசித்துக் கொண்டிருந்தது. அதைப்பற்றித்தான் அவரும் ஏதோ சொல்கிறார் போலும். அவனும் செய்தியைக் கூர்ந்து கேட்டான்.

"நேற்று அதிகாலை தனது வாசஸ்தலத்திலிருந்து இறை வழிபாட்டுக்காகச் சென்றுகொண்டிருந்த மூதூர் அரசாங்க அதிபர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். இதனையடுத்து ஏற்பட்ட குழப்பநிலைகளில்..."

செய்தி தொடர்ந்தது. ஆயாசமாக இருந்தது. இதென்ன புதுசா ஒரு அவச்செய்தி?

ஏனோ அந்தச் செய்தியைப் பற்றிய நினைவுகளிலிருந்து மனசைக் கழற்றிக்கொள்ள முடியவில்லை. ஒரு கணம் இறைவனைத் தொழுவதற்காக அமைதியாக சென்றுகொண்டிருந்த அந்த உள்ளம், எதிர்பாராத ஒரு கணத்தில் துப்பாக்கிக் குண்டுகளால் தாறுமாறாகத் தன் உடல் சிதைக்கப்படும்போது என்ன பாடு பட்டிருக்கும் என்றொரு யோசனை வந்தது. மனசைக் கசக்கியெடுத்தாற் போல் ஒரு வலி ஏற்பட்டது.

என்ன நிலையாமை இது...? எத்தனை சீக்கிரமாக ஒரு வாழ்க்கை - வாழ்நாளெல்லாம் ஆசைகளையும், ஏக்கங்களையும் சுமந்து கொண்டிருந்த வாழ்க்கை - ஒரு கணத்தில் இப்படி பட்டுப்போய் விடுகிறது...!

ஆடி அடங்கிய வாழ்க்கையின் முடிவு ஆறடி நிலத்தோடுதான் என்று ஏன் இந்தக் கவிஞர்கள்

இவ்விஷயத்திற்கு - ஒரு கண நேர நிகழ்வுக்கு - இத்தனை முக்கியத்துவமளிக்கிறார்கள் என்று அவன் யோசித்தான். வாழ்க்கையின் ஏனைய நிகழ்ச்சிகளைப் போலவே மரணத்தையும் சாதாரணமாக எடுத்துக்கொள்ளும் பக்குவம் நம்முள் வரவேண்டும். அப்போதுதான் மரணபயத்திலிருந்து மனசு விடுபடும்; உயிர் போகுமுன் அனைத்தையும் அனுபவித்துவிட வேண்டுமென்று ஆலாய்ப் பறக்கின்ற அற்பத்தனத்திலிருந்து மனுஷ வாழ்க்கை மீளும்; மனசாட்சிக்கு விரோதமற்ற - மற்றவர் வாழ்வுக்கு குழிபறிக்காத - மனுஷத் தன்மையிலிருந்து விலகிச் செல்லாத - ஒரு நேரிய வாழ்க்கை மனிதனுக்குக் கிடைக்கும் என்று அவன் எண்ணிக்கொண்டான். சிந்தனையில் மூழ்கியபடி நடக்கத் தொடங்கினான்.

★ ★ ★

கல்யாண வீட்டில் பெரிய அமர்க்களம். காதர் முதலாளி அங்குமிங்கும் சுழன்றபடி வந்தவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

கேமராவுடன் எல்லாருக்கும் மத்தியில் சாவகாசமாக நடமாடி ஃபோட்டோ எடுத்துக்கொண்டிருந்தான் ஒருவன். அவ்வறையைத் தாண்டி போவோர் வருவோர்கள் எல்லோரும் பெண்ணையும், மாப்பிள்ளையையும் அடிக்கொரு தடவை திரும்பிப் பார்த்துக்கொண்டு சென்றார்கள்.

வந்திருந்த ஒவ்வொருவரும் ஏதோ தனக்குத்தான் திருமணம் என்பதுபோல் அதிகபட்ச அவதானங்களுடன் தம்மை அலங்கரித்திருந்தார்கள்.

அவனுக்குச் சிரிப்பு வந்தது. ஏனோ இந்த சாப்பாடும், இந்த அலங்காரமும், அலட்டல்களும் தனக்குப் பிரியமின்றி போய்விட்ட விந்தையை மீண்டும் ஆச்சரியத்துடன் எண்ணிக்கொண்டான்.



எதற்காக இவர்களெல்லாரும் அங்குமிங்கும் அலைகிறார்கள்? தேவையில்லாமல் ஏன் சிரிக்கிறார்கள்? ஏதோ பரம மகிழ்ச்சியில் இருப்பதாக இவர்கள் காட்டிக்கொள்வதற்கு ஏதாவது காரணம் உண்டா? ஏன் இந்தப் போலித்தனம்? உண்மை வாழ்வு கசந்து கொண்டிருக்கையில், அது தேவலோக வாழ்வாக இருக்கிறது என்று காட்டிக்கொள்ளும் வேஷம் ஏன்?

அவனுக்கு அவர்களையெண்ணி பரிதாபம் ஏற்பட்டது. வாழ்க்கையின் உண்மையான பொருள் என்று ஏதோ ஒன்று இருக்கிறதே, அதை இவர்கள் கண்டுகொண்டார்களா? அதில் அக்கறையாவது எடுக்கிறார்களா? ஒருவேளை, அப்படி ஒன்று இருப்பதே இவர்களுக்குத் தெரியாதோ? அதனால் தான் எந்தக் கவலைகளும் இன்றி இவர்கள் சிரித்து கும்மாளமிடுகிறார்களோ?

பேசாமல் திரும்பி நடந்தான். வாசலைத் தாண்டி வருகையில், அந்தப் பள்ளிவாசல் ஏழைகள் வரிசையாக கைகளில் பேக்குகளுடன் சுவரோரமாக, அதே ஏக்கங்களோடும், சோகங்களோடும் உட்கார்ந்திருப்பதைக் கண்டான்.

இவர்களுடைய இந்த நிமிஷக் கவலை என்னவாக இருக்கும் என்று நினைத்துப் பார்த்தான். சோறு! பசியைத் தீர்ப்பதற்குத் தேவையாக கொஞ்சம் சோறு மட்டும்...! அது எவ்விதமாக இருந்தாலும் இவர்களுக்கும் கவலையில்லை. மற்றபடி, மணமகள் எப்படி? மணமகனுக்கு என்ன தொழில்? அவர்களது பொருத்தம் சரியா? என்றெல்லாம் இவர்களுக்கு யோசனையில்லை. அது இவர்களுக்குத் தேவையில்லாத ஒன்று.

மீண்டும் தமது எல்லைகோடுகளோடு மட்டும் தம் தேவைகளை நிறுத்திக்கொள்கின்ற இந்த ஏழைகளின் மீது அவனுக்கு அலாதியானதொரு பிரியம் ஏற்பட்டது.

சம்பந்தா சம்பந்தமின்றி அவனுக்கு தன் மனைவியின் நினைவு வந்தது. ஒரு கூலி வேலைக்காரனுக்கு இரண்டாவதும், கடைசியுமான பிள்ளையாகப் பிறந்து, பத்துவரை படித்துவிட்டு, பிறகு படிக்க நாட்டமின்றி தன் சகபாடியான காதர் நடத்திய கடையில் எடுபிடியாக வேலை செய்த காலத்தில் அவனுக்குத் திருமணம் பேசி முடித்து வைத்தார்கள்.

அதுவரை, வேறு யாருக்கோ திருமணம் நடக்கப்போகிறது என்பதுபோல் அவன் வழக்கமான தன் மௌனத்தில் நடந்து கொண்டிருந்தான். ஆனால், திருமணத்திற்குப் பிறகுதான் உண்மையில் அவன் தன்னையே அறிந்துகொண்டதாக பிறகு பல தடவைகள் நினைத்து அந்த அனுபவத்தை சிலாகித்திருக்கிறான்.

அவனது மனைவியின் அழகு, அடக்கம், சாமர்த்தியம் எல்லாமே அவனை மென்மையாக்கின. அவளது அன்பு அவனது அன்பை அதிகப்படுத்திற்று. அவளது பணிவு அவனிடம் முன்னமே இருந்த பணிவை இன்னும் ஆழமாக்கியது. அவனோடு அவள் கொண்ட கரிசனை, சிறுவயதிலிருந்தே பிறர்க்கு இரங்குவதில் அவனுக்கிருந்த வேட்கைக்கு இன்னும் நீரூற்றியது..!

எப்படியோ..! ஓரிரு வருடங்களில் ஓர் அழகிய ஆண் குழந்தையுடன் அவனைத் தனியாக்கிவிட்டு அவள் போய் சேர்ந்துவிட்டாள். அவனது அண்ணன் அவர்கள் இருவரையும் வருந்தி அழைத்து தன்னோடு சேர்த்துக் கொண்டான். அவன் குழந்தை அண்ணனுக்குக் குழந்தையாயிற்று. அவனோ, சில வேளைகளில் கண்களைச் சுட்டெரிக்கும் தன் மனைவியின் ஞாபகங்களோடு, தன் அதே தொழிலை மீண்டும் மணந்துகொண்டு, மற்ற யாவரிலிருந்தும் தன் மௌனக் கவசத்தினால் தன்னைப் பிரித்துக் கொண்டான்.



அவனுடன் கொஞ்சம் அதிகமாகப் பேசுகின்ற ஒருவர் இருக்கிறார் என்றால் அது காதர் முதலாளி மட்டும்தான். அவர்தான் அவனை ஓரளவாவது புரிந்துவைத்திருந்தார். அவனை, அவனது உள்ளத்தை, அவன் நெகிழ்வுகளை, பிடிவாதங்களை அவர் மட்டுமே அறிந்திருந்தார். அவன் சத்தியமான ஒரு ஜீவன் என்ற நம்பிக்கை வலுப்பெற ஆரம்பிக்கவே, அவரே பல தடவைகள் அவனை எங்காவது புதிய இடத்துக்கு அழைத்துச் செல்ல முயன்றிருக்கிறார். ஆனால், அவன் ஒருமுறைகூட அவர் கூப்பிட்ட எவ்விடத்துக்கும் போனதில்லை. தனது விருப்பமின்மையை ஒரு சின்ன மௌனத்தினாலேயே வெளிக்காட்டி விடுவான். அவர் ரொம்ப வற்புறுத்திய தால்தான் அவரது மகளின் திருமணத்துக்கு இன்று வந்திருந்தான்.

★ ★ ★

மேகங்களே இல்லாத வானத்தில் வெண்ணிலா கம்பீரமாக உலகை அளந்துகொண்டிருந்தது. மரங்கள் அசையாதிருந்தபோதும் குளிர்தென்றல் உடலைத் தொட்டுச் சென்றது. நடந்துகொண்டிருந்த ரஹீம் அந்தப் பெரிய பள்ளிவாசலின் முன்னால் சற்று நிதானித்தான்.

பகலில் மதிலோரமாக உட்கார்ந்திருந்த பிச்சைக் காரர்களைக் காணவில்லை. ஒரே ஒரு கிழவர் மட்டும் மதிலோரமாக துண்டை விரித்துப்போட்டு தூங்கிக் கொண்டிருந்தார். இங்கிருந்து பார்க்கையில் நிலவு

இன்னும் அழகாய்த் தெரிகிறது. இந்த நிலவு ஏன் வருகிறது? இந்த வருகையின் ரகசியம் என்ன?

மதிலோரமாக இருந்த பள்ளிவாசலின் உட்புற மத்ரஸா அறையில் விளக்கெரிந்து கொண்டிருந்தது. மெல்லிசாய் ஒரு இளங்குரல் குர்ஆனை ஓதிக்கொண்டிருந்தது.

"வத்தாரியாத்தி தர்வா; ஃபல் ஹாமிலாத்தி விக்ரா; ஃபல்ஜாரியாத்தி யுஸ்ரா; ஃபல்முஸ்ஸிமாத்தி அம்ரா; இன்னமா தூ அதூன லசாதிக்; வசின்னத்தீன லவாகிஃ"

அவனுக்கு நன்கு தெரிந்த பள்ளிவாசல் இமாமின் குரல் இடையில் கேட்டது.

"சரி இதுக்கு பொருள் சொல்றேன், கேளுங்க..!

சமுத்திர ஜலத்தை ஆவியாகச் சிதறடிக்கும் சூறாவளிகள் மீதும்,

அந்த நீராவியைச் சுமக்கும் மேகத்தின் மீதும்,

பல பாகங்களுக்கும் அதனை எளிதாகத் தாங்கிச் செல்லும் மேகத்தின் மீதும்,

அதனைப் பூமியின் பல பாகங்களில் பிரித்துவிடுபவைகளின் மீதும் சத்தியமாக..

வினைக்குத் தக்க கூலி கொடுக்கப்படுமென்று உங்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி நிச்சயமாக உண்மையானதே!

நிச்சயமாக, வினைக்குத் தக்க கூலி கொடுக்கப்பட்டே தீரும்!

நட்சத்திரங்களின் பாதைகளை யுடைய வானத்தின் மீது சத்தியமா..!"



அந்த வினாடிக்குள் அவனுள் ஒரு பிரகாசம் பரவிற்று. அது அவனது இதயத்திலிருந்து புறப்பட்டு, உயிரின் ஒவ்வொரு அணுவிலும் நிலைத்தது.

அவனுக்குள் ஆரம்பத்திலிருந்தே உருவாகி, மீண்டும் மீண்டும் தோன்றி, புது வடிவெடுத்து, சிக்காகி, அவனைத் துளைத்தெடுத்த கேள்வியொன்றுக்கு சட்டென விடை கிடைத்தாற்போலிருந்தது. ஓ! இந்த நிலவு.. இந்த வானம்.. இந்த மனிதம்.. இந்த வாழ்க்கை.. இந்தக் கணம்..! ஒன்றுமே பொய்யல்ல; இது ஒவ்வொன்றுக்கும் அர்த்தம் இருக்கிறது.

அகலமான வாசற்தூணில் சாய்ந்து அவன் உள்ளே எட்டிப் பார்த்தான். அந்த இரவின் மோனத்தில் அந்தப் புனித ஸ்தலம் திளைத்திருந்தது. பள்ளிவாசலின் உள்ளே மங்கலான விளக்கொளி! வெளியே பிரகாரத்தில் வெண்மையைப் பாய்ச்சியபடி பெரிய ட்யூப் லைட்..

அந்தத் தனிமையும், அமைதியும் அவனுக்கு மீண்டும் மிகப் பழக்கமான எதையோ ஞாபகமூட்டின.

அவன் படிகளில் இறங்கி, பள்ளிவாசலை நோக்கி நிதானமாக நடக்கத் தொடங்கினான்.

வெளியே நிலவு புன்னகையுடன் நடந்துகொண்டிருந் தது!

## பென்சன்

"எக்ஸ்கியூஸ் மீ டீச்சர்.."

"யெஸ். சொல்லுங்க.."

"எனக்கொரு ஹெல்ப் பண்ணனும்.."

"டெஃபினைட்லி! வட் கென் ஐ டு ஃபொ யூ மிஸ்..?"

"இந்த செலரி டீடெய்ல்ஸ் பத்தி எனக்கு கொஞ்சம் சொல்லித் தரணும். இதப்பத்தி எனக்கு ஒண்ணுமே சரியா தெரியாது.."

"ஓகே.. ஷ்வர்..! பே - ஷீட்ட இப்பிடி கொண்டு வாங்க.."

"ஹிய இட் இஸ்..!"

"ம்.. நல்லா கவனிங்க.. இது ஒங்கட பேஸிக் செலரி. எய்ட் ஸன்ட்ரட் ஸிக்ஸ்ட்டி ருபீஸ் உங்களுக்கு எட்வான்ஸா தாராங்க. அதுதான் இது. ரெண்டையும் சேத்து டோட்டல் செலரி இது.."

"இதெல்லாம் வெளங்குது. இந்த வெட்டுகள்தான் வெளங்கல்ல.."

"வெய்ட் வெய்ட்..! ஐல் டெல் யூ..! ரூ ருபீஸ் மணி ஒங்கட ஸ்டாம்ப்புக்காக வெட்டுறாங்க. வன் ஹன்ட்ரட் ஃபிஃப்டி



ஸென்ட்ஸ் ஒங்க பென்சனுக்காக வெட்டுறாங்க! அதோட சேத்து நீங்க ஃபெஸ்டிவல் எட்வான்ஸ் ஏதும் எடுத்திருந்தா, அதையும் கொஞ்சங் கொஞ்சமா வட்டியோட வெட்டிட்டு இவ்ளோதான் ஒங்க கையில தருவாங்க.."

"இப்ப வெளங்குது. தேங்க்யூ வெரி மச். ஒங்க செலரி டீடெல்ஸ் எப்பிடி..?

"எனக்கு ஃபெஸ்டிவல் எட்வான்ஸ் ப்ளஸ் ஸ்டாம்ப் மனி மட்டும்தான் கட்..!"

"பென்சன்..?"

"நோ பென்சன் ஃபொ மீ..!"

"ஒங்களுக்கு மட்டும் ஏன் அப்பிடி. எல்லாருக்கும் பென்சன் வெட்டத்தானே வேணும்..?"

"இப்ப அப்பிடிதான் ரூல்ஸ். நைன்டீன் எய்ட்டி ஃபைவ்வுக்கு முந்தி அப்பிடி இல்ல. எங்ககிட்ட பர்மிஷன் கேட்டுத்தான் வெட்டுவாங்க.."

"அப்ப நீங்க பென்சன் வேணான்னு சொல்லி ட்டிங்களா..?"

"யெஸ். அப்பிடித்தான்.."

"வட் அ ஸ்ட்ரேஞ்ச் திஸ்! ஏன் மேடம்.. கடைசிக் காலத்துல ரெஸ்ட்டா இருந்து சாப்பிட விருப்பமில்லயா ஒங்களுக்கு..?"

"ஒங்களுக்கு அதெல்லாம் வெளங்காது மிஸ்.. ஹும்.."

"ஏன் வெளங்காது? சொல்லுங்க ப்ளீஸ்!"

"இன்னும் ஆறு வருஷம் நா ஸர்வீஸ்ல இருப்பேன். ஸர்வீஸ் டைம்லயே செத்துப்போவேன்.."

"எல்லாரும் சாகுறதுதான்! ஜோக்கடிக்காம சொல்லுங்க ப்ளீஸ்..!"

"நோ ஜோக். சீரியஸாதான் சொல்றேன். இன்னும் மூணு வருஷத்துல என் கடைசி மகனும் மேஜராகிவிடுவான். மூணு பிள்ளைகளும் படிப்ப முடிச்சிட்டு ஏதாவது ஜொப் செய்வாங்க. ஸோ, அதுகளுக்கு என் பென்சன் சேராது..!"

"என்ட் வட் எபவ்ட் யுவ ஹஸ்பன்ட்..?"

"யூ நோ.. ஹீ இஸ் அ ட்ரஸ்காட்..!"

"ஐ.. ஸீ..!"

"நா சாகிற வரைக்கும் என்ன வச்சி அவர்தான் காப்பாத்தனும். அவர் செய்யல.. நா செய்றேன். இருக்கிற வரைக்கும் நா அவருக்கு சோறுபோடுறேன். என் கடமைன்னு நெனச்சிட்டு..! அவரோட, வீட்டோட, பிள்ளைகளோட எல்லாத்தேவைகளையும் கவனிக்கிறேன்.. இந்த பாரமே தாங்க முடியல..!"

"ஐம் வெரி ஸொரி மேடம்..!"

"இட்ஸ் ஓகே! இந்த லட்சணத்துல அவரோட அல்கஹோலுக்கு வேற நா படியளக்கணும்... அதையும் செஞ்சிட்டுதான் வர்ரேன்..! செத்தும் கொடை கொடுத்த வள்ளல் மாதிரி நா செத்த பிறகும் அவர வாழ வெக்கணும்னு ஏதாவது ரூல்ஸ் இல்லையே..! அப்பிடியே செஞ்சாலும் எனக்கு யாரும் தியாகின்னு பட்டம் சூட்டப்போறதும் இல்லையே...! அத வாங்கிக்கவும் எனக்கு ஆசையில்ல! இப்பவே நா தியாகிதான்... யூ அன்டர்ஸ்டான்ட் மீ..?"

# எழுத மறந்த கவிதையொன்று...!

யாரு என்னதான் சொன்னாலும் நா என்னுடைய கருத்தில இருந்து மாறப்போவதில்ல. என் வரைக்கும் வாழ்க்கையப் பத்தின என்னுடைய கருத்து உண்மையானது. வாழ்க்கைங்கிறது ரொம்பவும் அற்பமான ஒன்டு. அது ஒரு மனுஷன்ட பிறப்போட ஆரம்பிக்கிறபோதே அதுட ஓர வஞ்சனையையும், அற்பத்தனத்தையும் ஆரம்பிச்சிருது. என் மாதிரி எல்லா சாதாரண மனுஷரும் அதுக்கு பலியாகத்தான் வேண்டியிருக்கு.

காந்தி, புத்தர் மாதிரி ஒரு சில பெரிய மனுஷர்கள் தங்கட முயற்சியால தங்கட வாழ்க்கைய மகத்தானதா வாழ்ந்து முடிச்சிருக்காங்க. அதனாலதான் அவங்களப் பார்த்து என் மாதிரி ஆக்கள் பயப்புட வேண்டியிருக்கு. அவங்க காட்டிட்டுப்போன வழிகள நாங்க பின்பற்றவோ, மதிக்கவோ ஆரம்பிச்சுட்டா அப்புறம் நாங்களே எங்கட வாழ்க்கையில ஒரு செயற்கைத் தன்மைய ஏற்படுத்தி விட்டுட்றதா ஆயிருமோன்னு நா நெனக்கிறேன்.

இப்பவும் நா ஏதோ ரொம்பவும் யோசிச்சி, தீர்மானம் பண்ணி இங்கே வரல. ஏதோ நாம முந்தி படிச்ச ஸ்கூலப்

போய் பாத்துட்டு வந்தா என்னன்டு தோணிச்சு. அதனாலதான் எம்பது மைலுக்கு அங்காலருந்து வந்திருக்கேன். இதுக்கு என் மனதுல நா படிச்ச ஸ்கூலப் பற்றி நெறைய பக்தியும், விசுவாசமும் இருக்குன்னு அர்த்தமில்ல. அப்புடி ஒரு மதிப்பையும், பக்தியையும் நா என்னுடைய வாழ்க்கையில எதுக்காகவும், யாருக்காகவும் வெச்சதா எனக்கு ஞாபகமில்ல.

கால்ல ஏதோ நறுக்குன்னு குத்தின மாதிரி இருக்கு. நா செருப்பு போட்டுத்தானே நடக்குறேன்? அதெப்புடி அதுக்கும் மேலால கால குத்த முடியும்? குனிஞ்சு ஒரு கால்ல நின்னுட்டு மத்த கால தூக்கிப் பாக்குறேன். பெரியோரு முள்ளு..! நாலு பக்கமும் கொம்பு மாதிரி தலைய நீட்டிட்டிருக்குமே அந்த முள்ளு. அதுதான் செருப்புக்கும் மேலால என்னய குத்தியிருக்கு.

முந்தி நா படிக்கிறபோதெல்லாம் இந்த முள்ளு அடிக்கடி என் காலக் குத்தும். என்னயோட ராஜா மாதிரி தடியன் யாரும் சண்டை போட்டா இந்த முள்ளாலதான் நாங்க ஃபைட் பண்ணுவோம்.

ரோட்டோர புல்லுல நின்டுகொண்டு ரெண்டு செருப்பையும் கழட்டி எடுக்கிறேன். பின்பக்கம் திரும்பினா... எவ்ளோ முள்ளு ரப்பர் ஸ்லீப்பர்ல கவ்விக்கிட்டிருக்கு. எல்லாத்தையும் ஒவ்வொண்ணா கழட்டி தூர வீசுறேன். மறுபடி செருப்ப போட்டுகிட்டு நடக்குறேன்.

ஸ்கூல் கேட்கிட்ட வந்துட்டேன். என் கை தானாவே சாரத்தை - மடிச்சிக் கட்டின சாரத்தை - கீழே அவுத்துவுடுது. நா அத தடுக்க நெனக்காம கேட்ட புடிச்சித் தள்றேன். திடீர்னு இன்டைக்கு பூரா நா எனக்கு அவசியமா (அத்தியாவசியமில்ல) தேவைப்படுற ஒன்ன



மறந்துட்டேன்ற நெனப்பு வருது. தானா மறந்த மாதிரி இருந்தாலும், அதுகூட அசாதாரணமான ஒன்னா எனக்குப் படுது. அது என்ன தெரியுமா? 'தண்ணி!' சரி 'தண்ணி' மறதிய இப்புடியே வுட்டுட்டு மேல போவாம்னு தொடர்ந்து நடக்குறேன்.

என் ஸ்கூல் ரொம்பவும் பெருசு இல்ல. அட்லீஸ்ட் ஒழுங்கான அஞ்சாறு பில்டிங்கூட இல்ல. ரொம்ப சின்னதா ஒரு ஐநூறு குடும்பங்கள் போல வாழ்ந்த ஒரு சின்ன கிராமத்துக்கு இதுமாதிரி ரெண்டு ஒட்டறை படிஞ்ச, ஓடுகள் உடைஞ்ச, சுவத்தில உள்ள சிமென்ட்டெல்லாம் உதிர்ந்து உள்ளே உள்ள செங்கல் எல்லாம் தெரியிற மாதிரி பில்டிங்ஸே போதும் அரசாங்கம் நெனச்சிட்டதால அப்ப மாதிரியே இப்பவும் அதே மாதிரிதான் எங்க ஸ்கூல் இன்னும் இருக்கு. முன்னால உள்ள பில்டிங்ல ரெண்டு ஓரத்துலயும் ரெண்டு ரூம் இருக்கு. தூரத்துல உள்ளது ஒஃபீஸ் ரூம் மாதிரி... ஒடைஞ்ச பெஞ்சுகள், தேவையில்லாத புத்தகங்கள் எல்லாம் இதுக்குள்ளதான் இருக்கும். சமயத்துல எங்க ஸ்கூல் கேர்ள்ஸ் எல்லாம் ஹோம்சயன்ஸ் பிராக்டிஸ் செய்ய யூஸ் பண்ணுவாங்க.

இந்த பில்டிங்குக்கு முன்னுக்கு இருக்கிற இந்த சின்ன புல்வெளிதான் எங்க க்ரவுன்ட். இதுலதான் திங்கள், வெள்ளிக்கிழமைகள்ல பிரேயர் நடக்கும். பிரின்ஸிபால் முன்னுக்கு நின்டுகொண்டு மணிக்கணக்கா எங்கள வெயில்ல வெச்சி அறுப்பாரு. எனக்கு அதுல இன்ட்ரஸ்ட் இருக்காது. மெதுவா... எனக்கு முன்னுக்கு நிக்கிறவன்ட - பின் கல்சான் பொக்கட்ட தொறந்து வெச்சிருவன். இல்லாட்டி ஒரு பேப்ர நீளமா கயித்துல கட்டி அவனுக்கு வால் கட்டிருவேன். பிரின்ஸிபல் பாத்துட்டா குத்தம் செஞ்சவன முன்னுக்கு கூப்புட்டு எல்லார் முன்னுக்கும்

பப்ளிக்கா பனிஷ்மன்ட் தருவாரு. கலாசாலைக்கீதம், அது இதென்டு பாடச் சொன்னா நா வாயே தொறக்கமாட்டேன். எத்தனையோ தடவை எனக்கு பிரின்ஸிபல் அதுக்காக ஏசியிருக்காரு. அதுக்கப்புறம் எல்லாரும் பாடசாலைக்கீதம் பாடக்குள்ள நா வாய சும்மா சும்மா தொறந்து மூடுவேன். இல்லாட்டி, பிரின்ஸிபலுக்கு நாங்க வெச்ச பட்டப்பேர சத்தமா சொல்லிக்கிட்டே இருப்பேன்.

அதோ அங்க தெரியுறதுதான் எங்க கிணறு. அதுல பெரும்பாலான நாட்கள்ல வாளி இருக்காது. ஸ்கூல் வேலிக்கு அங்கால உள்ளவங்க அத திருடிருவாங்க. அல்லது, இந்தா இங்க பக்கத்துல இருக்கிற குவாட்டர்ஸில் உள்ள டீச்சர்ஸ் அத சொந்தமாக்கிருவாங்க.

அதோ அங்க தூரத்துல தெரியுது போய்ஸ் டொய்லட், அதுக்குப் பக்கத்துல கேர்ள்ஸ் டொய்லட். மெத்ஸ் மாதிரி ரொம்பவும் கழுத்தறுக்குற பாடங்களா இருந்தா, மெதுவா நழுவி டொய்லட்டுக்கு வந்துருவேன். அப்புறம் வேலியில உள்ள விரிசலுக்குள்ளால பூந்து வெளியே ஓடிருவேன். ரோடுக்கு வந்து எதயாவது வாய் பாத்துட்டு நிப்பேன். ஒரு முற தப்பிச்சு வந்து அந்த அப்பு கடையில நா ஜஸ்ரா பிளேன்டி குடிச்சிட்டிருக்கிற நேரம், அந்த வழியால போஸ்ட் ஒப்பீஸுக்குப் போயிட்டிருந்த என் டீச்சர் - அதுவும் மெத்ஸ் டீச்சர் - கண்டுட்டுப் போய் பிரின்ஸிபல் கிட்ட சொல்லிக் குடுத்திட்டாரு. அப்புறம் என்ன.. எனக்கு செவுல் அடி!

வாசல்படிக்கிட்ட வந்துட்டேன். கதவு இருந்த இடத்துல வெறும் நில மட்டும்தான் நிக்குது. உள்ளுக்குள் நுழையிறேன். ரெண்டு சுவத்திலயும் அப்ப மாதிரியே பெரிய ப்ளக்போர்ட். ஆனா அதுக்கு அழகா கலர் அடிச்சியிருக்கு. இந்த ப்ளக்போர்ட்டுக்கு மேல அழகான எழுத்துல Year 9 என்டு எழுதியிருக்கு. இந்த ஒரு பில்டிங்ல மட்டும் அஞ்சு கிளாஸ் இருக்கும் போலருக்கு. எல்லாமே நல்ல சுத்தமா, நீட்டா இருக்கு. உக்கார்ற பெஞ்ச்சையெல்லாம் டெஸ்க்குக்கு மேல ஏத்தியிருக்கு. இதெல்லாம் இங்க படிக்கிற புள்ளைகள் ரொம்ப டிஸிப்ளினா இருப்பாங்க போலிருக்கு. இல்லாட்டி இப்பவுள்ள பிரின்ஸிபல் டிஸிப்ளின விரும்புகிறார் போலருக்கு.



இந்தா.. இந்த சென்டர்ல உள்ள கிளாஸ்ல, இந்த சீட்லதான் முந்தி நா இருப்பேன். இங்க இருந்துட்டு பாடத்தையும், டீச்சரையும் கவனிக்றதவிட பக்கத்து கிளாஸ்ல நடக்கிற பாடமும், இல்லாட்டி பக்கத்து கிளாஸ்ல யாராவது மறைவா நடத்துற வெளயாட்டும் பாக்க ரொம்ப இன்ட்ரஸ்ட்டிங்கா இருக்கும்.

ஒருமுறை அப்புடித்தான் நா அந்த கிளாஸ்ல வாய் பாத்துட்டு இருக்கேன். எங்க கிளாஸ்ல இருந்த சயன்ஸ் டீச்சர் ருக்மணி கண்டுட்டாங்க. உடன என்ன எழும்பி நிக்க வெச்சாங்க. "ராமு, உனக்கு ஆசையாயிருந்தா நல்லா கிட்டப்போய் அந்தக் கிளாஸ பாத்துட்டு வா" அப்படின்னாங்க. நா சும்மா நின்டேன்.

"போ.. இப்பவே போய் பாத்துட்டு வா. இப்புடி என் கிளாஸ டிஸ்டர்ப் பண்ணாத"ன்னு சொல்லி என்ன அனுப்பிச்சப்புறம்தான் அவங்க கிளாஸ கன்டினியூ பண்ணினாங்க.

அதுக்குப் பிறகு எனக்கு அவங்களக் கண்டா சரியான கோவம் வரும் அவங்க வரக்குள்ள, "ஓரம்போ.. ஓரம்போ.. ருக்குமணி வண்டி வருது..."ன்னு மறைஞ்சி நின்று கத்துவேன்.

இங்கே இருந்த டீச்சர்ஸ்ல எனக்கு இங்கிலீஷ் எடுக்குற மிஸ் நிர்மலா நடராஜன ரொம்பப் பிடிக்கும். ரொம்ப ஒல்லியா, டீஸன்ட்டா இருப்பாங்க. மெட்ச்சா அவங்க ஒரு நீல சாரியும், பிளவ்ஸும் உடுத்து, ஹேன்ட்பேக்கும் எடுத்து வந்தாங்கன்னா சும்மா அப்சரஸ் மாதிரி இருக்கும். கிளாஸ அப்புடியே சுத்தி ஒவ்வொரு ஸ்டூடன்ட் கிட்டயும் நின்டு டீச் பண்ணுவாங்க.

ஒரு முற அவங்க எங்களுக்கு ஒரு இங்கிலீஷ் வெர்ஸ் சொல்லித் தந்தாங்க. அத எல்லாரும் பாடமாக்கணும்னு சொல்லிட்டாங்க. மறு நா திடீர்னு என்ன எழுப்பி கேட்டாங்க. நா எப்புடியும் அத பாடமாக்கியிருக்க மாட்டேன்னுதான் அவங்க நெனப்பு. ஆனா, நா அத மளமளன்டு சொல்லிட்டேன். அவங்களுக்கு பெரிய ஆச்சர்யம். எனக்கும் என்னன்னு தெரியல. அந்த டீச்சர் மேல உள்ள அபிமானத்தாலதான் அத நா அத்தன அழகா பாடமாக்கியிருப்பேன்னு நானே நெனச்சிட்டேன். இன்னம் அந்தப் பாட்டு எனக்கு நெனவிருக்கு.

ஒழுங்கா முழுப் பாட்டையும் நா முடிச்சதும் "குட், வெரிகுட்"ன்னு என்ன பாராட்டினாங்க. என் லைஃப்ல நா கேட்ட முதல் பாராட்டு அதுதான்னு நெனக்கிறேன். அதுக்கப்புறம் நானும், அவங்களும் கொஞ்சம் கொஞ்சமா அன்பா மாறிட்டோம். இப்பவும் எனக்கு கொஞ்சம் இங்கிலீஷ் தெரியும்னா அதுக்கு அவங்கதான் காரணம். அவங்களோட உள்ள அன்பு அவங்க பாடத்துலயும் எனக்கு ஏற்பட்டிருச்சி!

ரெண்டு வருஷத்துல அவங்க ட்ரான்ஸ்ஃபராகி போயிட்டாங்க. அப்புறம் நா அவங்கள பாக்கவே இல்ல. இங்க கிட்டத்துல ஒரு ஊர்லதான் இருக்கிறதா கேள்வி. போய் பாத்தாலும் நல்லம் போலிருக்கு.



இந்த கிளாஸ்ஸ அப்புடியே சுத்தி வந்து முன்னுக்கு நிக்கிறேன். க்ளாஸுக்கு முன்னுக்கு டீச்சர்ட நீட்ட பெஞ்சும், அதுக்குப் பின்னுக்கு சியாரும் இருக்கு. ஓரத்துல ப்ளக்போர்ட். நா வந்து டீச்சர்ட சியார்ல உக்காந்துக்கிறேன்... சௌகரியமா உக்காந்துக்கிறேன். ஸ்கூல்ல படிச்ச பத்து வருஷ காலத்துலயும், அதுக்குப் பிறகு கழிச்சிருக்கிற இருவது வருஷ காலத்துலயும் நா இந்த மாதிரி ஜம்முன்னு எதுலயும் உக்காந்ததில்ல. பாக்கப்போனா, ஸ்டூடன்ஸ் சியார் மாதிரிதான் இதுவும் இருக்கு. அதே மரத்தாலதான் இதயும் செஞ்சிருக்காங்க. ஆனா, இதுல வந்து உக்காந்தாலே ஏதோ குஷன் ஷோஃபாவுல உக்காந்த மாதிரி ஒரு ஃபீலிங்.

இதுமாதிரிதான் எல்லா டீச்சர்ஸும் நெனப்பாங்க போல இருக்கு. சின்ன புள்ளகளவிட தாங்க அறிவாலும், வயசாலும் ரொம்பவும் உயர்ந்தவங்கன்னு ஒரு அர்த்தமில்லாத பெருமிதத்த தாங்களாவே மனசுக்குள்ள கற்பிச்சிக் கொள்றாங்களே! எல்லா ஸ்டூடன்ஸும் தங்களுக்கு கீழ்படிஞ்சி நடக்கணும்னு அளவுக்கு மீறி எதிர்பார்க்கிறதும், பேனா பென்சில் கீழ வுழுந்தாக்கூட ஒரு மாணவன கூப்புட்டு அத மேசைல எடுத்து வெக்கச் சொல்ற அளவுக்கு கர்வத்த வளர்த்துக் கொள்றதும், தான் ஏதோ முக்கிய வேலைல இருக்கேன்னு பாவனப்படுத்தி அத ஸ்டூடன்ஸுக்கும், தங்களுக்கும் நிரூபிக்க முயல்றதும் அதனாலதான் சாத்தியமாகும் போலருக்கு.

இங்கிருந்து பாத்தா எல்லா வரிசையில உள்ள பெஞ்ச்களும் நல்லாத் தெரியுது. அது மாதிரிதான் அதுல உக்காந்திருக்கிறவங்களும், அவங்கட செய்கைகளும் தெளிவா தெரியும் போலருக்கு. இந்தா.. இந்த ஸீட்லதான் அர்ச்சனா உக்காந்திருப்பா. அவதான் எங்க மொனிடர். ரொம்ப ரஃப்பா இருப்பா. பின்னால இருந்து

பாத்தாக்கூட இவதான் அர்ச்சனான்னு தெரிவிக்கிற மாதிரி தனித்தன்மையோட இருப்பா. அவளோட நா படிச்ச காலத்துல அவ ஒரு முற கூட என்ன குறிப்பா, ஏறெடுத்துப் பார்த்ததா எனக்கு ஞாபகமில்ல.

நான் பின் ஸீட்டுல இருந்துட்டு அவளயே பாத்துட்டு இருப்பேன். வெள்ளையா, பளீர்ன்ன மொகத்தோட, ரெட்ட பின்னல் போட்டு அடியில ரிப்பன் பெருசா முடிஞ்சு வுட்டிருப்பா. அவதான் எங்க கிளாஸ்ல எப்பவுமே ஃபெர்ஸ்ட். தமிழ்த்தின விழா, மாணவர் மன்றம் ஏதும் நடந்துச்சுன்னா அதுல பேசி வெளுத்துக் கட்டிட்டு வருவா. நா அவ மேடையில நின்று கைய வீசி பேசுறதையே பாத்துட்டு இருப்பேன். அது ஸ்டேஜ்ல இருந்து இறங்கி வரும்போதோ, ஏதாவது ப்ரைஸ் வாங்கும்போதோ நா எப்பவுமே கை தட்டாம இருந்ததில்ல. அவட திறமை, கெட்டித்தனம் எதுவுமே என்ன அப்ப பாதிச்சதில்ல. பாக்கப்போனா அவட அழகால நா ஈர்க்கப்பட்டுருக்கிறேன். இப்பகூட அவள நினைகிற நேரத்துல அவட அழகுதான் முதல்ல நெனவுக்கு வருது. அவ இப்ப எப்படியிருக்காவோ? கல்யாணம் முடிச்சி புள்ள குட்டிகளும் இருக்கும்.

இப்ப, இந்த நிமிஷத்துல எனக்கு அர்ச்சனா எப்பவும் உக்காந்திருக்கிற பெஞ்ச்ல போய் உக்காந்து பாக்கணும்போல இருக்கு. போய் அந்த இடத்துல உக்காந்து கொள்றேன். திடீர்னு இருவது வருஷத்துக்கு முன்னால அர்ச்சனாட இடம் இதுங்கிற நினைவு வரது. இப்ப இதுல யார் இருக்கிறாவோ? என் பைத்தியக் காரத்தனத்த நெனச்சி சிரிப்பா வரது. வாய்விட்டு சிரிக்கணும் போல இருக்கு. நல்லா சிரிக்கிறேன்.

அப்படியே ஸ்கூல் பில்டிங்க சுத்தி மறுபக்கத்தால வாரேன். நாங்கள்ளாம் ஏறி விளையாடுற அரலி மரம் இதுதான். இன்னும் அப்படியேதான் இருக்கு. கீழே நிறைய பூக்கள் விழுந்து கெடக்கு. மரத்தில ஒரு கிளையை எட்டிப்பிடிச்சு அதுல வெள்ளைக்கொத்தா தொங்கற பூக்கள பிக்கிறேன். எல்லாத்தையும் ஷேர்ட் பொக்கட்ல போட்டுட்டு ஒன்ன மட்டும் கைல எடுத்துக்கிறேன். அப்படியே சுத்தி கேட்டுக்கிட்ட வந்துட்டேன். கேட்டைத் திறந்து வெளியே வந்து திரும்பவும் கேட்டை கவனமா மூடிட்டு நடக்கிறேன். இருபது வருஷத்துக்கு முன்னால ஸ்கூலுக்கு புத்தகங்களைத் தூக்கிட்டு வந்து, திரும்பிப் போகற மாதிரியே இப்பவும் ஒரு உணர்வு. அதுல உண்மை இருக்கு. ஏன்னா, அப்போ ஸ்கூலுக்கு வர்ரபோதும் நா ஏன் ஸ்கூலுக்கு வர்ரேன்னு எனக்குத் தெரியல்ல; இப்பவும்தெரியல்ல.

மண்ரோடால நடந்து வந்து, வளைவில திரும்பி மெயின் ரோடுக்கு வரேன். ஒவ்வொரு வீடா ரெண்டு சைட்ல உள்ள வீடுகளையும் நிதானமா பாத்துகிட்டே நடக்குறேன். இந்தா இதுதான் கணேசன் வீடு. இது முகுந்தன் வீடு. இது... பைசர் வீடு. இதுதான் செல்வி வீடு. எல்லா வீடும் அப்ப மாதிரியேதான் இப்பவும் இருக்கு. ஆனா அதே ஆக்கள் இப்ப இல்ல. அந்தா அந்த வீட்டுல எங்கயோ பாத்தமாதிரி இருக்கு. தலையில முக்காட நல்லா இழுத்துவிட்டுக்கிட்டு கையில ஒரு மணிமாலைய வெச்சிகிட்டு அவங்க ஏதோ முணுமுணுத்திட்டிருக்காங்க. இடைக்கிடை முன்னாலே முத்தத்தில விளையாடற சின்னப்புள்ளைகளை பாத்து ஏதோ சொல்றாங்க. அது பைசர்ட உம்மாதான். எனக்கு நல்லா தெரியுது. இப்பவும் நல்ல தேஜசா இருக்கு அவங்க முகம். அவங்க நா ஓரத்தால போய்க்கிட்டிருக்கிறதையே கவனிச்சதா தெரியல. ஒருவேள, ஒழுங்கா தலைக்கு எண்ணெய் வச்சு தலை வாரிக்காத... ஷேர்ட் பட்டன ஒழுங்ககா போடாத...

அழுக்கு சாரத்தை காடையன்போல மடிச்சிக் கட்டிகிட்டு போற இவனயெல்லாம் நாம ஏன் பாக்கணும்னு நெனக்கிறாங்க போலிருக்கு. நா பேசாம நடக்குறேன்.

இந்தா இது காஷ்மீர் ஹோட்டல். இப்ப இது பெரிசானாப்பல இருக்கு. உள்ள பெரிய குரல்ல ரேடியோ படிக்குது. தாஜ்மஹால் ஸ்டோர்ஸ் இது. இது சந்தியா டீ ரூம். எல்லாமே அப்படியே இருக்கு. ஆனா தெரிஞ்ச முகமா எதுவுமில்ல. இந்த இது அப்பு கடை அந்தக் காலத்திலிருந்தே எனக்கு இந்தக் கடையோட தொடர்பு உண்டு. ஒருவிதமான பாசமும் உண்டு. உள்ளயிருந்து யாரோ வர்றமாதிரி இருக்கு. தெளிவா தெரியல்ல. இப்போ கிட்ட வந்துட்டா. அடே.. நம்ம சின்னப்புதான். அப்ப எப்படி இடுப்பில வேட்டியும், நெத்தியில பளீர்னு விபூதியுமா இருப்பாரோ அதே மாதிரிதான் இப்பவும் இருக்காது. ஆனா தலைமுடி லேசா நரைச்சிருக்கு. என்னக் கண்டதும் அடையாளம் கண்டுட்டாரு. பளிச்னு... வெள்ளையா... ஸ்நேகபூர்வமா சிரிக்கிறார். இந்த சிரிப்புதான் அந்தக் காலத்துலேயே அவர் கடையில என்ன இழுத்து சாப்பிட வக்கிற அளவுக்கு சக்தியுடையதா இருந்திச்சி. இப்போ அதே சக்தியில மீதிதான் என்ன இங்க கூட்கிட்டு வந்திருக்குன்னு நெனக்கிறேன்.

"ஓ.. வா வா ராமு.. உள்ள வா!"

கடை முன் பெஞ்ச்ல இருந்து பேப்பர் படிச்சிட்டிருந்தரெண்டு பேரும், உள்ள சாப்பிட்டுக்கிட்டிருந்த ஒருத்தரும் என்னத் திரும்பி பாக்குறாங்க. நா உள்ளே போறேன்.

"என்னா.. ரொம்ப காலத்துக்குப் பிறகு.."



"சும்மாதான். அதுசரி அப்பு. சாப்பிட ஏதாவது இருக்கா.."

"ஓ.. தோசை.. வடை, இட்லி.. இன்னம்.."

"எனக்கு மூணு தோச தாங்க.."

நா மேஜையில போய் உக்காந்ததும், அப்பு வந்து மேஜைய துடைச்சி விடுறார் தண்ணியும், இலையும் கொண்டு வந்து வெக்கிறார். இலையில நா லேசா தண்ணி தெளிச்சுக்கிறேன். அவர் தோசையும், சாம்பாரும் கொண்ணாந்து வெக்கிறார். தோசைய ஒவ்வொண்ணா பிச்சி, சாம்பார்ல தொட்டு, விள்ளல் விள்ளலா வாயில போட்டுக்கறேன். சாப்பிட ஆரம்பிச்சதும்தான் நா ரொம்பவும் பசியோட இருந்திருக்கேன்னு புரியுது. அதே பழைய ருசியோட தோச டேஸ்ட்டா இருக்கு. சாப்பிட்டுட்டு வந்து முன்னால உள்ள குப்பக் கூடையில இலைய போட்டுட்டு மேல தொங்கிட்டிருக்கிற வாழக்குலையில பழம் ஒன்னப் பிச்சி தோல உரிச்சி கடிக்கிறேன். கணக்கா சல்லியக் குடுத்திட்டு பிரிஸ்டல் சிகரட் ஒண்ணு வாங்கிட்டு, மிச்ச சல்லிய பொக்கட்ல போடுறேன். அங்கயிருக்கிற சின்ன லாம்புல சிகரட்ட பத்திகிட்டு போய் பெஞ்ச்ல உக்காந்துக்கறேன். இதுல முந்தி உக்காந்திருந்த ஒரு ஆள் இப்ப போயிருச்சி போலிருக்கு.

"ஏன் ராமு, இந்தப் பக்கம் ஏதும் வேலையா.."

அவரு இப்பதான் என்னோட நெருக்கமாவே பேச ஆரம்பிச்சிருக்காருன்றது எனக்குப் புரியுது. அவர்ட நாசுக்கும், இந்த நேரத்துக்கு பொருத்தமாயிருப்பதா எனக்குப் படுது.

"இல்ல... சும்மா எங்க ஸ்கூலையும், ஊரையும் பாத்துட்டுப் போகலாம்னு நெனச்சேன்.. அதான்.."

"ஓ!" அப்பு சிரிக்கிறாரு. "அப்ப ஒனக்கு ஊரையும், ஸ்கூலையும் இன்னும் மறக்கல்லன்னு சொல்லு.. அதுசரி, ஊர் எப்புடியிருக்கு..?

"முந்தி மாதிரிதான்! ஆக்கள் புதுசா இருக்கு.."

"ஆமாமா.. காலம் மாறினா எல்லாம் மாறத்தான் செய்யும். இப்ப நீகூட என்ன.. அப்ப மாதிரியா இருக்க?

நா சிரிக்கிறேன்.

"அதுசரி இப்ப எப்படியிருக்கே... தனியாளா? குடும்பமா?"

"இப்ப தனியத்தான்.."

அப்பு ஏன் என்ன தனியாளான்னு கேக்குறார். என்னப்பாத்தா இன்னும் தனிய இருக்கிற சின்னப்பையன் மாதிரிதான் இருக்கோ...? இல்லையே! எனக்குத்தான் முப்பத்தஞ்சு வயசுக்கு மேலாவுதே! ஒருவேளை, இவன் கெட்ட கேட்டுக்கு இவனுக்கு ஒரு குடும்பமான்னு நெனக்கிறாரோ..?"

அப்புறம் ரொம்ப நேரம் நானும், அப்புவும் பேசிட்டிருந்தோம். இந்த ஊரப்பத்தி, என் தொழில் பத்தி, அவர் வியாபாரம் பத்தி, கிட்டத்துல நடந்த பெரிய எக்ஸிடன்ட் பத்தி, போன மாசம் பிள்ளையார் கோவிலி ல் நடந்த திருவிழா பத்தி..!

★ ★ ★

இப்ப நா எங்க போய்க்கொண்டிருக்கேன்னு தெரியுமா? சொன்னா நம்பமாட்டீங்க! ஏன் எனக்குக்கூட நம்ப முடியல. நா இப்ப என்னுடைய அந்தக்கால இங்லீஷ் டீச்சர் வீட்டுக்கு - மிஸ் நிர்மலா நடராஜன் வீட்டுக்கு - போய்க்கிட்டிருக்கேன். நேத்து அப்புவோட சும்மா பேசிட்டிருந்தேன் இல்லியா? அப்ப திடீர்னு நம்ம டீச்சரோட பேச்சு வந்தது. அப்போ அவர் டீச்சர் இருக்கிற எடத்த சொன்னாரு. எப்பா வலையில மெயின்ரோடோட ஒட்டினாப்பலபோற மண்ரோடுல போய் வளைவுல திரும்புனா முதல்ல வர்ற வூடே டீச்சருடையதுதான்னு சொன்னாரு. அப்ப அத சாதாரணமாத்தான் கேட்டுட்டிருந்தேன். இன்னிக்கு காலைலதான் திடீர்னு டீச்சர போய் பாத்தா என்னன்னு பட்டிச்சு. கௌம்பிட்டேன்.



பஸ்ஸில இருந்து இறங்கி நேர நடந்துட்டே வரேன். ஊரப் பாத்தா ரொம்ப சுறுசுறுப்பா தெரியுது. அதனால, இது என் ஊரவிட நல்லாயிருக்கிறாப்பல எனக்குப் படுது. நீளமா போகப்போக அமைதியா மாறிட்ட மாதிரி இருக்கு. கடைகள்ளாம் கொறஞ்சி ஒன்னு ரெண்டு வீடுகள் மட்டும் தெரியுது. ஒரு வூட்டு முன்னால பெரிய மாமரம். அதுக்குக் கீழ நெல்லு காயப் போட்டிருக்கு. ஒரு சின்னக் குட்டி, ஒரு பதினஞ்சு வயசு இருக்கும். பக்கத்துல ஒரு பெஞ்ச் போட்டு அதுல உக்காந்திட்டிருக்கா. கையில ஏதோ புத்தகம் வச்சிருக்கா. புத்தகத்த படிக்கிறதும், அப்புறம் இடையில திரும்பி நெல்ல பாக்கிறதுமா இருக்கா, காக்கை, கோழி கொத்தாம நெல்ல காவல் காக்குறா போலருக்கு.

இப்ப எனக்கு திடீர்னு என் அக்காவுடைய நெனப்பு வருது. அவகூட இப்படித்தான் ஒரே புத்தகமும் கையுமா இருப்பா. அவ ரொம்ப இன்ட்ரஸ்ட்டா புக் படிச்சிட்டிருந்த நேரம், போற போக்குல அத அவ கையில இருந்து பறிச்சி வீசிடுவேன். அவ ரொம்ப லேசாத்தான் புத்தகத்த பிடிச்சிட்டிருப்பா போலருக்கு. நா எப்ப இழுத்தாலும் அது கீழ வந்து வுழுந்துரும். அதுல ஜோக்

என்னன்னா, அவ த்ரில்லான கட்டத்த படிச்சிட்டிருக்கும்போதுதான் நா எப்பவுமே அந்த வேலய செய்வேன். அது வள்ளுன்னு கத்திகிட்டு ஓடிவந்து என்னத் திட்டிகிட்டே வந்து பொறக்கும். இப்பிடிதான் அவ ரேடியோ கேக்குற நேரம், எழுதுற நேரம், தைக்கிற நேரம் எல்லாம் ஏதாவது பெரளி பண்ணிட்டு ஓடிருவேன். ஒருநாளாவது அவ என்னால சிரிச்சதா எனக்கு ஞாபகமில்ல. ஆனா, நா எதுக்காவது அப்பாகிட்ட மாட்டிகிட்டேன்னா அவதான் ஓடிவந்து காப்பாத்துவா. ஆனாலும் நா அவளுக்கு செய்யுறத செய்யத்தான் செய்வேன்.

இப்ப அவ எங்க இருக்கிறான்னு எனக்குத் தெரியாது. அவ கல்யாணத்துக்குப் பிறகு நா அவள பாக்கவே இல்ல. என் மச்சானுக்கு ஊரு பொலனறுவைக்குப் பக்கத்துல. அதனால அவ அங்கதான் இருக்கனும். இப்ப எத்தனை புள்ளைகளோட இருக்காவோ தெரியல்ல.

இப்ப பதினோரு மணியிருக்கும் போல இருக்கு. கீழவுழுற வெய்யில்ல அது தெரியுது. இந்தா இப்ப நா மண்வளைவுக்கு வந்துட்டேன். திரும்புறவுடனேயே அந்த அழகான சின்ன வீடு மொதல்ல தெரியுது. வெளிய வேலி யோரத்துல நிறைய குரோட்டன்ஸ். கீழ சின்ன ஜாடிகுள்ள என்னென்னமோ பூக்கள் பூத்திருக்கு. முன் கதவு ரெட்டைக் கதவுல ஒன்னு தெறந்திருக்கு. கேட்ட மெதுவா தொறந்துகிட்டு வாசல்கிட்ட போய் நின்னு உள்ள பாக்குறேன். முன் ஹால்ல நாலஞ்சு ஸோஃபா. நடுவுல சின்ன மேஜை. பின்னுக்கு இன்னொரு பெரிய மேஜை. சுத்திவர சுவத்து உள்ள ஃபோட்டோக்கள். யாரும் ஊசாட்டம் இல்ல. கதவத் தட்டுவோமான்னு யோசிக்கிறேன். திடீர்னு அந்தப் பெரிய மேஜைக்குக் கீழயிருந்து ஒரு சின்னப்புள்ள, ஒரு மூணு வயசு, உள்ள ஓடுது. இப்பதான் புரியுது, அது மேஜைக்குக்கீழ ஒக்காந்து வெளயாடிட்டு இருந்திருக்கு. என்னக் கண்டவுடனே ஓடுது.



உள்ள போன புள்ள இப்ப ஒரு ஆளோட திரும்பி வருது. அவர் வெறும் பெனியனோடயும், சாரத்தோடயும் இருக்கரு. கைய ஒரு துண்டுல தொடச்சிட்டிருந்தார். உள்ள சமைச்சிட்டிருந்தாரோ என்னமோ? என்னப் பாத்து "என்ன?"ன்னு கேக்குறாரு. குரல்லயே இவரு பெரிய சிடுமூஞ்சின்னு புரியுது.

"இதுதானே மிஸ் நிர்மலா நடராஜன் வீடு?"

அவங்க பேரு எனக்கு சரியாத் தெரியலன்னு இப்பதான் எனக்குப் படுது. இப்ப அவங்க மிஸிஸ்ஸாக இருக்கணும். அப்படின்னா நடராஜனுக்கு பதிலா என்ன சொல்றது?

"ஓ... அதுக்கென்ன?"

"நா அவங்கள கொஞ்சம் பாக்கணும்..."

"இப்ப அவங்க வெளிய போயிருக்காங்க... ஏன்...?"

"இல்ல... நா அவங்க ஸ்டூடன்ட்... அதுதான்..."

எனக்கு அவங்ககிட்ட படிச்ச இங்லீஷ் இன்னும் மறக்கலன்னு காட்ட ஆசையா இருக்கு.

"ஆஹாம்... அவங்க இப்ப பேங்குக்கு போயிட்டாங்க..."

நா திரும்பி வெளிய வாறேன். கேட்டுகிட்ட திரும்பறப்போ, அவர் வாசல்கிட்ட வந்து நின்னு என்ன பாக்குறது தெரியுது. பிறகு கதவை சாத்திட்டு போயிடுறாரு.

நா இப்பதான் பழைய மனுஷனா மாறியிருக்கிறதா எனக்குப் படுது. இவ்வளவு நேரமும் டீச்சர் வீட்டு வாசல்ல போய் நிக்கிறவரைக்கும் டீச்சர பாத்தாலும் ஒண்ணு,

பாக்காட்டியும் ஒண்ணுங்கிற ஒரு மெதப்புலதான் இருந்தேன். ஆனா, இப்ப அந்த ஆள், அவர் டீச்சர் கணவனோ, யாரோ என் மூஞ்சில அடிக்கிற மாதிரி கதவை சாத்திட்டு போற இந்த நேரம், நா டீச்சர பார்த்தே தீரணும்ன்ற மாதிரி ஒரு ஆவேசம். அவங்க இருந்தா இப்படி என்ன வெரட்டற மாதிரி பேசி அனுப்பியிருக்க மாட்டாங்க. எப்புடியாவது என்ன அடையாளம் கண்டு அன்பா பேசியிருப்பாங்க. அந்த ஆளுக்கு என்ன தெரியும்? டீச்சரப்பத்தி அவரவிட அதிகமா எனக்குத்தான் தெரியும்னு அவருக்குத் தெரியுமா?

நா கழுத்துல சுத்திகட்டியிருந்த லேஞ்சி பறந்துபோய் கீழ விழுது. குனிஞ்சி எடுக்கையில அது ரொம்பவே அழுக்காயிருப்பது தெரியுது. என் ஷேர்ட்டும், சாரமும் கூட அழுக்காயிருக்கிறதா எனக்குப் படுது. அதுவும் சிவப்பு நெறத்துல சேட்டும், பெரிய கறுப்பு போர்டர் போட்ட சாரமும் உடுத்திருக்கேன். காடையன்போல ட்ரஸ் பண்ணிட்டு தலைவாராமல் நிற்கிற என்ன டீச்சர்ட பழைய மாணவன்னு ஒத்துக்கொள்ள அவரால முடியலயோ என்னவோ? ஒருவேள, டீச்சர பாக்கணும்னு சொல்லிட்டு யாரும் கள்ளன் வீட்ட நோட் பண்ண வந்திருக்கான்னு நெனச்சாரோ என்னவோ?

இப்ப டீச்சர் என்ன கண்டிருந்தா என்ன எப்புடி ஒத்துகிட்டிருப்பாங்கன்னு யோசன வருது. அவங்ககூட மூஞ்சில அடிக்கிற மாதிரிதான் பேசியிருப்பாங்க. அது அவங்க குத்தம் இல்ல. தனக்கு மறந்துபோன ஒரு ஒரு பழைய மாணவனாயிருந்தாலும், அவன் தன்ன ஒரு மாணவன்னு நிரூபிக்கிற விதத்துல அவங்க முன்னால நிக்கணும்னு எந்த டீச்சரும் நெனக்கத்தான் செய்வாங்க. இப்ப எனக்கு டீச்சரை நா பாக்குறதவிட பாக்காம இருக்கிறதுதான் நல்லதுன்னு படுது.



திடீர்னு என்ன விட்டு எல்லோரும் விலகி ஓடிப்போயிட்ட மாதிரி எனக்கு ஒரு உணர்ச்சி. பக்கத்துல உள்ள மரங்கள், மேல எரியற சூரியன், வானத்துல பறக்கிற குருவிகள் எல்லாமே கொஞ்சங் கொஞ்சமா சின்னதாகி... சின்னதாகி... சின்னபுள்ளியாகி... காணாமல் போயிடுச்சி. திடீர்னு எனக்கு முன்னால என் அக்கா கையில சின்னக் குழந்தையோட விஸ்வரூபமா, ஆவேசமா வந்து நிக்குறா. என் விரிஞ்ச கண்ணுல அவ உருவம் மட்டும்தான் பெரிசா தெரியுத. அவ கத்துறா... "டேய்... என்னமோ பெரிய ஆளுன்னு நெனச்சிட்டு எங்கள வுட்டுட்டு ஓடினியே... ஒனக்கு வேணும்டா...!"

அப்புறம் அவ உருவம் மறைஞ்சு போகுது. அந்த எடத்துல, ரோகிணி - எம் பொண்டாட்டி - வந்து நிக்கிறா. வக்ரமா, குரோதமா என்ன மொறைச்சிப் பாக்குறா. இப்ப நா அவள மிஞ்சிப் போறேன். நா பாத்த பார்வையில அவ அப்படியே உருகி, கரைச்சி, எரிஞ்சிப் போயிடறா.

எனக்கு காலெல்லாம் தள்ளாடுது. அப்புடியே கீழ வுழுந்துடுவனோன்னு பயமா இருக்கு. ரோட்டவுட்டு எறங்கிப் போய் அந்தப் பெரிய ஆலமரத்துக்குகீழ உக்காந்துக்குறேன். சில்லுன்னு இருக்கு. மரத்து இலைகள்ள உள்ள இடைவெளி வழியா வெயில் நிலத்துல கோடாவிழுது. கண்ண மூடிக்கிறேன்.

அக்காவுக்காவுது என்ன ஏச உரிமை இருக்கு. அவள நா அந்தப்பாடு படுத்தியிருக்கேன். ஆனா, ரோகிணி...! அவளுக்கு என்ன நிமிர்ந்து பாக்கக்கூட யோக்யதை கெடையாது. என்ன வுட்டுட்டு ஓடினவதானே அவ...?

அக்கா என்னோட எவ்வளவோ பாசமாயிருந்தா. நா அத புரிஞ்சிக்கல்ல. நா எவ்வளவோ ஆசையா ரோகிணிய கட்டிக்கிட்டேன். அவ அத புரிஞ்சிக்கல்ல. அக்கா ரொம்ப

பாசமாயிருந்தாலும் எனக்கு அவளோட அன்பில்ல, அதே நேரம், என் ரோகிணி என்ன எவ்வளோதான் வெறுத்தாலும் அவளோட எனக்கு கோவமில்ல.

நா எத்தன பெரிய துரதிஷ்டசாலியா இருந்திருக்கேன்னு இப்ப எனக்குப் புரியுது. ரொம்ப அலட்சியமா, பெரிய மனுஷத்தனமா எல்லாரையும் ஒதுக்கின மாதிரி நா என்னயே அலட்சியப்படுத்தியிருக்கேன். அன்பை ஒத்துக்கொள்ள முடியாமலும், அன்பை இன்னொருத்தருக்கு கொடுக்க முடியாமலும்... ஓ!

திடீர்னு பலமாக காத்து வீசுறமாதிரி இருக்கு. சூரியன் அப்புடியே மறைஞ்சி போயி முன்னால லேசா மப்பும் மந்தாரமுமா இருக்கு. இப்ப எனக்கு லோரா வீடு ஞாபகம் வருது. அங்க ஒரு கிளாஸ் அடிச்சக்கூட முழு நாளைக்கும் போதும்.

எழுந்து நடக்கிறேன். புதுசா காத்து வீசுற மாதிரி இருக்கு. லேசா விசிலடிச்சிக்கிறேன். யார் என்னதான் சொன்னாலும் என்னுடைய கருத்துலயிருந்து நா மாறப்போறதில்ல. என் வரைக்கும் வாழ்க்கைங்கிறது...

## புதியதோர் சாந்தி பிறந்ததடி!

ஏதோ சிந்தனை வசப்பட்டு வந்ததில் காலில் கதிரை இடறியது. பயங்கர வலி. தாள முடியாமல் கால் சுண்டு விரலைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்தபோது நெஞ்சில் கீறலாய் இன்னொரு வலி.

இப்போதெல்லாம் அடிக்கடி இந்த நெஞ்சுவலி வருகிறது. தினம் தினம் அடுப்பருகே உட்கார்ந்து ஆப்பம் சுட்டும், மாலை தோறும் மாவிடித்தும் ஓடாகத் தேய்ந்தால நெஞ்சுவலி வராதா பின்னே?

மணியைப் பார்த்தாள். நாலு! ஐந்து மணிக்கு நர்கீஸ் வந்து விடுவாள். இன்றைக்கென்னமோ வழக்கம்போல் மாவிடிப்பதற்கு அலுப்பாக இருக்கிறது. "சீ" என்று இருக்கிறது. எந்த நாளுந்தான் மாவிடிக்கிறேன்; ஆப்பம் சுடுகிறேன்; மிஞ்சினது என்ன?

மெதுவாக எழுந்து கதிரையில் அமர்ந்தாள். கால் விரலைத் தேய்த்து விட்டுக் கொண்டாள். வலி அதிகரிக்க, கண்ணீர் வந்தது. மேஜைமீது கிடந்த வெளிநாட்டுக் கடித உறையில் பார்வை பதிந்தது. மகனிடமிருந்து வந்த லெட்டர்! இரண்டு வாரங்களுக்கு முன்பு வந்தது. முன்பெல்லாம் உடனுக்குடன் மளமளவென்று பதில்

எழுதி அனுப்பிவிடுவாள். இப்போது என்னவோ மனசு சரியில்லை. எழுதவே கை வரமாட்டேன் என்கிறது. குழப்பமாக இருக்கிறது. மகன் என்ன நினைக்கிறானோ?

இருபது வயது இளந்தாரி இர்ஸாத்! நெடுநெடுவென்ற உயரம். வாப்பாவைப்போல் சிவந்த நிறம். ஆனால், வாப்பாவின் தீய குணங்கள் எதுவும் இல்லாத தங்க மகன். இல்லாவிட்டால் இந்தச் சின்ன வயசில், படிப்பில் படு சுட்டியான அவன் படிப்பை உதறிவிட்டு வெளிநாட்டுக்கு உழைக்கப் போவானா? தங்கையின் திருமணத்துக்காக இப்போதே பணம் சேர்ப்பானா?

அவனுக்கு எப்படி இதைப் புரியவைப்பது? எப்படி எழுதுவது? குழம்பினாள். மீண்டும் அதே நெஞ்சு வலி! மார்பை இலேசாகத் தேய்த்துவிட்டுக் கொண்டாள். மேஜை ஓரத்தில் இருந்த தேநீர் கோப்பையில் ஈமொய்த்துக் கொண்டிருந்தது. விரட்டி விட்டாள். கோப்பை மேற்பரப்பில் ஒட்டிக்கிடந்த நீர்த்துளிகளைத் தொட்டு விரல கோலமிட்டது.

கோப்பையை அருகே எடுத்துப் பார்த்தாள். அடியில் சிறிதளவு தேநீர் மிஞ்சிக் கிடந்தது. மெல்லிசாய் புன்னகை அரும்பிற்று. நான் குடிக்கத்தான் விட்டு வைத்தாரோ? முகத்தில் நாணம் படர உதட்டருகே கொண்டு சென்றாள். அவர் எச்சிலாக்கிச் சென்ற தேநீரை, கடைசிச் சொட்டும் இல்லாமல் உறிஞ்சிவிட வேண்டும்போல் ஒரு சிறுபிள்ளைத்தனமான ஆசை எழுந்தது. கூடவே ஏதோ ஒன்று தடுத்தது. மீண்டும் அதை மேஜை மீது வைத்தாள்.

"என்ன சொல்றீங்க மெஹருன்...? ஒங்கட பதிலுக்காக நா இன்னமும் காததிருக்கேன்..."

காதருகே அவர் குரல் கிசுகிசுத்தது. இதயம் படபடத்தது. எத்தனை நீளமான காத்திருப்பு இது? கணவன் வாகன விபத்தில் இறந்துபோன சோகத்திலிருந்து மெல்ல மெல்லத் தேறி மீண்டுகொண்டிருந்த சில மாதங்களில் கேட்கப்பட்ட இக்கேள்வி ஒன்பது வருடங்களின் பின்பு மீண்டும் அதே தெளிவோடு சிறிதும் பிசிறின்றி அவள் முன் வைக்கப்பட்டுள்ளது. கறுப்பு பிரேம் போட்ட கண்ணாடியினூடு பளபளத்த இரு விழிகளின் கெஞ்சலோடு!



சென்ற வாரத்தில் ஒருநாள் கையில் ஐந்து ரூபாய்க்கு வழியின்றி என்ன செய்வதென்று தெரியாமல் அடுத்த தெருவில வசிக்கும் தோழி சிவகாமியிடம் நூறு ரூபாய் கடன்வாங்கிக் கொண்டு கால்கடுக்க நடந்து வந்து கொண்டிருந்தபோது, சற்றும் எதிர்பாராது சாலையோரத்தில் பிரேக் போட்டு நின்ற மோட்டார் பைக்கிலிருந்து இறங்கிய அவரைக் கண்டபோது அவள் திகைத்துப் போனாள். கைகள் முக்காட்டை இழுத்துவிட்டுக் கொண்டன. அவர் மோட்டார் பைக்கை தள்ளிக்கொண்டு வந்து அருகே நின்ற மரத்தடியில் நிறுத்தினார். கடைசியாக ஒன்பது வருடங்களுக்கு முன்பு கண்டிருந்தபோதும், அவரை சட்டென தான் இப்போது அடையாளம் கண்டுகொண்டது அவளுக்கே வியப்பாக இருந்தது.

"எங்க போயிட்டு வாரீங்க...?"

"சிவகாமி வூட்டுக்கு..." வார்த்தை கஷ்டப்பட்டு வந்தது.

"ஏன்...?"

ஒரு கணம் என்ன சொல்வதென்று புரியாமல் தவித்தாள் அவள். அவரிடம் பொய் சொல்ல விரும்பவில்லை மனது.

"ஒரு நூறு ரூபா வாங்கப் போனேன்..."

அவர் நேராக அவள் கண்களுக்குள் ஊடுருவிப் பார்த்தார். ட்ரவ்ஸர் பொக்கட்டிலிருந்த மனிபர்ஸை இழுத்தெடுத்தவர் பின்பு ஏதோ நினைத்துக்கொண்டவராய் உள்ளே தள்ளினார்.

“ஒங்ககிட்ட நா கேட்ட கேள்விக்கு ஏன் இன்னமும் பதிலே இல்ல...?”

அவள் விழிகள் அகல விரிந்தன. நெஞ்சின் உள் ஆழத்தில் இத்தனை காலமும் தெளிவின்றி ஒலித்துக் கொண்டிருந்த ஒரு குரல் இப்போது துல்லியமாக காதருகே...!

“என்ன, மறந்துட்டீங்களா நா கேட்டத. ஒன்பது வருஷமாச்சு, எனக்கு மறக்கல்ல...”

அவள் எச்சிலை கூட்டி விழுங்கிக்கொண்டு “இல்லை” என்று தலையசைத்தாள். அவர் முகம் சற்று தீவிரமானது. பைக் அருகே சென்றார்.

“அப்ப யோசிச்சி சொல்லுங்க...”

சில கணங்களில் பைக் விர்ரென்று சென்று மறைந்தது. அவள் நெஞ்சு கொள்ளாத தவிப்போடு வீடு வந்து சேர்ந்தாள்.

அடுக்களை வாசல்வழியே ஒரு நாய் எட்டிப் பார்த்தது. “சீ பல்லா” என்றபடி அதை விரட்ட எழுந்து ஓடினாள். நாயை விரட்டி கதவை மூடிவிட்டுத் திரும்புகையில் அடுப்போரமாக தேநீர் தயாரித்த பாத்திரங்கள் அலங்கோலமாகக் கிடப்பது தெரிந்தது. கேத்தலில் நீர் கொதித்துக்கொண்டிருந்தது. கொஞ்சம் ப்ளேன்டி தயாரித்துக் கொண்டு பலகைக் கட்டிலில் அமர்ந்து கொண்டாள். அருகேயிருந்த தகர டின்னிலிருந்து ஒரு கருப்பட்டித் துண்டை எடுத்துக் கடித்தபடி



பிளேன்டியைக் குடித்து முடித்தாள். வீட்டில் பால்மா, சீனி அவர்கள் உபயோகிப்பதில்லை. அரைக்கிலோ சீனியும், ஒரு பெக்கற்று லக்ஸ்ரேயும் மாதம் ஒருமுறை வாங்குவாள். அது வீட்டுக்கு வரும் விருந்தாளிகளுக்கு மட்டும்! மாதம் முடிந்து ஏதும் மிஞ்சினால்தான் அவளும், பிள்ளைகளுக்கும் எப்போதாவது ஒரு டீ குடிப்பார்கள்.

சிவகாமி, தாத்தா, மச்சான் எல்லாரும் இந்த விவகாரம் பற்றி அறிந்தால் என்ன சொல்வார்களோ என்ற பயம் திடுமென எழுந்தது. குழந்தைகள் சின்னஞ்சிறியவர்களாய் இருந்தபோதே ஆதரித்து உதவியவர்கள் தாத்தாவும், மச்சானும். இன்று மூத்தவன் வெளிநாடு போவதற்கும், நர்கிஸ் எட்வான்ஸ் லெவல் சயன்ஸ் படிப்பதற்கும், இளையவன் ஓ.எல் படிப்பதற்கும் அவர்கள்தான் காரணம்.

தான் பார்த்து மணமுடித்து வைத்த மாப்பிள்ளை இத்தனை மோசமாக அமைந்துவிட்டதில் மச்சானுக்கு உள்ளூர நிறைய வருத்தம். அவனோடு அவள் வாழ்ந்த ஐந்து வருட வாழ்க்கையின் அவலம் எல்லாமே மச்சானுக்குத் தெரியும். அந்தக் குறுகுறுப்பு காரணமாகவோ, என்னவோ அவனது அகால மரணத்தின்பின் அவளது மறுமணத்தைப் பற்றி மச்சான் நிறைய வற்புறுத்தினார். குழந்தைகள் ரொம்பச் சின்னவர்களாக இருந்ததால் அவள் கண்டிப்பாக மறுத்துவிட்டாள். அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகி விட்டார்கள். இப்போது சில காலமாக அவளுள் ஒரு தனிமையுணர்வு தோன்ற ஆரம்பித்துள்ளது. பிள்ளைகள் எல்லாரும் வெளியே போனபின் மனது ஏனோ புலம்பித் தீர்க்கிறது; அலறி ஓய்கிறது!

நினைக்கையில் சில சமயம் வேடிக்கையாகக்கூட இருந்தது. குழந்தைகள் சின்னவர்களாக இருந்தபோது

எந்தத் துணையுமின்றி தனிமரமாக நின்ற நான் இன்று ஒரு துணையை நாடுவது சரியா? அப்படி நாடுவதற்கு என்ன நியாயம் உண்டு? ஊரெல்லாம் கூடி கிசுகிசுக்கும். என் பிள்ளைகளைப் பார்த்து கொல்லென்று சிரிக்கும். இந்த அவமானம் தேவைதானா?

"இத்தனை வருஷத்துக்குப் பெறகு மெஹருனுக்கு இளமை திரும்பியிருக்குடி..." என்று அக்கம் பக்கத்துப் பெண்கள் கிண்டல் பேசுவார்கள். சிவகாமி கூட ஏதாவது சொல்லுவாள்!

ஒரு காலத்தில் தனக்கு ஆசிரியராக இருந்தவரே இப்போது தன்னை ஏற்கப் போகிறார் என்கிற விஷயம் இன்னும் கொஞ்சம் ஊர் வாய்க்கு அவலாகும் என்பது தெளிவாகத் தெரிந்தது. அப்போதைய அவரது வாலிபத் தோற்றம் மனக்கண்ணில் தோன்றிற்று. அந்தச் சிறுவயதிலேயே - கன்னிப் பருவத்திலேயே அவரது பார்வையும், பேச்சும் தன்மீது அதி விசேஷத்துடன் படிவதை அவள் உணர்ந்திருக்கிறாள்.

"பாருடி! சேர் மெஹருன மட்டும்தான்டி பாத்து படிப்பிக்கிறார். எங்கள கண்டு கொள்ளவே இல்லையே..." என்ற தோழிகளின் கேலியில் சிக்கி, ஒரு புன்னகையை மட்டுமே எல்லாருக்கும்... அவருக்கும்கூட - விடையாக்கி மீண்ட அந்தப் பள்ளிப் பருவம், அன்று ஏற்பட்ட அந்த ஈர்ப்பு இன்றும் தொடர்வதை எண்ணி அவள் பெரிதும் வியப்படைந்தாள்.

கையில் கருப்பட்டித் துண்டொன்று எஞ்சி நின்றது. வாயிலிட்டுக் கொண்டாள். சீனி டின்னையும், பால்மா டின்னையும் இறுகமூடி உயரே வைத்தாள். தேநீர்ப் பாத்திரங்களை அலசிக் கழுவி கவிழ்த்து வைத்தாள். கேத்தலில் சிறிது தண்ணீர்விட்டு அடுப்பை எரிய விட்டாள். நர்கீஸுக்கு தேத்தண்ணி ஊத்தணும்!



நர்கீஸை நினைக்கும்போதுதான் அதிக பயம் வந்தது. இயல்பாகவே அவன் ஒரு சிடுமூஞ்சி. தனி ரகமானவன். சின்ன விஷயங்களுக்குக்கூட பெரிய அர்த்தம் வைத்துப் பேசுவான். அன்று ஒருநாள் யாரோ ஒரு ஆசிரியர் கேட்டாராம், "ஒனக்கு வேண்டிய புக்ஸ் எல்லாத்தையும் நா வேணும்னா கண்டியில இருந்து வாங்கிட்டு வந்து தரவா?" என்று. அதற்கே வீட்டுக்கு வந்து பொரிந்து தள்ளிவிட்டான். "நாங்க ஏழைதான். அதுக்காக யார்கிட்டேயும் அனுதாபம் காட்டுங்கன்னு நாங்க கெஞ்சலலயே...! எங்கள ஏம்மா இப்படி எல்லாருமே குத்திக் காட்டுறாங்க...?" என்று கண்கலங்கினான். அப்படியானவனிடம் எப்படி நான் முகம் கொடுப்பது? அவர் வந்ததையும், கேட்டதையும் எப்படிச் சொல்வது?

எதிரே இருந்த கண்ணாடியில் அவள் முகம் தெரிந்தது. ஏதோ ஒரு மலர்ச்சி தன் கண்களுக்குள் பரவி நிற்பதை அவளால் நன்கு உணர முடிந்தது. நெற்றியோரமாக நரைத்துக் கிடந்த தலைமயிர் அவளைப் பார்த்துச் சிரித்தது. மாவிடித்துக் களைத்துப்போன, நரம்புகள் வெளித்தள்ளிய தன் கைவிரல்களால் கூந்தலைக் கோதிவிட்டுக் கொண்டாள். அன்றொரு நாள், முன்வீட்டு வீடியோவில் பார்த்த 'முதல் மரியாதை' நினைவில் தோன்றியது.

படிக்கும் காலத்திலிருந்தே அவர் என்னைக் காதலித்திருப்பாரோ என்றொரு விசித்திரமான கேள்வி அவளுள் எழுந்தது. அவள் பாடசாலையிலிருந்து விலகியபோது, அவளிடம் தனியே வந்து, "ஒங்க கல்யாணத்துக்கு கட்டாயம் இன்விடேஷன் அனுப்பணும்" என்று அவர் சொன்னதும்... அதுபோலவே அவளது கல்யாணத்துக்கு மறக்காமல் வந்ததும்... அப்புறந்தான் அவர் மணமுடித்ததும்... வெகு சீக்கிரமே

அவர் மனைவி பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்டதும்... ஆறுதலுக்கென்று ஒரு குழந்தைகூட இன்றி அவர் தனிமரமாக நிற்பதும்...

அன்று சாதாரண பட்டதாரி ஆசிரியராக இருந்தபோது அவர் தன்னிடம் கேட்ட அதே கேள்வியையே இன்று பி.ஈ.யாக உயர்ந்து நிற்கும் நிலையிலும் அவர் கேட்டிருப்பதை பெருமிதத்துடன் எண்ணிப்பார்த்தாள் அவள். காலமாற்றத்தால் பாதிக்கப்படாது அவரது நெஞ்சின் ஆழத்தில் தொக்கி நின்றிருந்த அந்த எதிர்பார்ப்பு...!

இது காதலா...? காதல் இத்தனை வயதிலும் வருமா? நிஜமாக இதற்குப் பெயர் காதலா...? அல்லது ஒருவேளை அப்படித்தானோ...? அப்படித்தான் இருக்கவேண்டும் என்று மனசு விரும்பிற்று.

அவரோடு நான் சேர்வது சரியா? சாத்தியமா? என் பிள்ளைகள் என்ன சொல்வார்கள்.

நினைவலைகள் புரண்டு புரண்டு, ஓங்கி ஒலித்தது. ஆக்ரோஷித்து... அடங்கி... இதயம் களைத்துக் கிடந்தது. என்ன செய்வது? எப்படி மறப்பது? மறுத்துவிட்டால் மீண்டும் இதே தனிமை நிழலாக என்னைத் தொடருமே... என் பிள்ளைகள் எல்லாரும் ஒவ்வொரு வழியைப் பார்த்து போனபின்னால் நான் பைத்தியக்காரியாகி தனியே உட்கார்ந்திருக்கணுமே...!

சிலவேளை, தன் கணவன் வாழ்ந்த சில காலத்திலாவது தன்னோடு அன்பாக இருந்திருந்தால், இன்று இந்த உறவை நிர்த்தாட்சண்யமாக மறுத்திருக்கலாம் என்று அவளுக்குப் பட்டது. அந்த அன்பை நினைத்து நினைத்தே காலம் கழித்திருக்கலாம்; அந்த அன்புக்கு நன்றியாகவே



இந்தத் தனிமையை சகித்திருக்கலாம்... அந்த அதிர்ஷ்டம்கூட தனக்கு வாய்க்காத சோகத்தை அவள் எண்ணிப் பார்த்தாள்!

முன்வாசலில் அரவம் கேட்டது. திரும்பினாள். வியர்வையும், களைப்புமாக நர்கீஸ் உள்ளே வந்துகொண்டிருந்தான். மணி ஐந்து என்று கடிகாரம் காட்டியது.

மேஜையருகே வந்து நர்கீஸ் புத்தகங்களை வைத்தான். மேஜை மீது இருந்த தேனீர்க் கோப்பையின்மீது அவன் பார்வை பதிந்தது.

"யாரும்மா வந்தாங்க...?"

மெஹருன் உள்ளிருந்து மெதுவாக வெளியே வந்தாள். தேனீர்க் கோப்பையைக் கையிலெடுத்துக் கொண்டு திரும்பினாள். எச்சில் விழுங்குவதுகூட கஷ்டமாக இருந்தது. மிகுந்த சிரமத்துடன் முயற்சித்து "ஒன்ட சாச்சா வந்துட்டுப் போனார்..." என்றாள்!

★ சாச்சா : சிறிய தந்தை

# ஒரு தேவதைக் கனவு

விழக்கம் போலவே மனம் நிறைந்த சோர்வோடு விழிப்பு வந்தது மகேஷுக்கு. எப்போதும் அவன் முயன்று இத்தனை நேரத்தோடு எழுவதில்லை. தானாகவே விழிப்பு வந்துவிடும். வெளியே பறவைகளின் கதம்பஒலி கேட்டுக்கொண்டிருந்தது. கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான். இருள் முற்றாகப் பிரியாத விடிகாலைப் பொழுது; தெருவிளக்குகள் இன்னும் ஒளிர்ந்துகொண்டிருந்தன.

பெரிதாக கொட்டாவி விட்டபடி, சோம்பல் முறித்து நிமிர்ந்தபோதுதான் ஒரு நாளுமில்லாத விசேஷமாய் எதிர்வீடு திறந்திருப்பதைக் கண்டான். சிறிய முற்றத்தில் அழகாக மாக்கோலம் இடப்பட்டிருந்தது. வெளிர் பச்சை நிறத்தில் பாவாடை தாவணி அணிந்து, தழையப் பின்னிய கூந்தல் முன்னால் தொங்கிவிழ, அதை ஒரு கையால் ஒதுக்கிவிட்டபடி மறுகையால் லாகவமாக கோலமிட்டுக் கொண்டிருந்தாள் அந்தப் பெண். தளர்வான சுருண்ட கேசத்தின் மத்தியில் கீழே குனிந்திருந்த அவள் முகம் அந்த மெல்லிய ஒளியிலும், வீட்டுக்குள்ளிருந்து மங்கலாகப்



பரவிய விளக்கொளியிலும் பிரகாசிப்பது அவனுக்கு கரிய இருளில் பால்வண்ணமாக ஒளிவீசும் தெருக்கோடி விளக்கை ஞாபகப்படுத்திற்று.

அவள் தலைநிமிராமலேயே கோலமிட்டு முடித்து எழுந்து வீட்டினுள் செல்லும்போது மெல்லிசாக கொலுசு கிணு கிணுத்தது. அவனுக்கு இப்போதுதான் நினைவு வந்தது. நேற்றெல்லாம் சுதா சொல்லிக் கொண்டிருந்தாளே, ஹைஸ்கூலில் படிப்பை முடித்துவிட்டு தன் அக்கா நேற்று வரப்போவதாக. ஓ! வந்துவிட்டாள் போலிருக்கிறது.

தெருவில் சற்று தூரத்திலிருந்த குழாயில் முகேஷ் முகம் கழுவிக்கொண்டு வந்தபோது, வீட்டுக்குள் இருந்து தெளிவாகவும், தெளிவில்லாமலும் அந்த இனிய குரல் ஒலித்துக் கொண்டிருந்தது. ஞாபகங்களைத் தட்டில் பார்த்து, பாடசாலை நாட்களில் தான் படித்த அந்தப் பாடல் காரைக்கால் அம்மையாருடைய பாடல் என்று மிகுந்த சிரமத்துடன் அவன் கண்டுகொண்டான்.

அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்
இன்றும் திருவுருவம் காண்கிலேன்
என்றுந்தான் எவ்வுருவோ நும்பிரான் என்பார்க்கு
என்னுரைப்பேன்? எவ்வுருவோ நின்னுருவ மேது?

ஒரு நாளின் ஆரம்பப் பொழுதோடு, இன்று அவன சந்திக்க நேர்ந்த அந்த நிகழ்ச்சி அவனுள் ஓர் அமைதியான ஆனந்தத்தை ஏற்படுத்திற்று. கடைக்குள் நுழையும்போது, அதெப்படி பெரிய டவுனில் படிக்கப்போன இந்தப் பெண்ணிற்கு இத்தனை பக்தியும், சிரத்தையும் ஏற்பட்டதென்று சின்னத்தனமானதோர் ஆச்சர்யம் ஏற்பட்டது அவனுக்கு. அவளது பெயர் என்னவாக

இருக்குமென்று ஒரு கேள்வி எழுந்தது. பின்னர் ஏனோ திடுமென சுமார் அறுபது மைல்களுக்கப்பால் வாழ்கின்ற தன் தங்கைகளின் கவலை தோய்ந்த முகங்கள் நினைவில் வந்து போயின..

இரவு; மகேஷ் கேஷியரில் அமர்ந்து அன்றைய வியாபாரக் கணக்கு வழக்குகளைப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த டெக்ஸ்டைல்ஸின் ஒரு கதவு மட்டும் திறந்திருந்தது. வெளியே, மூடிய கதவோரமாக திண்ணையில் அவனிடம் எடுபிடி வேலை செய்யும் ராஜு தன் தோழியான சுதாவுடன் பேசிக்கொண்டிருந்தான்.

"ஒங்க அக்கா சொன்னிச்சு சுதா, காலையில எந்திரிச்சு, குளிச்சு சாமி கும்பிட்டு, கடை முழுக்க சாம்பிராணி பிடிச்சி கடவுள்கிட்ட வேண்டிகிட்டா நல்ல யாவாரம் நடக்குமாம்..?

"ஓ ராஜு... எங்க ரம்யா அக்கா அப்பிடித்தான்... நேரத்தோட எழும்பிடுவா... குளிச்சி, சாமி கும்புட்ட பின்னாலதான் படிப்பா... நல்லா படிப்பு வருமாம்..."

எழுதிக்கொண்டிருந்த மகேஷின் கரம் சட்டென நின்றது. ரம்யா! அந்தப் பெயர் மனசுள் மீண்டும் எதிரொலிப்பது போலிருந்தது. தலையை உயர்த்தி, திறந்திருந்த கதவு வழியே எதிர்வீட்டைப் பார்த்தான். டியூப் விளக்கொளி வீட்டு முன் ஹோலில் பரவி, வெளியே தெறிந்திருந்தது. ஆள் ஊசாட்டமின்றி வீடு அமைதியாக இருந்தது.

கொஞ்ச நேரத்திற்குப் பின் உள்ளே வந்த ராஜுவைப் பார்த்து, கடைக் கணக்கை முடித்து, தன் கேஸட்டில் பழைய பாடல் ஒன்றைக் கேட்டுக் கொண்டிருந்த மகேஷ், எங்கோ ஊன்றிப் பார்த்தபடி "ராஜு, நாளையிலயிருந்து



ஒரு சாம்பிராணி சட்டி வாங்கி கடைக்கு சாம்பிராணி போடு" என்று யோசனையாகச் சொன்னான்.

★ ★ ★

மகேஷின் சொந்த ஊர் கண்டி. ஆறுசகோதரிகளுக்கு இவன் தலைவன். பலவீனமாகிப்போன அப்பாவும், படுக்கையில் வீழ்ந்துவிட்ட அம்மாவும், பருவக் கனவுகளை நிதர்சனத் தீயில் எரித்தபடி வளைய வந்த தங்கைமார்களும், இளமையின் கடைசி எல்லையில் நிற்கும் இவன் உழைப்பையே எதிர்பார்க்க வேண்டிய நிலை. சில வருடங்களுக்கு முன்னால் மத்திய கிழக்கு நாட்டுக்குப்போய் அயராது உழைத்து வந்த பணத்தில், தன் இரு தமக்கைகளை கரையேற்றிவிட்டபின், இங்கு வந்து மிகுதிப் பணத்தை முதலீடு செய்து இந்த டெக்ஸ்டைல்ஸை ஆரம்பித்திருந்தான். மாதம் மூன்று முறை எப்படியும் வீடு சென்று தங்கைகளைப் பார்த்துவரத் தவறமாட்டான். வீட்டில் கழிக்கின்ற ஓரிரண்டு நாட்களில் மனநிறைவோடு இருந்துவிட்டு கடைக்குத் திரும்பும்போது பெரிய மனத்துயரோடும், கவலையோடும் வருவான். அவன் தங்கைகளும் தமக்காக உழைத்தே தேய்ந்துபோன அவனை மேலும் தொல்லைப்படுத்தக் கூடாது என்பதுபோல் அவன் முன்னால் மகிழ்ச்சியாக இருப்பதாகக் காட்டிக் கொள்வார்கள்.

இந்த ஊரில் அவன் கழித்த இரு வருடங்களிலும் அவன் யாரோடும் சினேகம் வைத்துக்கொண்டதில்லை; தேவைக்கு அதிகமாய் ஒரு மனிதனோடு கூட பேசியதில்லை. இம்மாதிரி பேச்சுக்கள், கூட்டாளித் தனங்கள், அதனால் ஏற்படும் செலவுகள் எல்லாம் அவனைப் பொறுத்தவரை தனது நோக்கத்திலிருந்து

தன்னை வீழ்த்திவிடக் கூடிய சக்திமிகு காரணிகள் என்று அவன் எண்ணினான். தான் ஒரு நாளைக்குச் செலவிடுகின்ற இருபது சிகரட்டுகளுக்கான பணம், காலை ஒரு மணியிலிருந்து இரவு பனிரெண்டு மணிவரை பாடுகின்ற கேஸட்டிற்கான கரன்ட் செலவு, வாரம் ஒரு முறை Sports Star இதழ் ஒன்றிற்காக கையைவிட்டு போகும் பணம்... இவைகூட அவன் விருப்பமின்றியே செலவழிப்பவை. இப்படி செலவழிக்கும் ஒவ்வொரு பொழுதிலும் அவன் தனது தங்கைகளை - தனது சிறிய வீட்டை - பெற்றோரை - காரணமின்றியே நினைத்துக் கொள்வான். தனக்கு பக்கத்துக் கடைக்காரர்கள் எல்லோரும் 'சிடுமூஞ்சி', 'கருமி' என்று பெயர் சூட்டியிருப்பது அவனுக்கு நன்றாகத் தெரிந்த ஒன்றுதான். அதுபற்றியெல்லாம் அவன் கவலைப்பட்டதில்லை.

இந்த ஊரில் அவன் கொஞ்சம் மனம்விட்டுக் கதைப்பது எதிர்வீட்டின் பதினொரு வயதுச் சிறுமியான சுதாவோடுதான். அவளோடு ஏற்பட்ட பழக்கத்தில் அவன் ஒருநாள் அவ்வீட்டுக்குப்போய் சுதாவின் அம்மாவோடு பேசினான். அவர்களை பார்த்ததுமே ஏதோ ஒரு பிரியம் ஏற்பட்டுவிட, அவன் ஆற்றுவெள்ளம்போல் தன்னைப் பற்றிய விவரங்களை - தன்மீது சுமத்தப்பட்டுள்ள பாரிய பொறுப்புக்களை - தன்னை நம்பியே வாழ்கின்ற நான்கு தங்கைகளை கரையேற்ற தானே தனக்குள் ஏற்படுத்திக் கொண்ட கட்டுப்பாடுகளை - எனவே, தான் இப்போது வாழ்கின்ற வரட்சியான வாழ்க்கையை - எல்லா வற்றையுமே கொட்டிவிட்டான்.

தன் வாழ்க்கையில் ஒரு பெண்ணுக்கு தான் கொடுக்க வேண்டிய இடம் என்ன என்பது பற்றியும் அவன் ஏற்கனவே தீர்மானித்திருந்தான். வெளிநாட்டிலும், இங்கும் பல அழகிய பெண்களை அவன் சந்தித்ததுண்டு.



எனினும் யாராலும் அவன் பாதிக்கப்பட்டதில்லை; அதற்கு அவன் தன்னை அனுமதித்ததில்லை. ஒருவேளை, தன்னை மாற்றிவிட - தன்னுள் இன்பங்களைப் பொங்கச் செய்ய - எந்தநொரு பெண்ணுக்கும் சக்தியில்லையோ என்று அவன் யோசிப்பான். அல்லது தனது இந்த முரட்டுத்தனமான - கம்பீரமான - கருநிறத் தோற்றம் தன்னை நெருங்கவிடாமல் பெண்களை பயமுறுத்து கிறதோ என்று அவனுக்குத் தோன்றும். தனக்குள் சிரித்துக்கொள்வான்.

ஆனால், இந்தக் கொஞ்ச நாட்களாக தனக்குள் துல்லிய மானதோர் மாற்றம் - நெகிழ்வு - ஏற்பட்டிருப்பதை அவன் உணர்ந்தான். அதற்குக் காரணம் தன் எதிர்வீட்டில் வளைய வருகின்ற கன்னிச்சிலைதான் என்பதும் அவனுக்குத் தெரியும். ரம்யாவைப் பார்க்கும் போதெல்லாம் பாறையாக இறுகிப்போன தன் மனசுக்குள் ஆனந்த நீரூற்றுக்கள் ஊறிவருகின்ற அற்புதத்தை வியப்போடு அவன் அவதானித்தான். தன்னை இந்தளவிற்கு இளகவைத்தது அவளது அழகு மட்டுமல்ல, பதவிசு - நேர்த்தி - ஒழுக்கம் - அறிவு எல்லாம்தான் என்று அவன் நினைத்தான். சிலவேளைகளில், அவனை நினைத்துப் பார்க்கக்கூட தனக்கு வெறும் எட்டாம் வகுப்பு மட்டுமே படித்த ஒரு ஏழைக்கு - தகுதியில்லையோ என்று ஐயமேற்படுவது முண்டு. ஏனோ அவன் அவளுடன் பேச முயற்சிப்பதில்லை. அவனை உறுத்துகிறாற்போல் பார்க்கக்கூட அவன் விழைந்ததில்லை. இதற்கெல்லாம் என்ன காரணமென்று அவனுக்குத் தெரியாது; ஒருவேளை ஒரு காரணமும் இல்லையோ என்னவோ?

ரம்யாவிற்கு அவளது அம்மா மகேஷைப்பற்றி ஏராளமாகச் சொல்லியிருந்தாள். இந்த நூற்றாண்டிலும்

இப்படியொரு மனிதரா? அந்த மனசில் ஒரு பெண்ணை வேண்டுகிற நினைவே வராதா என்று அவளுக்குள் கேள்வி எழுவதுண்டு. பலவேளைகளில் எதிர்கடையிலிருந்து மிதந்து வருகின்ற பழைய பாடல்களை கேட்கையில், இவருக்குள் இப்படியான ஒரு ரசனையுள்ளமும் உண்டோ என்று அதிசயப்படுவாள்.

அமுதைப் பொழியும் நிலவே
நீ அருகில் வராததேனோ?

என்று ஒலிக்கின்ற பீ.சுசிலாவின் குரலைக் கேட்கும்போதெல்லாம் அவளுக்குள் ஆழமானதோர் வருத்தம் ஏற்படும். அவரது மனதைக் கவர்ந்த ஓர் இனிய கன்னி இருக்கிறாளோ? அவரோடு இணையும் நாளையெண்ணி ஆவலுடன் ஊரில் காத்திருக்கிறாளோ? இருவரையும் சேரவிடாமல் அவரது பொறுப்புக்கள்தான் தடுக்கின்றனவோ? மகேஷ் ஊருக்குப்போய்தங்கும் சில தினங்களில் 'அந்தக்காதலிக்கு' எத்தனை மகிழ்ச்சியாக இருக்குமோ? என்றெல்லாம் சமயங்களில் அவள் கற்பனை செய்ததுண்டு.

சுதா மகேஷைப்பற்றி சொல்பவற்றைக் கேட்கையில், அந்தக் கடுமையான உருவத்தில் அலையெழும்புகின்ற நகைச்சுவையுணர்வையும், ரசனைகளையும் புரிந்துகொண்டு ரம்யா அதிசயப்படுவாள். தனது தாயினதும், சுதாவினதும் நட்பைப் பெற்ற ஒரு நல்ல மனிதர் என்ற விதத்தில் முன்வாசலுக்கு வரும்போது மகேஷைக் காணநேர்ந்தால் அவள் புன்னகைக்க முயற்சிப்பாள். அவன் அதைக் கண்டுகொண்டதேயில்லை. தற்செயலாக வாவது அவன் தன்வீட்டையோ, தன்னையோ பார்க்க முயன்றதில்லை என்பதை அவள் முடிவாக அறிந்துகொண்டபின் 'இவர் நிச்சயமாகவே ஒரு வித்தியாசமான மனிதர்' என்ற உறுதி அவனைப்பற்றிய ஒரு மரியாதையுணர்வை ஏற்படுத்திற்று. ஒருநாள் ரம்யா சுதாவிடம் விளையாட்டாக "ஏன் சுதா! உங்க மகேஷ் அங்கிள் எப்பவுமே இப்புடி உம்முனுதான் இருப்பார் போலருக்கே..! ஒண்ணு செய்! அவருக்கு சிரிச்ச முகமூடி ஒண்ணு வாங்கி ப்ரசன்ட் பண்ணு...!" என்று சொல்ல, அவள் முன்பாகவே சுதா ஓடிப்போய் மகேஷிடம் சொல்லிக்கொடுக்க, ரம்யாவுக்கு சங்கடமாகப் போய்விட்டது.



இன்னொருநாள் ரம்யாவின் மணிக்கவிதையொன்று பத்திரிகையில் வெளியாகியிருந்தது.

உயர உயரப் பறக்கிறேன்

உன் கூண்டில் அடைவதற்காக!

என்று இரண்டே வரியில் அக்கவிதை அமைந்திருந்தது. ரம்யா ஆசையில் படபடத்தபடி பத்திரிகையைக் கையில் எடுத்தபோது, சுதா அதை மின்னல் வேகத்தில் பறித்துக்கொண்டு ஓடிப்போய் மகேஷிடம் காட்டிவிட்டு, அதே வேகத்தில் திரும்பி வந்து சொன்னாள்.

"வரவர இந்த பேப்பர் ஸ்டேன்டர்ட் கொறைஞ்சிடுச்சி.."

"ஏன்..?"

"அதான் ஒங் கவிதை வந்திருக்கே... மகேஷ் அங்கிள்தான் சொன்னாரு..."

அவனது குறும்பை எண்ணி ரம்யா பலமாகச் சிரித்தாள். இப்படி கவிதை எழுதுவது பற்றியெல்லாம் மகேஷ் என்ன நினைக்கிறாரோ என்று திடுமென யோசனை வந்தது. அவருக்கு இந்தக் கவிதை

விளங்கியிருக்குமோ என்று ஒரு நினைவு தோன்ற, சரி அதைப்பற்றியெல்லாம் நான் ஏன் யோசிக்க வேண்டும் என்று தன்னை சமாதானப்படுத்திக் கொண்டாள் அவள்.

★ ★ ★

பின்புறமாக ஏதோ எடுக்க வந்த மகேஷ், எடுத்துக்கொண்டு உள்ளே போய் கதவை மூடப்போனபோது தான் கண்டான். யாரோ ஒர பெண்ணுடன் சிரித்துப் பேசியபடி அவனது கொல்லைப்புறத்தை அண்டிய ஒற்றையடிப்பாதையில் ரம்யா போய்க்கொண்டிருந்தாள். அந்தப் பெண்ணை மகேஷ் இந்தத் தெருவில் எங்கோ கண்டிருக்கிறான். ரம்யாவின் தோழி போலும்!

ஒரு கணம்... பச்சை நிறத் தாவணி அங்குமிங்கும் பறக்க, இடைவரை பின்னிய கூந்தலில் மல்லிகை பூச்சரம் சூடி, ஒரு கையால் பாவாடையைச் சற்றே தூக்கியபடி, அங்குமிங்கும் பார்த்துக்கொண்டு அந்தப் பெண்ணுடன் சுவாரஸ்யமாகப் பேசியபடி போய்க்கொண்டிருந்த ரம்யாவை பார்வையிலிருந்து மறையும்வரை பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டும்போல் அவனுள் ஒரு தாபம் எழுந்தது. மனப்பரப்பெங்கும் ஒரு சில்லிப்பு பரவி உடலுக்குத் தாவிற்று. 'இவளது அழகில் ஒரு துளி இருந்தால்கூட என் தங்கைகளுக்குப் போதுமே' என்று முட்டாள்தனமான ஒரு நினைவும் உடனே தோன்றி மறைந்தது.

எதேச்சையாகத் திரும்பிய ரம்யா அவனைக் கண்டுவிட்டாள். அவனுடன் சிநேகபூர்வமாய் அவள் சிரிக்க முயல, அவனுக்கு வெட்கமாகப் போய்விட்டது. அவள் தன்னைப் பற்றி என்ன நினைப்பாளோ என்பதுபோல் ஒரு பயம் எழுந்தது. சரேலென கதவை மூடித் தாழிட்டான்.



அவளுக்கு என்னவோபோல் ஆகிவிட்டது. முகத்திலடித்தாற்போன்ற அந்தச் செய்கை அவளைக் குறுகச் செய்தது. அதற்கு முக்கியத்துவமளிக்க விரும்பாமல், அவள் மறுபுறம் திரும்பி தன் தோழியிடம் பேச ஆரம்பித்தாள்.

★ ★ ★

காலையிலிருந்தே மகேஷ் அவதானித்தான். எதிர்வீடு களைகட்டியிருந்தது. சுதா அழகாக உடுத்திக்கொண்டு அங்குமிங்குமாகப் போய் வந்துகொண்டிருந்தாள். ஓரிரண்டு தடவை அவன் கடைக்கும் வந்தாள். 'ஓங்க வீட்டுல ஏதும் விசேஷமா?' என்று கேட்டுவிட அவனுக்குத் துடிப்பாக இருந்தது. ஆயினும் தயக்கம். 'எனக்கென்ன உரிமையிருக்கிறது அவர்களது விசேஷங்கள் பற்றி விசாரிக்க' என்று எண்ணிக் கொண்டான். 'அப்படிக் கேட்டு, சுதா அதை வீட்டில் சொல்ல, அவர்கள் என்னைப்பற்றி ஒரு மாதிரியாக நினைத்துக் கொள்வார்களோ...?'

கொஞ்சநேரத்தில் சுதாவே அவனிடம் ஓடி வந்து சொன்னாள். "அங்கிள் எங்க ரம்யா அக்காவ இன்னிக்கி பெண் பாக்க வராங்க. மாப்பிள்ள பேங்க்குல வேல செய்றாராம்..."

அவனுள் ஆழமாக வேரூன்றிய விருட்சமொன்று வேருடன் அதிர்ந்தது. இதயம் ரொம்ப நாளைக்குப் பிறகு இன்றுதான் துடிக்கச் தொடங்குகிறதோ என்பதுபோல் நெஞ்சக் கூட்டுக்குள் பேரிரைச்சல்!

கடலோரமாக நடந்து கொண்டிருந்த ஒரு சிறுவன் கீழே கிடந்த பொம்மையொன்றைக் கண்டெடுத்து

விளையாடிக்கொண்டிருக்கையில் திடீரென பலமான ஓர் அலை வந்து அதனைப் பறித்துச் செல்லும்போது ஏற்படுகின்ற பரிதவிப்போடு அவன் உள்ளம் குமுறிற்று. அத்தனைக் குமுறல்களோடும், கொந்தளிப்புகளோடும் அவன் உதடுகள் மட்டும் இறுகியே இருந்தன.

இரண்டு நாட்களுக்குப்பிறகு தற்செயலாக ரம்யாவின் அப்பாவைச் சந்திக்க நேர்ந்தது. அவரே மகேஷிடம் தன் பெண்ணைப் பற்றிப் பேசினார்.

"என் மகளுக்குப் பொருத்தமானவனா யோசிச்சா எனக்குத் தெரிஞ்சதே இந்தப் பொடியன்தான் தம்பி! பக்கத்து ஊர்தான். நல்ல தொழில். ஆனா பெத்தவங்க கொஞ்சம் சீதனம் எதிர்பாக்குறாங்க. எனக்கு இத வுட விருப்பமில்ல. எப்பிடியாவது முடிச்சிறத்தான் பாக்குறேன்...!"

ஏன் இவர்கள் யாருக்குமே ரம்யாவின் மனசைப்பற்றி சிந்திக்கத் தெரியாமல் போயிற்று என்று உள்ளூர கவலைப்பட்டான் அவன். அவள் யாரையாவது நினைத்துக்கொண்டிருக்கிறாளோ? ஒருவேளை, அவளுக்குள் அப்படி ஆசைகள் இருக்கலாம் என்று தோன்றிற்று. பெரும்பாலும் அப்படி இல்லாமலும் இருக்கலாம். டவுனில் படித்துவந்த பெண்ணிடம் பக்தியும், ஒழுக்கமும் இருப்பது மாதிரி... என்று சம்பந்தா சம்பந்தமின்றி ஒரு யோசனை வந்தது.

இந்த அமர்க்களங்களுக்குப்பிறகு அவன் அன்று ரம்யாவைக் கண்டான். முன் ஹோலில் ஒரு ஓரமாக உட்கார்ந்து சுதாவும், அவளும் பல்லாங்குழி விளையாடிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குள் ஏதோ சண்டை போலும். சுதாவின் கையிலுள்ள காய்களை ரம்யா பறிக்க முயன்றாள். அவள் திமிறிக்கொண்டு ஓட



முற்பட்டபோது ரம்யா அவளது கால்களைப் பற்ற, வாசலுக்கு வந்த சுதா கீழே விழ, அவள்மீது ரம்யாவும் விழுந்தாள்.

தன்னை மறந்து மகேஷ் பார்த்துக்கொண்டிருந்தான். கொஞ்சம் அதிகமாகவே ரம்யா மஞ்சள் பூசியிருந்தாள் போலும். இங்கிருந்து பார்க்கும்போதே அவள் முகம் பளீரிட்டது. கீழே விழுந்தபோது தாவணி சற்றே விலக அவள் அணிந்திருந்த தங்கச் செயினும் மின்னிற்று.

ஓ! இந்த அழகுத் தேவதைக்குக்கூட சீதனத்தோடுதான் திருமணமா என்று திடீரென ஓர் ஆற்றாமை ஏற்பட்டது அவனுக்கு. எனக்கெல்லாம் இவள் கிடைத்துவிட்டால்... ஒரு சதம் இல்லாமலேயே கட்டிக்கொள்ளமாட்டேனா என்று நிராசையும், ஆயாசமுமாக நினைத்துக்கொண்டான். தூரத்தே தங்கைகளின் முகங்கள் வரிசையாக வந்து போயின. கண்களில் கண்ணீர் திரையிட்டது.

சிரித்துக்கொண்டே சுதாவும், ரம்யாவும் ஒரே நேரத்தில் அவனைப் பார்த்தார்கள். அவன் அப்பால் திரும்பிக்கொண்டான். அப்படியும் சிரமமாக இருந்தது. சட்டென உள்ளே போய்விட்டான்.

ரம்யாவுக்கு வெட்கமாகி விட்டது. சுவரோரமாக ஒன்றிக்கொண்டாள். சுதா ஏதோ நினைவுவர சொன்னாள்.

"அக்கா! மகேஷ் அங்கிளுக்கு எப்போ கல்யாணம் என்று கேட்டேன்..."

"என்ன சொன்னாரு..."

"இந்த மூஞ்சிக்கு யாரு பொண்ணு தரப்போறாங்கன்னு கேட்டாரு... பாவம்! அழக்கூடப் பாத்தாரு..."

ரம்யாவை ஏதோ பாதாதி கேசம்வரை பிறாண்டிக்கொண்டு சென்றது. பெரிய கீறல்களாய் மனசை எதுவோ காயப்படுத்திற்கு. அந்தக் காயத்தின் வலி காரணமாக கண்ணீர்கூட துளிர்த்தது.

அந்தக் கண்ணீர்! ஒரு துயர ஜீவனுக்காக வசதியோடு வாழ்கின்ற ஒருவன் விடுவதுபோன்று வெறும் பரிதாபக் கண்ணீர்தான். அது துயரத்தை அனுபவித்தால் ஏற்பட்டதல்ல. துயரை அனுபவித்தவன் விடுகின்ற கண்ணீர்தான் - அது ஒரு துளியே ஆயினும் - அவன் அனுபவித்த உணர்ச்சிகளின் மிகச் சரியான பிரதிபலிப் பாக இருக்கும்; இருக்க முடியும். அப்படியொரு நிலைமை அவளுக்கு ஏற்பட்டதில்லை. அந்த விதத்தில் அவள் அதிர்ஷ்டசாலிதான்.

எதிர்க்கடையிலிருந்து அந்தப்பாடல் தெளிவாக ஒலி த்துக் கொண்டிருந்தது.

“அமுதைப் பொழியும் நிலவே
நீ அருகில் வராததேனோ?”

# செக்குமாடுகள்

மழை இருட்டிய அந்திமாலை. வீட்டில் இருக்கப் பிடிக்கவில்லை. வெளியே போய்வரலாம் என்று பட்டது. உம்மாவிடம் கேட்டபோது “சரி” என்றாள்.

ஆயிஷா ரிஸானாவைக் கூட்டிக்கொண்டு வீட்டின் பின்புறம் வழியே கிளம்பினாள். உடைமாற்றிக்கொள்ள வேண்டுமென்றோ, அலங்கரித்துக்கொள்ள வேண்டு மென்றோ தோன்றவில்லை. இது எனது ஊர்; நான் பிறந்து வளர்ந்த ஊர். இதில் எதற்கு அந்நியத்தனம்?

ஆனாலும் செக்கடி மண்வீதி வழியாக மெதுமெதுவே நடந்துபோகையில் கூச்சமாக இருந்தது. ஆறு வருடங்களுக்கு முன்னால், நவ்ஷாதைக் கைப்பிடித்த புதிதில் அவனோடு ஊரைச் சுற்றிவந்தபோது ஏற்பட்ட அதே கூச்சம் இப்போதும் ஏற்பட்டது. வழியில் தெரிந்தவர்கள் நின்று குசலம் விசாரித்தபோது அது பன்மடங்கு அதிகரித்தது.

ரிஸானா ஏதேதோ பேசிக்கொண்டே வந்தாள். கற்களும், மேடுபள்ளங்களும் நிறைந்த அந்தப் புழுதி வீதியில் அவளது தொணதொணப்பை சகித்துக்கொண்டே நடப்பது சிரமமாக இருந்தது.

செக்கின் இயக்கநாதம் மெல்லிசாய்க் காதைக் தழுவிற்று. ஓலையிலான கொத்தாலி வட்டமாக அசைவது தெரிந்தது.

நீண்ட நாட்களாக தன் விளையாட்டுப் பொருட்களைப் பிரிந்திருந்த சிறுகுழந்தை அதை ஆசையாகப் பார்ப்பதுபோல் செக்குமாடுகள் வட்டப்பாதை வழியே சுற்றி வருவதை அவள் ஆதரத்துடன் பார்த்தாள். துள்ளிக் குதித்துக்கொண்டு ஓடிப்போய் ஆடுபலகையில் ஏறவேண்டும் போலிருந்தது. முன்பெல்லாம், பள்ளியில் படிக்கையில் மாலைப்பொழுதுகளில் அவள் அமர்ந்து பாடம் படித்த ஞானபீடம் அது.

ரிஸானா ஓடிப்போய் பலகையில் ஏறிக்கொண்டாள். "அக்கா ஓடியா" என்று கூவினாள். அப்படி ஓடமுடியுமா என்ன? மெதுவே போய் பலகையில் ஏறி உட்கார்ந்தாள்.

மணமான பெண்ணொருத்தி செக்கில் ஆடுவது வெட்கமும், வேதனையும் இல்லையா? அவளுக்கு என்னவோ போலிருந்தது. தன்னை சமாளித்துக் கொண்டாள். எங்கள் செக்கில் நான் ஆடமுடியாதா? அவர் இருந்தால் என்ன சொல்லுவார்? "வரவர நீ சின்னபுள்ள மாதிரி" என்று முணுமுணுப்பார்...! இதழ்களில் கோடிட்ட புன்முறுவலை அடக்கிக்கொண்டு வீதியைப் பார்த்தாள் அவள். ஒரு பெண் நிறைகுடத்தைத் தூக்கிக்கொண்டு தண்ணீர் குலுங்கிக்கொட்ட நடந்துகொண்டிருந்தாள். ஒரு கணவனும், மனைவியும் பைசிக்களில் பெரிய உடுப்புப் பொதியுடன் குளிக்கப்போய்க் கொண்டிருந்தார்கள்.

"கல்லு செக்குதானே...? அது ஆயிரத்துற் தொள்ளாயிரத்து அறுபத்து ஒன்பதுல குருணாகலயில இருந்தது. இப்ப இல்ல... கஷ்டங்கிறதால அத விட்டுட்டாங்க.."



தன்னோடு இருந்த சிறியவனுக்கு பெரிய செக்காடி சொல்லிக்கொண்டிருந்தான். அவள் திரும்பிப் பார்த்தாள். உலக்கைமர வாய்வழியே வெளியே தள்ளிய புண்ணாக்கைக் கைகளால் தள்ளிக்கொண்டே அவன் அவளைப் பார்த்து மரியாதையாகப் புன்னகைத்தான்.

எங்கேயோ பார்த்த முகம் போலிருந்தது அந்தச் சிறிய, தாடி வளர்ந்த, கரிய முகம். ஆனால், நிச்சயமாகத் தான் பார்த்திராத ஒரு முகம் என்று புரிந்தது. சில முகங்களில் பார்ப்பவர்களின் சிந்தனையைக் கிளறுகின்ற ஏதாவதொரு அம்சம் இருக்கும். அப்படியொரு முகம்!

"யாழ்ப்பாணத்துலயும் செக்கு இருக்காமே... ஏன் அண்ணே..?"

சிறியவன் சாட்டையால் மாட்டை பயங்கரமாக அடித்தபடியே உரத்த குரலில் கேட்டான். மாடுகள் வேகமாக ஓடின. அவளுக்கு வலித்தது.

"ஆமா! அங்கெல்லாம் பொம்புளைகள்தான் செக்கு ஆடுவாங்க.. ஒரு மூடைய மூணாப் பிரிச்சி மூணு தரம் ஆடுவாங்க.."

இவன் செக்குத் தத்துவத்தில் வல்லவன் போலும் என்று அவள் நினைத்துக்கொண்டாள். எல்லா ஊரும் இவனுக்கு அத்துபடியோ?

அவளது கேள்வியையே தானும் பிரதிபலிப்பதுபோல் அந்த சிறுவன் கேட்டான்.

"உங்களுக்கு எல்லா ஊரப்பத்தியும் தெரிஞ்சிருக்குதே அண்ணே... எத்தனாம் வகுப்பு படிச்சீங்க..?"

அவன் பலமாகச் சிரித்தான். இப்போது எள் எண்ணையாகியிருந்தது. சிறிய புண்ணாக்கின் மேலே

நுரையாகப் பொங்கிய எண்ணெயை அவன் ஒற்றி எடுத்து வாளியில் வடித்தான்.

"இதெல்லாம் படிப்பால வந்ததில்ல ராமு. அனுபவம்! இப்ப பார். எனக்கு நாப்பது வயசாகுது. படிச்சது ஏழு வரைக்கும்தான். படிப்பா இத்தன வயசுவரைக்கும் கூட வருது? அனுபவமும், இயற்கையா எங்களுக்கு இருக்கும் அறிவும்தான்...!"

செக்காட்டிகளிடமிருந்து பொதுவாக அறிவார்ந்த எவ்விஷயத்தையும் எதிர்பார்க்க முடியாது. இவன் வித்தியாசமாகப் பேசுவது ரசிக்கக் கூடியதாயிருந்தது. இவனுக்கு நாப்பது வயசா? நம்ப முடியல்லியே!

"ராமு! நீ விசுட 'மாப்பிள்ளை சார்' பாத்திருக்கியா? நல்ல படம்...!"

"இல்ல சிட்டாண்ணே...!"

அவனது பெயர் அவள் உள்ளத்தில் விசித்திரமாக ஒலித்தது. சிட்டா! சிட்டாவா...? சிற்றாவா...? அந்தப் பெயரில் ஓர் அழகு இருப்பதாகப் பட்டது.

"இன்னக்கி ராஜா வீட்டுல நல்ல படம் போடுறாங்க சிட்டாண்ணே... 'வீரபாண்டிய கட்டபொம்மன்...!"

சிட்டா மீண்டும் சிரித்தான். எப்படிதான் உடல்தேய உழைத்துக்கொண்டே இவனால் சிரிக்க முடிகின்றதோ?

"நா சின்ன வயசுல பாத்தது... அதுல நல்ல ஜோக் இருக்கு..."

"அக்கா! இந்தா புடி பேரக்கா..." ரிஸானா இரைந்தாள்.

கொய்யாப்பழம் கையில் படாது கீழே விழுந்தது. ஆயிஷா சிரமத்துடன் கீழே இறங்கி அதை எடுத்தாள். கடிக்கப் போகையில் தங்கை ஓடிவந்து பறித்தாள்.



"தா கழுவித் தாறேன்..."

சிட்டா கம்பியால் குத்தி எண்ணெய் எடுத்துக்கொண்டிருந்தான். கலங்கிய, கரிய நிறத் திரவமாக நல்லெண்ணெய் வாளிக்குள் வடிந்தது.

ராமு கையில் ஒரு தீப்பந்தம் கொண்டு வந்தான். 'என்ன செய்யப் போறாங்க...?' அருகே போனாள். சுற்றி வரும் செக்கில் கால் மாட்டிவிடாமல் நடக்கவேண்டும். ஞாபகமிருந்தது.

தீப்பந்தத்தை அவன் புண்ணாக்கின்மீது திணித்தான். மரம் சுற்றச் சுற்ற கவனமாக பந்தத்தை நகர்த்தினான்.

"எதுக்கு நெருப்பு போடணும்...?" அவள் கேட்டாள்.

"அப்பதாம்மா புண்ணாக்கு நல்லா இருக்கும்..."

முதல் தடவையாக சிட்டா அவளுடன் கதைத்தான். அவனோடு இப்போதுதான் பேசுகிறோமென்பது அவளுக்கு ஏனோ உறைத்தது, காரணமின்றியே.

"தங்கச்சி! அவரு எப்ப வருவாரு...?" ராமு கேட்டான்.

"ரெண்டு மாசத்துல வாறதா லெட்டர் போட்டிருக்காரு..."

அவர்களது பேச்சில் சம்பந்தமில்லாததுபோல் சிட்டா புண்ணாக்கை செக்கின் உள்ளே தள்ளிக்கொண்டிருந்தான். இடையிடையே, 'ஹிச்சா...கொணா...' என்று மாடுகளை விரட்டினான்.

"தங்கச்சிய சின்ன காலத்துல இருந்து எனக்குத் தெரியும். அப்ப எல்லாம் வீட்டுக்கு வந்தா என்னோட நல்லா வெளயாடுவீங்க. இப்ப ஞாபகமிருக்கோ தெரியாது..." ராமு சொல்லியபடி "இல்லியா சிட்டாண்ணே?" என்று கேட்டான்.

சிட்டா அசுவாரஸ்யமாகத் தலையசைத்தான். பொதுவாக முதலாளி வீட்டுப் பெண்களோடு பேசும்போது பணியாட்களிடம் இயல்பாகவே ஒரு பணிவும், குழைவும் இருக்கும். அவர்கள் ஏதாவது கேட்டால், முழு அகராதியையே விபரிக்கக்கூடிய உற்சாகம் வேலையாட்களிடம் இருக்கும். ராமுவும் இதற்கு விதிவிலக்கல்ல. சிட்டா ரொம்பவும் விறைப்பாக இருந்தான்.

"ஒங்கட உண்மையான பேர் என்ன அண்ணே...?" ஆயிஷா கேட்டாள்.

"சிற்றம்பலம்... திருச்சிற்றம்பலம்! சுருக்கமா சிட்டா...! என் பேரை சரியா சொல்ற ஒரே ஒருத்தர்தான் இருந்தாரு. அவரும் போயிட்டாரு..."

அவன் தன்னுடன் இந்தளவு அதிகமாகப் பேசியதில் அவளுக்கு ஓர் ஆனந்தம் ஏற்பட்டது.

விட்டு விடுதலையாகி நிற்பாய் - அந்த

சிட்டுக் குருவியைப் போலே!

பாரதிபாடல் யதேச்சையாய் நினைவுக்கு வந்தது. சிட்டா என்ற பெயருக்கும், சிட்டுக் குருவியைப் போன்ற அவனது தோற்றத்திற்கும் ஒரு வினோதமான ஒற்றுமை இருப்பதாக அவளுக்குப் பட்டது.

★ ★ ★

இந்த சில நாட்களாக அவளோடு சிட்டா நிறையவே நெருங்கிவிட்டான். சங்கோஜமின்றி அவளோடு பேசினான். விவாதித்தான்.

ஒருநாள் மாலை, அவள் வழக்கம்போல் செக்கடிக்குப் போயிருந்தபோது திடீரென்று மயக்கமாகி



விழுந்துவிட்டாள். அன்று அவன் பட்டபாடு! செக்கை விட்டுவிட்டு ஓடிப்போய் முன்வீட்டு பாக்கியத்தைக் கூட்டிவந்து... ராமுவுடன் சேர்ந்து அவளைத் தூக்கி... முகத்தில் தண்ணீர் தெளித்து... காற்று வீசி... காற்றாகப் பறந்துபோய் அவள் வீட்டுக்குச் சேதி சொல்லி...! ரொம்பத்தான் பரிதவித்துப் போனான்.

அன்றிரவு குளித்து, சுத்தமாக உடை அணிந்துகொண்டு கூலி வாங்க வந்தவன், கையில் நாலைந்து தோடம்பழங்களைக் கொண்டுவந்து கொடுத்தான்.

"எங்கட தோட்டத்துல பறிச்சதும்மா. எடுத்துக்கோங்க. தலைப் பிரசவம்னா கவனமா இருக்கணும்... இனிமே அடிக்கடி செக்கடிக்கு வராதிங்க..."

அவள் வாங்கிக்கொண்டாள். கையிலிருந்த தோடம்பழங்களைப்போலவே கொச்சைப்படாத அவனது பேச்சும் மணப்பதாகப் பட்டது.

"தேங்ஸ் சிட்டாண்ணே... உக்காருங்க...!"

சங்கோஜமின்றி அவள் எதிரே கதிரயில் அமர்ந்தான். ரிசானா ஓடிவந்து மேஜையிலிருந்த தோடம்பழங்களை அள்ளிக்கொண்டாள். "ஜூஸ் கரைச்சிட்டு வாரேன்" என்று ஓடிப்போனாள்.

சிட்டா தலையை ஆட்டி அவளது செய்கையை சிலாகித்து சிரித்துக்கொண்டான். இவனுக்கு கடவுள் நம்பிக்கை அறவே கிடையாது என்று உம்மா சொல்லியிருந்தது ஞாபகம் வந்தது.

"ஏன் சிட்டாண்ணே... ஒங்களுக்கு கடவுள் நம்பிக்கை இல்லியா...?"

அவன் தனது சிறிய கண்களை இடுக்கிக்கொண்டு கூர்மையாக கூரைமுகட்டைப் பார்த்தான். முகத்திலிருந்த

சிரிப்பு இப்போது மறைந்துவிட்டிருந்தது. அவளைப் பார்த்துச் சொன்னான்.

"இல்லாம இல்ல. இப்பகூட காலையில எந்திரிச்சி செக்குபோட வந்து, கொத்துல எள்ள அளந்து போடேக்க நா சாமியை வேண்டிக்கொள்வேன். புரியாம ஏதேதோ கேப்பேன். ஆனா கோயிலுக்குப் போய் சாமி கும்புட்றது இல்ல..!"

"ஏன்..?"

எனக்குப் பிடிக்கிறதில்ல. கோயில்ல மட்டும்தானா சாமி இருக்கு? அப்பிடி நாலு சுவருக்குள்ள அத அடைச்சிட்டா, அப்புறம் அதோட சக்திய நாம எப்பிடி புரிஞ்சிக்கிறது..? இப்படியெல்லாம் என்னவோ எல்லாம் நெனைப்பேன்.."

அவனது தர்க்கரீதியான அறிவு அவளை வெகுவாக வசப்படுத்திற்று. ஏதும் பாண்டித்யமோ, விசேஷ கல்வித் தகைமைகளோ இல்லாமலேயே இவன் இவ்வளவு அழகாகப் பேசுகின்றானே..! நன்றாகப் படித்திருந்தால்..?

"அடுக்கடுக்கா ஏற்பட்ட தோல்விகள்.. ஊமை கண்ட கனவு மாதிரி நெஞ்சோடயே தங்கிட்டுது... சொல்லப்போனா, நா இந்தளவு குடிகாரனா ஆனதுக்கே இந்த கடவுளும், சமயமும்தான் காரணம்.."

ஒவ்வொரு வசனத்தின் முடிவிலும் தன்னையே தான் ரசிப்பதுபோல தலையைப் பலமாக ஆட்டிக்கொண்டான். அவன் சம்பந்தா சம்பந்தமின்றி பேசுகிறான் என்று அவளுக்குத் தோன்றிற்று. அதிலும் ஒரு சம்பந்தம் இருப்பதாகவும் பட்டது.

"நா ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தைஞ்சுல ஒரு முஸ்லிம் பெண்ண காதலிச்சேன்.."



கதையின் உச்சகட்டத்திற்கு வந்துவிட்டதுபோல் அவன் குரலைச் சற்று உயர்த்தினான். முகம் படுதீவிரமாக இருந்தது. அடிக்கடி வருடத்தைக் குறிப்பிட்டுப் பேசும் அவனது ஞாபகசக்தியை அவள் வியப்புடன் அவதானித்தாள்.

"எந்த ஊர்..?" - அடக்கமாட்டாமல் கேட்டாள். இவனையும் ஒரு பெண் வென்றிருக்கிறாள்!

தங்கை இரண்டு கிளாஸ்களில் ஜூஸ் கொண்டுவந்து வைத்தாள். அவள் "எடுங்க" என்று சொன்னபின்பே அவன் எடுத்தான். உம்மா வந்து முன்வாசலை ஒருமுறை நோட்டமிட்டுவிட்டுச் சென்றாள்.

"அப்ப நா கலேவலயில இருந்தேன்... ஒரு முதலாளியோட தோட்டத்துல வேல செஞ்சிட்டிருந்தேன்..." நிதானமாக ஜூஸைக் குடிக்க ஆரம்பித்தான்.

"க்விக்கா சொல்லுங்க சிட்டாண்ணே.."

"அவ முதலாளி மக. நா தொழிலாளி. ரெண்டு பேரும் நெருங்கிட்டோம். அவங்க வீட்டுக்குத் தெரிஞ்சி போச்சி.."

"என்ன ஆச்சி..?"

"நா மதம் மாறணும்னு அவங்க கேட்டாங்க.."

அடி, உதை, குத்து, வெட்டு என்று வேறொரு பதிலை எதிர்பாத்திருந்த அவளுக்கு இந்த பதில் ஒரே சமயத்தில் பிரமிப்பையும், ஆசுவாசத்தையும் ஏற்படுத்திற்று.

"நீங்க என்ன சொன்னீங்க..?"

அவன் கடைசி மிடறைக் குடித்துவிட்டு கிளாஸை மேஜையில் வைத்தான். வாயை சாரத்தினால் துடைத்துக் கொண்டான்.

"மாட்டேன்னுட்டேன்.."

"ஒங்களுக்குத்தான் மத நம்பிக்கை இல்லியே.. மதம் மார்றதுக்கென்ன.."

அவன் தலையை ஆட்டிச் சிரித்தான்.

"உண்மையாகவே மதம் பத்தி எனக்கு அப்பவும் நம்பிக்கை இல்லதான். ஆனா, அவங்க கேட்டதுக்குப் பிறகு, கொள்கைய விட்டுக் கொடுக்கப் படாதுண்டு பட்டது. அப்பிடியெல்லாம் மதத்த வெச்சி குடும்பம் நடத்த என்ன தேவைன்னு பட்டுது.."

அவளுக்கு மீண்டும் மலைப்பாக இருந்தது. எத்தனை பெரிய கருத்துக்களையெல்லாம் அனாயாசமாக எடுத்தாள்கிறான் இவன்?

"இப்ப அத நெனச்சி நீங்க கவலப்படுறீங்க இல்லியா?"

"இல்லம்மா. நா கவலப்படல்ல.. நா செஞ்சது சரிதான்.."

இவன் ஒருவித வக்ரம் பிடித்தவனோ என்று அவளுக்குள் திடீரென ஒரு கேள்வி எழுந்தது. காலங்கள் - மனிதனை - மனத்தை - கொள்கையை - மாற்றும் சக்தி வாய்ந்தன. இவன் காலத்தை வென்றவனா?

"அதுக்கப்புறம் ஊரவிட்டு வந்துட்டேன். நூத்துக்குத் தொண்ணூறு ப்ரசன்ட் குடிகாரனா மாறிட்டேன்"

மீண்டும் தலையாட்டல்! பெர்ஸன்ட் என்பதையே அவன் ப்ரசென்ட் என்று சொல்லியிருக்க வேண்டுமென அவள் யூகித்துக் கொண்டாள்.

"'அம்மா அடிக்கடி ஒவ்வொரு சம்பந்தம் பேசிட்டு வந்து நிக்கும்.. நா முடியவே முடியாதுன்னுட்டேன். எனக்கெதுக்கு கல்யாணம்?



"என்ன இரவானா..?"

"பட்டை..!"

பளிச்சென்று சொல்லிவிட்டு நடந்தான். இடையில் "போயிட்டு வாரன்மா.." என்றான்.

அவள் சிரிப்பு மாறாமல் பார்த்துக்கொண்டிருந்தாள்.

★ ★ ★

சிட்டாவோடு கொண்டிருந்த நட்பில் அவள் ஏராளமான விஷயங்கள் அறிந்துகொண்டாள். அவன் வேளாளர் இனத்தைச் சேர்ந்தவன். அண்ணனும், தம்பியுமாக தாய்க்கு இரண்டு பிள்ளைகள். அண்ணனோடு அடிக்கடி அவனுக்கு வாக்குவாதம் எழும். அதனால் அண்ணன் ஊரைவிட்டே ஓடிவிட்டான். இப்போது மட்டக்களப்பில் இருக்கிறான். எப்போதாவது அவனிடமிருந்து ஒரு தந்தி வரும். அதையும் இவன் படித்துப் பாராமல் திருப்பியனுப்பிவிடுவான்.

கண் தெரியாத அம்மா மட்டும் அவனது உறவு. பந்த பாசம் இன்பதுன்பம் எல்லாமே அவளோடுதான். வேலை இல்லாத நாட்களில் அவளை உட்கார வைத்து அவன் சமைத்துப் போடுவதுண்டு. ஒரு தங்கை தனக்கில்லையே என்ற குறை நிறையவே அவனுக்குண்டு. "உங்களைப்போல ஒரு தங்கச்சி இருந்திருந்தா நா சிலநேரம் திருந்தியிருப்பேன்..." என்று அவன் அடிக்கடி சொல்வதுண்டு.

அவளுடனான உறவினாலோ என்னவோ, அவனுள் ஒரு மாற்றம் தென்பட்டது. அதை அவளும் உணரவே செய்தாள். வேலை நேரம் தவிர்த்த மற்ற நேரங்களில் நேர்த்தியாக உடையணிந்து, அவளோடு அதிக நேரம்

பேசிக்கொண்டிருக்க அவன் விரும்பினான். அந்நேரங்களில் போதையின்றி காணப்பட வேண்டு மென்று பெரிதும் முயன்றான்.

அவளோடு பேசும் நேரங்களில் அவன் ஓர் அலாதியான உள்ளனுபவத்துக்கு ஆளாகிறான் என்பதை, செந்நிறமேறிச் சிறுத்திருக்கும் அவனது விழிகளில் அவள் புரிந்துகொண்டாள். அவன் முகத்தில் அபூர்வமான ஒரு களை இருப்பதாக அவளுக்குப் படுவதுண்டு. அல்லது தன்னோடு உரையாடும்போது மட்டும்தான் அப்படி ஒரு தேஜஸ் அவன் முகத்தில் வருகின்றதா என்றும் யோசித்திருந்தாள்.

பாலைவனத்தில் விழுந்த ஒரு துளிமழையைப்போல், நீண்டகாலமாக வெறிச்சோடியிருந்த - பெண்மையின், கனிந்த அன்பில் ஸ்பரிஷம் இன்றி காய்ந்து வரண்டு போயிருந்த - அவனது வாழ்க்கையில் அவள் குளிர்ச்சியைப் பொழிந்தாள். இந்த உறவுக்கு எந்த வரைவிலக்கணமும் கொடுத்துப் பார்க்க அவன் விரும்பவில்லை. இது நட்பா, சகோதர வாஞ்சையா, அல்லது ஒருதலைக் காதலா..? அவனுக்குப் புரியவில்லை. எதுவாயிருப்பினும் அதை அவன் விரும்பினான்.

இயல்பாகவே கூச்ச சுபாவமுள்ள தான் அவனது உறவை அப்படியே அங்கீகரித்தமை பற்றி ஆயிஷா தனக்குத்தானே வியப்படைவதுண்டு. ஆறு மாதங்களுக்கு முன்பு தன்னைப் பிரிந்து வெளிநாடு சென்ற நவ்ஷாத் வரும்வரை அவளுக்கு ஓர் அறிவார்ந்த துணை தேவைப்பட்டது. அதற்கு மிகப் பொருத்தமானவனாக சிட்டா வாய்த்ததில் அவளுக்கு மகிழ்ச்சியே!

சிலவேளைகளில், சிட்டா தன்னுடன் இத்தனை அந்நியோன்யமாக பழகுவதுபற்றி - தன்னோடு அவன்



கொண்டுள்ள ஆழமான அன்பு பற்றி - அவளுக்குள் ஒரு பயம் எட்டிப் பார்க்கும். இந்த அன்பின் தன்மை யாது? இதன் எல்லை எது? இது எங்கே போய் முடியும்?

எல்லாம் நவ்ஷாத் வந்த பிறகு சரியாகிவிடும் என்று அவள் ஆறுதலடைவாள். நான் அவரோடு போய்விடத்தானே வேண்டும்? அப்புறம் இதுபற்றியெல்லாம் நான் ஏன் கவலைப்படவேண்டும்..?

தன்னோடு இத்தனை அன்பு கொண்டதன் காரணமாகவே அவன் திருந்திவிடுவான் என்றொரு நப்பாசை அவளுக்கிருந்தது. அவன் முழுக்கத் திருந்திவிட வேண்டும். வாழ்வில் தன்மானமுள்ள மனிதனாக - ஊக்கமுள்ள தொழிலாளியாக - தலைநிமிர்ந்து நடந்திட வேண்டும்; அவனது அறிவும், திறமையும் நல்ல வழியில் பயன்பட வேண்டும் என்று அவள் ரொம்ப எதிர்பார்த்தாள்; முயன்றாள்.

அடிக்கடி உம்மாவிடம் அவள் திட்டு வாங்கவேண்டியிருந்தது. "கூலிக்காரன் அந்த எடத்துல வெக்கணும். நீ மிச்சம் இடம் குடுத்துட்ட..." என்று உம்மா குறைபடுவதை அவள் கணக்கில் கொள்ளவில்லை. தன் முயற்சி பலனளிக்க வேண்டும் என்று ஒரேபிடியாக நின்றாள். தன்னிடமுள்ள சிறுகதைப் புத்தகங்களை, நீதிநூல்களை எல்லாம் அவனுக்குக் கொடுத்தாள். இரவு நேரங்களில் பட்டை அடிக்காமல் அவற்றை படிக்கும் படியோ, ரேடியோ கேட்கும்படியோ வற்புறுத்தினாள். அவன் பலவேளைகளில் இணங்க மறுத்தான். சிலபோது இணங்கினான். அதுவே பெரியதோர் வெற்றி என்று அவள் தனக்குள் கொண்டாடுவாள்.

ஒருமுறை மகாத்மா காந்தியின் 'சத்திய சோதனை'யை அவள் கொடுத்தபோது, அவன் அதை ஏற்க மறுத்தான்.

"இத நா எப்பவோ படிச்சிட்டேம்மா... ஆயிரத் தொளாயிரத்து எம்பதுல லைப்ரரியில இத நா வாசிச்சேன். எந்த பக்கத்துல, என்ன இருக்குன்னு இப்பவும் என்னால சொல்ல முடியும்..." - தலையை ஆட்டினான்.

மீண்டும் குழம்பிப்போனாள் ஆயிஷா.

★ ★ ★

நவ்ஷாத் வந்துவிட்டான். சற்று வெளுத்து மெலிந்திருந்தான். அவனது 'பொஸ்' குடும்பத்துடன் அமெரிக்கா போய்விட்டாராம். லீவு எடுத்துக்கொண்டு வந்திருந்தான்.

பிறக்கப்போகும் குழந்தைக்கென விதம் விதமாய் பொருட்கள் அள்ளி வந்திருந்தான். குழந்தை பிறந்த பின்பு மீண்டும் வெளிநாடு செல்ல முடியாது என்று கண்டிப்பாக சொல்லிவிட்டான். இங்கு குடும்பத்துடன் சேர்ந்து வாழ்வதையே அவன் பெரிதும் விரும்பினான்.

ஒருவாரமாக ஆயிஷா செக்கடிக்குப் போகவில்லை. கணவனுடன் நிறைய இடங்களுக்குப் போகவேண்டியிருந்தது. மாலை, இருவரும் சற்று உலவி வருவதற்காக செக்கடிக்குச் சென்றார்கள். அன்று செக்கு ஆடவில்லை. மழை மந்தாரமாக இருந்ததால் செக்கை நிறுத்தியிருந்தார்கள்.

அவள் சிட்டாவைப் பற்றி அவனிடம் கூறினாள்.

முன்பே கூறியவைதான். இப்போது விபரமாக, ஒன்றுவிடாமல் அவனோடு தான் பழகிய விதம் பற்றியெல்லாம் கூறிக்கொண்டு வந்தாள். அவளது கைகளைப் பற்றிப் பிடித்தவாறு அவன் கேட்டுக்கொண்டிருந்தான்.



"இதுதான் சிட்டா வூடு..." - தங்கை ஒருமுறை காட்டித்தந்த ஞாபகம் இருந்தது.

தகரக்கூரை போட்ட வீடு. முன்புறம் காறைபெயர்ந்த அரைச்சுவர். சிறிய வாசல். உள்ளே சிமெந்து பூச்சிட்ட விறாந்தையில் நிறையப்பேர் உட்கார்ந்து சீட்டு விளையாடிக்கொண்டிருந்தார்கள். சிட்டாவும் இருப்பது தெரிந்தது. வாசலில் ஒரு கிழவி - சிட்டாவின் அம்மா - அமர்ந்திருந்தாள்.

ஆயிஷாவும், நவ்ஷாதும் வீதியில் நின்று தாமதித்ததை சிட்டா கண்டிருக்க வேண்டும். எழுந்து ஓடிவந்தான். கறுத்த வெறும் மேனி. இடுப்பில் சாரம் வாயில் புகைந்துகொண்டிருந்த பீடியைத் தூக்கி எறிந்தான். கண்கள் போதையில் சிவந்திருந்தன.

"தங்கச்சி! உள்ள நெறையப்பேர் வெளயாடுறாங்க. இப்ப நீங்க இங்க வந்தா நல்லாயிருக்காது..."

இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பாத்துக்கொண்டார்கள். "ஓ...கே..." என்று நவ்ஷாத் திரும்பி நடந்தான். அத்தனை போதையிலும் சிட்டாவுக்கு இருந்த தெளிவு ஆயிஷாவுக்குப் பிடித்தது.

★ ★ ★

மீண்டும் வெளிநாடு போவதில்லை என்பதில் நவ்ஷாத் உறுதியாக இருந்தான். தான் தனியே ஒரு செக்கு அமைத்து நடத்துவது பற்றி அவனுக்கொரு எண்ணம் இருந்தது.

ஆயிஷாவுக்கும் அது பிடித்தது. சிட்டாவின் உதவியோடு ஒரு செக்கை அமைத்து, அவனுக்கே பொறுப்பாகக் கொடுத்தால் என்ன என்று அவள்

சொன்ன யோசனை அவனுக்கும் பிடித்தது. காலையில் அவனிடம் கேட்பதென தீர்மானித்தார்கள்.

காலை! செக்கு ஆடவில்லை. சிட்டா வீட்டில்தான் இருக்கவேண்டும். வீட்டுக்குச் சென்று பார்ப்பது நல்லதெனப் பட்டது. நடந்தார்கள்.

வீட்டுத் திண்ணையில் கிழவி உட்கார்ந்திருந்தாள்.

"சிட்டாண்ணே எங்கம்மா...?" ஆயிஷா கேட்டாள்.

"நீ யாரு...?" கிழவி கண்களை இடுக்கிக் கேட்டாள்.

"சிட்டாண்ணே எங்கட செக்குலதான் வேல செய்றாரு. இன்னக்கி காணல்ல. அதான் பாக்க வந்தோம்..."

"அதையேம்மா கேக்குற! குடிச்சிப் போட்டு வந்து நேத்து ராத்திரியெல்லாம் அலறிக்கிட்டிருந்தான். யாரோ பொலிஸ்ல சொல்லிக்குடுத்துட்டாங்க. காலைல பொலிஸ் வந்து இழுத்துட்டுப் போகுது...! அம்மா, கெதியா வந்து என்ன வெளிய எடுத்துருன்னு சொல் லிட்டுப் போறாரு ராஜா...! கொஞ்ச நாளு உள்ள போய் வரட்டும். அப்பதான் புத்தி வரும்...!"

கிழவி ஒவென அழத் தொடங்கினாள்.

# ஒரு பாடசாலையின் கதை

அது நகரின் ஒரே தமிழ் பாடசாலை. மிகப் பிரபலமானது என்று கூற முடியாவிடினும் ஊரிலும், சுற்றுப்புறங்களிலும் எல்லோருக்கும் தெரிந்த பாடசாலை அது. சிறிய நான்கு கட்டிடங்களுடன் பதினோராம் ஆண்டுவரை பயிலும் சுமார் அறுநூறு மாணவர்களைக் கொண்டது.

பதினேழு வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட இனக்கலவரத்துடன் நகரைவிட்டே போய்விட்ட யாழ்ப்பாணத் தமிழர்களுக்குப் பிறகு ஆங்காங்கே எஞ்சியிருந்த எச்சசொச்ச தமிழ்க்குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்கள் அதில் கல்விகற்று வந்தார்கள்.

முத்துவேலர் எம்.ஏ. அதிபராகப் பதவியேற்று நடத்திவந்த இந்த ஏழுவருட காலங்களில் அப்பாடசாலை பெருமுன்னேற்றங்களைக் காணமுடியாவிட்டாலும் படிப்படியாக வளர்ந்து கொண்டிருந்தது. ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையிலும், ஜீசீ.ஏ. சாதாரணத் தேர்விலும் ஒருசில மாணவர்கள் நல்ல பெறுபேறுகள் பெற்ற வந்தார்கள்.

காலங்காலமாகப் புறக்கணிக்கப்பட்டே வந்த அப்பாடசாலையின் அவலநிலையை மாற்றவேண்டி முத்துவேலர் எடுக்காத முயற்சிகள் இல்லை; ஏறாத படிக்கட்டுகள் இல்லை; சந்திக்காத அதிகாரிகள் இல்லை. எந்தவிதமான முயற்சிகளும் பயனளிக்காத நிலையில் ஒருநாள் இரகசியமாகப் புறப்பட்டுப்போய் தலைநகரில் ஜனாதிபதியிடம் ஒரு மனு சமர்ப்பித்து தம் பாடசாலையின் முன்னேற்றத்திற்கு உதவும்படி வேண்டிக்கொண்டார். இதுவரை தமது பாடசாலை சந்தித்த அலட்சியங்களையும், அவமானங்களையும் அந்த மனுவில் அவர் மிகத் கவனமாகக் குறிப்பிட்டிருந்தார். மனுவைப் பெற்றுக்கொண்ட ஜனாதிபதி அப்பாடசாலையின் அபிவிருத்திக்கு உடனடியாக எல்லா நடவடிக்கைகளும் எடுக்க உத்தரவிடுவதாக வாக்களித்தார்.

முத்துவேலர் திருப்தியோடு ஊர் திரும்பியபோது, ஊரில் அவர் வருவதற்கு முன்பே செய்தி பரவிட்டிருந்தது. எல்லோரும் இதுபற்றியே கதைத்துக்கொண்டார்கள். கல்விக் கற்றோர் அதிகாரிகள் வன்மத்துடன் மனதுள் கறுவிக் கொண்டார்கள்.

இந்நிலையில், நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் மூலைமுடுக்குகளில் எல்லாம் பல்வேறு புதிய அலைகளை எழும்பச் செய்தது. மூடிக்கிடந்த கதவுகள் திறந்தன. திறந்திருந்த சில கதவுகள் மூடிக்கொண்டன. தனது பாடசாலைக்கு இனிமேலாவது ஒரு விடிவு கிடைக்கும் என்ற முத்துவேலரின் கனவும் பொடியானது.

ஒருநாள் மதியம். விடுமுறை நாள். பகலுணவுக்குப் பின்னர் வெற்றிலை போட்டபடி முன் விறாந்தையில் அவர் அமர்ந்திருந்தபோது வீட்டு வாசலில் ஒரு



ஆட்டோவந்து நின்றது. "அட இது ஓஃபீஸ் ஆட்டோவாச்சே" என்று ஆச்சர்யத்துடன் எண்ணியபடியே அவர் எழுந்து நின்று பார்த்தபோது அதிலிருந்து சீ.ஓ.வும், பிரதிக் கல்விப் பணிப்பாளர் மேடமும் இறங்கினார்கள்.

"என்ட... என்ட... வாடிவென்ட..." - சரளமான சிங்களமொழி இவருக்கு தண்ணீர் பட்டபாடு!

"தேங்க் யூ..." - இருவரும் அமர்ந்தார்கள்.

ஹங்கரில் மாட்டியிருந்த ஷேர்ட்டை எடுத்து அணிந்துகொள்வதற்காக அவர் உள்ளே சென்றார். 'இந்த நேரத்துல ஏன் வந்திருக்காங்க...?' சிந்தனை குடைந்தது. வெளியே வந்தார்.

"நாங்க அவசரமாக வந்திருக்கோம்.." மேடம் சிங்களத்தில் சொல்லியபடி தனது ஹேன்ட்பாக்கிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து நீட்டினார். முத்துவேலர் வாங்கினார்.

ட்ரான்ஸ்ஃபர் லெட்டர்! உடனடியாக அவரை தண்ணீர் இல்லாத காட்டுக்கு மாற்றியிருப்பதாக அதில் கண்டிருந்தது. பளாரென்று ஓங்கி முகத்தில் அறைந்தாற்போலிருந்தது.

"எம்பிட அர்ஜன்ட் ஓடர் இது. நாளைக்கு போஸ்ட்ல அனுப்பலாம்னுதான் இருந்தோம். அதுக்குள்ள இப்பவே கொண்டுபோய் கொடுங்கன்னு ஃபோன் வந்தது..."

"இப்பவே எப்பிடி? இன்வென்டரி? செக் அப் பண்ணி ஒப்படைக்கணுமே! ஃபைவ் டேய்ஸ் டைம் தந்தா..." - வார்த்தை குளறிற்று. கால்கள் தளர்ந்தன. சோர்வுடன் கதிரையில் உட்கார்ந்தார்.

"வெரி சொரி. திஸ் இஸ் என் இம்மீடியட் ட்ரான்ஸ்பர்!"

உடன் எழுந்தார். இதற்கு மேலும் பேசுவதில் அர்த்தமில்லை. அவர்களும் எழுந்துகொண்டனர். நடந்தனர்.

ஆட்டோவில் ஏறி அமர்ந்தபோது வீட்டு வாசலில் மனைவி கேள்விக்குறியுடன் பார்த்தபடி நின்றிருப்பது தெரிந்தது. வந்தவர்களுக்கு அருந்த ஏதாவது கொண்டுவரும்படி தான் உத்தரவிடாதது பற்றியோ, உடை மாற்றிக் கொள்ளாது புறப்படுவது பற்றியோ அவள் ஆச்சர்யமடைந்திருக்க வேண்டும்.

பாடசாலையை அடைந்து, அலுவலக அறையைத் திறந்து அலமாரியில் ஃபைலைத் தேடி எடுத்து இன்வென்டரிகளை ஒப்படைத்தபோது நெஞ்சில் கனமான சோகம் சூழ்ந்திருந்தது. இறுக்கமான மௌனம் ஆட்சி செய்தது. லொக் புத்தகத்தில் கையெழுத்திட்ட போது லேசாகக் கண்ணீர் திரையிட்டது.

"அப்ப நாங்க புறப்படறோம். விஷ் யூ ஒல் த பெஸ்ட்" மேடமின் முகத்தில் மெல்லிய அனுதாபமும், பரிவும் படர்ந்திருந்ததாக அவருக்குப் பட்டது. புன்னகைத்தார். போய்விட்டார்கள்.

மூடிய அலுவலக வாசலில் ஓர் அனாதையே போன்று நின்றிருந்தார் முத்துவேலர். சில நிமிடங்கள் தான் கைகளால் நட்டு குழந்தைகள் போல் வளர்த்த பூஞ்செடிகளைப் பார்த்துக்கொண்டு நின்றிருந்தார். தொடர்ச்சியாக சிந்தித்து ஒரு முனையைக் காண்பதற்குத் திறனற்றுப் போனாற்போலிருந்தது. என்ன நடந்தது? ஏன் இப்படி? என்றெல்லாம் ஆராய முடியவில்லை. அந்தக் கணத்தோடு எல்லாம் ஸ்தம்பித்துப் போனாற்போல்..



தளர்நடையாய் கேட்டைப் பூட்டிவிட்டு வீதியில் இறங்கியபோது எங்கேயோ மிக அருகில் எக்காளச் சிரிப்பொலி கேட்டது. முன்னால் பட்டாசுகள் வந்து விழுந்து வெடித்தன.

★ ★ ★

செல்வநாயகம் பி.ஏ. உடனடியாக பாடசாலையின் புதிய அதிபராக நியமிக்கப்பட்டார். செல்வநாயகத்துக்கு ஆதரவு தெரிவித்து வாழ்த்து சொல்வோர் ஒருபுறமாகவும், முத்துவேலரை சந்தித்து அனுதாபம் தெரிவிப்போர் ஒருபுறமாகவும் ஊர் இரண்டானது. ஒருசிலர் இருவரையும் சந்தித்து தமது நடுநிலைப்போக்கை நிறுவ முயற்சி செய்தனர்.

தன்னைவிட செல்வநாயகம் எந்தவிதத்தில் உயர் தகுதி பெற்றவர் என்று முத்துவேலருக்குப் புரியவில்லை. தான் எதிர்க்கட்சிக்காரன் என்ற கருத்தின்படி பணிஷ்மன்ட் ட்ரான்ஸ்ஃபர் செய்யப்பட்டாலும், அந்த இடத்துக்கு இன்னொரு எதிர்க்கட்சிக்காரனை எவ்வாறு நியமித்தார்கள் என்பதும் புரியவில்லை. எப்படியோ, தான் விட்டுக்கொடுக்காது போராடியே ஆகவேண்டும் என்பது மட்டும் புரிந்தது. அவரைச் சந்தித்தவர்கள் எல்லோரும் இதையே வலியுறுத்தினார்கள்.

மீண்டும் அவர் அலுவலகப் படிக்கட்டுகளில் ஏறி இறங்கத் தொடங்கினார். தனக்கு இருந்த தகுதிகளைவிட இன்னும் அதிக தகுதிகள் இருப்பதாக நிரூபித்தார். தான் முன்பு சுமுகமாகப் பழகிய முன்னாள் எம்.பிக்களையும், பிரமுகர்களையும் சந்தித்தார்.

மாவட்டத்தின் ஒவ்வொரு கட்சி அலுவலகத்திலும் தூள் பறந்தது. முத்துவேலரின் இடமாற்றம் பற்றிய விவாதமே முக்கிய செய்தியாய் ஆனது.

ஆளுங்கட்சி அரசியல்வாதிகள் முத்துவேலரின் இடமாற்றம் பற்றி மிகுந்த மகிழ்ச்சி தெரிவித்தார்கள். ஆயினும், அவ்விடத்துக்கு அதே கட்சிக்காரரான செல்வநாயகம் நியமிக்கப்பட்டமை குறித்து விசனம் கொண்டார்கள். இவையெல்லாம் உள்ளூர்ப் பிரமுகரான பத்மநாதனின் வேலைதான் என்று உறுதியாக ஊகம் தெரிவித்தார்கள். பத்மநாதன்தான் தனக்கு நெருங்கியவரான தொகுதி எம்.பி.யை அரசியல் உணர்வுகளுக்கு இடங்கொடுக்காதபடி வளைத்துப் போட்டு தனது உறவினரான செல்வநாயகத்துக்கு பிரின்ஸிபால் சீட் வாங்கிக் கொடுத்திருக்கிறார் என்பதில் ஒத்த முடிவு கண்டார்கள். கட்சி மேலிடத்துக்குச் சென்று முறையிட்டு செல்வநாயகத்தைப் பதவி விலக்கக் கோரவேண்டுமென்று தீர்மானம் எடுத்துக் கொண்டார்கள்.

எதிர்க்கட்சி அரசியல்வாதிகளோ முத்துவேலராயினும், செல்வநாயகமாயினும் தம் கட்சிக்காரரே என்பதில் பரமதிருப்தி கொண்டார்கள். எனினும், முத்துவேலரா, செல்வநாயகமா என்பதில் கருத்து வேறுபாடு கொண்டு சூடாக விவாதித்துக் கொண்டார்கள்.

செல்வநாயகம் மட்டும் சும்மாவா? அவர் தனது ஸ்டாஃப்பின் பெரும்பான்மை ஆதரவை எடுத்த எடுப்பில் கவர்ந்துகொண்டார். முத்துவேலரின் கண்டிப்பான நிர்வாகத்தால் மனம் சடைந்திருந்த சில மூத்த ஆசிரியர்கள் செல்வநாயகத்தின் தளர்வான போக்கால் சீக்கிரம் கவரப்பட்டார்கள். மாணவர்களிடம் மறைமுகமாக செல்வநாயகத்திற்கு ஆதரவான



கருத்துக்களைத் தூவ முயன்றார்கள். வெற்றியும் கண்டார்கள்.

இந்நிலையில் அலைந்து திரிந்து எப்படியோ தனது காரியத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்ட முத்துவேலர் பதவி மாற்றக் கடிதத்தையும் வாபஸ் பெறுவதாக உத்தரவிடப்பட்ட புதிய கடிதம் ஒன்றை கல்வி அலுவலகத்தில் பெற்றுக்கொண்டார்.

மீண்டும் தனது சொந்தப் பாடசாலையின் அதிபர் என்ற உரிமையோடு வெகு கம்பீரமாக, வெற்றிச் செருக்கோடு பாடசாலை கேட்டைத் திறந்து அவர் உள்நுழைந்தபோது ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் மாணவர்கள் திரள் திரளாக வெளியே வந்து மைதானத்தில் கூடினார்கள். கைகளில் சுலோகங்கள் எழுதிய போர்டுகள்! "முத்துவேலரைப் பகிஷ்கரிப்போம்!", "புதியவருக்கு வழிவிடு!", "போனவர் போகட்டும்...!"

முத்துவேலர் நிமிர்ந்து பார்த்தார். எல்லாம் தான் வளர்த்த பிஞ்சுகள். தனிப்பட்ட முறையில் பாடம் சொல்லிக் கொடுத்து ஸ்கொலர்ஷிப்பில் தேறிய மனோகரன்! சந்திரதேவன்... மோகனா... அறிவுமதி!

அருகே நெருங்கினார். மோகனாவின் கையிலிருந்த போர்டைப் பறித்து வீசினார். மனோகரனின் ஷேர்ட் கொலரைப் பிடித்து ஒரு கையால் தூக்கினார். பாஸ்கரின் முகத்தில் பளாரென ஓர் அறை. கையில் கிடைத்த ஒவ்வொருவர் அங்கத்திலும் அடிகள்! அறைகள்!

"ஹூய்" என்ற இரைச்சலோடு எங்கிருந்தோ ஒரு கூட்டம் ஆவேசத்தோடு வேலிதாண்டிப் பாய்ந்து உள்ளே வந்து முத்துவேலரைச் சூழ்ந்துகொண்டது. மாணவர்கள்

அலறியடித்துக்கொண்டு ஓடினார்கள். எங்கும் ஒரே இரைச்சல்! கூப்பாடு! ஒரு கணத்தில் மைதானத்தில் முத்துவேலர் நெற்றியிலிருந்து இரத்தம் கசிய மூர்ச்சித்து விழுந்து கிடந்தார்.

பொலீஸ் விரைந்து வந்தது. ஊரே பாடசாலையைச் சுற்றிக் கூடி நின்றது. முத்துவேலர் உடனடியாக அஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். பாடசாலைக்கு தினமும் பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது. நீதிமன்ற வழக்கு விசாரணை முடியுமட்டும் பாடசாலையை மூடிவிடும்படி நீதிமன்றம் அறிவித்தது.

இப்போது பல மாதங்களாக நகரின் அந்த ஒரே தமிழ்ப் பாடசாலை மூடியே கிடக்கிறது!

# கடக்க முடியாத தொலைவுகள்

கார் கண்டியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. கிருத்திகா ஓட்டிக்கொண்டிருந்தாள்.

அருப்பலயை விட்டுக் கிளம்புகையில் மாலை மூன்று மணியாகிவிட்டது. கண்டியைவிட உயரத்தில் அமைந்திருக்கும் அருப்பலயின் மஞ்சள் வெயில் மினுமினுத்த அழகு கார்க்கண்ணாடிக்கூடாக சிறிது சிறிதாக மறைந்துகொண்டிருந்தது.

மனது குழம்பிப் போயிருந்தமையால் அடிக்கடி கவனம் கலைந்தது. வழமையைவிட மெதுவான வேகம்!

வளைந்து நெளிந்த பாதையின் வழியே வழுக்கிச் சென்ற கார் மாத்தளை - கண்டி பிரதான வீதியை அடைந்து ஏனைய சாரிசாரியான வாகனங்களுடன் சங்கமமாகியது. கட்டுகஸ்தொட்ட ரோட்டில் தொடர்ந்து, டி.எஸ். சேனாநாயக்க வீதிக்கூடாக வண்வேயில் திரும்பி, கந்தே வீதியில் சந்தடியற்ற அமைதியில் மூழ்கியிருந்த, பெரிய ஒற்றைமரம் முன்புறமாக நின்றிருந்த, அந்த விசலமான வீட்டின் முன்பாக நின்றது.

பெல்லை அழுத்தினாள். கதவு திறந்தது. அம்மாவின் சிரித்த முகத்திற்கு முன்பாக சந்தன வாசம் கம்மென்று தவழ்ந்து வந்தது. அப்பா உள்ளிருந்து வந்தார்.

"ஹலோ டார்லிங். வெல்கம்"

"தேங்ஸ் டாட்..."

உள்ளே விதம்விதமான போஸ்களில் சாய்பாபாவின் புகைப்படங்கள். எல்லாப் படங்களும் மலர்சூடியிருந்தன. கீழே தரையில் பெரிய கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது.

"ஈவ்னிங் பஜன் இருக்கு. ரெடியாகிட்டிருக்கோம்..."

"ஐ ஸீ... மறந்தே போச்சு..."

"நீயும் வந்தது நல்லதுக்குத்தான். ஆஃப்டர் அ லோங் டைம் யூ ஆ கொயிங் டு பார்டிஸிபேட் இன் த பஜன்..."

"நோ மம்மி. நா ஒங்ககிட்ட சீரியஸா பேசணும்னு வந்திருக்கேன்..."

கிருத்திகா மெல்லத் தயங்கிச் சொல்லியபடி ஷோஃபாவில் அமர்ந்தாள்.

"கம் ஆன். லெட்ஸ் டாக்..." அப்பா எழுந்து வந்து அருகில் அமர்ந்து கொண்டார்.

"எனக்குத் தெரியும், நீ என்ன பேசப்போறேன்னு..." அம்மாவின் முகம் லேசாகக் கடுகடுப்பானது. உள்ளே போனாள்.

சிறிது நேரம் அங்கே மௌனம் நிலவிற்று. கிருத்திகா டீ-சேர்ட்டை இழுத்துவிட்டுக் கொண்டு சௌகரியமாக அமர்ந்து கொண்டாள்.

"எனி ப்ரொப்ளம்...?"



"இத்தன நாள் ஒங்களுக்குத் தெரியாது டடி, மம்மிக்கு லைட்டா தெரியும்..."

"சொல்லும்மா..."

"எல்லாம் ஒங்க மருமகன் பத்தித்தான்..."

"வை? வட்ஸ் ரோஸ் வித் சிவகுமார்...?"

"அவர எனக்குப் பிடிக்கலப்பா..."

அப்பா முதல் முறையாக அதிர்ந்தார். மீண்டும் அவர் சமனப்பட்டபோது அம்மா உள்ளிருந்து பெசன் ஃப்ரூட் ஜூஸுடன் வந்தாள்.

"ஆமா... இவ இப்படித்தான் ஏதாவது ரிப்போர்ட் கொண்டு வருவா. டோன்ட் கேர் இட்..."

"ஏம்மா ஏன் திடீர்னு...?"

"திடீர்னு இல்ல டாடி. அஞ்சு வருஷமாவே எனக்குப் பிடிக்கல. ஐவ் பீல் கொம்ப்ரமைஸிங் வித் ஹிம்..."

"அப்படின்னா கல்யாணம் நடந்த ஒடனயே சொல்றதுக்கென்ன? அப்ப நல்லாயிருந்தவர் இப்ப மோசமாயிட்டாரா...?"

அம்மா ஜூஸை நீட்டியபடி காரமாகக் கேட்டாள்.

"ஒங்க மனசு கஷ்டப்படும்னுதான் பேசாம இருந்தேன். நீங்க ப்ரபோஸ் பண்ணின மெரேஜ்ன்றதாலதான் நா இப்படி நடந்து கொள்றேன்னு நீங்க சொல்லக் கூடாதேன்னுதான் க்வய்ட்டா இருந்தேன்..."

"இங்க பாரும்மா. லைஃப்ன்னா அப்பிடித்தான். இட்ஸ் நொட் அ பெட் ஒஃப் ரோஸஸ். யூ நோ..."

அப்பா அவளது கைகளை இறுகப் பற்றிக் கொண்டார்.

"சரி, ரீசன் சொல்றே அவர் மோசம்னு ப்ரூவ் பண்ண..?" - அம்மாதான் ரொம்பவும் காரமாக இருந்தாள்.

"அவருக்கு எதிலயும் டேஸ்ட் இல்ல. நா சொல்றது ஒண்ணும் அவருக்குப் பிடிக்கிறதில்ல. எட்லீஸ்ட் நா கார் ஓட்டுறதுகூட அவருக்கு இஷ்டமில்ல. ட்ரைவர் இருக்கானே, நீ ஏன் ஓட்டணும்னு கேக்குறார். பிஸினஸ் விஷயமா சிங்கப்பூர் போய் இன்னியோட அஞ்சு நாள். ஆஃப்டர் ஓல் ஒரு டெலிஃபோன் கோல்கூட இதுவரைக்கும் இல்ல..."

கண்களில் கண்ணீர் முட்டிற்று. ஜூஸைக் குடிக்காமலேயே மேஜையில் கிளாஸை வைத்தாள்.

அம்மா எதிரே அமர்ந்துகொண்டாள். அப்பாவிடம் ஒரு கிளாஸை நீட்டினாள். தனக்கு ஒன்று எடுத்துக்கொண்டாள்.

"கிருத்திகா. எங்களப் பாரு. வெட்டிங் முடிஞ்சி போன வருஷம் சில்வர் ஜூப்ளி கொண்டாடிட்டோம். இல்லியா? எல்லாம் அட்ஜெஸ்ட்மெண்ட்தான். லைஃப் இஸ் ஃபுல் ஓஃப் கொம்ப்ரமைஸஸ்.." - அம்மா மிருதுவாகச் சொன்னாள்.

"யெஸ் கிருத்திகா. அவருக்கு அங்க என்னென்ன ட்ரபளோ? ஆம்பளைன்னா அப்பிடித்தான். ப்ரொப்ளம் எல்லாம் ஸோல்வ்ட் ஆனாத்தான் வீட்டு நினைப்பு வரும். நீ பாரேன்.. ஒனக்குன்னு என்னென்ன கிஃப்ட் எல்லாம் கொண்டுவரப் போறார்னு... இன்னும் டூ டேய்ஸ்தானேம்மா. பி பேஷன்ட்..."

"என்னப் பாரு. பி.எஸ்.ஸி. முடிச்சிட்டு எம்.எஸ்ஸி செய்ய இருக்கையில டெடிக்கு விருப்பமில்லன்கிற ஒரே ரீசனுக்காக ஸ்டடிஸ்ஸையே நா விடல்லியா? சின்னச் சின்ன விஷயங்கள்ல எல்லாம் கொறை பிடிக்கக்கூடாது. இக்னோர் பண்ணனும். ஒன்ன இந்தளவு ஃப்ரீடம் தந்து வேலயும் செய்ய அவர் விட்டிருக்காரே, அது பெருசில்லயா? நீ கார் ஓட்டினா டேன்ஜர்னு நென்கிறதாலதான் அவர் வேணாம்னு சொல்றாரு. எல்லாம் ஒன்மேல அன்பு காரணமாகத்தான். ஒரு கணவன் தன் வைஃப் மேல உள்ள அன்பு காரணமாத்தான் ஒவ்வொண்ணையும் செய்வாரு. அதப் புரிஞ்சிகொள்ளவும் ஒரு இன்டலிஜன்ஸ் வேணும். வெறும் ஜ்யோக்ரபி லெக்சரஸ்ஸா இருந்தா மட்டும் போதாது.."



அம்மாவின் குரல் முன்னைவிட மிருதுவாக ஒலித்தது.

கிருத்திகா எழுந்து கொண்டாள்.

"நீங்க என்ன சொன்னாலும் பரவாயில்ல. ஐம் கொயிங் டு டைவர்ஸ் ஹிம்.."

இருவருமே விறைத்துப்போய் உட்கார்ந்திருக்க, ஒரு நிமிஷம் தாமதித்துவிட்டு வாசலை நோக்கி நடந்தாள்.

அம்மா திடீரென பாய்ந்து எழுந்துவந்து வாசல் கதவை மூடி சாய்ந்து நின்றுகொண்டாள்.

"டோன்ட் பி ஸில்லி ஃபூல்! ஒரே மகள்னு சொல்லிச்சொல்லி ஒன்ன ரொம்பவும் கெடுத்துட்டோம். அவர டைவர்ஸ் பண்ணிட்டு மட்டும் எங்க மூஞ்சியில முழிக்காத. இந்த ரோட்லகூட நீ தனியா நடமாட முடியாது. அன்டர்ஸ்டான்ட்! வீ ஆன்ட் யுவ பேரன்ட் ஆப்டர் தட்.."

"இட்ஸ் ஓகே. ஐ கென் ஸ்டான்ட் ஒன் மை ஓன் ஃபூட்...!" - கிருத்திகா கதவைத் திறந்து வெளியேறினாள். கார் கிளம்பிற்று.

குமிழ் குழிழாய் சிந்தனைகள். அம்மாவின் கோபம் எதிர்பார்த்ததுதான். பட், அப்பாவாவது ஏதாவது ஆறுதலாய்ச் சொல்வார் என்று அவள் உறுதியாக நினைத்திருந்தாள். அவரோ அதிர்ச்சியிலிருந்து இன்னும் மீளாதவராக...

டி.எஸ். சேனானாயக்க வீதி வழியே கார் போய்க்கொண்டிருந்தது. வேலை முடிந்து வீட்டுக்குத் திரும்பும் ஜனங்களின் பரபரப்பு. வாகன நெரிசல். ஆங்காங்கே ட்யூசன் கிளாஸ் முடித்து திரும்பிக் கொண்டிருக்கும் வெண்புறாக்கள்!

க்வீன்ஸ் ஹோட்டலின் எதிரே திரும்பி, சங்கராஜ மாவத்தைக் கூடாக, லேக்ஸைட் வழியாக காரை செலுத்தினாள். நர்ஸிங்ஹோமுக்கு எதிரே, அந்தப் பென்னம் பெரிய மரத்தின் அருகில் காரை நிறுத்திவிட்டு இறங்கினாள்.

ஏரி மிக அமைதியாய் தோன்றிற்று. நதிகளைவிட, அருவிகளைவிட பரிதாபத்திற்குரியது இந்த ஏரி. அவற்றுக்கிருக்கும் சுதந்திரம் இதற்குண்டா? வெண்மை பூசிய தடுப்புச் சுவரினுள்ளே ஆழ்ந்து அமைதியாய் துயிலும் ஏரியே, நீ ஒருவேளை, இதுவும் என்னைப்போலத்தான் ஆரம்பத்தில் துள்ளியிருக்குமோ? தடைகளை உடைத்தெழச் சீறியிருக்குமோ? முடியாமல் தான் துயிலில் ஆழ்ந்துபோனதோ? கல்யாணம் நடந்த உடனேயே ஏன் இதைக் கண்டுகொள்ளாமல் விட்டோம்...? யோசிக்க முயன்றாள். சிவகுமார் எப்போதாவது ஐந்து வருஷத்துக்கு முன்னால நல்லா இருந்திருக்கிறாரா? இல்லை என்றே பட்டது. ஆரம்ப ரெண்டு வருஷங்கள் சந்தோஷமாய்த்தான் கழிந்தன. அப்புறம்தான் அவனுடைய உண்மைச் சொரூபம் வெளித்தெரியத் தொடங்கிற்று. நிலவின் கீழிருந்து



பேசுவோம் என்று அவள் கூப்பிட்டாள். அவனால் இணங்க முடியவில்லை.

“ஐ கென் டை வித் யூ - பட்
ஐ காண்ட் லிவ் வித்தவ்ட் யூ”

என்ற பைரனின் வரிகளை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை.

‘விழிகள்
நட்சத்திரங்களை வருடினாலும்
விரல்கள்
ஜன்னல் கம்பிகளோடுதான்’

என்ற மு.மேத்தாவின் கவிதை வரிகளை ரசிக்கத் தெரியவில்லை. குறைந்தபட்சம் ஏ.ஆர்.ரஹ்மானைக்கூட சிலாகிக்கத் தெரியவில்லை. கலகலப்பாக - அன்பாக - மனைவியோடு குடும்பம் நடத்தத் தெரியவில்லை. டோட்டலி பிஸினஸ் மைன்டட்!

சற்று தூரத்தில் மரத்தின் கீழிருந்த பெஞ்சில் இளஞ்சோடி ஒன்று தம்மை மறந்த மோனத்தில் ஆழ்ந்திருந்தது. சில கணங்கள் எவ்வித உணர்ச்சியுமின்றி அவர்களைப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு குறுக்கும் நெடுக்குமாக நடக்கத் தொடங்கினாள் கிருத்திகா.

டைவர்ஸ் எனும் வித்து எப்போது என்னுள் விழுந்தது? இத்தனை உறுதியாக அது எப்படி வளர்ந்தது? ஜெகதீஸைக் கண்டபின்பா?

மூன்று வருடங்களுக்கு முன்பு பேராதனைப் பல்கலைக் கழகத்தில் மாணவர்களுடன் இணைந்து ஜ்யோக்ரபி ப்ராக்டிகலை முடித்துவிட்டு வெளியே வரும்போது, கையில் ஃபைலுடன் எதிரே வந்து கொண்டிருந்த ஜெகதீஸைக் கண்டாள்.

"குட்மோர்னிங்" - புன்னகைத்தான்.

"குட்மோர்னிங். யூ ஆ..?"

"ஐம் ஜெகதீஸன். டிபார்ட்மென்ட் ஒஃப் கெமிஸ்ட்ரி".

"ஐ ஸீ.. நிவ்லி எப்பொயின்டட்..?"

"நோ. ஜஸ்ட் பிஃபோ செவன் மன்த்ஸ்..!"

ஆச்சர்யமாயிருந்தது. ஏழு மாதங்களாக இங்கு வேலை செய்யும் ஜெகதீஸனை இன்றுதான் கண்டோம் என்பதை எண்ணி சிறிது வெட்கமாகவும் இருந்தது. "பை.." என்று கூறி நகர்ந்தாள்.

ஒருமுறை பத்துநாள் ஹொங்கொங் சென்று வருகிறேன் என்று சிவகுமார் போயிருந்தபோது, ரொம்பவும் போரடித்ததால் பேராதெனிய பூங்காவில் போய் தனியே உட்கார்ந்திருந்தபோது மீண்டும் எதிர்பாராத விதமாக அவனைச் சந்திக்க நேர்ந்தது.

அவளுக்கென்னவோ நண்பர்கள் ரொம்பக் குறைவு. இல்லை என்றுகூடச் சொல்லலாம். இழைந்து இழைந்து அவள் பேசுவதெல்லாம் சிவகுமாரோடு மட்டும்தான். அவன் பெரும்பாலும் மூட்-அவ்ட்டில் இருப்பான்; அல்லது ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருப்பான். அவள் கண்டுகொள்ளாமல் தொடர்ந்து பேசும்போது எரிந்து விழுவான். மிக அருகில் வந்தபின்னர்தான் அவளை இனங்கண்டான் ஜெகதீஸன்.

"நீங்களா? வேற யாரோன்னு நெனச்சேன்..." அசட்டுத்தனமாக சிரித்தான்

"யெஸ். நானேதான்! ஏன், அடையாளம் மாறிட்டேனா?"

"யூ லுக் வெரி யங்கர் இன் திஸ் ட்ரெஸ்"



அவள் சட்டென துணுக்குற்றாலும் சிரித்து மழுப்பினாள். வழக்கமாக பல்கலைக்கழகத்திற்கு சேலையுடன் செல்லும் அவள், சாதாரணமாக டீ-சேர்ட்-பேன்ட்தான் விரும்பி அணிவாள். இப்போதும் அப்படித்தான் வந்திருந்தாள்.

பிறகு நீண்ட நெடுநேரமாக அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். சினிமா, அரசியல், கதை, கவிதை பற்றியெல்லாம் கதைத்தார்கள். இடையில் திடுமெனக் கேட்டான் அவன்.

"நீங்க எப்பிடி ஜ்யோக்ரஃபிய செலக்ட் பண்ணினீங்க..?"

"நீங்க எப்பிடி கெமிஸ்ட்ரிய செலக்ட் பண்ணிநீங்க?"

அவளும் திருப்பிக் கேட்க, இருவரும் பலமாகச் சிரித்தார்கள். அவன் சொன்னான்.

"எனக்கு எந்தளவு லிட்டரரி டேஸ்ட் இருக்கோ அந்தளவு கெமிஸ்ட்ரிலயும் உண்டு.."

"எனக்கு அப்பிடியில்ல. நா ஜ்யோக்ரஃபிய இன்ட்ரஸ்ட்டா படிக்கத் தொடங்கின பிறகுதான் இலக்கியத்துல ஈடுபாடே வந்தது.."

"அதெப்பிடி..?"

"கல்லும், மண்ணும், வயலும், நதியும், மலையும், இலக்கியத்துக்கும், பூகோலத்துக்கும் பொது இல்லையா?"

"யூ ஆர் கரெக்ட்.." என்று அவன் ஒத்துக்கொண்டான்.

அவர்கள் மிக இயல்பாக பழகத் தொடங்கினார்கள். தங்களது குடும்ப வாழ்வு, விருப்பு வெறுப்புக்கள், எதிர்பார்ப்புகள் பற்றியெல்லாம் கலந்துரையாடினார்கள்.

அவன் திருமணமாகாதவன் என்பதன் காரணமாக அவளுள் சிறிது கலக்கம் ஏற்பட்டது நிஜம். தனது திருமணம் ஒரு பாதுகாப்புக் கவசம் என்ற ரீதியில் அவள் அவனுடன் தைரியமாகப் பழக ஆரம்பித்திருந்தாள்.

அவனது இளமை காரணமாக தன்னைப்பற்றிய சலனங்கள் அவன் மனதில் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் அவள் கருத்தாயிருந்தாலும், காட்டிக்கொள்ளாமலேயே பழகினாள். அவன் எதையும் ரொம்ப சாதாணமாக எடுத்துக் கொள்பவனாகத் தோன்றினான்.

"ஏன் ஒங்களுக்கு இன்னும் பேபிஸ் இல்ல..."

ஒருநாள் வெகுசாதாரணமாகக் கேட்டான். அவளால் தாங்க முடியவில்லை. இந்தளவு நெருங்கிப் பழகினாலுமே இப்படியொரு கேள்வியை அவள் அவனிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. அவளது உள்ளக் கோட்டையைக் குறிவைத்த முதல் தாக்குதலாக அக்கேள்வி அவளைப் பலவீனப்படுத்திற்று.

"அவருக்கு விருப்பமில்லை... இன்னும் கொஞ்ச காலம் போகட்டும்னு சொல்றார்..." சமாளித்தாள்.

அவன் விசித்திரமாகப் பார்த்தான். அப்புறம் அவள் அக்கதையைத் தொடர விரும்பவில்லை.

போகப் போக அவள் உள்ளம் அவன்பால் முற்று முழுதாகத் திரும்பலாயிற்று. எங்கே இதயம் ததும்பி வெளியே கொட்டி விடுமோ என்ற பயத்தில் அவள் அதிகமாக மௌனங் காக்கத் தலைப்பட்டாள். எனினும், அவள் பேசாத பேச்சுக்களையெல்லாம் அவளது டயரி பேசிற்று.



ஜீவித பயண ஓட்ட நடுவே
பூங்காவில் தரித்து என் வண்டி.
நாளும் அருகிலிருந்து பார்த்த நந்தவனம்
கையில் வருமாப்போல் ஒரு கனவு.
வண்டி தொடர்ந்திடுமோ?
நந்தவனம் விடைதருமோ?
நந்தவன வேலியிலோர் வெற்றிலைக் கொடிபோல
இந்தச் சிறுமனது பற்றிப் படர்ந்திடுமோ?
செய்யும் தொழில் மறந்து
உள்ளம் வசமிழந்து
சிக்கித் தவிப்பதென்ன?
இந்தக் குளத்தில் சலனமென்ன?

என்று கவிதை கவிதையாய் பக்கங்கள் நிரம்பிப் போயின. அவன் மிக மிக சாதாரணமாகவே பழகியமை குறித்து அவள் நெஞ்சில் ஒரு முள் நெருடிக்கொண்டேயிருந்தது. ஆரம்ப காலத்தில் அவனது இந்த சாதாரணத்தன்மையே தனக்கு ரொம்பப் பிடித்தது என்றும், இப்போதும் அவன் சாதாரணமாகவே நடந்துகொள்வது ரசிக்கத்தக்கதாயில்லை என்றும் அவளுக்குத் தோன்றவாரம்பித்தது.

நீண்ட பெருமூச்சொன்று அவளிடமிருந்து வெளிப்பட்டது. காரில் ஏறி அமர்ந்துகொண்டாள்.

'வட் எம் ஐ டு டு நவ்...?"

ஜெகதீஸ் மீதான பிரேமை காரணமாக நான் சிவகுமாரை வெறுக்கவில்லை என்பதை தனக்குத்தானே அழுத்திச் சொல்லிக் கொண்டாள். அவன் வெறுக்கப்பட வேண்டியவனே என்று திடமாகத் தோன்றிற்று.

திடுமென பாட்டியின் ஞாபகம் வந்தது. பாட்டியிடம் கதைத்தால் என்ன? பாட்டி சின்னச் சின்னப்

பிரச்சைகளுக்குக்கூட அறிவுபூர்வமாக விடைதருவாள்.. அம்மாவைவிட எனது பிரச்னைகளை நன்கறிவாள்..!

காரை ஸ்டார்ட் செய்து வீதிக்குத் திரும்பினாள். நன்றாக இருட்டிக்கொண்டு விட்டது. லேசாக மழை தூறிற்று. வீதி விளக்குகள் எரியத் தொடங்கின. மின்விளக்குகளின் ஒளியில் ஏரி பதுமையென மின்னிற்று. தலதா வீதியை நோக்கி கார் விரைந்தது. சற்று தூரத்தில், தலதா மாளிகையின் பக்கவாட்டில் இருந்த பாட்டியின் வீட்டு முன்னாள் காரை நிறுத்தினாள்.

கதவு வெறுமனே சாத்தியிருந்தது. தள்ளிக்கொண்டு உள்ளே சென்று "பாட்டி" என்று கூவினாள். சந்தியா வந்தனம் முடிந்து, நெற்றியில் திருநீறோடு பூஜையறையிலி ருந்து பாட்டி வெளிப்பட்டாள்.

"வாம்மா! ரொம் நாளக்கிப் பிறகு வந்திருக்கிறே.."

"யெஸ் பாட்டி, ஒங்ககிட்ட பேசணும்.."

"அதுக்கென்ன? போய் கால்முகம் கழுவிட்டு வா. டீ கொண்டாரேன்.."

"நீங்க கொண்டு வாங்க பாட்டி. ரொம்ப டயர்டா இருக்கு.."

பாட்டி உள்ளே சென்றாள். கற்பூரவாசனை வீடெங்கும் சூழ்ந்திருந்தது. இந்த வயதிலும் பாட்டியின் உற்சாகத்திற்கும், தெளிவிற்கும் காரணம் அவளது ஆசாரம்தானோ என்று பட்டது.

எப்படி ஆரம்பிப்பதென்று குழப்பமாக இருந்தது. ஜெகதீஸைப்பற்றிச் சொல்வதா? எப்படிச் சொல்வது..?

நான் ஜெகதீஸைக் காதலிக்கவில்லை. இனி ஒருபோதும் காதலிக்கப் போவதுமில்லை என்று அவள் தனக்குள் கூறிக்கொண்டாள். ஜெகதீஸ் இங்கு பெரிதல்ல. சிவகுமார் பற்றித்தான் பேசியாகணும்..



ஆவிபறக்கும் தேநீருடன் பாட்டி உள்ளிருந்து வந்தாள். கிருத்திகா எடுத்துக்கொண்டதும் எதிரே அமர்ந்து கொண்டாள். டீயைக் குடித்துவிட்டு கிருத்திகா சொன்னாள்.

"பாட்டி. ஒரு த்ரில்லான விஷயம் சொல்லப்போறேன். தைரியமா கேளுங்க."

"சொல்லு.."

"நா சிவகுமாரை டைவர்ஸ் பண்ணப் போறேன்.."

பாட்டி அதிரவில்லை. "ஏன்?" என்றாள்.

"ஒங்களுக்குத்தான் தெரியுமே பாட்டி. அவர் எனக்கு சரியான மெட்ச் இல்ல. எத்தனையோ தடவை ஒங்கிட்ட அழுதிருக்கனே..!"

"அதெல்லாம் சரி. இப்ப எதுக்கு அவசரமா..?"

"சிங்கப்பூர் போனாரு அஞ்சு நாளக்கி முன்னால. இன்னம் ஒரு மெஸேஜும் இல்ல.."

"அதுக்காக..?"

"எனக்குத் தாங்க முடியல பாட்டி. கொரங்கு மாதிரி தனியா இருக்க முடியல" - ஓவென்று அழத் தொடங்கினாள்.

"அம்மாகிட்ட சொன்னியா..?"

"சொன்னேன். ரெண்டு பேரும் எகெய்ன்ஸ்ட்டாவே இருக்காங்க..?"

"இப்ப நா என்ன செய்யணும் சொல்லு..?"

"டைவர்ஸுக்கப்புறம் எனக்குத் துணையா நீங்க இருக்கணும்..."

பாட்டி சில நிமிஷங்கள் யோசித்தாள். பின்னர் எழுந்து வந்து அவளது முதுகில் தட்டிச் சொன்னாள்.

"அதான் நா இருக்கேனே! எதுக்குப் பயப்படுற?"

தலைகுனிந்து அழுதுகொண்டிருந்த கிருத்திகா சட்டென முகம் மலர்ந்து சிரித்தாள்.

"யூ ஆ க்ரேட் பாட்டி. நீங்க மட்டும் எனக்குத் துணையா இருந்தா நா எதையும் சாதிப்பேன்..."

பாட்டியின் கன்னத்தில் அழுத்தி முத்தமிட்டுவிட்டு எழுந்தாள். பாட்டி அவளது கையை மென்மையாக அழுத்தி, "போயிட்டு வா. நல்லா யோசிச்சு முடிவெடு" என்று மட்டும் சொன்னாள்.

மீண்டும் அவளைக் கட்டியணைத்து முத்தமிட்டு, கண்ணீருடன் சிரித்தபடி கிருத்திகா வெளியே வந்தாள். மனசு இலேசாக இருந்தது.

கார் இன்னும் கண்டியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. கிருத்திகா ஓட்டிக் கொண்டிருந்தாள்.

# கோடுகள் தாண்டப்படலாம்

திடீரென்று சத்யாவைப் பிடிக்காமல் போனதற்குக் காரணமென்ன? திருமணமாகி மூன்று வருடங்களில் முதல் தடவையாக தன் கணவனைப் புரிந்துகொள்ள முடியாமல் தடுமாறுகிறாள் ஷகீலா.

மாலை மயங்கிவரும் இருட்டில், கண்டி பஸ்ஸிலிருந்து இறங்கி வீட்டை நோக்கி நடந்து கொண்டிருக்கையில், எதிரே மலர்ந்த முகத்தோடு சத்யா வந்துகொண்டிருந்தான். அவனைக் கண்டதுமே தன் கணவன் தலையைக் குனிந்து கொண்டதை அவள் கவனிக்கத் தவறவில்லை. சத்யாவோடு உற்சாகமாகப் புன்னகைத்து "குட் ஈவினிங்" சொல்ல வாய் திறந்தபோது தாரிக் சொன்னான்.

"அவளோட ஒன்டும் பேசாத. பேசாம வா..."

அவளுக்கும் குழப்பமாக இருந்தது. ஆருயிர் நண்பன் சத்யாவைக் கண்டு இவர் ஏன் தலைகுனிகிறார்? அவரோடு பேசுவதைத் தவிர்க்கவா? என்னையும் ஏன் தடுக்கிறார்...? இப்போது என்ன செய்வது? சத்யாவோடு பேசுவதா? பேசாமல் போய்விடுவதா? குழப்பமும், தயக்கமும் மனதில் சிக்கிக்கொண்டிருந்தாலும் சத்யாவைச் சட்டென

முறித்துக்கொள்ள முடியவில்லை. தொடர்ந்து புன்னகைத்தாள். அந்தப் புன்னகையில் திடுமென ஏற்பட்ட தொய்வை சத்யா உணர்ந்திருக்க வேண்டும். ஒரு கேள்விக்குறியோடு தாரீக்கை உற்றுப் பார்த்துவிட்டு அவளிடம் கேட்டான்.

"எங்க தாத்தா பயணம்?"

"கண்டிக்குப் போனோம்"

"அப்ப நா போறேன் தாத்தா. அவசரமாக வீட்டுக்குப் போகணும்.."

"ஓ கே..."

நல்லவேளை, அவன் தாரீக்கோடு எதுவும் பேசவில்லை என்ற ஆறுதலோடு அவள் தாரீக்கைத் திரும்பிபார்த்தாள். அவன் மௌனமாக நடந்துகொண்டிருந்தான்.

"ஏம்ப்பா அவரோட பேச வேணாம்ன்டு சொன்னீங்க..." அவன் பதிலேதும் சொல்லவில்லை. சொல்ல முயற்சித்ததாகக்கூடத் தோன்றவில்லை. அதற்குள் வீடு வந்திருந்தது. மாத்தளையில், பிரதான வீதியில், கண்டி பஸ் ஸ்டான்டுக்கு எதிரேயே இருந்தது அவர்களது வீடு.

★ ★ ★

இரவு சாப்பிட்ட பாத்திரங்களையெல்லாம் கழுவி வைத்துவிட்டு, கணவனுக்காகத் தண்ணீர் எடுத்து வந்து மேஜையில் மூடிவைத்தபோது மீண்டும் அதே கேள்வியைக் கேட்டாள் அவள்.

அவன் மௌனமாக படுத்திருந்தான். கட்டில் அலங்கோலமாக இருந்தது.

"எழும்புங்க பெட்ட தட்டித் தாறேன்.."



அவன் எழுந்து பெனியனைக் கழற்றி ஹங்கரில் மாட்டினான். கட்டிலைத் தட்டி விரித்து, தலையணைகளை எடுத்துப் போட்டாள். உட்கார்ந்தான். அவளும் அருகே உட்கார்ந்து அவனது தோளில் முகத்தைச் சாய்த்து, நேராக அவனைப் பார்த்துக் கேட்டாள்.

"சொல்லுங்களேன். ப்ளீஸ்..."

"ஓ.கே. ஐ வில் டெல் யூ. கம் ஒன்.."

அப்படியே அவளைக் கட்டிலில் சாய்த்து மேலே படர்ந்தான்.

அவள் திமிறிக்கொண்டு எழுந்தாள்.

"சீ. விடுங்க. இன்னம் கை மொகம் கழுவல்ல.."

"அப்ப போ. நான் சொல்ல மாட்டேன்.."

அவன் ஒருக்களித்துப் படுத்துக் கொண்டான். நைட் பல்ப்பை போட்டுவிட்டு வெளியே வந்தாள் அவள்.

வேலைகளை முடித்துக்கொண்டு, அறைக்கதவைத் தாளிட்டு, உடை களைந்து, நைட்டி மாற்றும்போது அந்தக் கேள்வி அவளுள் சுழன்றது.

படித்துக் கொண்டிருந்த புத்தகத்திலிருந்து திரும்பி தாரீக் அவளைப் பார்த்தான். கல்யாணமாகியது முதல் ஒவ்வொரு இரவில் அவள் உடைமாற்றும்போதும் அவன் இப்படித்தான் பார்த்துக்கொண்டே இருக்கிறான். சிலவேளைகளில், அவளுக்குத் தெரியாமலேயே பார்க்கிறான். அந்தப் பார்வையே ஓர் அழகிய உறவின் முன்னுரையாக அவளுக்குத் தோன்றுவதுண்டு.

இன்று தீவிரமாக சிந்தித்துக் கொண்டிருந்தாள். நைட்டி பட்டன்களை ஒவ்வொன்றாக மாட்டியபடியே கேட்டாள்..

"ஒங்க பெஸ்ட் ஃப்ரென்ட்டுன்டு இன்ட்ரட்யூஸ் பண்ணினீங்களே எங்கட வெட்டிங் அன்டைக்கி? இப்ப திடிர்ன்னு என்னா?"

"அவன் ஒரு ட்ரங்காட். அவனப்பத்தி நீ ஏன் அவ்ளோ கவலப்பட்றே..?" - அவன் எழுந்து உட்கார்ந்தான்.

களைந்த உடைகளை எடுக்கக் குனிந்தவள், அப்படியே அவனருகில் வந்தாள். அவன் தலையை நிமிர்த்தி, நேராக அவனைப் பார்த்து மெதுவாகக் கேட்டாள்.

"அவன் குடிகாரன்டு தெரிஞ்சும்தானே நீங்க அவனோட பழகினீங்க? இப்ப என்ன?"

"ஏனோ எனக்கு அவனக் கண்டாலே புடிக்கல்ல. தட்ஸ் ஆல்..."

தோளில் படிந்திருந்த அவளது கரத்தை முத்தமிட்டுவிட்டு அவளைப் பார்த்துச் சிரித்தான். அவளால் சிரிக்க முடியவில்லை. களைந்த உடுப்புகளை மடித்து ஹங்கரில் போட்டாள். மேஜையருகில் உட்கார்ந்து, வளையல்களையும், கூந்தல் பின்னல்களையும் கழற்றி ட்ராயரில் வைத்தாள்.

"சொல்லுங்கப்பா. நீங்க சொல்லாட்டி நா தூங்க வரமாட்டேன்..."

அவன் முகத்தில் திடுமென ஒரு கடுமை சூழ்ந்தது. தடாரென மீண்டும் கட்டிலில் வீழ்ந்தான்.

அவன் எத்தனைக்கெத்தனை நல்லவனோ, அத்தனைக்கத்தனை அழுத்தமானவனென்று அவளுக்குத் தெரியும். அவனுக்குப் பிடிக்காத ஒன்றை வலிந்து கேட்டுக்கொண்டே இருந்தால் கெட்ட கோபம் வரும் அவனுக்கு.



தயக்கத்தோடு அருகில் சாய்ந்து, அவனது நெஞ்சில் முகத்தைப் புதைத்துக்கொண்டாள். மீண்டுமொருமுறை அக்கேள்விக்கு விடைநாடிற்று மனம்.

அவன் கன்னத்தை மிருதுவாக அவளது கைகள் வருடின.

"ஏம்ப்பா... கோவிக்காம சொல்லுங்கப்பா..."

அவன் கோபத்துடன் திரும்பி அவளை முறைத்துப் பார்த்தான். சற்று முன் கனிவாக சிரித்துக் கொண்டிருந்தவன்தானா இவன் என்று நம்பமுடியவில்லை. கலக்கத்துடன் பார்த்தாள்.

"அவன் ஒன்னப்பத்தி தேவையில்லாம கேள்வி கேக்குறான்..."

அவளால் நம்ப முடியவில்லை. திகைப்புடன் கேட்டாள்.

"என்ன கேக்குறார்ப்பா?"

"காலைல கடைக்குப் போனா மொகத்துக்கு முன்னால அவன்தான் நிக்குறான். ஏன்டா, நேரத்தோட எழும்பி கடையத் தெறக்குறதுக்கென்னா? பொஞ்சாதியோட மோர்னிங் ஷோவான்டெல்லாம் கேக்குறான்..." அவளுக்கு வெட்கமாக இருந்தது. கூடவே சிரிப்பும் வந்தது. ஒரு ஆண் தன் ஆத்ம நண்பனிடம் கேட்கக்கூடாத கேள்வியா இது?

ஆனாலும், சத்யாவை அங்கீகரிப்பதுபோல் பேசப் பயமாக இருந்தது. இவரே என்னை மிஸ்அன்டர்ஸ்டான்ட் பண்ணி விடுவாரோ...?

"வேற என்ன கேட்டாரு...?" - இதழ்களைக் கீறிய புன்னகையை வெளிக்காட்டாமல் கேட்டாள்.

"ஏன்டா... மூணு வருஷமா என்ன செய்ற? நானாயிருக்கனும்.. இந்நேரம் ஒரு குட்டிய வாந்தி எடுக்கவெச்சிருப்பேன். சோம்பேறிடா நீன்டு ரஜனி மாதிரி வசனம் பேசுறான். கடையில எல்லாரும் சிரிக்கிறாங்க.."

இப்போது ஷகீலாவின் சிரிப்பை அடக்கமுடியவில்லை. எனினும் அவனுக்குப் பயந்து பேசாதிருந்தாள். அவன் முகம் உண்மையிலேயே படு சீரியஸாக இருந்தது. அவளைக் கூர்ந்து பார்த்தபடியே கேட்டான்.

"இப்ப என்ன சொல்ற நீ..?"

தனது நட்பையே முறித்துக் கொள்ளும் அளவிற்கு சத்யா எதுவும் தப்பாகப் பேசிவிடவில்லை என்றே அவளுக்குப் பட்டது. இதல்ல காரணம். வேறு ஏதோ இருக்கிறது என்று தோன்றிற்று. ஆனால், இப்போது கணவனைச் சமாளிப்பதே பெரிய வேலை போலிருந்தது.

"ஓ. கே. ராஜா... தூங்குவோம் வாங்க.." என்றபடி அவளைத் தனது நெஞ்சுக்குள் அமுத்திக் கொண்டாள்.

★ ★ ★

களுதாவாயிலுள்ள தன் தோழி வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தாள் ஷகீலா. நன்றாக இருட்டிவிட்டது. ஒன்றிரண்டு தெருவிளக்குகள் மட்டுமே உயிர் வாழ்ந்து கொண்டிருந்தன. வீதியெங்கும் கும்மிருட்டு.

இடையில் மயானம் வேறு இருந்தது. ஆசைக்குக்கூட ஆள் அரவம் தென்படவில்லை. 'டக் டக்' என்ற தனது செருப்பொலியே ஒரு திகிலுணர்வை ஏற்படுத்துவது போல் அவளுக்குள் ஒரு பிரமை.



அவள் திருமணத்திற்கு முன்பு அகுறணை ஃபெயாலைன் ட்ரேட் சென்டரில் சுபர்வைசராக வேலை பார்த்தவள். தாரீக்கிற்கு விருப்பமில்லை என்று தெரிந்ததும், எந்தவிதமான மனக்கிலேசமும் இன்றி வேலையை விட்டுவிட்டாள். அங்கு வேலை செய்கையில் பழக்கமானவள் ரசீகா. இப்போது அவளுக்கிருக்கும் ஒரே தோழி. அவளைச் சந்தித்து நாளாகிறது. அவளோடு பேசவேண்டும் என்று ஆவலாக இருக்கிறது.

தாரீக்கை எவ்வளவோ கூப்பிட்டுப் பார்த்தாள் கெஞ்சிப் பார்த்தாள். டி.வி.யில் இன்ட்ரஸ்ட்டாக கிரிக்கெட் மெட்ச் பார்த்துக்கொண்டிருந்தவன் ஒரேயடியாக மறுத்துவிட்டான். அவனிடம் ஒரு குணம் உண்டு. எதையும் மறுத்தால் மறுத்ததுதான். மறுபேச்சுக்கு இடமில்லை. எனவே, சீக்கிரம் வந்துவிடுவதாகக் கூறிவிட்டு அவளே புறப்பட்டு விட்டாள். முதல் தடவையாக இன்றுதான் தனியாக...

மயானம் நெருங்க நெருங்க பயம் அதிகரித்தது. காலடியோசை பயங்கரமாக ஒலிக்கிறாற்போலிருந்தது. திரும்பிப் பார்க்கக்கூடப் பயமாக இருந்தது.

"தனியா எங்க போறீங்க தாத்தா..?"

பழக்கப்பட்ட குரல். சத்யாவுடையது. சந்தோஷமாகத் திரும்பினாள். யாரோ ஒருவனுடன் சத்யா வந்துகொண்டிருந்தான். தோளில் ஒரு பேக். கையில் டோர்ச்.

"இங்க ஒரு ஃப்ரென்ட் வீட்டுக்குப் போகனும். அதுதான்.."

"ஏன் தாரீக் வீட்டுல இல்லியா..?"

"இருக்காரு. டிவியில ஏதோ மெட்ச்சாம்.."

"அவன்தான் மெட்ச்சுன்டா எழும்ப மாட்டானே.."

சிரித்தான் சத்யா. நண்பனிடம் ஏதோ சொல்லிவிட்டு விரைந்து அவளருகே வந்தான்.

"இன்னம் கொஞ்ச தூரம் போகணும் இல்லியா? ரசீகாதானே உங்க ஃப்ரெண்ட்டு? வாங்க, நா கூட்டிகிட்டுப் போறேன்.."

நண்பன் திரும்பி வந்த வழியே போய்க்கொண்டிருப்பது தெரிந்தது. அவளுக்கு ஒருபுறம்மகிழ்ச்சியாகவும், இன்னொருபுறம் அச்சமாகவும் இருந்தது. சத்யாவோடு போகப் பயமில்லை. ஆனால்.. தாரீக்குக்குத் தெரிந்தால்..?

"என்ன தாத்தா யோசனை..?"

அருகில், சிறிய கண்கள் ஒளிவீச அவன் கேட்டான்.

அவள் அவனைவிட இளையவள் என்றாலும், தன் நண்பனின் மனைவி என்ற மரியாதைக்காகவே 'தாத்தா" என்று கூப்பிடுகிறான் என்று அவள் புரிந்து கொண்டிருந்தாள்.

"ம்.. ஒண்ணுமில்ல.."

தனது திருமண நாளன்று, தன் கணவனுக்கு உதவியாக தன் வீட்டில் சத்யா வந்து தங்கியதை அவள் நினைத்துப் பார்த்தாள். ஒரு முஸ்லிமை விட்டுவிட்டு, தமிழன் ஒருவனைத் தங்கவைத்துவிட்டதற்காக ரொம்பப்பேர் தாரீக்கை குறைகூறினார்கள். அவன் கணக்கில் கொள்ளவில்லை. திருமணத்தன்று காலையில் தாரீக்கின் ஷூ லேஸைக் கட்டிவிடுவது முதல் அனைத்தையுமே சத்யா செய்துவிடுவதை அவதானித்தபின் அவனது தோழமை எத்தகையதென்று அவளால் உணர முடிந்தது.



"அன்னக்கி ஏன் தாரீக் என்னோட பேசல்ல..?"

அவள் எதிர்பார்த்த கேள்வியை அவன் கேட்டுவிட்டான்.

தடுமாற்றமாக இருந்தது. தாரீக்கைப் பற்றி இவன் மனதில் வெறுப்பு ஏற்படாமலும், இவன் மனசு பாதிக்காமலும் பதில் சொல்ல வேண்டும். என்ன சொல்வது?

"எனக்குத் தெரியா சத்யாண்ணே! அவர் மூட்-அவ்ட் மாதிரி இருக்காரு.."

திருமணம் முடிந்து ஹனிமூனுக்கென அவர்கள் இருவரும் அப்கன்ட்ரீஸ் போனபோதும் சத்யாவை தாரீக் அழைத்திருந்தான். அவர்களது காரை சத்யாவே ஓட்டிவந்தான். விதம் விதமான கோணங்களில் ஹக்கல பார்க்கிலும், நீர்வீழ்ச்சிகளுக்கருகிலும், வேர்ல்ட் என்ட்டிலும் அவர்களைப் படமெடுத்து அல்பம் ஒன்றில் போட்டு, அன்பளிப்புச் செய்தான்.

நுவரெலியாவுக்கு பிக்னிக் வந்திருந்த சில தமிழ்ப் பெண்களைக் கண்டுவிட்ட அவன் குழைந்த விதம் இன்னும் கண்ணில் தெரிகிறது. புல்வெளியில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த அவர்கள் அருகே போய் சத்யா,

பருத்தித்துறை ஊராம்

பவளக்கொடி பேராம்

பாவையென்று சொல்வாள்

பாலெடுத்து விற்பாள்..

என்று சினிமாப் பாடலைப் பாடுவதுபோல், மூன்றாம் வகுப்பு பாடலொன்றை ராகத்துடன் பாடுவதைக் கேட்டு

அந்தப் பெண்கள் விழுந்து விழுந்து சிரித்ததும், பின்னால் ஷகீலாவும், தாரீக்கும் வாய்பொத்தி சத்தமின்றிக் குலுங்கியதும்...

"இல்ல தாத்தா. கொஞ்ச நாளாவே அவன் என்னோட நல்லா இல்ல..."

வெளிச்சமே இல்லாத தெருப்பகுதியில் அவர்கள் போய்க்கொண்டிருந்தார்கள். இருளில் கன்னங்கரியனான அவனது உருவமோ, முகபாவமோ அவளுக்குப் புலப்படவில்லை. பற்கள் மட்டும் பளீரிட்டன.

அவள் இருளுக்கு நன்றி சொன்னாள், மனதுக்குள் வார்த்தைகளுக்கு எப்படி நன்றி சொல்வது, அவை இனிமையாக வெளிவராவிடில்...?

யோசித்தபின்பு சொன்னாள், "எனக்குன்டா, இதப்பத்தி ஒண்ணுமே தெரியாது சத்யாண்ணே..."

இப்போது தன்னை சத்யா நம்புவானோ என்று அவளுக்குச் சந்தேகமாக இருந்தது. சிலவேளை, நான் சொல்லித்தான் அவர் இப்படி நடக்கிறார் என்று சத்யா நினைக்கிறானோ...?

"குடியும், குடித்தனமுமா இருக்கேன் தாத்தா" என்றபடியே ட்ரவ்சர் பைக்குள் போத்தலுடன் வீதியில் அன்றொரு நாள் தள்ளாடிக் கொண்டு போன சத்யாவை தாரீக் எத்தனை அன்பாக வீட்டில் கொண்டுபோய் விட்டான்?

வீடு வந்தவனிடம் ஷகீலா சத்தமிட்டாள்.

"ஏம்பா, அந்தக் குடிகார மட்டையக் கொண்டாடுறீங்க?"

தாரீக்கின் மனம் புண்பட்டிருக்க வேண்டும்.



"இத்தன வருஷ காலத்துல என்னய சரியாப் புரிஞ்சிகிட்டவன் இவன் ஒருத்தன்தான்டி..."

என்று நாத் தளுதளுக்க அவன் சொன்னபோது அவள் ஒடுக்கிப் போனாள்.

'இவரது வாயால் சத்யா பற்றி இப்படி ஒரு புகழ்மொழி வருவதானால் அது எத்தனை உன்னத நட்பாக இருக்க வேண்டும்? என்னிடம்கூட இதுவரை தானாக ஒரு காதல் மொழிகூட பேசாதவராயிற்றே இவர்?' என்று அன்று தான் எண்ணிக் கொண்டதும், பிறகு சத்யா பற்றித் தரக்குறைவாக கணவனிடம் ஏதும் கதைப்பதில்லை என்று தீர்மானங் கொண்டதும்...

வியாபாரத்தில் தாரீக் ஏதோ நஷ்டமடைந்துவிட்டான் என்று அறிந்து சத்யா சமீபத்தில் ஒருநாள் வீட்டுக்கு வந்து எகிறிக்குதித்தான்.

"நீயெல்லாம் என்ன மொதலாளிடா? இப்பிடியே லட்சக்கணக்குல நஷ்டம் குடுத்துட்டுப் போனா கடைசில தாத்தாட நெலம என்னா? நீ உண்மையான யாவாரியாயிருந்தா இப்பவே தாத்தாக்கு சொந்த வீடு கட்டிக்குடுத்திருக்கணும். கல்யாணமாகி ரெண்டு வருஷமாச்சு. தாத்தா எக்கவ்ன்ட்ல ரெண்டு லட்ச ரூபா இருந்திருக்கணும். இருக்காடா?

சத்யா போனபின் அன்றிரவு தாரீக் சொன்னான்.

"இவர் பெரிய மகா மனுஷரு. ஞாயம் பேச வந்துட்டாரு..." அப்போதே தாரீக்கிற்குள் இந்த விலகலுக்கான வித்து உருவாகியிருக்குமோ என்று திடுமென அவளுக்குத தோன்றிற்று. இதில் என்ன தப்பு? அவரின் தவறைச் சுட்டிக்காட்ட சத்யாவுக்கு உரிமையில்லையா?

ரசீகா வீடு வந்துவிட்டது.

"நீங்க பேசிட்டு வாங்க தாத்தா. நா வெளிய நிக்குறேன்... யாரும் பாத்தா ஒங்களத் தவறா நெனப்பாங்க" என்றுகூறி சத்யா வெளியே நின்றுவிட்டான். எவ்வளவோ கூப்பிட்டும் பலனில்லை. இருளில் மறைந்து நின்றுகொண்டான்.

தோழியோடு பேசிவிட்டு வருகையில் சட்டென அருகில் வந்து அவளோடு சேர்ந்து நடந்து வந்தான். இத்தனை இயல்பான, வெளிப்படையான நண்பனையா தாரீக் வெறுக்கிறான்...? கவலையாக இருந்தது. எப்படி இதைச் சமாளிப்பது? யாரோ ஒருவன் அவரை அவதூறாகப் பேசிவிட்டான் என்பதற்காக, அவனை வீதியில் நிறுத்தி சத்யா செய்த கலாட்டா...! ஓ...!

ஆரம்பத்தில் அவன் ஒரு குடிகாரன் என்ற ரீதியில் அவளுக்குள் அவனைப்பற்றி ஒரு வெறுப்புணர்ச்சி இருந்தது உண்மை. போகப் போக, அவன் குடிக்கிறான் என்பதைவிட அவனிடம் நல்ல நன்மைகள் அதிகமிருப்பதை அவள் உணரத் தலைப்பட்டபோது, தாரீக்கின் நண்பன் என்கிற அந்தஸ்த்தும் சேர்ந்துகொள்ள, ஷகீலா அவனுடன் தாராளமாகப் பழகினாள். அந்தப் பழக்கத்தில் அவன் ஒரு பெக்குலியர்டைப் என்றும் அவளுக்குப் புரிந்தது. அந்தப் புரிந்துணர்வு அவன் மீது ஒருவித ரசனையையும், ஈடுபாட்டையும் அவளுள் ஏற்படுத்திவிட்டது.

இப்போது இந்த நண்பனை இழந்து விடுவதா? மனம் கனத்துக் களைத்துக் கிடந்தது.

அவன் மௌனமாக நடந்து கொண்டிருந்தான். வெளிச்சமான பிரதான வீதிக்குத் திரும்பியதும்



"நா வாரேன் தாத்தா. கட்டாயம் தாரீக்கிட்ட கேளுங்க, ஏன் என்னோட கோபம்னு..." கூறிவிட்டு சட்டென விலகிப் போனான்.

★ ★ ★

தாரீக் நல்ல மூடில் இருந்தான். உற்சாகமாக விசில் அடித்தபடி பாத்ரூமில் முகம் கழுவினான். டைனிங் டேபிள் முன் அமர்ந்து உணவை "ம்..." என்று சிலாகித்தான்.

ஷகிலா மௌனமாக உணவு கொண்டு வந்து வைத்தாள். இவரிடமிருந்து உண்மையைக் கேட்டறிவது எப்படி என்பது மட்டுமே கவலையாக இருந்தது. இவர் டயரி பாவிப்பவரும் அல்ல, நடந்த சம்பவங்களை என்னைப்போல் விலாவாரியாக எழுதிவைக்க. எப்படி அறியலாம்?

நேற்றிரவு சத்யாவோடு சென்றது பற்றி அவள் மறைக்க விரும்பவில்லை. சொல்ல வேண்டும். நாசூக்காச் சொல்லி இவரிடம் விஷயத்தை எடுக்க வேண்டும். எப்படித் தொடங்குவது?

அவனைப் பார்த்து மென்மையாகப் புன்னகைத்தாள். அவன் குறும்புடன் கண்ணடித்தான்.

"நேத்து நைட் நா நல்லா பயந்துட்டேன்..."

"எதுக்கு?"

"தனியா களுதாவல போறதுக்கு..."

"ஓ..."

"நல்ல காலம். சத்யா வந்தாரு. அவரோடதான் போனேன்." அவன் பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. முகம் நிச்சலனமாக இருந்தது. மௌனமாகக் கை கழுவினான்.

"ரொம்ப கவலப்பட்டாரு, நீங்க அவரோட பேசுறதில்லன்டு"

மீண்டும் மௌனம்.

"ஏன் நீங்க அவரோட பேசுறதில்ல? அவருக்கே ரீசன் தெரியாதாம்..."

"நீ அத இப்ப கட்டாயம் தெரியணுமோ...?" - விஷமமாகக் கேட்டான்.

"அப்பிடி ஒண்ணும் இல்ல. சும்மாதான்..."

"அவன் ஒரு குடிகாரன். நா குடும்பக்காரன் அவனோட பழகுறது அவ்வளவு டீஸன்ட்டா எனக்குப் படல்ல..."

அவனே பரிமாறிக்கொண்டான். அவள் மேஜையருகே நின்னுகொண்டிருந்தாள்.

"அவரு குடிகாரன்டா ஒங்களுக்கென்னப்பா? நீங்க கெட்டுப் போக மாட்டீங்களே..."

"யாருக்குத் தெரியும்? அவன் கொஞ்ச கொஞ்சமா என்ன மாத்திட்டான்டு வை. ஒனக்கு கவலயில்லயா?"

"அப்பிடி நீங்க மாறமாட்டீங்க. கல்யாணத்துக்கு முந்தியே அவரோட பழகியிருக்கீங்க.. இப்ப மட்டும் ஏன் இப்பிடி நினைக்கணும்...? நீங்க மொதவும் கெடல்ல. இப்பவும் கெடல்ல. இனியும் கெட மாட்டீங்க... எனக்கு நல்லாத் தெரியும்..."

சற்று உறுதியாகச் சொன்னாள். அந்த பதிலால் அவன் கொதிததுவிடக் கூடும் என்ற பயத்தில் பின்புறம் வந்து, அவனது தலையை வருடிவிட்டாள்.

"அதெப்பிடி ஒனக்குத் தெரியும்...?"

திரும்பி அவளைப் பார்த்தான். முகத்தில் புன்னகை மறைந்திருந்தது.



"நீங்கதான் சொல்லியிருக்கீங்க. அவரோட சேர்ந்து ப்ளூ ஃபில்ம் பாத்ததாக்கூட சொன்னீங்க. அதனால என்ன கெட்டுப் போச்சி? நீங்க அவ்வளவு ஈஸியா கெட்றவரும் இல்லியே..."

"ஒனக்கு என்னமோ அவனப் புடிச்சிப் போச்சி. அதுக்காக இப்பிடியெல்லாம் பேசி என்னயச் சமாளிக்கிறே. என்னதான் நீ பேசினாலும், மை ஆன்ஸர் இஸ் திஸ். ஐ வில் நெவர் பி ஃப்ரெண்ட்லி வித் ஹிம் ஆஃப்டர் வேர்ட்ஸ். அன்டர்ஸ்டான்ட்..."

ஒரு கவளம் சோறுகூட உள்ளே செல்லவில்லை. கதிரையைத் தள்ளிவிட்டு எழுந்தான். முறைத்துப் பார்த்துச் சொன்னான்.

"நீ என்ன செய்வியோ எனக்குத் தெரியாது. பட், நீ அவனோட பழகுறது எனக்குப் பிடிக்கல்ல. ரிமெம்பர்..."

வேகமாக அறைக்குள் போனான். அவள் அவனையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

★ ★ ★

மார்ச் 22. அவர்களது நாலாவது வெட்டிங் என்னிவர்ஸரி. காலையில் படுக்கைவிட்டு எழுகையிலேயே சத்யாவின் ஞாபகம் வந்தது. அவர்களது வெட்டிங் என்னிவர்ஸரி மட்டுமா? இருவரதும் பேர்த்டேகூட அவனுக்கு மனப்பாடம். டாணென்று வாழ்த்துமடல் அனுப்பிவிடுவான்.

சில நாட்களாக, இவருடன் சத்யாவைப் பற்றிய பேச்சிலேயே மனஸ்தாபம் வருகிறது. ஒவ்வொரு முறையும், ஒவ்வொரு காரணங்காட்டி இவர் விலகுகிறார். இனி சத்யா பற்றிப் பேசுதைத் தவிர்க்க வேண்டும்.

இன்றைக்காவது இருவரும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்ற தீர்மானத்துடன் குளிக்கப் போனாள்.

குளித்து, உடைமாற்றி, டீ கலந்து எடுத்து வந்து தாரீக்கை எழுப்புகையில் மணி எட்டரையாயிருந்தது. போஸ்ட்மேன் இந்தநேரம் போயிருப்பான்...

எப்பிடித்தான் யோசித்தாலும், சத்யா குடிக்கிறான் என்பதற்காக, அவனோடு சகவாசங் கொள்வது குடும்பக்காரனான தனக்குச் சரியல்ல என்று தாரீக் நினைப்பது பச்சை சுயநலம் என்றே அவளுக்குப் பட்டது. நமது தேவைகளுக்கெல்லாம் பயன்படுத்திவிட்டு, எல்லாம் நலமாக முடிந்தபிறகு தூக்கிவீசிவிடுவதா நட்பு? சத்யாவிடம் முன்னைவிட அன்பு காட்டி, நல்வழிப்படுத்தும் கடமை இப்போது இன்னும் அதிகமாகிறது என்று ஏன் இவருக்குப் புரியவில்லை...?

மனதுள் லேசாக கவலை எட்டிப்பார்த்தது. வாழ்க்கையில் நிறைய மனிதர்களைச் சம்பாதிப்பவனே வெற்றிகண்டவன் என்று பெரியவர்கள் சொல்வார்கள். நாம் மனிதர்களை இழந்துகொண்டிருக்கிறோமோ...?

சில நாட்களுக்கு முன்பு, சத்யாவைக் கடைத்தெருவில் கண்டுவிட்டு தலைகுனிந்தபடி வந்துவிட்டாள். என்ன நினைத்தாரோ? எல்லாரும் சுயநலவாதிகள்தான் என்று வருத்தப்பட்டிருப்பாரோ...?

தாரீக் பாத்ரூமுக்குள் போய்விட்டான். அவனுக்கு டவலைக் கொடுத்துவிட்டு உள்ளே வருகையில் கோலிங் பெல் ஒலித்தது.

கதவருகே சென்று திறக்குமுன் ஜன்னல் வழியே பார்த்தாள். சத்யா! கையில் ப்ரவுன் பேப்பர் சுற்றிய பெரிய பார்சலுடன் நின்றிருந்தான்.



கதவைத் திறப்பதா, இல்லையா என்று தடுமாறிற்று மனம். இவரிடம் கேட்டு வந்து கதவைத் திறப்போமா? கேட்டால் என்ன சொல்வாரோ? சத்யாவைத் திருப்பி அனுப்பிவிடு என்று உத்தரவு போட்டுவிட்டால் என்ன செய்வது?

மீண்டும் பெல் ஒலித்தது. தானாகவே கைகள் கதவைத் திறந்தன.

“இந்தாங்க தாத்தா, சின்ன ப்ரசன்ட் ஒண்ணு...”

சத்யா பளீரெனச் சிரித்தான்.

பார்சலில் “பெஸ்ட் விஷஸ் ஃபொரெவர்” என்று அழகாக எழுதப்பட்டிருந்தது. “தேங்க் யூ” என்றபடி வாங்கிக் கொண்டாள். தனக்கு எங்கிருந்து இத்தனை தைரியம் வந்ததென்று அவளுக்கே தெரியவில்லை.

இந்த சத்யாவைப் பிடிக்காமல் போனதற்குக் காரணமென்ன? திருமணமாகி மூன்று வருடங்களில், முதல் தடவையாகத் தன் கணவனைப் புரிந்துகொள்ள முடியாமல் தடுமாறுகிறாள் ஷகீலா!

# பின்னுரையாக ஒரு குறிப்பு

**- மேமன்கவி -**

ஒரு படைப்பாளி தனது சூழலில் பெற்ற அனுபவங்களை கலையாக்கம் செய்கின்ற பொழுது - அந்த அனுபவங்களில் உள்ளொளிந்து இருக்கும் நிஜம் குலையாது. அதைச் செய்கின்ற பொழுதுதான் ஒரு படைப்பு வெற்றி பெறுகிறது எனலாம்.

அவ்வகையான படைப்புகளாகத்தான் (உள்ளடக்க அளவில்) ஸஹானாவின் படைப்புகள் அமைந்திருக்கின்றன.

பெண் படைப்பாளி என்ற வகையில் இவரால் ஓரளவுக்கு உள்வாங்கப்பட்டுள்ள பெண்நிலைவாதக் கருத்துக்களின் வார்ப்புகளாக இவரது படைப்புகள் அமையாது. மாறாக, இன்றைய யதார்த்த வாழ்வில் பெண்கள் சந்திக்கின்ற பிரச்சினைகளைப் பதிவு செய்கின்ற அதேவேளை - அந்த யதார்த்த நிகழ்வினூடாக தனது கதைகளுக்கான உள்ளடக்கத்தை வடிவமைத்துள்ளார். இவ்வம்சம் இவரது தனித்துவத்தின் ஒரு பண்பு எனலாம்.

மேலும் - இவர் படைத்துள்ள பெரும்பாலான பெண் பாத்திரங்களை ஆழ்ந்து நோக்கும் பொழுது, அவர்கள் குடும்ப அமைப்பை விட்டு தப்பியோடாது (அதாவது தாம் சார்ந்திருக்கும் சூழலிலிருந்து அந்நியமாகாது) இந்த சமூகத்திலேயே கால் பதித்து உள்வட்டத்திலேயே ஒரு மௌனமான உடைப்பை உருவாக்குபவர்களாக திகழ்கிறார்கள்.

(அதனால்தான் - இவரது படைப்புகளில் ஆர்ப்பாட்டத் தொனியையோ கோஷிக்கும் தன்மையினையோ நம்மால் காணமுடியவில்லை)



மேற்குறித்த மௌனமான உடைப்பை உருவாக்கும் தன்மை கொண்டவர்களாக "சந்தேகக் கோடு" "கோடுகள் தாண்டப்படலாம்" "பென்ஷன்" "புதியதோர் சாந்தி பிறந்ததடி" போன்ற கதைகளில் வரும் பெண் பாத்திரங்கள் வெளிப்படுகின்றனர்.

இந்த உள்வட்டத்தை மௌனமாக உடைத்தல் என்பது பெண்ணிய கருத்தியலின் அடிப்படையில் விடுதலையாக கணிக்கப்படாமல் விட்டாலும், இந்த மௌன உடைப்பு களை இலக்கியப் படைப்புகளாக ஆக்குவது என்பது ஸஹானா சார்ந்திருக்கும் அமைப்பினூடாக நோக்கு மிடத்து அந்த உடைப்பும் ஒருவகையான விடுதலைதான்.

தனித்துவமான அம்சங்களை கொண்டிருக்கும் இவரது கதைகளில் உருவத்தைப் பொறுத்தவரை கலைத்துவ செழுமை என்பது சில படைப்புகளில் குறைவாகத்தான் இருக்கிறது. உதாரணமாக "பென்ஷன்" "கடக்க முடியாத தொலைவுகள்" போன்றவைகளை குறிப்பிடலாம்.

இவரது படைப்புகளில் காணப்பெறும் தனித்துவமான இத்தன்மைகள் ஒவ்வொரு இளைய படைப்பாளியிடமும் காணப்படும் ஆரம்ப நிலை தன்மைகளைவிட, ஒருபடி மேலாகவே வெளிப்படுவதின் காரணமாக இவர் நமது அவதானத்திற்கு ஆளாகிறார்.

இவரது தனித்துவத்தின் வளர்ச்சியின் இன்னொரு வகையான பரிமாணத்தை எதிர்காலத்தில் இவர் படைக்கப் போகும் கதைகள் எடுத்துக் காட்டும் அதற்கான 'சமிஞ்ஞைகளை' இத்தொகுப்பில் அமைந்துள்ள கதைகள் தம்மகத்தே அதிக அளவில் கொண்டிருப்பது நமக்கு நம்பிக்கையினையும் மகிழ்ச்சியையும் தரக்கூடிய விடயமாகும்.

இவரது பெரும்பாலான எல்லா கதைகளிலும் பெண் என்பவள் குடும்பம் எனும் உள்வட்ட அமைப்பின் உள்நின்று சந்திக்கின்ற பிரச்சினைகளைத்தான் பேசுகின்றன. ஆனால், வெளிவட்டமான பரந்த இந்த சமூக மட்டத்தில் அவள் சந்திக்கும் பன்முகத்தன்மைகள் கொண்ட பிரச்சினைகள் மீது இவரது பார்வை விசாலம் அடைதலைதான் நான் மேலே குறிப்பிட்ட இவரது தனித்துவத்தின் இன்னொரு வகை பரிமாணம் எனலாம்.

அவ்வளர்ச்சிக் கட்டத்தை அடைய இவரின் தேடல் மேலும் விரிவாக்கம் பெறவேண்டும். ஏனெனில் பரந்தத் தேடல்தான், ஒரு படைப்பாளியை அனுபவ முதிர்ச்சிமிக்க, படைப்பாளியாக மலரச் செய்யும் மார்க்கமாகும். இம்மார்க்கத்தைப் பற்றிய பிரக்ஞை உடையவர் ஸஹானா என்பதை நான் நன்கு அறிவேன்.

அத்தேடலின் வழியாக அடையப்போகும் புதிய பரிமாண கட்டத்தின் பொழுது, இவரால் படைக்கப்படும் படைப்புகள் மூலம் முழுமையான, அனுபவ முதிர்ச்சியான இவரது வளர்ச்சிக் கட்டத்தை நாம் தரிசிக்கக் கூடியதாக இருக்கும்.

அவ்வகையான இவரது எதிர்கால வளர்ச்சி வெளிப்பாடே - சிருஷ்டி இலக்கியத்தினூடாக வெளிப்படும் இவரது சுயத்தை நமக்கு முழுநிலையில் அடையாளம் காட்டி நிற்கும்.

**- மேமன்கவி -**

55B/4, 3ம் குறுக்குத் தெரு,
கொழும்பு - 11.

ஸஹானா -
இசைப் பெயர் -
என்னை இசைக்க வைத்த பெயர்!
எதிர்காலத்தில் எல்லோராலும்
இசைக்கப்பட போகிற பெயர்!

எங்கள் அறிமுகம்கூட
ஒரு வகையில் அதிசயமே!
'நெஞ்சில் பூத்த நெருஞ்சியைப்
படித்து முடித்த பரவச வேளையில்,
'இவர் உனக்குச் சித்தப்பா' என்ற
வாசச் செய்தியை
ஸஹானாவின் தாயார்
வாசித்து இருக்கிறார்
இதைத் தொடர்ந்து, கடிதங்கள் கடல்
கடந்தன. இவை, இவரை
வாசகியாக - விமர்சகராக - கவிஞராக -
கதாசிரியராக அடையாளம் காட்டின.
இவருடைய அஞ்சல்கள், 'அஞ்சால்'
மருந்தாயின. இவருக்கு இப்போதும்,
எப்போதும்
காவியம் எழுதும் கவனத்துடனே
கடிதங்கள் எழுதுகிறேன்.

சராசரி மனித விருப்புகளில்
எனக்கு விருப்பம் இருந்ததில்லை.
ஆனால் ஆக்ராவும், கெக்கிராவும்
நான் செல்ல ஆசைப்படும் செல்ல
இடங்கள்!
முன்னது நேசக் கல்லறை!
பின்னது பாசக் கருவறை!

'ஒரு தேவதையின் கனவு'
இது இவருக்கு தலைப்பிரசவம்!
ஒருவகையில் எனக்குப் பேரக் குழந்தை!
பெயர் சொல்லும்
குழந்தையாக திகழ
நல்வாழ்த்துக்கள்!

— பாத்திமா மைந்தன்